
# அல்ஹஸனாத்

மலர் 26 இதழ் 11 நவம்பர் 2000 (ஷஃபான்-ரமழான் 1421)

S. A. ILYAS




20/-

இஸ்லாமிய இலட்சியக் குரல்

ALHASANATH ISLAMIC MONTHLY

Registered at Tertiary and Vocational Education Commission
Affiliated with University of Management & Technology - Pakistan
Accredited by Council for Information Technology (CINTEC)

**கம்பியூட்டர் டிப்ளோமா பயிற்சி நெறி**

காலம் : 30 நாட்கள்
கட்டணம் : 6500/=

உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

- Introduction to Information Technology
- Operating System (Win98)
- Microsoft Word 2000
- Microsoft Excel 2000
- Microsoft PowerPoint 2000
- Microsoft Access 2000
- Introduction to Visual Basic
- Hardware Fundamentals and Internet & E-mail
- English for Information Technology

**Islamic Institute of Information Technology**
**Madampe - 61230**
**Tel : 032 - 47561 Fax : 032 - 47134 E-mail : islah@slt.lk**

**'ப்ரபோதய'**

உங்கள் சிங்கள மொழிமூல நண்பருக்கு
அறிமுகம் செய்ய வேண்டிய
சிங்கள மாத இதழ்

77, தெமடகொட வீதி, கொழும்பு 09
தொலைபேசி : 687091 பெக்ஸ் : 686030

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்

"ரமழான் மாதம் எத்தகையது என்றால், அதில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை தீமைகளை) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது."

(சூரா அல்பகரா:185)

# அல்ஹஸனாத்

மலர் 26 இதழ் 11 நவம்பர் 2000
ஷ∴பான்-ரமழான் 1421

ISSN : 1391 - 460 X

வெளியீடு:
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
Sri Lanka Jama-ath-e-Islami
77, Dematagoda Road,
Colombo 09
Phone : 687091
Fax : 686030
email : islambks@slt.lk

## விலை விபரம்

**உள்நாடு**

| | |
|---|---|
| தனிப்பிரதி : | ரூபா 20.00 |
| வருட சந்தா : | ரூபா 250.00 |

**வெளிநாடு**

வருட சந்தா


| | |
|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேஷியா : | 500.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் : | 550.00 |
| ஏனைய நாடுகள் : | 650.00 |

## உள்ளே உள்ளவை

கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே
(அல்குர்ஆன் விளக்கம்) 03
ஜமாஅத் தொழுகை
(அல்ஹதீஸ் விளக்கம்) 05
த∴வா களம்:
இணையாது செல்லும் இருப்பும், இலக்கும் 07
பிந்துனுவெவ படுகொலைகள்
பேரினவாதத்தின் மற்றொரு இழிசெயல் 09
நான் கண்ட இஜ்திமா 11
அல்குர்ஆனை ஓதுவோம் 13
அல்குர்ஆனை விளங்குவோம் 14
துடிக்கிறது மனம்; அடக்குகிறது நோன்பு 16
பதாவா முஆஸிரா 17
இலங்கை முஸ்லிம் சமூகம் :
பிரச்சினைகளும் சவால்களும் - 7 19
கவிதா பவனம் 26
ஸகாதுல் பித்ர்- ரமழானின் ஆரம்பம் முதல் 31
இஸ்லாம் (உயர்தரம்) 33
பத்ர் 35
பலஸ்தீன குடியரசு 37
ரமழானின் அருளையும், மன்னிப்பையும்... 39
ஜம்இய்யா பக்கம் 40
சிறுவர் பூங்கா 42
இஸ்லாமிய ஷரீஆவில் விரிவும் நெகிழ்வும் 45
கேள்வி - பதில் 47
உலகச் செய்திகள் 48

## அந்நிஸா

ரமழானும் நாமும் 21
வந்தது வசந்தம் (சிறுகதை) 23
ஸஹாபிப் பெண்மணிகள் வாழ்வினிலே
அன்னை பாதிமா பின்த் அஸத் 25
ஆரோக்கிய சந்திப்பு: ரமழானும் மருத்துவமும் 28



# இவர்கள் விநோதமானவர்கள்!

இந்த முஸ்லிம்கள் விநோதமானவர்கள்!

தீயினால் படைக்கப்பட்ட ஷைத்தான்கள் தங்களுக்கு மத்தியில் மறைவாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன என நம்புகிறார்கள். இந்த ஷைத்தான்கள் மனிதர்களின் பரம வைரிகள்; தம்மை எவ்வாறாயினும் வழிகெடுத்து நரகில் வீழ்த்த பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருப்பவை என அறிந்து வைத்துள்ளார்கள். இந்த ஷைத்தான் கற்சிலைகளில் குந்திக் கொண்டு, தம்மை வணங்கும் மனிதர்களுக்கு உதவிகள் பல செய்து கொடுத்து, அவர்களை நேர்வழியை விட்டும் தடுத்துக் கொண்டிருக்கின்றன; ஷைத்தான்களுக்கு எதிரிகளாக வாழ்ந்து மறைந்த பெரியார்களின் ஸியாரங்களின் அருகில் கூட அமர்ந்து, பெரியார்கள் பெயரில் காரணங்களை விளங்கிக் கொண்டிருப்பதன் மூலம் பக்தர்களையும் திசைதிருப்பிக் கொண்டிருக்கின்றன என்றெல்லாம் தெளிவாக புரிந்து கொண்டு இவற்றை விட்டும் நீங்கி, படைத்த ரப்பிடம் மாத்திரமே தம் தேவைகளைக் கூறி, அவற்றை அடைந்து கொள்கிறார்கள். ஷைத்தான்களின் துணையுடன் நடைபெறும் பால் பார்ப்பது, சூனியம் செய்வது போன்ற தீயசெயல்களிலிருந்தும் விலகி நிற்கிறார்கள். கஷ்டங்கள் ஏற்படும் போதெல்லாம் ஷைத்தானின் வழிக்கு திரும்பி விடாமல், இது அல்லாஹ்வின் புறத்தால் ஏற்படும் சோதனை என பொறுத்துக் கொள்கிறார்கள். இந்த ஜின்கள் பல்வகை உருவங்களையும் எடுக்கக் கூடியவை. இமாம் இப்னு தைமியாவின் குரலில் கூட அவர் இல்லாத இடங்களில் பேசி, மக்களை வழிகெடுக்க முனைந்துள்ளன இந்த ஷெய்த்தான் என்பதையும் அறிந்து வைத்துள்ளார்கள்; இந்த ஜின் வர்க்கத்தில் முஸ்லிமான ஜின் வர்க்கத்தினரும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைப் போல் அல்லாஹ்வையும், ரஸூலையும் ஏற்று வாழ்கிறார்கள் என்றும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

மற்றுமொரு படைப்பினம் தங்களுடன் வாழ்ந்து, தமக்கு உதவிகள் பல புரிவதையும் முஸ்லிம்கள் உணர்கிறார்கள். ஒளியினால் படைக்கப்பட்ட இந்த மலக்குகள் முற்றுமுழுதாக அல்லாஹ்வின் கட்டளைகளுக்குப் பணிந்து, பல்வேறு பணிவிடைகளில் ஈடுபட்டுள்ளார்கள்- மேகத்தை ஓட்டி சில இடங்களில் மழையை வருஷிக்கச் செய்கிறார்கள்; வாழ்ந்து முடிந்தவர்களின் 'ரூஹை' கைப்பற்றிச் செல்கிறார்கள்; ஒவ்வொரு மனிதனதும் நன்மை தீமைகளைப் பதிந்து கொண்டிருக்கிறார்கள்; மு∴மின்களுக்காக அல்லாஹுத் தஆலாவிடம் பிரார்த்திக்கிறார்கள் என்றெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்கள் இந்த முஸ்லிம்கள். மலக்குகளில் ஒருவர்தான் அல்லாஹ்விடமிருந்து அவனது வார்த்தைகளான அல்குர்ஆனை நபியவர்களுக்கு சுமந்து வந்தார் என்பதை சந்தேகமற நம்புகிறார்கள். தாங்கள் மரணித்து மண்ணறையை சென்றடையும்போது, கேள்வி - கணக்கு கேட்பதற்கு வரவிருப்பவர்களும் இந்த மலக்குகள்தான் என நம்புகிறார்கள்.

இவற்றுடன் தங்களைப் படைத்து போஷிக்கும் அல்லாஹ் தங்கள் பிடரி நரம்பைவிட நெருக்கமாக இருக்கிறான்; அழைப்பவர்களுக்கு பதிலளிக்கிறான்; இரண்டு மனிதர்கள் அமர்ந்திருக்கையில் மூன்றாவதாக அவனும் இருக்கிறான் என உளமாற நம்புகிறார்கள் இந்த முஸ்லிம்கள். நாளை மரணித்த பின் அந்த நாயனிடமே செல்லவிருக்கிறோம்; அவன் தம் நடத்தைகள் பற்றி நுணுக்கமாக விசாரித்தறியவிருக்கிறான். இச்செயல்களுக்குரிய எண்ணங்களின் அடிப்படையில் சுவர்க்க -நரகத்தை வழங்கவிருக்கிறான் என ஆதரவுடனும், அச்சத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இந்த முஸ்லிம்கள்.

ஆம்! இவர்கள் விநோதமானவர்கள்தான். மற்றவர்கள் கண்களால் காண்பதைக்கூட நம்ப மறுக்கும்போது! இவர்களோ கண்களால் காண முடியாதவைகளுடன் கலந்து வாழ்வதை உணர்ந்தவர்களாக, தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இதனால்தான் மற்றவர்கள் தமக்காக சொத்து, சுகங்களை திரட்டி சொகுசு வாழ்க்கை வாழ முற்படும் போது, இவர்களோ பிறருக்காக வாழ்கிறார்கள். தம்மிடம் உள்ள சிறந்தவற்றை மற்ற மனிதர்களுக்கு வழங்கி விடுகிறார்கள். எளிமை வாழ்வில் திருப்தி காண்கிறார்கள், தம்தேவை போக மிகுதியை பிறருக்கு தானம் செய்து விடுகிறார்கள். 'அதான்' ஒலி கேட்டதும், அனைத்தையும் போட்டுவிட்டு பள்ளிக்கு விரைகிறார்கள்.

தம் பெண்களை, தந்தையாக - தனயனாக - சகோதரனாக இருந்து கண்ணெனக் காத்து வருகிறார்கள். இந்தப் பெண்களும், அடுத்த தலைமுறையைப் பெற்று வளர்த்து, ஆளாக்குகிறார்கள். வறுமைக்கு அஞ்சி கருத்தடைகளை மேற்கொள்வதும் இல்லை; அண்டை அயலாரை அன்புடன் நேசிக்கிறார்கள்; சுத்தம் ஈமானின் பாதி என்பதை விளங்கி, சுத்தமாக இருப்பதை ஒரு வணக்கமாக கருதுகிறார்கள்; அரைநிர்வாண கோலங்களுடன் ஏனையோர் வீதிகளில் வலம்வர, இவர்களோ ஆண்களுக்கும் 'கற்பு' உண்டு எனக் கூறித் தம்பார்வைகளை தாழ்த்தி நடக்கிறார்கள். வட்டியிலே மூழ்கி ஏனையோர் ஏழைகளை வதக்கிக் கொண்டிருக்கும் வேளை, முஸ்லிம்களோ வட்டியை ஹராம் என ஒதுக்கி, வியாபாரத்தை மக்கள் சேவையாகவே செய்து வருகிறார்கள்.

ஆம்! இந்த மு∴மின்கள விநோதமானவர்கள்தான். இவர்களால் தான் இந்த உலகம் தூய்மை பெற முடியும். இந்த உத்தமர்களை உருவாக்கும் புனித ரமழான் எம்மிடையே வருகிறது, எம் முழுக்கவனத்தையும் எம்மை சீர்திருத்திக் கொள்வதில் செலுத்தி, ஈடேற்றம் பெற்ற மு∴மின்களாக ஆக முயற்சிப்போம்!

"எவரேனும் கண்ணியத்தை விரும்பினால்- கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவனை நோக்கி உயர்ந்து செல்வது தூய்மையான சொல் மட்டுமே! இன்னும் நற்செயல் அதனை மேலே உயர்த்துகிறது. மேலும் எவர்கள் தீய சூழ்ச்சிகள் செய்கிறார்களோ அவர்களுக்கு கடுமையான வேதனை இருக்கிறது. மேலும் அவர்களுடைய சூழ்ச்சிகள் தானாகவே அழியக் கூடியவையாக இருக்கின்றன." (35:10)

**அல்குர்ஆன் விளக்கம்**

மௌலவி M.H.M. முனீர்

# கண்ணியம் முழுவதும் அல்லாஹ்வுக்கே

ஸூரா அல்பாதிரின் பத்தாவது வசனமாகிய இது மக்காவில் அருளப்பட்டதாகும். இவ்வசனத்தில் மூன்று அடிப்படை உண்மைகள் கூறப்பட்டுள்ளன.

மனிதர்கள் இயல்பிலேயே கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு விரும்புபவர்கள். அவர்கள் அதனைப் பட்டம் பதவிகளினூடாகவும், சொத்து செல்வங்களை அதிகப்படுத்திக் கொள்வதினூடாகவும் சமூக அங்கீகாரங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வதினூடாகவும் அடைந்து கொள்ள முயல்கின்றனர். ஆனால் இவையெல்லாம் போலியானவை; தற்காலிகமானவை; அடிப்படை அற்றவை என்பதை உணரத் தவறிவிடுகின்றனர். உண்மையில் கண்ணியம் என்பது முழு இறைமைத்துவத்திற்கும் சொந்தக்காரனாகிய அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும்.

ரஸூல் (ﷺ) அவர்கள் மக்காவில் தனது பிரச்சாரப் பணியில் ஈடுபட்டபோது, குறைஷித் தலைவர்கள் பயந்ததெல்லாம் முஹம்மத் (ﷺ) அவர்களின் செய்திக்கு அங்கீகாரம் கிடைத்துவிடுமென்றால் அரபுலகில் தமது தலைமைத்துவ அந்தஸ்த்தும், கௌரவமும் இல்லாமல் போய்விடும் என்பதனாலேயாகும். எனவே தான் ரஸூலுல்லாஹ்வின் இஸ்லாமிய இயக்கத்தையும், அதன் தலைவரையும் ஆரம்பப் பொழுதிலேயே தீர்த்துக்கட்ட முயற்சித்தனர். அவர்களால் யதார்த்த பூர்வமான கண்ணியத்தை உணர்ந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

உண்மையான கண்ணியத்தை இறை அடிமைத்துவத்தின் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். அது உலக வாழ்விலிருந்து மறுமை வரை நீண்டு நீடித்ததாகும். இவ்வசனத்துக்கு விளக்கமளிக்கும்போது இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

**"யார் உலகிலும், மறுமையிலும் கண்ணியத்தை விரும்புகிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடப்பதை கடமையாக்கிக் கொள்ளட்டும்."**

ஆகவே, கண்ணியத்தை அல்லாஹ்விடமிருந்து மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும். கண்ணியத்தை கௌரவத்தை ஒருபோதும் சடத்துவ அளவுகோல்களை அடியாகக் கொண்டு பெற முயலக் கூடாது. அவை எவ்வளவுதான் கவர்ச்சி மிக்கவைகளாகவும், சமூக அங்கீகாரத்துக்குரியவைகளாக இருந்தாலும் சரியே. அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

**"இறைநம்பிக்கையாளர்களை விட்டுவிட்டு நிராகரிப்போரைத் தம் நண்பர்களாக்கிக் கொண்டு அவர்களின் கண்ணியத்தை தேடிச் செல்கிறார்களா? உண்மையில் எல்லாவிதமான கண்ணியமும் அல்லாஹ்வுக்கே உரியதாகும்."**

**(அந்நிஸா:139)**

தனது சுயவிருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் மேலாதிக்கம் செலுத்துதல், தனக்கர்க எல்லாவிதமான சக்திகளையும் திரட்டிக் கொள்ளுதல், தனக்கு புகழாரம் தேடி மேன்மையடைய விரும்புதல் இவை யாவும் அல்குர்ஆனின் நோக்கில் 'இஸ்ஸத்' (عِزّة) என்பதற்கு மாறான 'உலுவ்' (علو) என்ற இழிநிலையாகும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

**"அந்த மறுமை வீட்டையோ எவர்கள் உலகில் பெருமையடிக்கவும், அராஜகம் விளைவிக்கவும் விரும்பமாட்டர்களோ அவர்களுக்கே உரித்தானதாக்கினோம்."**

**(அல்கஸஸ் :83)**

எனவே, அல்லாஹ்வுக்கு மட்டுமான கண்ணியத்தை அவன் காட்டிய வழியிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுக் கொண்டதனால் கண்ணியத்துக்குரியவர்களாக ஆகுகின்றனர். அதுபோலவே மு'.மின்களும் அல்லாஹ்வின் தூதர் கொண்டு வந்ததை ஏற்று நடைமுறைப்படுத்தவதனால் கண்ணியத்துக்குரியவர்களாக ஆகுகின்றனர்.

**"கண்ணியம் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மு.'மின்களுக்கும் உரியதாகும்" (அல்முனாபிகூன்:18)**

வசனத்தின் அடுத்த பகுதி கண்ணியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டலையும் நிபந்தனைகளையும் தருகிறது.

**"அவனை நோக்கி உயர்ந்து செல்வது தூய்மையான சொல் மட்டுமே!"**

தூய்மையான சொல் என்பது உள உணர்வுகளுடன் உணர்ச்சிபூர்வமாக வெளியிடப்படும் உண்மையின் மீது அமைந்த வார்த்தைகள், கருத்துக்கள், சிந்தனைகள் யாவுமாகும். மனோஇச்சைகளுடன், சடவாத அழுத்தங்களுடன் பகுத்தறிவு வாதங்களுடன் முன்வைக்கப்படும் கருத்துக்கள், சிந்தனைகள், கோட்பாடுகள் யாவும் அசுத்தமானவைகளாகும். அவற்றிற்கு எந்தப் பெறுமானமும் அல்லாஹ்விடமோ அவனது தூதரிடமோ மு'.மின்களிடமோ கிடையாது.

வெறும் தூய சொற்கள் மட்டும் மேல் நோக்கிச் செல்வதில்லை. அவ்வார்த்தைகளுக்கு ஏற்புடையதாக செயல்பாடுகள் அமையும்போதே அவை மேல்நோக்கிச் செல்லும். அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"சுப்ஹானல்லாஹ்', 'அல்ஹம்துலில்லாஹ்', 'லா இலாஹ இல்லல்லாஹ்', அல்லாஹு அக்பர்' இவை யாவும் அல்லாஹ்வைச் சூழ்ந்து தேனீக்கள் ரீங்காரமிடுவது போன்று இவ்வார்த்தைகளை மொழிந்தவனை நினைவுகூர்ந்து கொண்டிருக்கும்"**

உண்மையில் இவ்வார்த்தைகளை மொழிகின்றவன் வாழ்க்கையில் எல்லா

நிலைகளிலும் அல்லாஹ்வை தூய்மைப் படுத்தக் கூடியவனாக, அல்லாஹ்வையும் அவனது சட்டளைகளையும் மட்டுமே புகழுக்குரியவைகளாக மதிக்கின்றவனாகவும், அல்லாஹ் அல்லாத அனைத்து கடவுளரையும், எல்லாவித அடிமைத்து வங்களையும் நிராகரிக்கின்றவனாகவும் அல்லாஹ்வை மட்டுமே அனைத்தை விடவும் மிகப் பெரிய சக்தியாக, வல்லமையுள்ளவன் என்ற நிலையில் வாழ்ந்து காட்டும் போதே இப்பேற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

இன்னும் நற்செயல் (அமலுஸ் ஸாலிஹாத்) என்ற பிரயோகம் இவ்வசனம் இறங்கிய காலநேர பின்னணிகளுடன் நோக்கும்போது விசாலமான புரிதல்களை உண்டு பண்ணுகிறது. அமலுஸ்ஸாலிஹ் என்பது தொழுகையும், நோன்பும், ஸகாத்தும், ஹஜ்ஜும், திலாவத்தும், திக்ருமா? இவ்வசனம் இறங்கியபோது தொழுகையோ நோன்போ, ஸகாத்தோ கடமையாக்கப்பட்டிருக்கவில்லை. மது, சூது எதுவுமே தடுக்கப்பட்டிருக்கவில்லை. அப்படியாயின் அமலுஸ் ஸாலிஹ் என்றால் என்ன? இக்கேள்விக்கு டாக்டர் இஸ்ரார் அஹ்மத் அவர்கள் பின்வருமாறு விடை காண்கிறார்:

*'எவற்றை சத்தியமானவை என்று ஏற்று மொழிந்து உறுதி கொண்டிருந்தார்களோ அவற்றின்பால் மக்களைத் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்த 'தஃவா', அல்லாஹ்வின் தீனை நிலைநாட்டுவதற்கான தொடர்ந்தேச்சையான போராட்டம் 'இகாமதுத்தீன்', அவற்றால் ஏற்படும் கஷ்டங்களை, துயரங்களை பொறுத்துக் கொள்ளும் 'ஸப்ர்', புனித இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அடிமைகளை விடுவிப்பதற்கான 'அல்இன்பாக் பீ ஸபீலில்லாஹ்' போன்றவையே. பின்னர் இவற்றுடன் தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், உம்ரா மற்றும் ஏனைய நபிலானவைகள் இணைந்து கொண்டன.''* எனவே, இவற்றினூடாக இறைநெருக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுவே உண்மையான கண்ணியமாகும்.

இப்பாதையின் இயல்பை மூன்றாவது பகுதி கூறுகிறது:

**''மேலும் எவர்கள் தீய சூழ்ச்சிகள் செய்கிறார்களோ, அவர்களுக்கு கடுமையான வேதனை இருக்கிறது. அவர்களுடைய சூழ்ச்சிகள் தானாகவே அழியக் கூடியவையாக இருக்கின்றன.''**

மனிதர்களை- அவர்கள் காலாகாலமாக வணங்கிக் கொண்டிருக்கும் சிலை வணக்கத்திலிருந்து விடுவிப்பதென்பதும், அவர்களிடத்தில் வேரூன்றியிருக்கும் சிந்தனைகள், நம்பிக்கைகளிலிருந்து விடுவிப்பதென்பதும் மிகக் கஷ்டமான தாகும். இது ஒரு நீண்ட முயற்சியை வேண்டி நிற்பதாகும். ஒவ்வொரு தனிமனிதராக இதற்கு முயற்சிக்க வேண்டும். அவர்களுக்குப் பின்னாலேயே திரிய வேண்டும். இவ்வாறாக முயன்று கொண்டிருக்கும் போதே எதிரிகள் தமது பகைமை உணர்வுகளை வெளிக்காட்ட ஆரம்பிப்பர். முதலில் தூற்ற ஆரம்பிப்பர்; பின்னர் ஊரை விட்டு விரட்டுதல், கொலை செய்தல் என சூழ்ச்சி செய்வர். அவற்றை மிகப் பொறுமையுடன் முகம்கொள்ள வேண்டும். பேச்சு வார்த்தைக்கோ, உடன்படிக்கைக்கோ செல்லக் கூடாது. ஏனெனில் அவை ஒரு போதும் பயனளிக்கப் போவதில்லை.

**''நபியே! நீர் கூறும்: அல்லாஹ்வால் இறக்கப்பட்ட இப்புத்தகத்தை நான் நம்புகிறேன். மேலும் உங்களுக்கு மத்தியில் நீதத்தை நிலைநாட்டுமாறு ஏவப்பட்டுள்ளேன்.''**

என்கிறது அல்குர்ஆன்.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் வெறுமனே ஓர் உபதேசியல்ல; நீதியும், நேர்மையும் மிக்கதோர் அமைப்பை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்திக் காட்ட வந்தவர்களாவர்.

பிழையான, கெட்ட வார்த்தைகளை எடுத்து வருவோர் சத்தியத்தை தாழ்த்தி விட எவ்வளவுதான் முயன்றபோதிலும் அவை தோல்வியுற நேரிடும்.

ஆம்! முஸ்லிம்கள் யதார்த்தபூர்வமான தேடல்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் போலியான, தற்காலிக கௌரவங்களுக்கு ஆளாகி அல்லாஹ்வின் கண்ணியத்தை இழக்க நேரிடும். இணைவைப்பும் ஏனைய எல்லாவித ஜாஹிலியத்துகளும் அரசோச்சும் சமூகமொன்றில் வாழும் முஸ்லிம்களின் கூரிய அவதானத்திற்குட்படுத்தப்பட வேண்டிய வசனமாகும் இது. அவர்களின் உண்மையான கண்ணித்தை கோடிட்டுக் காட்டி, மிகப்பெரிய அமலுஸ் ஸாலிஹாத் எது என்பதையும் அது வரைவிலக்கணப் படுத்தியுள்ளது.

**ஆதார மூலங்கள்:**


இப்னு கஸீர்
ரூஹுல் மஆனி
தப்ஹீமுல் குர்ஆன்
ததப்புருல் குர்ஆன்
மீஸாக்


## தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா போட்டிப் பரீட்சைகள் ஹி 1421

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியினால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா போட்டிப் பரீட்சைகள் இன்ஷா அல்லாஹ் இம்முறையும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறை பின்வரும் மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெறும்:

**1. கனிஷ்ட பிரிவு :** இப்பிரிவில் தற்போது தரம் 10, 11 களில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் மட்டும் கலந்து கொள்ள முடியும்.

**2. சிரேஷ்ட பிரிவு :** இப்பிரிவில் தற்போது க.பொ.த (உ/த) வகுப்பில் (12ம், 13ம் ஆண்டு) கல்வி பயிலும் மாணவ மாணவிகளும், 2000ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் கலந்து கொள்ள முடியும்.

**5. மதரஸா பிரிவு :** இப்பிரிவில் தற்போது (ஹிஜ்ரி 1421ல்) மதரஸாக்களில் ஆண்டு 5ல் கற்கும் மாணவ மாணவியர் மட்டும் கலந்து கொள்ள முடியும்.

**போட்டிகள்** இன்ஷா அல்லாஹ் ஜனவரி மாதத்தில் ஒரே தினத்தில் மூன்று பிரிவினருக்கும் நடாத்தப்படும்.

போட்டியில் வெற்றி பெறுவோர் பெறுமதியான பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்வர்.

**பாடசாலை, மத்ரஸா மாணவர்களுக்கான** விண்ணப்பங்களும் விபரங்களும், அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் **தனிப்பட்ட பரீட்சார்த்திகள்** தங்களது சுய விலாசமிடப்பட்ட தபாலுறை ஒன்றினை பின்வரும் முகவரிக்கு அனுப்பி போட்டி தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்:

**பணிப்பாளர்**
**தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா பகுதி**
**77, தெமடகொட வீதி, கொழும்பு 00900**
**தொலைபேசி : 687091 பெக்ஸ் : 686030**

# ஜமாஅத் தொழுகை

## அல்ஹதீஸ் விளக்கம்

அஷ்ஷெய்க்
H.M. மின்ஹாஜ் இஸ்லாஹி

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**"ஒருவர் தன்னுடைய வீட்டில் அல்லது கடைத்தெருவில் தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்தைந்து மடங்கு நன்மையைப் பெற்றுத் தரும். அதாவது ஒருவர் வுழூ செய்து அதை அழகாகவும் செய்து பின்னர் தொழ வேண்டுமென்ற எண்ணத்திலேயே பள்ளிவாயலுக்குப் புறப்பட்டுச் செல்வாரானால் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் ஒரு அந்தஸ்த்து உயர்த்தப்பட்டு ஒரு பாவம் அழிக்கப்பட்டு விடுகிறது. அவர் தொழுது விட்டு வுழூ முறியாத நிலையில் தொழுத இடத்தில் இருக்கும் வரை மலக்குகள் 'இறைவா! நீ இந்த மனிதருக்கு அருள்புரிவாயாக! உனது கருணையை அவருக்குச் சொரிவாயாக!' என்று அவருக்காக பிராத்திக்கின்றனர். உங்களில் ஒருவர் தொழுகையை எதிர்பார்த்திருக்கும் போதெல்லாம் அவர் தொழுகையிலேயே இருக்கிறார்"**

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) ஆதாரம்: புகாரி, முஸ்லிம்**

இந்த ஹதீஸ் ஜமாஅத் தொழுகை, அழகுற வுழு செய்தல், தொழுகையை எதிர்பார்த்திருத்தல், மலக்குகளின் பிரார்த்தனை போன்றவற்றின் சிறப்பு குறித்து விளக்குகிறது.

தொழுகை இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இதர இபாதத்களைப் போலல்லாது இறை சந்நிதியில் வைத்து கடமையாக்கப்பட்ட தொழுகை ஒரு அடியான் தனது முழுமையான அடிமைத்துவத்தைப் பறைசாற்றும் வணக்க வழிபாடாகும். எனவேதான், இறைத்தூதருக்கு கண் குளிர்ச்சி தொழுகையில் ஆக்கப்பட்டிருந்தது. இஸ்லாத்தின் ஆரம்பமும் இறுதியும் அதுவேதான். அல்குர்ஆனில் தொழுகை பற்றி அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. சிலபோது திக்ருடன் இணைத்தும், சிலபோது ஸகாத், பொறுமை, வணக்க வழிபாடுகள் போன்றவற்றுடன் சேர்த்தும் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. நற்செயல்கள் இதனைக் கொண்டு ஆரம்பமாகின்றன. மறுமை நாளில் அல்லாஹ்வுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளில் தொழுகையைப் பற்றியே முதலில் அடியானிடம் விசாரிக்கப்படும். இத்தகைய தொழுகை இஸ்லாத்தின் தூணாக இருப்பதோடு ஆண் பெண் இருபாலார் மீதும் ஏழை, பணக்காரன், சுதந்திரமானவன், அடிமை, பயணி, ஊரிலிருப்பவன், நோயாளி உட்பட அனைவர் மீதும் கடமையாகும்.

இஸ்லாம் இந்தத் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுமாறு பணிக்கிறது. இஸ்லாமிய ஷரீஅத்தின் உன்னதத் தன்மைகளில் ஒன்று, அது அதிகமான இபாதத்துகளை கூட்டமைப்பு என்ற உயர் நோக்கம் கருதி கடமையாக்கியிருப்பதாகும். பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒருவரோடு ஒருவர் அறிமுகமாகி, தமது விவகாரங்களை கலந்தாலோசித்து, தமது பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டு ஒற்றுமையுடன வாழ ஜமாஅத் தொழுகை வழிவகுக்கிறது. அறிவீனருக்குக் கற்றுக் கொடுத்து இயலாதோருக்காக மனமிரங்கி உதவி செய்து இஸ்லாத்தின் கண்ணியத்தை உலகறியச் செய்ய ஜமாஅத் தொழுகை வழிவகுக்கிறது. எனவேதான் அல்குர்ஆன் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்று மாறு கட்டளை பிறப்பிக்கிறது.

**"இறைவிசுவாசிகளே! நீங்கள் குனிந்து ருகூஉ செய்யுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அல்லாஹ்வின் பாதையில் உண்மையான முறையில் போராடுங்கள்" (ஸூரத்துல் ஹஜ்:77-78)**

இறைவனிடம் உரையாடுகின்ற போது ஒரு முஸ்லிம் தனது பிற சகோதரர்களை புறந்தள்ளி தான் மட்டும் உரையாடுகின்ற அமைப்பை அல்லாஹ் விரும்பவில்லை. அவ்வாறே அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்ற போதும்கூட ஏனையவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவனது நாட்டமாக இருக்கிறது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

**"உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம். எங்களை நேரான வழியில் செலுத்துவாயாக" (ஸூரதுல் பாத்திஹா: 4-5)**

இதிலிருந்து கூட்டமைப்பின் அவசியம் தெரியவருகிறது.

நிச்சயமாக ஜமாஅத் தொழுகை இன, நிற, பிரதேச வெறியையும், சமூக வேறுபாடுகளையும் தகர்த்தெறிந்து விடுவதற்கான மிகவும் முக்கியமான சாதனங்களில் ஒன்றாகும். ஜமாஅத் தொழுகையைப் பற்றி பேரறிஞர் அஷ்ஷெய்க் முஹம்மத் அல்கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்கள்:

"சுபஹுத் தொழுகையின் இரண்டு ரக்அத்துக்களையும், லுஹர் தொழுகையின் நான்கு ரக்அத்துகளையும் ஒரு மனிதன் தனித்துத் தொழாமல் ஜமாஅத்துடன் தொழவிரும்புகின்ற வேளை அவை (அவனுக்கு) எதனையும் மேலதிகமாக கொடுத்து விடுவதில்லை. இருப்பினும் அல்லாஹ்வின் முன்னிலையில் பிறருடன் நின்று தொழும்போது அவனுக்கு இஸ்லாம் இருபத்தைந்து மடங்கு நன்மையை வழங்குகிறது. இது தனித்து நின்று செயலாற்றுவதை தூர எறிந்து கூட்டமைப்பு (ஜமாஅத்) என்ற கொடியின் கீழ் ஒன்றுதிரளுவதற்கான ஊக்கப்படுத்தலாகும். மேலும் தனிமையிலிருந்து விடுபடுவதற்காகவும், தான் வாழுகின்ற சமுதாயத்துடன் இணைந்து இரண்டறக் கலந்து விடுவதற்காகவும் மனிதனை ஊக்கப்படுத்துகின்ற தூண்டற் காரணியாகவும் ஜமாஅத் தொழுகை அமைகிறது"

இதன் மூலம் பரஸ்பர அன்பும், பிணைப்பும், அறிமுகமும், சகோதரத்துவ வாஞ்சையும் ஏற்படுகிறது. ஜமாஅத் தொழுகையின்போது மூத்தவர் அறியப்பட்டு கண்ணியப்படுத்தப்படுகின்ற நிலையும், ஏழை இனங்காணப்பட்டு அவனுக்கு உதவி வழங்கப்படுகின்ற சூழ்நிலையும், அறிஞர் அடையாளப்படுத்தப்பட்டு அவரிடம் விளக்கம் கேட்கப்படுகின்ற சூழலும்,

அறிவீனர்களுக்கு கற்பிக்கப்படுகின்ற நிலையும் உருவாகிறது. அதேவேளை தொழாத வர் அறியப்பட்டு கண்டிக்கப்படு கின்ற நிலையும், தொழுவதில் சோம் பேறியாக இருப்பவருக்கு தொழுகையின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்ற சந்தர்ப்பமும் கிடைக்கிறது. பள்ளிவாயலில் அல்லாஹ்வின் அருள்வேண்டி ஒன்று கூடுவதானது அல்லாஹ்வின் அருளும், பரகத்தும் இறக்கியருளப்படுவதற்கான காரணியாக அமைந்து விடுகிறது. ஆகவே, ஜமாஅத்துடன் தொழுவது முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒற்றுமை யையும். அன்பையும், சகோதரத்துவத்தை யும் உருவாக்கி அவர்களை உறுதிவாய்ந்த ஒரு சமூகமாக மாற்றி விடுகிறது. அவர்க ளிடையே, உதவி, ஒத்தாசை புரிதல், பரஸ்பர அன்பு, உளரீதியான பிணைப்பு ஆகியவற்றை தோற்றுவிப்பதோடு ஒழுங் கையும், கட்டுப்பாட்டையும், நேரத்தைப் பேணும் பண்பையும் வளர்த்து விடுகிறது.

எனவேதான் நாம் விளக்கத்திற்காக எடுத்துக் கொண்ட ஹதீஸிலும், பிறிதொரு ஹதீஸிலும் நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**''தனித்துத் தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்தேழு மடங்கு நன்மையைப் பெற்றுத்தரும்''**

**(புகாரி, முஸ்லிம்)**

இமாம் இப்னு தகீக் அல்ஈத் (ரஹ்) கூறுகிறார்கள்:

'வீட்டிலும், கடைத்தெருவிலும் தனித்து அல்லது ஜமாஅத்துடன் தொழுவதை விட பள்ளிவாயலில் ஜமாஅத்துடன் தொழுவது அதிக நன்மைகளைப் பெற்றுத்தரும்'',

நிச்சயமாக நியாயபூர்வமான, ஷரீஅத் அனுமதித்த காரணங்களுக்காக அன்றி மனோஇச்சையின் பிரகாரம் தமக்கு வசதியான இடங்களில் தனித்து தொழு கின்றவர்கள் நாம் மேலே விவரித்த ஜமாஅத் தொழுகையின் பிரயோசனங் களை இழப்பதோடு சமூகப் பிரக்ஞை அற்றவர்களாகவே வாழ்வர். அத்தோடு இருபத்தைந்து மடங்கு நன்மைகளையும் இழந்த துர்ப்பாக்கியவான்களாக இருப்பர். மேலும் இத்தகைய மனிதர்களது வீடுகளை எரித்து விட நினைத்தார்கள் நபிகளார். நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**''எனது உயிர் எவனது கையில் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக! விறகு பொறுக்க ஒருவரை ஏவிவிட்டு பின்னர் தொழுகைக்கு அதான் சொல்வதற்கு ஒருவருக்கு கட்டளை பிறப்பித்து விட்டு பிறகு தொழுகை நடாத்துவதற்கு ஒருவருக்கு கட்டளையிட்டு விட்டு (தொழுகைக்கு வராத) சில மனிதர்களை நோக்கிச் சென்று அவர்களது வீடுகளை எரித்து விடுவதற்கு நினைத்துள்ளேன்.''**

**(புகாரி, முஸ்லிம்)**

ஜமாஅத் தொழுகையின் சட்டம் குறித்து நான்கு வகையான கருத்துக்களை இஸ்லா மிய அறிஞர்கள் முன்வைக்கின்றனர்:

1. பர்ளு கிபாயா
2. வலியுறுத்தப்பட்ட ஸுன்னா (ஸுன்னா முஅக்கதா)
3. தொழுகை செல்லுபடியாவதற்கு ஜமாஅத் தொழுகை ஒரு ஷர்த் (நிபந்தனை) ஆகும்.
4. பர்ளு ஐன்

பர்ளு ஐன் என்று குறிப்பிடும் அறிஞர்கள் பின்வரும் ஹதீஸை தமது கருத்துக்கு ஆதாரமாக முன்வைக்கின்றனர்.

**''ஒரு குருடர் நபியவர்களிடம் வந்து 'அல்லாஹ்வின் தூதரே! பள்ளிவாயலுக்கு என்னை அழைத்து வருவதற்கு எனக்கு யாருமே இல்லை' என்று கூறிவிட்டு வீட்டிலே தொழுவதற்கு தனக்கு அனுமதி அளிக்குமாறு வேண்டினார். அண்ணலார் அவருக்கு அனுமதி கொடுத்தவுடன் அவர் திரும்பிச் சென்றார். அவரை மீண்டும் அழைத்த நபியவர்கள், 'தொழுகைக்கான அதான் அழைப்பை செவிமடுக்கிறீரா?' என்று கேட்டார்கள். அதற்கவர், 'ஆம்' என்றார். 'அப்படி யென்றால் அவ்வழைப்புக்கு பதில் அளித்து தொழுகைக்கு வரவேண்டும்.' என நபியவர்கள் கட்டளையிட்டார்கள்.''**

கலாநிதி ஸாலிஹ் இப்னு ஆனிம் அஸ்ஸத்லான் ''ஸலாதுல் ஜமாஆ'' என்ற நூலில் ஜமாஅத் தொழுகை பர்ளு ஐன் என்ற கருத்தை பலமானதாக கருதுகின்றார். இதிலிருந்து ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவம் புரிகிறதல்லவா?

ஹதீஸின் இரண்டாம் பகுதி வுழூ பற்றிக் குறிப்பிடுகிறது. ஒரு முஸ்லிமை ஆன்மீக சூழலுக்கு அழைத்து வருவதற்கான முதல் ஏற்பாடே வுழூ. அதனை வீட்டில் அழகுறச் செய்து பள்ளிக்குச் செல்வது நபிவழியாகும். வுழூ செய்து புறச்சுத்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும் முஸ்லிமிடத்தில் அகச்சுத்தத்திற்கான சூழல் உருவாக்கப்படு கிறது. வுழூவின்போது இறையுணர்வு, இறையச்சம் உள்ளத்தில் தோன்றி அதிகரிக்கிறது. பக்தி பரவச நிலைக்கு படிப்படியாக ஒரு முஸ்லிம் ஆட்படுகிறான். இறைவனோடு உரையாட இருக்கிறோம் என்ற பேரின்பக் காதல் மலர்கிறது. நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**''சுத்தம் ஈமானின் பாதியாகும்'' (முஸ்லிம்)**

வுழூ செய்தவுடன் அவனது சிறு பாவங்கள் அனைத்தும் அவனது உடல் உறுப்புக்களில் இருந்து வழியும் நீருடன் சேர்ந்து சென்று விடுகின்றன. என்ற கருத்துக்களை ஹதீஸ்களில் பரவலாகக் காண்கின்றோம்.

ஹதீஸின் அடுத்த பகுதி அகச்சுத்தம் பற்றிப் பேசுகிறது. எண்ணங்கள் இபாதத்து களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக தொழுகை நல்லெண்ணத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்படுதல் மிகவும் அவசியமானதாகும். பிறரின் வற்புறுத்தல், நச்சரிப்பு, சோம்பல் போன்ற அற்பமான அம்சங்கள் தொழுகையோடு சம்பந்தப்படக் கூடாது. இறைவனைச் சந்திக்க வேண்டும்; அவனுடன் உரையாட வேண்டும் என்ற வேணவா தொழுகையின் தூண்டற் காரணியாக அமைதல் வேண்டும். இவருக்கே ஒரு அந்தஸ்து உயர்த்தப்பட்டு ஒரு பாவம் அழிக்கப்படுகிறது. அகச் சுத்தமும் புறச்சுத்தமும் நீங்கிச் செல்லாத நிலையில் ஒருவர் தொழும் இடத்தில் இருக்கும்போது மலக்குகளின் ஆசீர் வாதத்திற்கு உட்படுகிறான்.


மலக்குகள் அல்லாஹ்வின் நெருங்கிய அடியார்கள். அவர்களின் பிரார்த்தனைகள் நிராகரிக்கப்படுவதில்லை. ஆனாலும் மனிதர்களில் பெரும்பாலோர் சட்டங்களில் ஏற்பட்டுள்ள ஒருவகை மாற்றத்தால் தாக்கமடைந்து ஸலாம் கொடுத்தவுடன் எழுந்து சென்று விடுகின்றனர். இது ஸுன்னாவுக்கு முரணான, செயல் சார்ந்த பித்அத்தாகும். யாருடைய திருப்தியையும், பாராட்டையும், ஆசீர்வாதத்தையும் ஒரு முஸ்லிம் இழக்கலாம். மலக்குகளின் ஆசிர்வாதத்தை இழக்கலாமா?

ஹதீஸின் இறுதிப் பகுதி தொழுகைக் காக ஒரு முஸ்லிம் காத்திருத்தல் பற்றிக் குறிப்பிடுகிறது. தொழுகையை எதிர்பார்த் திருப்பவருக்கு தொழுகையில் கலந்து கொண்ட நன்மை கிடைக்கிறது. ஒரு முஸ்லிம் சடஉலகின் சந்தடிகளிலிருந்து விடுபடுவது எவ்வளவு பாக்கியம் மிக்கது! அதுவும் இறைவனுடன் உரையாடக் காத் திருப்பது எத்துணை தூரம் மகத்துவமானது! இறைத்தூதரின் வார்த்தையில் அதுவும் ஒரு போராட்டமே! தொழுகைக்காக காத்திருப்பதும் போராட்டமே! அது ஒரு உள்ளத்திற்கு எதிரான போராட்டம்! சிறுபாவங்களை அழித்து, அந்தஸ்த்து களை உயர்த்திவிடக் கூடியதே தொழுகைக் காக எதிர்பார்த்து இருப்பதாகும். ஆகவே, ஜமாஅத் தொழுகையை ஆன்மீக, சமூகப் பயன்பாடுகளை வளர்க்கும் விதத்தில் நாம் நிறைவேற்றுவோமாக!

## தஃவா களம்

மரணம் வரையிலான வாழ்க்கை அதன் நாளாந்த பிரச்சினைகள், அரசியல், சமூக பொருளாதார, கல்வி மற்றும் இன்னோரன்ன வாழ்க்கைத் துறைகளின் அவலங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையின் ‘இருப்போடு’ தொடர்பானவை. சுவர்க்கம், நரகம், இறைதிருப்தி என்பன மனித வாழ்வின் ‘இலக்கோடு’ தொடர்பானவை.

முஸ்லிம் சமூகத்தில் இவ்விரண்டும் இரு துருவங்களாக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. இரண்டையும் இரண்டு சாரார் வெவ்வேறாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இருப்பும், இலக்கும் இரண்டானது மட்டுமல்ல; இருப்பும் கூறு போடப்பட்டு, இலக்கும் கூறுபோடப்பட்டது. ஒவ்வொரு கூறுக்கும் தனித்தனி அமைப்புகள் உருவாக்கப்பட்டன. எது எங்கிருந்து ஆரம்பமாகிறது? எங்கு சென்று முடிவடையும்? எதை சாதிக்கும்? என்பதை ஆரம்பம் செய்தவர்களே அறியாத நிலை! வார்த்தைகளை வரைபடமாக்கினால் இது இப்படி அமையலாம்:




# இணையாது செல்லும் இருப்பும், இலக்கும்!

உஸ்தாத்
ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**இருப்பு தொடர்பான நிலைப்பாட்டிலும் பல்வேறு நோக்குகள்:**

இருப்பை குத்தகைக்கு எடுத்துக் கொண்ட ஒரு சாரார் உண்மையை ஒப்புக் கொள்கின்றனர். ‘நாங்கள் மார்க்கம் தெரியாதவர்கள்; சமூகத்திற்காக எம்மால் இயன்றதைச் செய்கிறோம். எனவே நாங்கள் செய்வது இஸ்லாமிய பணியல்ல; முஸ்லிம்களின் பணி. மார்க்கத்தை மார்க்கம் தெரிந்தவர்கள் செய்யட்டும்; நாங்கள் அதற்கு இடையூறாக இருக்க மாட்டோம்.’

இதற்கு நேரெதிராக இஸ்லாம் தெரிந்தவர்களது நிலைப்பாடு மறுபக்கத்திலிருக்கிறது. ‘அரசியல், இனப்பிரச்சினை, கல்வி அபிவிருத்தி யாவும் மார்க்கத்திற்கு அப்பாற்பட்டவை; இதுபோன்ற உலக விவகாரங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. மறுமைக்காக செயல்படுவதும், மக்களை அதற்காக செயல்படத் தூண்டுவதுமே எமது பணி. இந்தப் பணியில் நாம் ஈடுபட்டால், உலக விவகாரங்களை அல்லாஹ் பார்த்துக் கொள்வான். எங்களால் இந்த உலகில் எதனையும் சாதித்துவிட முடியாது.’ இது இலக்கைப் பற்றிக் கவலைப்படுவோரின் குரல். உலக விவகாரங்களால் இலக்கு பிழையாகி விடுமோ என்ற கவலையின் வெளிப்பாடே அந்தக் குரல்.

நல்ல எண்ணங்கள், தெளிவில்லாத நிலைப்பாடுகள், இருப்பும் இலக்கும் குறைபாடுகள், அதேவேளை ‘இருப்பை’ யே கவலையாகக் கொண்ட மற்றுமொரு சாரார் இன்னுமொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். ‘இருக்கும் சமூகத்தின் இருப்பையும், நடப்பையும் நாங்களே கவனிக்கிறோம்; நாங்கள் இல்லாது போனால் இந்த சமூகமே இருக்க முடியாது. அதன் தேவைகளையும் பிரச்சினைகளையும் கவனிப்பவர் யாருமில்லை. மார்க்கம் பேசுவோருக்கு பேச மட்டுமே தெரிகிறது; அவர்களால் பிரச்சினைகளைத் தீர்க்கவோ, எதிர்கொள்ளவோ முடிவதில்லை. எனவே இந்த சமூகத்தின் மீது உரித்துடையோர் நாங்களே; இதன் தலைவர்களும் நாங்களே! மார்க்கம் பேசுபவர்கள் எமது விவகாரங்களில் தலையிடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.”

இந்த நிலைப்பாட்டின் எதிர்ப்பக்கத்தில் இலக்கை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கும் இன்னுமொரு தரப்பினரும் இருக்கின்றனர். அவர்கள் இருப்பையும், நடப்பையும் இஸ்லாத்தின் உரைகல்லினால் தரம் பிரிப்பவர்கள்; இருக்கும் சமூகத்திலிருந்து சற்றுத் தூரத்தில் விலகி நின்றிருப்பவர்கள்; இஸ்லாமியத் தொலைநோக்கியால் சமூகத்தை அவதானித்து அதன் குறைநிறைகளைக் குர்ஆன் சுன்னாவால் அலசிப் பார்ப்பார்கள். சமூகத் தலைவர்கள் சமூக விவகாரங்களில் விடும் தவறுகள் அனைத்தும் இவர்களது அலசலில் பிரதான இடத்தை வகிக்கும். இதனால் ‘நாமே தலைவர்கள்’ என்று தம்பட்டமடிப்போரின் எதிர்க்கட்சியாக இவர்கள் இருப்பார்கள். புத்திஜீவிகளிடையே இஸ்லாமிய சிந்தனையை வளர்க்கும் பணிக்கு இவர்களது பங்கு குறிப்பிடத்தக்கது எனலாம்.

இங்கு தலைமைத்துவம், சமூகத் தலைமை என்றும் புத்திஜீவித்துவத் தலைமை என்றும் இரண்டாக விலகிச் செல்வதைத் காணலாம். இதனை இஸ்லாமிய உணர்வு படைத்த எந்த மகனும் கவலையின்றி நோக்க முடியாது.

இதனை விட கவலைதரும் விடயம் யாதெனில் நிலைப்பாடுகள் தெளிவில்லாமல் இருப்பையும், இலக்கையும் குழப்பிக் கொள்வதாகும். சிலர் தொழுகிறார்கள்; சுவனத்தின் திறவுகோலைத் தவறவிடாது பற்றிப் பிடிப்பதற்காக... இலக்கு சரியாகத் தானிருக்கிறது.. வியாபாரம் செய்கிறார்கள் அமானிதமில்லாமல்... இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக.

மயக்கம் தெளியவில்லை; இரண்டும் விலகியே நிற்கிறது.

வேறு சிலர் இரவு பகலாக ஓய்வின்றி உழைக்கிறார்கள். சமூகத்திற்காக! மனைவி பிள்ளைகளோடு ஒய்ந்திருப்பதற்கும் அவகாசமில்லை. உல்லாசத்திற்கு..!! இவர்கள் சமூகத்திற்காக உழைக்கும் உன்னத தியாகிகள்தாம். அதேவேளை தொழுகைக்காக ஒரு பத்து நிமிடத்தை ஒதுக்க இவர்களுக்கு நேரமில்லை, இலக்குக்காக...!!!

இங்கும் மயக்கம் தெளியவில்லை. இருப்புக்காக இலக்கைக் கோட்டை விட்டதே இங்கும் கதை.

இன்னும் சிலர் ஒரு காலத்தில் 'இருப்பும்' ஒரு காலத்தில் 'இலக்குமாக' தங்களையே மாற்றிக் கொள்கிறார்கள்.

படிக்கும் காலம்... படித்துவிட்டு சூழ இருப்பவைகளையும் நடப்பவைகளையும் விமர்சிக்கும் காலம்... வாழ்க்கையில் பொறுப்புகள் இல்லாமல் சுதந்திரமாக சிறகடிக்கும் காலம்... பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் சமூகத்தைத் திருத்தி விடலாம் என்று கனவு காணும் காலம்... படிப்பினைகளைத் தான் பெறும் வரை பிறர் சொல் மதிக்காத காலம்...

இதனை கொள்கை பேசும் காலம் என்றும் கூற முடியும். இக்காலத்தில் 'சித்தாந்த சுகம்' அனுபவிப்பதில் ஒரு அலாதியான மகிழ்ச்சி இருக்கத்தான் செய்கிறது. இது சிந்தனை சக்தி கொண்டவர்களின் ஒரு தேவையும் கூட.

ஆனால் அடுத்து, இவர்கள் தமது பிந்திய காலத்துக்கு வரும்போது... அதாவது வாழ்க்கைப் பொறுப்புகளை சுமந்து, கற்பனைகளை மறந்து, ஆகாய சஞ்சரிப்புகளை விட்டிறங்கி, பூமியில் கால் பதித்து, நிதர்சனங்களைத் துலக்கும் காலம் இவர்களை வந்தடையும் போது... ஏற்கனவே ஆகாயத்திலிருந்து வாழ்க்கையைப் பார்த்தவர்கள் இப்போது பூமியிலிருந்து நேருக்கு நேர் அதனை எதிர்கொள்கிறார்கள்.

இப்போது 'இருப்பு' அதன் நெளிவு சுழிவுகளுடன் துல்லியமாகத் தெரிகிறது. அதனூடாகத்தான் நாமும் பயணம் செய்ய வேண்டும் என்பதை வாழ்க்கையில் முதல் முறையாக இவர்கள் உணருகிறார்கள். விளைவு..!!?

இலக்கை மெல்ல மெல்ல மறந்து போகிறார்கள். 'இருப்பில்' ஆழமாகத் தடம் பதிக்கிறார்கள்; மட்டுமல்லாமல் 'இலக்கை'யும் அது சார்ந்தவைகளையும் விமர்சிக்கவும் தலைப்பட்டு விடுகிறார்கள். சிலர் வெளிப்படையாகவே 'வாழ்க்கை இப்போது தான் புரிகிறது' என்று ஒரு புதிய தத்துவத்தையும் கண்டுபிடித்து வெளியிடுகிறார்கள்.

அந்தோ! 'இருப்பும்' 'இலக்கும்' விலகியே செல்கின்றன. மயக்கம் தொடர்கிறது.

'இருப்பும்' 'இலக்கும்' ஒன்றோடு ஒன்று ஒட்ட விடாது தடுக்கின்ற மற்றொரு காலப் பிரிப்பும் இருக்கிறது.

அமைதி நிலவும் காலமும், அலை வீசும் காலமும் மாறுகின்ற இடத்தில் இந்த அவலம் அரங்கேறுகிறது. இது காலத்தின் கோளாறு அல்ல; கால மாற்றங்களால் ஏற்படுகின்ற மயக்கத்தின் கோளாறு.

காலத்துக்குக் காலம் பல்வேறு அலைகள் வீசுகின்றன. அரசியல் அலை, அகதிகள் அலை, ஏதோ ஒன்றின் எழுச்சியலை, அல்லது வீழ்ச்சியலை, தேசிய, சர்வதேச மட்டங்களில் வீசும் அலைகள் எனப் பல்வேறு அலைகள் வீசும்போது அனுபவ இருப்பிலிருந்து இலக்கிற்கோ அல்லது இலக்கிலிருந்து இருப்பிற்கோ பலரை அடித்துச் சென்று விடுகின்றன.

யாழ் மன்னார் மாவட்டங்களிலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். அப்போது 'இருப்பில்' தம்மைப் பறிகொடுத்திருந்தவர்கள் கூட ஒரு கணம் அந்த அலையால் உந்தப்பட்டு 'இலக்கை' நோக்கி வந்தார்கள் 'ஜிஹாத்' ஒன்றுதான் இதற்கான ஒரே தீர்வு என்று ஆவேசமாகத தலைநிமிர்ந்தார்கள். அது சரியா, பிழையா? என்பது எப்படிப் போனாலும் அலை ஓய்ந்த போது அவர்களும் ஓய்ந்து போனார்கள், 'இருப்பை' நோக்கி மீண்டுவிட்டார்கள்.

அமைச்சர் அஷ்ரப் அவர்களின் திடீர் மறைவு நாட்டில் ஒரு பாரிய அலையைத் தோற்றுவித்தது. அதுவரை முஸ்லிம் காங்கிரஸை 'இலக்கு' பிழைக்காமல் விசாரணை செய்து வந்தவர்கள் அந்த அலையில் அடிபட்ட 'இருப்பை' நோக்கி வந்தார்கள்; காங்கிரஸின் இருப்பை ஆதரித்தார்கள்.

இப்படி இருப்பிருந்தால் இலக்கில்லை; இலக்கிலிருந்தால் இருப்பில்லை என்ற நிலை தொடருகிறது. இதிலிருந்து முஸ்லிம்களை மீட்க முடியாதிருக்கிறது. இரண்டிலும் ஏக காலத்தில் தடம்பதிக்கும் நிலை எட்டாத கனியாகவே இருந்து வருகிறது.

மற்றொரு வகையில் நோக்கினால் இந்த இரண்டையும் ஒன்றிணைக்க வேண்டியவர்கள் தமது வாழ்க்கையிலேயே இரண்டையும் இரண்டாக்கி வைத்திருக்கிறார்கள்.

'இலக்கில் உறுதியில்லை; இவர்களது கவலையெல்லாம் 'இருப்பை' ப் பற்றியது தான்' எனும் விமர்சனத்தோடு சிலர் களத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஆனால் தங்களை அறியாமலே அவர்களும் 'இருப்பை'ப் பற்றி கவலைப்படத் துவங்குகிறார்கள். இன்னும் போனால் இருப்பையே இலக்காக்கியும் விடுகிறார்கள்.

வேறு சிலர், 'இருப்பைப் பற்றிய கவலை இவர்களுக்கு அறவே இல்லை; வேதாந்திகளாகவும், வெறும் தத்துவப் போதகர்களாகவுமல்லவா இவர்களது காலம் கழிகிறது? இவர்கள் எதனையும் சாதிக்க மாட்டார்கள்' எனும் விமர்சனத்தோடு ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களும் இருப்பில் அவலங்களைப் போக்கியதாகத் தெரியவில்லை; தத்துவங்களை விட்டபாடுமில்லை.

இரண்டும் இணையாமலே செல்கின்றன; இரு சமாந்தரக் கோடுகளாக! இன்னும் சொன்னால், இரண்டையும் பிரித்து வைப்பதில் ஷைத்தான் வெற்றி கண்டுவிட்டான். இஸ்லாத்தின் எதிரிகளது சந்தோஷம் நிறைவேறுகிறது; முஸ்லிம் சமூகத்தில் அவலம் ஆர்ப்பரிக்கிறது.

**இந்த அவலத்துக்கு மற்றொரு காரணமும் இருக்கிறது:**

சமூகத்தைத் தன்பால் ஈர்க்க விரும்பியோர் இரண்டு வழிகளைக் கையாண்டார்கள்: சுவனத்தின்பால் மக்களை அழைத்தார்கள் மக்களின் வருகை குறைவாக இருந்தது; உலகத்தின்பால் அழைத்தார்கள் வருகை அதிகரித்தது; எனவே சுவனத்தை விட்டு உலகத்தைப் பிடித்துக் கொண்டார்கள். 'இலக்கு' தவறியது 'இருப்பு' இலக்கானது.

இரண்டும் இரண்டாவதற்கு மக்களின் மனோபாவமும் காரணமாக அமைந்து விட்டது. இன்னும் அழுத்தமாகச் சொன்னால் 'மக்களின் மனோபாவத்தைப் பயன்படுத்த விரும்பியோரின் நடத்தை காரணமாக அமைந்தது' எனலாம்.

'மக்களின் மனோபாவம்' பயன்படுத்துவதற்கான 'கறிவேப்பிலை' அல்ல; புடம் போட்டு அழுக்கு நீக்கவேண்டிய 'தங்கம்'. அதனைக் கறிவேப்பிலையாகப் பயன்படுத்திப் புறந்தள்ள நினைப்போர் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோர வேண்டும். இவர்கள் அறியாமைகளோடும் மனித பலவீனங்களோடும் விளையாட விரும்புகிறார்கள். 'இருப்பையும்', 'இலக்கையும்' பிரித்து வைப்பதில் இத்தகையோரின் பங்கும் குறைந்ததல்ல.

இரண்டையும் பிரித்து வைப்பதில் மற்றுமொரு அணுகுமுறைக்கும் பங்கிருக்கிறது.

தமது விருப்பம் போல இரண்டையும் இணைக்க முயலும் புத்தம் புதிய அணுகுமுறைகளை சிலர் அறிமுகம் செய்திருக்கிறார்கள். இருப்பைக் கொடுத்து ஒரு மனிதனை இஸ்லாத்தில் (எந்த இஸ்லாத்தில்? என்பது வேறொரு கேள்வி) வைத்துக் கொள்ளும் முயற்சியே அது. சம்பளம், தொழில், புலமைப்பரிசில், தகைமைச் சான்றிதழ்கள் என கொடுப்பனவுகள் ஆளுக்கு ஆள் வேறுபடும். கொடுப்பதை நாம் இங்கு குறை காணவில்லை. 'எம்மோடு இணைந்து நாம் சொல்வதைச் செய்தால்தான் தருவோம்' என்ற மனப்பான்மை, 'இருப்பையும்' 'இலக்கையும்' ஒன்றிணைக்கும் வழியல்ல என்பதே எமது வாதம். (50ம் பக்கம்)

ஒக்டோபர் 25ம் திகதி பண்டாரவெல பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 29 தமிழ் இளைஞர்கள் மிகவும் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்டனர். இச் சம்பவமும் இதற்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களும் மனிதாபிமானமற்ற நிலை இந்த நாட்டில் வளர்ச்சியடைந்து வருவதைக் காட்டுகிறது. புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை அவசரமாக காணவேண்டும் என்பதையும் இச்சம்பவம் உணர்த்துகிறது.

பிந்துனுவெவ சம்பவம் உலக அரங்கில் நினைவுக்கு வருகிறது. இந்தக் கறுப்பு ஜூலையினால் உலக நாடுகளில் இலங்கையின் நற்பெயருக்கு மாசு ஏற்பட்டது; ஒரு சிறு படையாக இருந்த புலிகள் இயக்கம் பலமடைந்து தமிழர்களின் பாதுகாவலனாக மாறியது; இந்தியாவின் நட்புறவு பாதிக்கப் பட்டது; தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சிகளையும் ஏனைய உதவிகளையும் வெளிநாடுகள் வழங்கக் காரணமாயின.

1956ல், தனிச்சிங்களச் சட்டத்தை 24 மணித்தியாலத்தில் அமுல்படுத்துவதாகக் கூறிக்கொண்டு S.W.R.D. பண்டாரநாயக்க பிரச்சாரம் செய்யும்போது ஐ.தே.கட்சியும் அதையே தாமும் செய்வதாகக் கூறினர். இவ்விரு கட்சியினருக்கும் தேவைப்பட்டது பதவி மட்டுமே. இதனால் சிறுபான்மைத் தமிழ்பேசும் மக்களின் மொழி உரிமை மறுக்கப்பட்டமை இவர்களுக்குப் பிரச்சினையாகத் தெரியவில்லை. லங்கா சமசமாஜக கட்சியின் உபதலைவர் கலாநிதி கொல்வின் R.De சில்வா தனிச்சிங்களச் சட்ட விவாதத்தில் பேசுகையில் 'இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமானால் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்த்து கொடுங்கள்; இரு நாடுகளாக வேண்டுமானால் ஒரு மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்த்தைக் கொடுங்கள்'' என்றார். இன்று நடைபெறும் தமிழ் ஈழப்போராட்டம் நாட்டை இரு கூறுகளாக்கிவிடும் அபாயத்தை தோற்று வித்திருக்கிறது.

# பிந்துனுவெவ படுகொலைகள்:

# பேரினவாதத்தின் மற்றோர் இழிசெயல்!

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் 1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 100 இளைஞர்கள் இங்கு தங்கக் கூடிய வசதி உள்ளது. 1988ல் அரசுக்கு எதிரான J.V.P. யின் போராட்டத்திலீடுபட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் வெளியேறியதும் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு நிலையமாக 4 வருடங்கள் இயங்கியது. புலிகள் இயக்கத்தை விட்டு வெளியேறிய தமிழ் இளைஞர்களும் இங்கே கொண்டு வரப்பட்டனர். 1997ம் ஆண்டு விடுதலைப் புலிகளிடமிருந்து சரணடையும் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் ஒரே முகாமாக இது மாற்றப் பட்டது. புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்த இந்த முகாம் 1999 ஆண்டு ஜூன் மாதத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கு தங்கவைக்கப்பட்ட இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்நிலையத்திலிருந்து இதுவரை 1700க்கு மேற்பட்ட இளைஞர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வெளியேறியுள்ளனர். இப்புனர்வாழ்வு முகாமில் பயிற்சி பெற்று வந்த இளைஞர்கள் கிராமவாசிகளுடன் நற்புறவுடன் பழகி வந்துள்ளனர். இவர்கள் கைதிகள் போன்று நடத்தப்படாமல் பயிற்சி நெறிகளைத் தொடர்பவர்களாகவும் கேளிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவுமிருந்துள்ளனர்.

இக்கொடூரக் கொலைகளைப் பற்றி நினைக்கும் போது 1983ம் ஆண்டு கறுப்பு ஜூலையில் வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி உட்பட 53 தமிழ்க் கைதிகளை கொடூரமாகக் கொலை செய்ததும் திட்டமிட்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தியதும் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. பாரபட்சமற்ற விசாரணையொன்றை நடத்த வேண்டும் என ஐ.நா.சபையின் செயலாளர் கோபி அனான் இலங்கை அரசைக் கோரியுள்ளார். இக்கொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சோகத்தை வெளியிட்டதுடன் சில பகுதிகளில் வன்முறைகளும் நடைபெற்றன.

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களை அவ்வினத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் கொலைசெய்வதும் அதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் மறு இனத்தைச் சேர்ந்தவர்களை கொலைசெய்வதும் பழகிப்போய் விட்டது. எப்படியோ கொலை செய்யப்படுபவர்கள் அப்பாவிகளாவர். இந்நிலையை மாற்ற வேண்டுமானால் இனவாதம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

இனவாதத்தை ஒழிக்க இஸ்லாத்தால் மட்டுமே முடியும். இடதுசாரிகளின் கொள்கைகளாலும் நற்சிந்தனைகளாலும் மனிதாபிமான கருத்துக்களாலும் ஓரளவுக்கே இனவாதத்தை ஒழிக்க முடியும். ஆனால் எமது நாட்டில் சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு இனவாத அரசியலால் மக்கள் வழிநடத்தப்பட்டு வந்துள்ளனர் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 1947 பொதுத் தேர்தலில் இடதுசாரிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக ஐ.தே.கட்சியினர் மாக்ஸிஸ்ட்டுகளிடமிருந்து நாடு, இனம், மதம் என்பவற்றைப் பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி கோரினர். பதவிக்கு வந்த ஐ.தே.கட்சியினர் 1949ல் இந்திய-பாகிஸ்தான் பிரஜா உரிமைச் சட்டத்தை நிறைவேற்றி தோட்டத் தொழிலாளர்களதும் இந்திய-பாகிஸ்தான் முஸ்லிம் வியாபாரிகளதும் பிரஜா உரிமைகளை நீக்கினர்.

1960ம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்கா மாவட்ட சபையைத் தமிழர்களுக்கு கொடுக்க முயற்சித்ததால் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என ஐ.தே.கட்சி பிரச்சாரம் செய்தது. 1965ல் டட்லி சேனாநாயகா மாவட்ட சபையைக் கொடுப்பதற்கு முயற்சிப்பதை எதிர்த்து கூட்டு முன்னணி ஆர்ப்பாட்டம் செய்தது. இதுபோன்று இனவாதத்தைத் தூண்டித் தூண்டியே இரு கட்சியினரும் மாறிமாறி பதவிக்கு வந்தனர்.

1983ம் ஆண்டுக்குப் பின் ஆயுதக் கலாச்சாரம் இந்த நாட்டில் ஏற்படத் தொடங்கியதும் இனவாதக் கொலைகள் இடம்பெறத் தொடங்கின. 80ம் ஆண்டின் பின் பத்திரிகைகளும் இனவாதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின. சிங்களப் பத்திரிகைகளில் இடதுசாரிப் போக்குள்ள பத்திரிகைகள் இனவாதத்திற்கு எதிராக செயற்பட, ஏனையவை இனவாதத்திக்கு வைக்கோல் சேர்க்கின்றன. இப்பத்திரிகைகளை ஒவ்வொரு நாளும் வாசிக்கும் வாசகர்கள் சிறுபான்மையினர் மீது வெறுப்படையவும், குரோதம் கொள்ளவும் வழியேற்படுகிறது. இந்நிலை சிறு பிரச்சினையையும் இனக்கலவரத்திற்கு இட்டுச் செல்ல முடியும்.

சில தமிழ்ப் பத்திரிகைகளும் இனவாதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. இந்த இனவாதப் பத்திரிகைகளின் கருத்துக்களுக்கு எதிராக மனிதாபிமான பத்திரிகைகளின் கருத்துகளால் மக்கள்

ஓரளவு உண்மைகளைப் புரிந்து கொள்கின்றனர்.

1999ல் நற்போதைய அரசு சமவாய்ப்புச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க முயற்சித்தது. சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பினால் அச்சட்டத்தைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க முடியவில்லை. சமவாய்ப்புச் சட்டம் சமர்ப்பிக்கப் பட சில தினங்கள் இருக்கையில் திவயின பத்திரிகையில், அமைச்சர் அஷ்ரப் பௌத்த பாடசாலைகளில் சிறுபான்மை மாணவர்கள் 20% ஐ சேர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறியதாகப் பிரசுரித்திருந்தது. அச் செய்தியினால் சிங்கள பௌத்த தலைவர்கள் கொதித்தெழுந்தனர். சமவாய்ப்பு சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால் கொந்தளிப்புத் தணிந்தது.

2000 பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியினர் சிங்கள வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில், ஈழத்தை பிரகடனப் படுத்திய வரதராஜப் பெருமாளின் பெயர் பொதுஜன ஐக்கிய முன்னணி தேசிய பட்டியலில் குறிப்பட்டுள்ளதாகப் பிரச்சாரம் செய்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணி, சிங்கள வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் புலிகளுக்கும் ஐ.தே.கட்சிக்கும் தொடர்பிருப்பதாகவும் ஐ.தே.கட்சிக்கு கொடுக்கும் வாக்கு புலிக்குக் கொடுக்கும் வாக்கு எனவும் கூறினர். சிஹல உருமய சிறுபான்மையினருக்கு எதிரான இனவாதப் பிரச்சாரம் செய்து தேசியப்பட்டியல் மூலம் ஒரு உறுப்பினரைப் பெற்றுக் கொண்டதும் S.L. குணசேகரவுக்கு அந்த M.P. பதவியைக் கொடுக்க முடிவெடுத்தபின் அதைக் கொடுக்க விரும்பாத நிலையைப் பார்க்கையில் எல்லாக் கட்சியினரும் இனவாதம் பேசுவது பதவிக்கு வருவதற்கே யன்றி சேவை செய்வதற்கு அல்ல என்பதும் புலனாகிறது. இனவாத சிஹல உறுமய, பூமிபுத்ரக் கட்சிகள் எப்படி இனவாதத்தை தூண்டினாலும் மக்கள் அவர்களை அங்கீகரிப்பது இல்லை. பிரதான இரு கட்சிகளும் தமிழ்க் கட்சிகளும் புலிகளும் இனவாதத்தை ஒதுக்கிச் செயல்பட்டால் நாட்டில் பிரச்சினைகள் ஓயும்.

1983ல் வெலிக்கடைச் சிறைச்சாலையில் 53 தமிழ்க் கைதிகளைக் கொலை செய்ததன் மூலமும், திட்டமிட்ட கறுப்பு ஜுலை கலவரம் மூலமும் இனவாதக் கொலைகள் ஆரம்பித்தன. அதன்பின் புலிகள் இயக்கம் விடுதலைப் போராட் டத்தை மட்டும் செய்யாமல் சிங்களக் கிராமங்களுக்கும் முஸ்லிம் கிராமங்களுக் கும் புகுந்து கொலை செய்ததும், காத்தான்குடி பள்ளிவாயலில் தொழுகையில் ஈடுபட்டவர்களைக் கொலைசெய்ததும் ஈனச் செயல்களாகும்.

எவர், எந்த இனத்தைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டாலும் அப்பாவி மனிதர்கள் கொலை செய்யப்படுவதை மனிதாபிமானமுள்ள எவராலும் அனுமதிக்க முடியாது. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல் திட்டமிட்ட செயல் என்பது புலனாகி இருப்பதால் ஆணைக்குழு நியமித்து விசாரணை நடத்துவதை விட விசாரித்து தண்டனை வழங்கக்கூடிய முறையில் அமைய வேண்டும்.

இந்தக் படுகொலைகளுக்கும் இனவாதம் வளர்ச்சியடைவதற்கும் மூலகாரணம் இனப்பிரச்சினையே! இது தீர்க்கப்பட்டால் இதனடியாக தோன்றும் ஏனைய பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். 17 வருடங்களாக நடைபெறும் முடிவில்லாத கொடூரமான யுத்தத்தினால் இந்த நாட்டில வாழும் சகல மக்களும் கஷ்டப்படுகின்றனர். ஆயிரக் கணக்கான இளைஞர்களது வாழ்வு பலியாகியுள்ளது; ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனர்களாயுள்ளனர்; கோடிக் கணக்கில் உடைமைகள் சேதமடைந்துள்ளன; இலட்சக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாயினும் எமது சகோதர மக்களாவர். எந்த நேரத்தில், எந்த நகரத்தில் எந்த வாகனத்தில் குண்டு வெடிக்குமோ? தெரியாது. நாட்டு மக்களாகிய நாம் பயமின்றி வாழ வேண்டுமானால் நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும். இச் சமாதானத்தை ஏற்படுத்த பிரதான கட்சிகள் இரண்டும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தத்துடன் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு சமாதானத் தீர்வை காண வேண்டும்.

1994ம் ஆண்டு புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்தி அது தோல்வி அடைந்ததும் 1996ல் அரசு தீர்வுப் பொதி ஒன்றை முன்வைத்தது. அதில் சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் அதிகமாக உள்ளன என ஐ.தே.க. ஏற்கவில்லை; புலிகள் அதிகாரங்கள் போதாது என எதிர்த்தனர்; தமிழ்க்கட்சிகள் அனைத்தும் இதை ஏற்றுக் கொண்டன. ஐ.தே. கட்சியும் அரசும் ஓர் உடன்பாட்டுக்கு வராததைக் கண்ட பிரிட்டிஷ் வெளிவிவகார உதவி அமைச்சர் லியோன் பொக்ஸ் இலங்கைக்கு 1997ல் வந்தபோது ரணில்-சந்திரிகா உடன் பாடொன்று லியொன் பொக்ஸின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது. இந்த உடன்பாட்டின் படி இவ்வருடம் ஐ.தே. கட்சியும் பொ.ஐ.ஐ.மு. யும் பேச்சுவார்த்தை நடத்தி ஓரிணக்கத் திற்கு வந்தனர். அவ்விணக்கத்தின்படி 96ம் ஆண்டில் அரசு சமர்ப்பித்த அரசியல பொதியில் காணப்பட்ட பல முற்போக்கான அம்சங்கள் நீக்கப்பட்டு ஐ.தே.கட்சியின் பிரேரணைகள் புகுத்தப்பட்டு 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 திகதி பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இப பிரேரணையை தமிழ்க் கட்சிகள் எதிர்த்தன. காரணம் ஏற்கனவே பொதியில் இருந்த அதிகாரங்கள் பல நீக்கப்பட்டிருந்தமையாகும். வாசுதேவ நாணயக்கார எம்.பீ. யும் இதே காரணத்தால் எதிர்த்தார். இனவாதக் கடும்போக்காளர்களான J.V.P. சிஹல உருமய, தேசிய சங்க சபாவ போன்ற இயக்கத்தவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதுடன் ஒரு பிக்கு உண்ணா விரதப் போராட்டம் நடத்தியதாலும் இம மசோதாவை அரசு இடைநிறுத்தி வைத்தது; பொதி காலாவதியாகியது.

இந்த அரசு பதவியேற்றதும் தற்போது அமைச்சர் பதவி வகிக்கும் ஜனாப் ரவூப் ஹகீம் அவர்கள் ஜனாதிபதியிடமும் எதிர்க்கட்சித் தலைவரிடமும் தேசிய அரசொன்றை அமைக்கும்படி கூறினார். புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு பிரதான கட்சிகளுடன் சிறு கட்சிகளையும் இணைத்து தேசிய அரசை அமைப்பதே தீர்வு என்றும், இரு பிரதான கட்சிகள் மட்டும் சேர்ந்து அமைக்கும் அரசால் தீர்வைக் காணமுடியாது எனவும் இது இனவாதத்திற்கு வழிவகுக்கும் எனவும் ஜனாப் ரவூப் ஹக்கீம் கூறினார். இப் பிரதான கட்சிகள் இரண்டுக்கும் போலியற்ற தேவை ஒன்றுமில்லாததால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதுள்ளது. தற்போது நோர்வே அரசு சமாதானப் பேச்சுக்கு அனுசரணை அளிக்க முன்வந்துள்ளது. புலிகளும் திம்புக் கோட்பாட்டின்படி தீர்வுகாண விரும்பி ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் இன்ஷா அல்லாஹ் தீர்வு காணமுடியும். ■

**எம்.எச்.எம் இஸ்ஸதீன்**
**ஹெம்மாதகம**

எம்மை எதிர்நோக்கியுள்ள குர்ஆனின் மாதமான ரமழானுக்கு நெருக்கமாக ரமழான் இதழை வெளியிட வேண்டும் என்பதால் நவம்பர் மாத அல்ஹஸனாத் சற்றுத் தாமதமாகிக் கிடைக்கிறது. இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழ் (டிஸம்பர்) வழமை போன்று மாதத்தின் நடுப்பகுதியில் உங்கள் கைகளை வந்தடையும்.

~ ஆசிரியர் ~

# நான் கண்ட இஜ்திமா





**பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமியின் வருடாந்த இஜ்திமாவில் கலந்து கொள்ளும் முகமாக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த ஜமாஅத்தின் பொதுச் செயலாளரும், 'அல்ஹஸனாத' தின் ஆசிரியருமான சகோதரர் A.T.M. நௌபல் அவர்கள் தனது இஜ்திமா அனுபவங்களை இங்கே விவரிக்கிறார்.**

இஸ்லாமாபாத்- அது பாகிஸ்தானின் தலைநகரம்; திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட அழகியதொரு நகரம். இதன் எல்லைக் கோடியில் ஒரு பாரிய நிலப்பரப்பு. மூவாயிரம் ஏக்கர்களைக் கொண்ட அந்த வயல்வெளிக்கு 'குர்துபா' எனும் நாமமிட்டுள்ளது பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி. குர்துபா (Cordova) எனும் நகரம் எண்ணூறு ஆண்டுகளாக இஸ்லாமிய ஆட்சி இடம்பெற்ற அந்தலூசியா (Spain) வில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஓர் அறிவுப் பிராந்தியம். அன்றைய இஸ்லாமிய உலகின் அறிவுப் பூங்காவாக விளங்கிய இந்நகரிலிருந்து புறப்பட்ட அறிவொளிதான் இருண்டு கிடந்த மேற்குலகை விடியவைத்தது. இந்நகரின் பெயரைத் தேர்ந்தெடுத்து தனது நிலப்பரப்புக்கு வழங்கிய பாக்கிஸ்தான் ஜமாஅத் பாரியதொரு திட்டத்தின் முன்னோடியாக அங்கு ஓர் அகில பாகிஸ்தான் இஜ்திமா ஒன்றைக் கூட்டியது.

ஆயிரக்கணக்கில் அல்ல, இலட்சக் கணக்கில் மக்கள் அங்கு அணிதிரண்டு அக்டோபர் 27.28.29 ஆகிய மூன்று நாட்கள் ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து பயன்பெற்றனர். அங்கு திரண்ட மக்கள் வெள்ளத்தைக் காணும் அரிய வாய்ப்பு எனக்கும் கிட்டியது. அல்ஹம்து லில்லாஹ்! ஓர் இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் அங்கு ஒன்றுகூடிப் பிரத்தியேகமான ஒரு கருத்தரங்கை நடாத்தினர். ஜமாஅத்தின் கொடியைத தாங்கி ஊர்வலமாக அவர்கள் அரங்குக்கு வந்து இன்று பெண்களுக்கு எதிராக விடுக்கப்படும மேலைத்தேய சவால்களுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

ஜமாஅத்தின் இளைஞர் அணியான ஷபாபே மில்லி தனக்கென ஒரு மேடையமைத்துத் தன் நிகழ்ச்சிகளை அரங்கேற்றிக் கொண்டிருந்தது. அவர்களது கராட்டே குழுவின் வீரசாகசங்களும் அரங்கேறின.




மாநாட்டில் கலந்து கொண்ட சர்வதேச இஸ்லாமியப் பிரமுகர்கள்

உலகின் பல்வேறு முஸ்லிம் நாடுகளையும் சேர்ந்த இஸ்லாமிய இயக்கத் தலைவர்களும், பிரதிநிதிகளும், முஜாஹித்களும், அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் முன் ஆக்ரோஷமாக உரையாற்றினர். பாலஸ்தீனத்திலே, முஸ்லிம் உம்மத்துக்கு எதிராக யூத எதிரிகள் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் அராஜக இனஒழிப்பும், காஷ்மீரத்திலே இந்திய அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு யூத ஸியோனிஸ்டுகள் உதவி வழங்கி வருவதும் அவர்களை ஆத்திரமூட்டியிருந்தன. இடையிடையே மக்களும் இவர்களின் வேகத்திற்கிணையாக 'அல்லாஹு" அக்பர்' என வானதிர முழங்கி உற்சாக மூட்டிக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களின் முதல் கிப்லாவான பைதுல் மக்திஸைக் காப்பாற்றுவதற்காக முஸ்லிம் உம்மத்தின் ஒரு பகுதி ஆரம்பித்திருக்கும் 'இன்திபாதா' எனும் எழுச்சிக்கு ஆதரவு நல்கி பிரார்த்தனை புரியுமாறு மக்களை அத்தலைவர்கள் வேண்டிக் கொண்டனர். முழு முஸ்லிம் உம்மத்தினதும் இப்பாரிய கடமையை அந்தப் பிஞ்சுக் கரங்கள் நிறைவேற்றிக் கொண்டிருப்பதை

எண்ணி மனம் நெகிழ்ந்த மக்கள் ஸியோனிஸ்டுகளுக்கு எதிராகக் கோஷமிட்டனர் முஸ்லிம் நாடுகளின் ஆட்சியாளர்கள், பெருந்தொகைப் பணம் செலவிட்டு கனரக ஆயுதங்களை கொள்வனவு செய்து அடுக்கி வைத்திருப்பது எதற்காக? முஸ்லிம்களை கொன்று குவிப்பதற்கா? இவ்வேளையில் பயன்படாத அவை எதற்காக? எனப் பேச்சாளர்கள் கேள்வி'யெழுப்பினர் லெபனானிலிருந்து யூதர்களை அடித்து விரட்டியதைப் போன்று எமது மண்ணிலிருந்தும் அவர்களைத் துடைத்தெறிவோம் எனப் போராட்டத்திலே ஈடுபட்டுள்ள அந்தப் பலஸ்தீன இளைஞர்களுக்கும் தாய்மார்களுக்கும் மாநாடு தனது மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்து நின்றது.

இஸ்லாமிய இயக்கம் பல்வேறு நாடுகளிலும் புரிந்துவரும் பணிகள் பற்றி கரகோஷங்களுக்கு மத்தியில் எடுத்துரைத்தார் அமெரிக்கப் பிரதிநிதி Professor Richard G. Wilkins.

பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் மௌலானா காஸி ஹுஸைன் அஹ்மத் அவர்கள் தமதுரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாட்டைவிட்டு வெளியேறிய யூதர்களுக்காகக் கண்ணீர் வடிக்கும் அமெரிக்கா 50 வருடங்களுக்கு முன் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பாலஸ்தீன் முஸ்லிம்களின் உரிமைக்கு வேட்டுவைப்பது ஏன்? என கேள்விகளை தொடுத்தார். யூதர்கள் தத்தம் நாடுகளுக்குத் திரும்ப வேண்டும்; பாலஸ்தீனம் அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப் படல் வேண்டும் என முழக்கமிட்டார்; காஷ்மீர் என்றுமே இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்ததில்லை. அதன் 90% மான முஸ்லிம்கள் என்றுமே இந்தியாவுக்கு அடிபணியப் போவதில்லை என்றும் கூறினார். மக்கள் பலம் ஒன்று திரண்டால் எந்த சக்தியாலும் அசைக்க முடியாது. எனவே முஸ்லிம்களுக்கு எதிராகச் செயல்படும் நாடுகளின் பொருட்களை முஸ்லிம்கள் புறக்கணிப்பதன் மூலம் அவர்களுக்குப் பாடம் புகட்ட முன்வர வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார். இஜ்திமா 29ம் திகதி ஞாயிறு மாலை இனிதே நிறைவுபெற்றது.



மாநாட்டில் கலந்து கொண்ட பெண்கள் பிரதிநிதிகள்

வந்திருந்த தலைவர்கள் விளக்கமளித்தனர் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் இன்றைய பணிகள் பற்றி விளக்கும் சந்தர்ப்பம் எனக்களிக்கப்பட்டது. லெபனான், பொஸ்னியா, தஜிகிஸ்தான், மலேசியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், நேபாளம், காஷ்மீர், துருக்கி, அமெரிக்கா, எகிப்து போன்ற நாடுகளின் இஸ்லாமிய இயக்கப் பிரதிநிதிகள் கூறிய கருத்துரைகளிலிருந்து அந்நாடுகளில் ஏற்பட்டுவரும் இஸ்லாமிய எழுச்சி அலையை உணரச் சந்தர்ப்பமளித்தது அம்மாநாடு.

இன்று ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் அரங்கேற்றப்படும் சட்டங்கள் காரணமாக பாரம்பரிய குடும்ப அமைப்பு சிதறிவருவதாகவும் இதற்கெதிராகத் தான் ஒரு மையம் (The World Family Policy Center) அமைத்திருப்பதாகவும் இக் குடும்பக் கட்டமைப்பைக் காப்பாற்றக் கூடிய ஒரே ஒரு வாழ்க்கைத் திட்டம் இஸ்லாத்திடமே உள்ளது எனவும்



தஜிகிஸ்தான் பிரதிநிதி



அமீர், நேபாள் ஜமாஅத்

இஜ்திமாவில் கலந்து கொண்ட உலக இஸ்லாமியத் தலைவர்கள்



காழி ஹுஸைன் அஹ்மத் (அமீர்) ரிசாட் வில்கின்ஸ் உடன்



ஹஸன் ஹுவைதி (முர்ஷிதே ஆம்)



ரஷீத் ஹனூஸி (துனீஸியா)



பஸிலத் கட்சி எம்பிக்கள் (துருக்கி)



PAS எம்.பி (மலேசியா)



தளங்கன் முதலமைச்சர்



ஷேய்க் ஸலாஹுத்தீன்



பொஸ்னிய இமாம்



MILF பிரதிநிதி



பங்களாதேஷ் உதவி அமீர்



லெப்னான் பிரதிநிதி

ரமழான் அல்குர்ஆனின் மாதம்

உஸ்தாத் M.U.M. ரம்ஸி

# அல்குர்ஆனை ஓதுவோம்

அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டதன் காரணமாகவே ரமழான் மாதம் மகிமையடைந்தது. நோன்பு எனும் தனித்துவம் வாய்ந்த இபாதத் அந்த மாதத்தில் கடமையாக்கப்பட்டது. அந்த மாதத்தில் இறையன்பை நாடி நோன்பு நோற்கும் ஒவ்வொரு அடியானும் இது அல்குர்ஆனின் மாதம் என்பதை மறந்து விடலாகாது. குர்ஆனோடு நெருக்கமான உறவுகொண்டு அல்லாஹ்வின் அன்பையும் திருப்பொருத்தத்தையும் பெற்றுக் கொள்வதற்காக இவ்வரிய சந்தர்ப்பத்தை எவரும் நழுவவிடக் கூடாது.

அல்குர்ஆனோடு உறவு கொள்வதன் ஆரம்ப கட்டம் அதனை அதிகமாக ஓதுவதாகும். அல்குர்ஆனை விளங்கி செயற்பட வேண்டும் என்பது ஒரு மு.்மினின் கொள்கையாகவும், ஆசையாகவும் இருக்க வேண்டும். அத்தகைய கொள்கையைக் கொண்ட ஒருவன் அதனை ஓதுகின்ற போதே நிறைய நன்மைகளை அடைந்து கொள்கிறான்.

இது குறித்து ரஸூல் (ﷺ) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

**"குர்ஆனின் ஒரு எழுத்தை ஓதக் கூடியவனுக்கு ஒரு நன்மை கொடுக்கப்படும். பின்னர் அந்த நன்மை பத்து மடங்காகப் பெருகும். அலிப்.லாம்.மீம் என்பது ஒரு எழுத்தல்ல; மாறாக அலிப் என்பது ஒரு தனி எழுத்து; லாம் என்பது இன்னுமோர் எழுத்து; மீம் என்பது வேறு ஒரு எழுத்து என்றே நான் கூறுவேன்."**

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் (رضي الله عنه)
ஆதாரம் : திர்மிதி

இவ்வாறு நன்மைகளை குறித்துக் காட்டி ஆர்வம் ஊட்டிய ரஸூல் (ﷺ) அவர்கள் வேறு சில சந்தர்ப்பங்களில் கியாமத் நாளுடன் தொடர்புபடுத்தி குர்ஆனை ஓதும் விடயத்தில் ஊக்கமளித்துள்ளார்கள்.

1. **"நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் அது கியாமத் நாளில் உங்களுக்காக பரிந்து பேசும்."**

ஆறிவிப்பவர் : அபூஉமாமா (رضي الله عنه)
ஆதாரம் : முஸ்லிம்.

2. **"நோன்பும் அல்குர்ஆனும் மறுமை நாளில் அடியானுக்காக பரிந்து பேசும். 'என் இரட்சகனே! பகற்பொழுதெல்லாம் உண்பதையும் குடிப்பதையும் விட்டு நான் அவனைத் தடுத்திருந்தேன். அவன் விடயத்தில் என் சிபாரிசை ஏற்றுக் கொள்வாயாக.' என்று நோன்பு சொல்லும். 'என் இரட்சகனே! இரவு வேளைகளில் நித்திரை கொள்ளாமல் நான் அவனைத் தடுத்திருந்தேன் அவன் விடயத்தில் என் சிபாரிசை ஏற்றுக் கொள்வாயாக' என்று அவன் ஓதிய குர்ஆன் அவனுக்காகப் பரிந்து பேசும்."**

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (رضي الله عنه)
ஆதாரம் : அஹ்மத், தபரானி, ஹாக்கிம்

3. **"குர்ஆனை ஓதிவந்த மனிதனை நோக்கி மறுமை நாளில் சொல்லப்படும்: 'ஓதுவீராக; உயர்ந்து செல்வீராக; உலகத்தில் நீர் குர்ஆனை ஓதியது போன்று இன்றும் ஓதுவீராக; நிச்சயமாக சொர்க்கத்தில் உமது இடம் நீர் ஓதிய இறுதி ஆயத்தின் இடமாகும்."**

அறிவிப்பவர் :
அப்துல்லாஹ் பின் அம்ரிப்னு ஆஸ் (رضي الله عنه)
ஆதாரம்: திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா.

இந்த ஹதீஸுக்கான விளக்கம் பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. குர்ஆனின் ஆயத்துகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப சொர்க்கத்தில் அந்தஸ்த்துகள உள்ளன. குர்ஆன் முழுவதையும் ஓதியுள்ள ஒரு அடியான் சுவர்க்கத்தின் அதியுயர்ந்த அந்தஸ்த்தை அடைந்து கொள்வான். குறைவாக ஓதியவர்கள் அந்தந்த எல்லைகளில் தமது அந்தஸ்தை அடைந்து கொள்வார்கள்.

இவை தவிர இன்னும் பல சந்தர்ப்பங்களில் ரஸூல் (ﷺ) அவர்கள் அல்குர்ஆனை ஓதுவதன் மகத்துவம் குறித்து நன்மாராயம் சொல்லியிருக்கிறார்கள்:

**"யார் அல்குர்ஆனை திறமையாக ஓதுகிறாரோ அவர் கண்ணியமிக்க மலாயிக்காமார்களோடிருப்பார். கஷ்டப்பட்டு அதனை திக்கித்திக்கி ஓதுகிறவருக்கு இரட்டிப்பான நன்மை உண்டு"**

அறிவிப்பவர் : ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

அல்குர்ஆனை சிறப்பாக ஓதுபவர்களுக்கு இது ஒரு நன்மாராயம். அழகாக ஓத முடியாதவர்களுக்கும் இது ஒரு தூண்டுதலாகவும், ஆறுதலாகவும் அமைகிறது.

குர்ஆன் ஓதலோடு தொடர்புள்ள இன்னுமொரு அம்சம், அதில் இடம்பெறுகின்ற ஸஜதாவின் வசனங்கள். அவற்றின் சிறப்பு பற்றி நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"ஆதமுடைய மகன் ஸஜதாவின் ஒரு ஆயத்தை ஓதி உடனே ஸுஜூதில் விழுந்து விட்டால் ஷைத்தான் அழுது கொண்டு அவனை விட்டு ஒதுங்கி ஓடிவிடுவான். 'எனக்கு கேடுதான். ஆதமுக்கு ஸுஜூது செய்யுமாறு ஏவப்பட்டபோது அதை நான் மறுத்துவிட்டேன். ஆகையால எனது இறுதி முடிவு மரணம்தானே.' என்று அவன் அப்போது கூறுவான்."**

அறிவிப்பவர் : அபூஹுரைரா (رضي الله عنه)
ஆதாரம் : முஸ்லிம்

அல்குர்ஆனை ஓதுகிறவர் முடியுமான வரை அதனை அழகாக ஓத முயற்சிக்க வேண்டும். அத்தோடு கவலையோடும் உண்மையான அச்சத்தோடும் அதனை ஓத வேண்டும். இதுபற்றி ரஸூல் (ﷺ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

**"நிச்சயமாக இந்தக் குர்ஆன் கவலையோடு இறங்கியுள்ளது. ஆகவே இதனை நீங்கள் ஓதும்போது அழுங்கள்; அழுகை வராது போனால் அதற்காக முயற்சி செய்யுங்கள். யார் இந்தக் குர்ஆனை அழகாக ஓதவில்லையோ அவர் எம்மைச் சார்ந்தவரல்ல."**

அறிவிப்பவர்:
ஸ.்து பின் அபீவக்காஸ் (رضي الله عنه)
ஆதாரம் : இப்னுமாஜா.

அல்குர்ஆனை ஓதுவது இத்தனை மேன்மையான நற்கருமம் என்பதனை உணர்ந்து நாம் அதனை கடைப்பிடித்தொழுக முன்வர வேண்டும். ரமழான் மாதத்தினை அதற்கான சிறந்ததொரு வாய்ப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும். இதனை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்காக எளிமையான சில ஆலோசனைகளை இங்கு தருகிறோம்.

1. தெளிவான எழுத்தில் உள்ள கைக்கடக்கமான அல்குர்ஆன் பிரதியொன்றை வாங்கி கைவசம் வைத்துக் கொள்ளுங்கள்.

2. ரமழான் இரவுகளில் பள்ளிவாசலில் நடைபெறும் ஹிஸ்பு மஜ்லிஸ்களில் கலந்து கொள்ளுங்கள்.

3. வீட்டில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் சேர்ந்து ஓதுவதற்கான ஒரு நேரத்தைத் திட்டமிட்டு வழமைப்படுத்திக் கொள்ளுங்கள்.

4. ரமழானுக்குள் தன்னால் இயன்ற அதிகபட்சம் குர்ஆனை ஓதிமுடிக்க வேண்டும் என நிய்யத் வைத்து அதற்கான இலக்கை அடைந்துவிட்டேனா என்பதை தினந்தோறும் பரீட்சித்துக் கொள்ளுங்கள்.

5. அழகான அல்குர்ஆன் ஒலிப்பதிவு நாடாக்களைக் கேட்பதற்கு குறிப்பிட்ட ஒரு நேரத்தை வழமையாக்கிக் கொள்ளுங்கள்.

6. ஓய்வு நேரங்களில் பெரும்பகுதியை அல்குர்ஆனுக்கென்றே ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

வல்ல அல்லாஹ் இப்புனித மாதத்தில் அல்குர்ஆனுடனான எமது உறவை வலுப்படுத்துவானாக!

**ஸியாத் பின் லபீத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அச்சமூட்டும் செய்தி ஒன்றைக் கூறினார்கள். பின்னர் தீன்-இறைநெறி பற்றிய அறிவில்லாமல் போகும் நேரத்தில்தான் இவ்வாறிருக்கும்' என்று கூறினார்கள். நான் வினவினேன், 'அல்லாஹ்வின் தூதரே! நாங்களும் அல்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கிறோம். எங்கள் பிள்ளைகளுக்கும் ஓதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களும் தங்களது பிள்ளைகளுக்கு ஓதிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இவ்வாறிருக்க, இறைநெறி பற்றிய அறிவு எப்படி இல்லாமல் போகும்?' அண்ணலவர்கள் பதிலளித்தார்கள்: 'நன்றாக இருக்கிறது உன் கூற்று ஸியாதே! நான் உம்மை மதீனா நகரிலேயே மிகவும் புத்திசாலி என்று நினைத்திருந்தேன். யூதர்களும் கிறிஸ்தவர்களும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் எத்தனையோ முறைகள் ஓதுகிறார்கள் என்பதையும் இன்ஜீலையும் எத்தனையோ தடவை ஓதுகிறார்கள் என்பதையும் பிறகு, அவற்றின் அறிவுரைகளின்படி சிறிதளவும் அவர்கள் செயல்படுவதில்லை என்பதையும் நீர் பார்க்கவில்லையா?' என்று கேட்டார்கள்." (இப்னு மாஜா)**

---

## ரமழான் அல்குர்ஆனின் மாதம்

அபூ ஷஹாமத்

# அல்குர்ஆனை விளங்குவோம்

அல்லாஹ்தஆலா தனது இறுதி வேதமாகிய அல்குர்ஆனை முழு மனித சமுதாயத்திற்கும் நேர்வழிகாட்டுவதற்காக இறக்கியருளினான். அதனது நேர்வழியை ஒருவர் அதனை ஓதுவதனால் மட்டும் அடைந்து கொள்ள மாட்டான். மாறாக அதனை விளங்கி சிந்தித்துணர்ந்து ஆராய்வதன் மூலமாகவே நேர்வழியைப் பெற்றுக் கொள்ள முடியும். அல்குர்ஆனை தெளிவுபடுத்தி மக்களுக்கு விளக்கி வைக்கின்ற பொறுப்பை அல்லாஹ் தனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கினான்.

**"எழுத்தறிவில்லாத (அரபி) ஜனங்களுக்காக அவர்களிலேயே ஒரு தூதரை (த் தேர்ந்தெடுத்து) அவன் அனுப்பி வைத்தான். அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலிருந்த போதிலும், அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்து, அவர்களை பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார்."**

**(ஸூரத்துல் ஜுமுஆ: 02)**

இத்திருமறை வசனம், அண்ணலார் அந்த உம்மி சமூகத்துக்கு அல்குர்ஆனை ஓதிக் காண்பிப்பதோடு தனது பணியை வரையறுத்துக் கொண்டதாக குறிப்பிடவில்லை. மாறாக, அல்குர்ஆனை கற்றுக் கொடுத்ததாகவும் குறிப்பிடுகிறது. அக்கால குர்ஆனிய மனிதர்கள் அதனை விளங்க முடியாது என்று குதர்க்கவாதம் புரிந்ததாக குர்ஆனோ, சுன்னாவோ, ஸீராவோ ஆதாரங்களைப் பதிந்து வைத்ததாக நாம் அறியவில்லை. மாறாக, இறைநிராகரிப்பாளர்களே குர்ஆனை நிராகரித்தனர்.

அல்லாஹு"த் தஆலா அல்குர்ஆனை இறக்கியருளியதற்கான நோக்கத்தையும் அண்ணலாரின் பணியையும் இவ்வாறு விளக்குகிறான்:

**"அவ்வாறே இந்தக் குர்ஆனையும் (நபியே) நாம் உமக்கு அருளினோம். மனிதர்களுக்காக (உம்மீது) அருளப்பட்ட இதை நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைப்பதற்காக (இதன் மூலம்) அவர்கள் சிந்தித்து உணர்ந்து கொள்வார்கள்"**

**(ஸூரத்துந் நஹ்ல்: 44)**

**"(நபியே!) அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆராய்வதற்காகவும் (அதைக் கொண்டு) அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதற்காகவும் மிக்க பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை நாமே உம்மீது அருள் புரிந்தோம்"**

**(ஸூரா ஸாத்: 29)**

**"அவர்கள் அல்குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்களின் உள்ளங்கள்மீது தாளிடப்பட்டுள்ளதா?"**

**(ஸூரா முஹம்மத்: 24)**

அல்குர்ஆனை மனிதனால் விளங்க, ஆராய முடியும் என்பது அல்லாஹ்வின் தீர்ப்பு. அந்தத் தீர்ப்புக்கு மாறாக, ''குர்ஆனை விளங்க முடியாது; அது நபிகளாருக்கே முடிந்த காரியம் அல்லது கற்றறிந்த உலமாக்களுக்கே விளங்க முடியும்; குர்ஆனை விளங்க முயற்சித்தால் வழிகெட்டுப் போய்விடுவோம்" என்று சமுதாயத்தில் கருத்துக்களை பரப்புவதானது அல்லாஹ்வுக்கு எதிராக அபிப்பிராயம் கூறுவது போன்றதாகும். இத்தகைய சுதந்திரத்தை அல்லாஹ் இறை விசுவாசிகளுக்கு வழங்கவில்லை.

**"அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விடயத்தைப் பற்றி கட்டளையிட்ட பின்னர் அவ்விடயத்தில் (அதற்கு மாறாக வேறு) அபிப்பிராயங் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிமையில்லை. (அதில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறுசெய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்" (அல் அஹ்ஸாப்: 36)**

எனவே, அல்குர்ஆனை விளங்க முடியாது என்று பகிரங்கமாகக் கூறுவது பெருங்குற்றமாகும்.

அல்லாஹ்தஆலா அல்குர்ஆனை விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் எளிதாக்கி வைத்துள்ளான். ⇨

**"(மனிதர்கள்) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே இந்தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கி இருக்கிறோம். ஆகவே இதனைக் கொண்டு நல்லுணர்ச்சி பெறுவோர் எவரும் உண்டா?" (ஸூரதுல் கமர்:17)**

இந்தத் திருமறை வசனம் மொத்தமாக நான்கு இடங்களில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தில் அல்குர்ஆனை பரக்கத் வேண்டியும், மரணமான ஒருவருக்கு நன்மை சேர்க்கும் நோக்குடனும் கத்தமுல் குர்ஆன் என்ற பெயரிலும் ஓதிவிட்டு மூடிவைக்கும் பழக்கம் வழக்கத்தில் இருப்பது மனக்கவலை அளிக்கிறது. அவ்வாறே அல்குர்ஆனை விளங்க முடியாது என்ற கருத்து ஆழப்பதிந்திருப்பதும் விசனிக்கத்தக்கது.

இத்தகைய பிழையான மனப்பதிவுக்கு காரணம் என்ன என்று இவ்விடத்தில் சிறிது ஆராய்வது, தடைதாண்டி குர்ஆனை அணுக வழிவகுக்கலாம். அல்குர்ஆனிய வசனங்களைப் பொறுத்தமட்டில் அதனை நான்கு வகையாக வகுத்து நோக்குவார்கள். இப்னு அப்பாஸ் (ﷺ) அவர்கள் கூறுகிறார்கள்:

"அல்குர்ஆன் விளக்கவுரை நான்கு வகைப்படும். (முதலாவது) அரபிகள் தங்களது மொழிமூலம் அறிந்து கொண்ட விளக்கம்; (இரண்டாவது) தனது அறிவீனத்தின் காரணமாக திருமறை வசனத்திற்கான விளக்கம் பெறுவது சிரமமல்ல என்று கருதக்கூடியளவு ஒவ்வொருவரும் பெறக்கூடிய விளக்கம்; (மூன்றாவது) அறிஞர் பெருமக்கள் மட்டும் பெறக்கூடிய விளக்கம்; (இறுதியாக) அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் அறிய முடியாத விளக்கம்."

மூன்றாவது வகையைப் பொறுத்தமட்டில், அது ஒருவருக்கு திருமறை வசனத்திலிருந்து சிந்தனைக்குப் படுகின்ற விளக்கமாகும். ஏகத்துவத்திற்கான ஆதாரங்கள், இஸ்லாமிய ஷரீஅத் சட்டதிட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய சட்ட வசனங்களை ஒவ்வொரு மனிதனும் விளங்கிக் கொள்ள முடியும். இதில் எத்தகைய சிரமும் இல்லை. இவ்வசனங்களை விளங்குவதற்கு ஒரு பொதுமகனுக்கு, ஒரு அல்குர்ஆன் விரிவுரையாளர் (முபஸ்ஸிர்) ஆய்ந்தறிந்திட வேண்டிய இஸ்லாமிய கலைகளின் தேவை இருக்க மாட்டாது. இத்தகைய வசனங்களே அல்குர்ஆனில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன.

மூன்றாவது வகையைத் தவிர உள்ள கருத்துக்கள் அழுத்திச் சொல்லப்பட்டதாலேயே அல்குர்ஆனை விளங்க முடியாது என்ற கருத்து உருவானது. அறிஞர்களுக்கும் அரபிகளுக்கும் மட்டும் விளங்குகின்ற வசனங்களும் அல்லாஹ் தனது பரந்து விரிந்த அறிவாலும் ஞானத்தாலும் சூழ்ந்தறிந்து வைத்துள்ள வசனங்களும் எல்லோரும் பொதுவாக விளங்க முடியுமான வசனங்களுடன் ஒப்பிடுகின்றபோது மிகவும் குறைவானதாகும். அல்லாஹ்தஆலா தனது திருமறையில் கீழ்வருமாறு கூறுகிறான்:

**"(நபியே!) அவனே இவ்வேதத்தையும் உம்மீது அருளினான். இதில் (தெளிவாகவும்) குறிப்பாக(வும்) உள்ள அர்த்தத்தையுடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் பிரதான வசனங்களாகும். மற்றவை பல பொருள்களுக்கு இடம்பாடான (உவமைப்பொருள் கொண்ட)வை. எவருடைய இருதயத்தில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் அதில் குழப்பத்தை உண்டுபண்ணக் கருதி இத்தகைய வசனங்களில் தவறான பல அர்த்தங்களை தேடிப் பின்பற்றுவார்கள். ஆயினும் இதன் உண்மைக் கருத்தை அல்லாஹ்வையன்றி எவரும் அறியார். கல்வியறிவில் ஆழம் கண்டவர்கள் (அதன் கருத்துத் தங்களுக்குப் பூர்ணமாக விளங்காவிடினும்) 'இதனையும் நாங்கள் விசுவாசித்தோம்' என்று கூறுவார்கள். அறிவுடையோர்களையன்றி மற்றெவரும் (இவைகளைக் கொண்டு) நல்லுணர்வு பெறமாட்டார்கள்" (ஆலுஇம்ரான்:07)**

பல அர்த்தங்களையுடைய அல்லாஹ்வுக்கு மட்டும் விளங்கும் வசனங்கள் குர்ஆனில் மிகவும் குறைவாகவே இடம் பெற்றிருக்கின்றன. இத்தகைய வசனங்களை அதிகமாக இறக்கியருளி மனித சமுதாயத்தை அல்லாஹ் சிரமத்துக்குள்ளாக்க விரும்பவில்லை.

**"(நபியே!) இந்தக் குர்ஆனை நாம் நீர் கஷ்டப்படுவதற்காக உம்மீது இறக்கியருளவில்லை." (ஸூரா தாஹா:02)**

இதிலிருந்து குர்ஆனை விளங்குவது சிரமமானது என்ற கருத்து மௌட்டீகம் நிறைந்தது என்பது தெளிவாகிறது.

அவ்வாறே, குர்ஆன் மொழிபெயர்ப்புடன் தன்னிறைவு காண்பதும் ஆபத்தானதாகும். மொழிபெயர்ப்பு, குர்ஆன் விளக்கமாகாது. குர்ஆனின் உயிரோட்டம் நிறைந்த விளக்கங்களை மொழிபெயர்ப்பின் மூலம் பெறுவது சிரமசாத்தியமான ஒன்றாகும். மேலும் மொழிபெயர்ப்பில் மட்டும் ஒருவர் தங்கியிருப்பது வழிகேட்டில் கால்பதிப்பதற்கு வழிவகுக்கும். இமாம் ஸமக்ஷரி தனது 'கஷ்ஷாப்' என்ற தப்ஸீரில்,

"அரபிகளின் மொழியில் குறிப்பாக குர்ஆனில் நுட்பமான கருத்துக்கள் இருக்கின்றன. அவற்றை (அரபு அல்லாத) வேறொரு மொழி தனித்து நின்று வெளிக்கொணர முடியாது." என்று கூறுகிறார்கள். எனவே, அல்குர்ஆனை அதன் மூல மொழியில் விளங்க முயற்சிக்க வேண்டும்.

"ஒரு கட்டாயக் கடமை இன்னொன்றை நிறைவேற்றுவதன் மூலமே நிறைவேறும் என்றிருந்தால் அதனை நிறைவேற்றுவது கட்டாயக் கடமையாகும்" என்ற விதிக்கமைய குர்ஆனை விளங்குவதற்கு அரபு மொழி அவசியமாகும். எனவே அதனைக் கற்றுக் கொள்வது கடமையாகும்.

அரபுமொழியை சம்பிரதாயபூர்வமாக ஒரு மரபாகக் கற்பது அல்லது பரீட்சையை இலக்காகக் கொண்டு பயிலுவது, பின்பு அதனை இடைநடுவில் விட்டுவிடுவது விரும்பத்தகாததாகும். மாறாக, அல்குர்ஆனை விளங்க வேண்டும்; அதன் வழி நடக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன முறையாக அரபுமொழியைக் கற்க வேண்டும். இதற்கு ரமழான் காலத்தை சகோதரர்கள் அரியதொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கான சில வழிகாட்டல்களை இங்கு நாம் முன்வைக்கிறோம்:

1) ரமழான் காலத்தில் நடைபெற்று வரும் ஹிஸ்பு மஜ்லிஸுக்காக ஒதுக்கப்படும் நேரத்தில் ஒரு பகுதியை அரபுமொழி கற்பதற்காகப் பயன்படுத்தல்.

2) ரமழான் மாதத்தில் ஏனைய நேரங்களில் அரபுமொழி கற்றலுக்கான வகுப்புகளை ஏற்பாடு செய்தல்.

3) ரமழான் மாதத்தில் விடுமுறையில் ஊர் வந்திருக்கும் அரபுக் கலாசாலை ஆசிரியர்கள், மாணவர்களிடம் சென்று கற்றல்.

4) புதிதாக தமிழில் வெளிவந்திருக்கும் அரபுமொழி கற்பதற்கான நூல்களை ஆலிம்களின் துணையோடு கற்றல்.

5) அரபுமொழி கற்பதற்கு ஆர்வப்படுத்தும் வகையில் போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல். (உ-ம்: அரபு எழுத்தணி, உரையாடல், பாடல், குறுக்கெழுத்து, சொற்கள் மனனமிடல்)

6) அரபுமொழியின் முக்கியத்துவத்தை மனதில் ஆழப்பதித்துவிடும் வகையில் உரைகள், கருத்தரங்குகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல். காட்டூன், சுவரொட்டிகள் போன்றவற்றை வெளியிடல்.

ஆகவே, ரமழான் காலத்தை, குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதம் என்ற வகையில் குர்ஆனை விளங்குவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் கழிப்போமாக! வல்ல அல்லாஹ் அவனது திருமறையை எமது உள்ளத்தின் வசந்தமாகவும், பிரகாசமாகவும் ஆக்கியருள்வானாக! ■

# துடிக்கிறது மனம்; அடக்குகிறது நோன்பு

பாதிமா ருப்ஸியா பரீத் (இஸ்லாஹி)

வருடங்கள் தோறும் மலரும் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் அடிப்படையான கடமைகளுள் ஒன்று.

**“ரமழான் மாதம் வந்துவிடின் சுவனத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன; ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன”**

என அண்ணல் நபி (ﷺ) அவர்கள் கூறியதாக அபூஹுறைரா (رضي الله عنه) அவர்கள் நவின்றுள்ளார்கள்;.

இக்கூற்றிலிருந்து ரமழான் மாதம் எத்தகைய சிறப்புடையது என்பதைப் புரிந்து கொள்ளலாம். உண்மையில் தீமைக்கு சாவுமணி அடித்து, அதற்கான நரகத்தின் வாயிலையே மூடி, நன்மைக்கு ஊக்கம் தரும் மாதமாகத் திகழ்கிறது ரமழான்.

தொழுகை, ஹஜ், ஸகாத் போன்ற வணக்கங்கள் மனிதர்களால் காணக் கூடியதாக இருக்கின்றன. அவைகளைச் செய்தால் மக்கள் போற்றிப் புகழ்வார்களென்று பெருமையை நாடும் மனிதர் அவற்றைச் செய்யவும் கூடும். அவ்வாறு பெருமையை நாடிச் செய்யப்படும் எந்த வணக்கத்திலும் பாவத்தைத் தவிர யாதொரு நன்மையும் கிடைப்பதில்லை. ஆனால் நோன்பு அவ்வாறல்ல; நோன்பு நோற்பவன் பசியுடனும், தாகத்துடனும் இருப்பதைப் பிறர் அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் பெருமைக்காக எவரும் நோன்பு நோற்பதில்லை. இதற்காகவே,

**“நோன்பு எனக்குச் சொந்தமானது; அதற்கு நானே கூலி கொடுப்பேன்”**

என்று அல்லாஹுத் தஆலா கூறுவதாக ஹதீஸ்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது.

> “இந்த குறிப்பிட்ட கால நோன்பு, நிரந்தர நோன்புக்கான பயிற்சியாகும். இஸ்லாமிய வாழ்வு என்பது எதிர்காலத்தில் ஒரு நோன்பாளியின் வாழ்வுதான்!”

எல்லா வணக்கங்களும் அலலாஹுத் தஆலாவுக்கே சொந்தமாக இருந்த போதிலும், எந்த வணக்கத்தையும் பிறருக்குக் காண்பிப்பதற்காக செய்தால், எவருக்கு காண்பிப்பதற்காக அதனை அவன் செய்கிறானோ, அவர்களையே வணங்கியவனாகிறான்; அல்லாஹ்வை வணங்கியவனாக மாட்டான். நோன்பு நோற்பது பிறர் காண முடியாததாக இருப்பதனால் பிறருக்காக நோன்பு நோற்கப்படுவதில்லை: அல்லாஹ்வுக்காக மட்டும்தான் நோன்பு நோற்கப்படுகிறது. ‘நோன்பு எனக்கே சொந்தமானது’ என்று இறைவன் கூறுகிறான்.

ரமழான் மாதத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு நற்செயலுக்கும் அல்லாஹ்விடத்தில் அதிக கூலியையும் அவனுடய அன்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**“நன்மையைத் தேடிக் கொள்பவர்களே! வாருங்கள் (வாழுங்கள்). தீமையைத் தேடிக் கொள்வர்களே! அழியுங்கள்’ என்று (ரமழான்) மாதத்தின் ஒவ்வோர் இரவும் அழைப்பாளர் அழைத்துக் கொண்டிருப்பார்”**

என்று அண்ணல் நபி (ﷺ) அவர்கள் கூறியதாக நஸாயியிலுள்ள மற்றோர் அறிவிப்பில் பதியப்பட்டுள்ளது.

நோன்பு ஒரு வழிபாடு. அத்துடன் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்குரிய ஒரு பயிற்சியும் ஆகும். உயர்ந்த ஒழுக்கத்துடனும், பண்புடனும் மக்களுடன் வாழ்வது எப்படி என்பதை நோன்பு மனிதனுக்கு உணர்த்துகிறது. தனக்குத்தானே கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது எப்படி என்பதையும் நோன்பு கற்றுத் தருகிறது.

இந்த சுயகட்டுப்பாடுதான் சீர்திருத்தத்தின் உயிர்நாடி.

அண்ணல் நபி (ﷺ) அவர்கள் நோன்பை ‘கேடயம்’ என்றார்கள்.

**“நீங்கள் நோன்பு நோற்கும்போது தீய - மானக்கேடான பேச்சுக்களைப் பேசாதீர்கள். கூச்சல் - குழப்பம் ஏற்படுத்தாதீர்கள். ஒருவர் திட்டினால் அல்லது உங்களுடன் சண்டையிட வந்தால், ‘சகோதரரே நான் நோன்பாளி’ என்று சொல்லி விலகிவிடுங்கள்.” (புகாரி)**

மேலோட்டமாகப் பார்த்தால், உண்பதையும், பருகுவதையும் விட்டு விலகுவதுதான் நோன்பாகும். ஆனால், ஆழமாக கவனித்தால் அது முழு வாழ்வையும் தழுவியுள்ளதைக் காணலாம். ‘உண்ணாதே; பருகாதே’ என்று நோன்பு கூறுவதைப் போலவே, ‘உண்மையானவனாய் இரு; நேர்மையாய் நடந்துகொள்; அசிங்கமாகப் பேசாதே; கூச்சல் போடாதே; அடுத்தவர் உன்னைத் திட்டினாலும் நீ அவனைத் திட்டாதே” என்றெல்லாம் நோன்பு கூறுகிறது.

மேற்சொன்ன நபிமொழி நோன்பின் உயிரோட்டத்தை எடுத்துரைக்கிறது. இந்த குறிப்பிட்ட கால நோன்பு, நிரந்தர நோன்புக்கான பயிற்சியாகும். இஸ்லாமிய வாழ்வு என்பது எதிர்காலத்தில் ஒரு நோன்பாளியின் வாழ்வுதான்! இஸ்லாம் என்றால் என்ன பொருள்? மனிதன் இவ்வுலகில் கட்டுப்பாடு இல்லாதவனாக வாழக்கூடாது. மாறாக, ஆகுமானது, விலக்கப்பட்டது (ஹலால்-ஹராம்) பார்த்து வாழ வேண்டும்; இனிய சொற்களையே பேச வேண்டும்; வெறுப்புடன் பேசக் கூடாது; மக்களுடன் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும்; மற்றவர்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்....

ஆக, ஆண்டுதோறும் நோன்பு அளிக்கும் பயிற்சியால் ஒழுக்கம் கட்டுப்பாட்டுடன் வாழும் பக்குவத்தை மனிதன் அடைகிறான்.

ஒழுக்கக் கட்டுப்பாடு நம்மிடம் சகிப்புத் தன்மையை வேண்டுகிறது. ஒருவர் உங்களுக்குத் துன்பம் இழைத்து விட்டார். அவரைப் பழிவாங்க உங்கள் மனம் துடிக்கிறது. அதே சமயம் பசியால் வாடும் குடல் இறைவனுக்காக நீங்கள் நோன்பிருப்பதை நினைவூட்டுகிறது. உடனே உங்கள் கைகால்களையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்திக் கொள்கிறீர்கள். பிறகு வழிபாடுகளில் ஈடுபட்டு பகைவனுக்கும் நேர்வழிகாட்டும்படி பிரார்த்திக்கிறீர்கள்.

ஷைத்தான் பல்வேறு சமயங்களில் மக்களைத் தூண்ட முயல்வான். அப்பொழுதெல்லாம் நோன்பு ஒரு கேடயமாக வந்து தடுக்கும். அதன் மூலம் ஷைத்தானியக் குழப்பத்திற்கு பலியாகாமல் நீங்கள் காப்பாற்றப்படுகிறீர்கள்.

ஆகவே, இவற்றை நன்குணர்ந்து நோன்பு நோற்று ஈருலக பாக்கியங்களைப் பெற்றுத் திகழ்வோமாக!

# ரமழான் நோன்பு தொடர்பான சந்தேக நிவர்த்திகள்

**பதாவா முஆஸிரா**

மூலம் : கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி தமிழில் : அஷ்ஷெய்க் A.A. கியாஸ் முஹம்மத் (நளீமி)

**கேள்வி :**

**ஸஹர் உணவு உட்கொள்வது நோன்பு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளுள் ஒன்றா? என்பதை விளக்கவும்.**

**பதில்:**

இது நோன்புக்கான நிபந்தனைகளுள் ஒன்றல்ல; மாறாக நபி (ﷺ) அவர்கள் செய்து வந்த, செய்யுமாறு ஏவிய சுன்னா வின்பாற்பட்ட ஒன்றாகும். தூதர் (ﷺ) அவர்கள் குறிப்பிட்டார்கள்:

**"நீங்கள் ஸஹர் உணவு உட்கொள்ளுங்கள்; அதில் இறையருள் (பரகத்) இருக்கிறது."** (புகாரி, முஸ்லிம்)

எனவே ஸஹர் செய்வதும் அதை தாமதமாக அமைத்துக் கொள்வதும் சுன்னாவாகும். இது முஸ்லிம்களுக்கு நோன்பிற்கான சக்தியை அளித்து நோன்பின் சிரமங்களை இலகுபடுத்துகிறது. பசி, தாகத்தின் கால எல்லையைக் குறைக்கிறது. இலகு மார்க்கமான இஸ்லாம் மக்களுக்கு வணக்கங்களை இலகுபடுத்தி ஆர்வமூட்டக்கூடிய அம்சங்களை வழங்கியுள்ளது. அவற்றில் ஒன்றுதான் தாமதித்து ஸஹர் செய்வதும் இப்தாரை துரிதப்படுத்துவதுமாகும். எனவே, ஒரு முஸ்லிம் நபியவர்களின் சுன்னாவைப் பின்பற்றி ஸஹர் வேளையில் எழுந்து சொற்ப அளவான நீர் அல்லது பேரீத்தம் பழத்தைக் கொண்டாவது ஸஹர் செய்து கொள்ள வேண்டும்.

ஸஹர் காரணமாக, பஜ்ருக்கு முன் எழுந்து விடுவதால் ஆன்மிகப் பயனும் கிட்டுகிறது. இவ்வேளை அல்லாஹ் தன் அடியார்களை நோக்கி வந்து அவர்களது பிரார்த்தனைக்குப் பதிலளித்து, இஸ்தி. பாரை ஏற்று நற்கருமங்களை அங்கீகரிக்கிறான். உண்மையில் இப்பொழுதை இறைதியானத்தில் கழிப்பவனுக்கும், தூக்கத்தில் கழிப்பவனுக்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு.

**கேள்வி:**

**ரமழான் காலங்களில் சில நாட்கள் நோன்பு நோற்று இன்னும் சில நாட்கள் நோன்பை வேண்டுமென்றே விட்டவனின் நிலை என்ன? அவன் நோற்ற நோன்புகள் ஏற்கப்படுமா?**

**பதில்:**

ஒவ்வொரு கருமமும் அதற்குரிய விதத்திலேயே கணிக்கப்படும். எனவே இங்கு பிரச்சினை நோற்ற நோன்புகள் ஏற்கப்படுமா என்பதல்ல; நோற்காது விட்ட நாட்களை ஈடுசெய்ய முடியுமா? முடியாதா? என்பதாகும்.

ரமழானின் ஒரு தினத்தை அத்தகைய பிறிதொரு ரமழானின் தினத்தால் அன்றி ஈடுசெய்ய முடியாது. எனவேதான் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள்: ''யார் ரமழான் தினங்களில் ஒரு தினம் நோன்பை விடுகிறாரோ அவருக்கு வேறு எந்த தினமும் ஈடாகாது." (திர்மிதி)

பிறிதொரு சமயம் ஒருவன் ரமழான மாதத்தில் ஒருநாள் நோன்பு நோற்காததைக் கண்ட அபூஹுரைரா (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள்: ''அவன் ஒரு வருடம் முழுவதும் நோன்பு நோற்றாலும் ஏற்கப்பட மாட்டாது."

இப்னு மஸ்ஊத் (ரழி), அபூபக்ர் (ரழி) ஆகியோர் பின்வரும் கருத்தை குறிப்பிடுகிறார்கள். ஒருவன் தக்க காரணம் இன்றி ரமழான் கால நோன்பொன்றை விட்டு விட்டால் அவன் காலம் முழுக்க நோன்பிருந்தாலும் அதற்கு ஈடாகாது. எனவே ஒரு முஸ்லிம் மார்க்க விவகாரங்களில் அல்லாஹ்வை அஞ்சி நடக்க வேண்டும். ரமழான் நோன்புகளில் பேணுதலாக இருப்பதோடு, தனது மனோஇச்சையை வெற்றி கொள்ளவும் வேண்டும். தனது வயிற்றுடன் தோற்றவன் வேறு எத்துறையிலும் வெற்றிபெற மாட்டான்.

**கேள்வி:**

**ஒரு நோன்பாளி மறதியாக எதையாவது உண்டால் அல்லது பருகினால் அது நோன்பை முறிக்குமா? அன்றேல் குறிப்பிட்ட தினத்து நோன்பைப் பூரணப்படுத்துமா?**

**பதில்:**

புகாரி, முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் அபூஹுரைரா (ﷺ) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் நபிமொழி பதிவாகியிருக்கிறது:

**"ஒருவன் நோன்பு நோற்ற நிலையில் மறதியாக உண்டால், அல்லது பருகினால் அவர் தனது நோன்பைப் பூரணப்படுத்தட்டும். அல்லாஹ்தான் அவனுக்கு உணவளித்தான்; நீர் புகட்டினான்."**

தாரக்குத்னியில்,

**"... இது அல்லாஹ் அவனுக்குக் கொண்டு வந்த உணவாகும், அவன் நோன்பைக் கழாச் செய்யத் தேவையில்லை."** என இடம்பெற்றுள்ளது.

மற்றொரு அறிவிப்பில்,

**"யார் ரமழானில் மறதியாக உணவை உட்கொள்கிறாரோ அவர் கழா செய்வதோ, கப்பாரா கொடுப்பதோ அவசியமில்லை"** எனவும் அமைகிறது.

மேற்படி நபிமொழிகள் மறதியாக உண்பதோ, அருந்துவதோ நோன்பில் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதை தெளிவாக உணர்த்துகின்றன.

**"யா அல்லாஹ்! எமது மறதிக்காகவும், தவறுக்காகவும் நீ என்னைக் குற்றம் பிடிக்காதே"** எனும் மறைவசனத்துக்கும் இக்கருத்து ஏற்புடையதாகும். அல் குர்ஆனில் இடம்பெறும் இப்பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டதாகவும் ஸஹீஹான அறிவிப்புக்கள் கூறுகின்றன.

பிறிதொரு நபிமொழி இப்படி அமைகிறது:

**"இந்த சமூகத்தின் தவறு, மறதி நிர்ப்பந்தம் முதலானவற்றை அல்லாஹ் மன்னித்து விட்டான்."**

எனவே மறதியாக உண்டுவிட்ட பருகி விட்ட ஒரு நோன்பாளி தனது நோன்பைப் பூரணப்படுத்த வேண்டுமே தவிர அதனை முறித்துக் கொள்ளக் கூடாது.

**கேள்வி :**

**தகுந்த காரணத்துக்காக ரமழானின் சில நாட்கள் நோன்பை விட்டு, அடுத்த ரமழான் வந்ததும் அவற்றை கழாச் செய்யத் தவறிவிட்டால் என்ன செய்வது?**

**எத்தனை நாட்கள் நோன்புகளை தவற விட்டேன் என சந்தேகம் ஏற்பட்டால் எப்படி நடந்து கொள்வது?**

**பதில்:**

முன்னைய ரமழானில் தவற விட்ட நோன்புகளைக் கழாச் செய்யாமலேயே அடுத்த ரமழானும் வந்து விட்டால் கழாவோடு சேர்த்து பித்யாவும் கொடுக்க வேண்டும் என சில அறிஞர்கள் கருதுகின்றனர். பித்யாவாக ஒவ்வொரு நாளைக்கும் ஒரு 'முத்து' (சுமார் 1/2 கிலோவை விட சற்று கூடிய பெறுமானம்) தானியம் ஏழைக்கு வழங்கப்பட வேண்டும். இக்கருத்தையே ஹனபிகளும், ஷாபிகளும் கொண்டுள்ளனர். ஏனையோர் இக்கருத்தைச் சொல்லவில்லை.

எப்படியாயினும் அத்தகைய ஒரு நிலை ஏற்படுமிடத்து நோன்புகளை நோற்பது கட்டாயமாகும். பித்யாவை பொறுத்தவரை அதைச் செய்வது சிறந்தது; செய்யாது விட்டாலும் குற்றமில்லை. காரணம் இது குறித்து ஸஹீஹான எந்த அறிவிப்பும் நபியவர்களிடமிருந்து வரவில்லை.

தவறவிட்ட நோன்புகள் எத்தனை எனச் சந்தேகம் ஏற்பட்டால் பெரும்பான்மையான அளவை எடுத்துக்கொள்ள வேண்டும். எனினும் திருப்திக்காக அதிகம் நோற்பது சிறந்தது. அது கூலியையும் அதிகரித்துத் தரும்.

**கேள்வி:**

**நோய் காரணமாக விடுபட்ட நோன்புகளுக்கு பித்யா கொடுத்தல் போதுமா?**

**பதில்:**

இக்கேள்விக்குரிய பதிலில், நோய்கள் இரு வகையாக அமைவது நோக்கத்தக்க தாகும்.

**முதல்வகை,** நிவாரணம் எதிர்பார்க்கத்தக்க தற்காலிகமான நோய்; இதைப் பொறுத்த வரை பித்யா ஸதகாக்கள் கொடுக்க முடியாது. மாறாக கழா செய்வதே அவசியமாகும். இதையே அல்குர்ஆன், **"பிற நாட்களில் விடுபட்ட எண்ணிக்கையை பூரணப்படுத்த வேண்டும்."** என விளக்குகிறது. எனவே ஒரு மாதம் நோன்பை விட்டவர் ஒரு மாதமும் ஒருநாள் விட்டவர் ஒருநாளும், சில தினங்கள் தவற விட்டவர் அவ்வெண்ணிக்கை அளவும் தனக்கு ஆரோக்கியம் கிடைக்கும்போது கழாச் செய்ய வேண்டும்.

**இரண்டாவது வகை,** நிரந்தரமான நோய்: இத்தகைய நோயால் பீடிக்கப்பட்டவர் நோயுற்ற வயது முதிர்ந்த ஆண் பெண்களை ஒத்திருக்கின்றனர். இத்தகைய நோய்கள் அனுபவம் மூலம் அல்லது வைத்தியர்களின் இனங்காணல் மூலம் அறியப்படும். இவர்கள் ஒரு ஏழைக்குரிய உணவை ஒருநாள் நோன்புக்கு பித்யாவாக கொடுக்கலாம். அபூஹனீபா போன்ற சில அறிஞர்கள் பித்யாவின் பெறுமானத்தை பண வடிவில் ஏழை எளியவர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் முடியும் என்ற கருத்தை கூறுகின்றனர்.

# சின்னச் சின்ன சந்தேகங்கள்

**கேள்வி :**

**நோன்பாளி பல்துலக்கலாமா?**

**பதில் :** நோன்பு நோற்றவர் எல்லா நேரங்களிலும் பல்துலக்குவது கூடும். பற்பசை பயன்படுத்துவது நோன்பை முறித்துவிட மாட்டாது. இருப்பினும் பற்பசையில் சிறிதளவாவது வயிற்றுக்குள் சென்று விடாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறே நோன்பாளி கண், காதுக்கு சொட்டு மருந்துகள் இட்டுக் கொள்வதால் அவரது நோன்பு முறிந்து விடாது. தொண்டைக் குழியில் நோன்பாளி சொட்டு மருந்தின் சுவையை உணர்ந்தால் அந்த நோன்பைப் பிறகு நிறைவேற்றுவது பேணுதலான வழிமுறையாகும். ஆனால் நோன்பை நிறைவேற்றுவது வாஜிபல்ல. ஏனென்றால் கண்ணும், காதும் உணவும், பானமும் வயிற்றுக்குள் செல்வதற்கான பிரதான வழிகளல்ல. ஆனால் நோன்பாளி மூக்கினுள் சொட்டு மருந்து இடுவது கூடாது. ஏனென்றால் மூக்கு உணவும், பானமும் வயிற்றுக்குள் செல்வதற்கான வழியாகும். நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"நீ நோன்பு நோற்காத நிலையில் இருந்தால் மூக்கினுள் நீர் செலுத்தி தூய்மையாக்கிக் கொள்"**

**கேள்வி : ரமழான் மாதத்தில் பகல் வேளையில் நோன்பாளிக்கு ஸ்கலிதமானால் நோன்பு முறியுமா?**

**பதில் :** ரமழான் மாத்தில் பகல் வேளையில் நோன்பாளிக்கு ஸ்கலிதமானால் அவர் குளித்து தூய்மையாக்கிக் கொள்வது கடமையாகும். அவரது நோன்பு முறிந்துவிட மாட்டாது. அவ்வாறே இரவில் மனைவியுடன் சேர்ந்த நோன்பாளி கடமையான குளிப்பு விதியான நிலையில் காலை வேளையை அடைந்தாலும் அவரது நோன்பும் முறிந்து விட மாட்டாது.

**"நபி (ﷺ) அவர்கள் ரமழானில் ஸ்கலிதமாகாமலேயே இரவில் தமது மனைவியுடன் சேர்ந்து விட்டு கடமையான குளிப்பு விதியான நிலையில் காலை வேளையை அடைவார்கள். பின்னர் நோன்பைத் தொடருவார்கள்"**

**(புகாரி, முஸ்லிம்)**

**கேள்வி : நோன்பு நோற்றவர் வாந்தி எடுத்தால் அவரது நோன்பு முறியுமா?**

**பதில் :** நோன்பு நோற்றவருக்கு அதிகமாக வாந்தி வந்தாலும் நோன்பு முறியாது. ஆனால் அவர் வேண்டுமென்றே வாந்தி எடுத்தால் அவரது நோன்பு முறிந்து விடும். நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"ஒரு நோன்பாளிக்கு மிகையாக வாந்தி வந்தாலும் (அவரது நோன்பு முறியாது) அவர் அந்த நோன்பை பின்னர் நிறைவேற்றிக் கொள்ளத் தேவையில்லை. ஒருவர் வலிந்து வாந்தியெடுத்தால் அவர் அந்த நோன்பை பிறகு நிறைவேற்ற வேண்டும்"**

**(அஹ்மத், திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா, நஸாஈ)**

**கேள்வி : நோன்பு நோற்றவர் சூரியன் மறைந்து விட்டது; அல்லது பஜ்ர் உதயமாகவில்லை என்ற ஊகத்தில் சாப்பிட்டு விட்டால், குடித்து விட்டால் அல்லது உடலுறவு கொண்டு விட்டால் அவரது நிலை என்ன?**

**பதில்:** இந்நிலையில் உள்ள நோன்பாளி நோன்பை பின்னர் கழாச் செய்ய வேண்டும் என்பது பெரும்பான்மையான அறிஞர்களது தீர்ப்பாகும். சட்டக்கலை இமாம்கள் நால்வரது தீர்ப்பும் இதுவே. உடலுறவு கொண்டவர் குற்றப் பரிகாரமாக 'ழிஹார்' என்ற குற்றத்துக்குரிய கப்பாராவை நிறைவேற்ற வேண்டும்.

**கேள்வி : நோன்பு நோற்றவரின் மூக்கிலிருந்து இரத்தம் வெளியேறினால் அல்லது அவர் இரத்த தானம் செய்தால் அல்லது இரத்தப் பாதிசோதனைக்காக சிறிதளவு இரத்தத்தை உடலிலிருந்து எடுத்தால் அவரது நோன்பு முறியுமா?**

**பதில் :** நோன்பு நோற்றவரின் மூக்கிலிருந்து இரத்தம் வெளியேறுதல், பெண்களுக்கு ஏற்படுகின்ற 'அல்இஸ்திஹாழா' எனும் உதிரப் பெருக்கு என்பவற்றால் நோன்பு முறியாது. மாதவிடாய், பிரசவருது போன்றவற்றால் நோன்பு முறியும். தேவை ஏற்படும் பட்சத்தில் இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நோன்பாளிக்கு குற்றமாக அமையாது. இரத்ததானம் செய்வதைப் பொறுத்தமட்டில் நோன்பாளி அதனை தாமதப்படுத்தி நோன்பு துறந்த பின்னர் இரத்தம் கொடுப்பதே பேணுதலான வழிமுறையாகும். ஏனெனில் பகல் வேளையில் இரத்த தானம் செய்யும்போது நோன்பாளியின் உடல் பலவீனமுற்று நோன்பை விட்டுவிட வேண்டிய நிலை ஏற்படலாம்.

**"ஸாபித் அல்புனானி என்பார் அனஸ் (رضي الله عنه) அவர்களிடத்தில், 'ரஸூல் (ﷺ) அவர்களது காலத்தில் நோன்பாளி இரத்தம் குத்தி எடுப்பதை நீங்கள் வெறுக்கத்தக்க ஒன்றாக கருதியிருந்தீர்களா?' என வினவினார். அதற்கவர், 'இல்லை! எனினும் உடல் பலவீனம் ஏற்பட்டுவிடும் என்று அதனை வெறுத்தோம்' என்று கூறினார்கள்" (புகாரி)**

## இலங்கை முஸ்லிம் சமூகம் :

# பிரச்சினைகளும் சவால்களும் – 7

M.I.M. ஷபீக்
வாழைச்சேனை

இத்தொடரின் மூன்றாவது பிரதான தலைப்பான 'இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைப் போக்கு' இவ்விதழில் இடம்பெறுகிறது. 'ஒற்றுமையின்மை', 'கல்வியில் பின்தங்கிய நிலை' என்பனவே ஏற்கனவே விவாதிக்கப்பட்ட முதலிரு பிரதான தலைப்புகளாகும்.

## 3) இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைப் போக்கு

இஸ்லாம் எனும் அச்சாணி, இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வாழ்க்கைச் சக்கரத்தில் சேர்ந்து சுழலாமல் இருப்பதையே காணமுடிகிறது. சிலபோது தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற வணக்கங்களில் மட்டும் இவ்வச்சாணி இணைந்து கொள்ளும். திருமணம், குடும்பவாழ்வு, கல்வி, பொருளீட்டல், வியாபாரம், அரசியல், நிருவாகம் போன்ற இன்னோரன்ன துறைகளில் இவ்வச்சாணிக்கு பங்கிருப்பதில்லை.

இக்குறைந்தபட்ச நிலை எல்லா முஸ்லிம்களிடத்தும் இருக்கிறது எனக் கருதிவிடவும் முடியாது. இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுவோர், ஐவேளை தொழுகையில் ஆர்வம் காட்டுவோர், ஜும்ஆவுக்கு மட்டும் செல்வோர், பெருநாள் தொழுகையில் மட்டும் கலந்து கொள்வோர், ஜனாஸாவுக்கு மட்டும் சமூகமளிப்போர் என்றவாறு வீதங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவ்வகையில் நோக்கும்போது இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் இஸ்லாத்துடனும், இஸ்லாமிய வாழ்வுடனும் நெருங்கிய தொடர்பற்றவர்களாக வாழுவதையே காண்கிறோம்.

இஸ்லாத்தை வெறும் சம்பிரதாயமாகவும், சடங்காகவும் நோக்குகிற போக்கே மிகைத்திருக்கிறது. வாழ்க்கைப் போக்கில் இஸ்லாத்தின் ஆதிக்கம், செல்வாக்கு மிகவும் குறைவாகவே உள்ளது.

எந்தவொரு முஸ்லிம் கிராமமும் இஸ்லாத்தின் அடிப்படையில் இயங்குவதையும் காணமுடியவில்லை. அங்கு ஜாஹிலிய்யத்தின் அலைகள் வீசுகின்றன. வங்கி அமைப்புகளில் முஸ்லிம்களின் அங்கத்துவம் அவர்களின் வீதாசாரத்தை விடவும் அதிகமாகும். ஏனைய சமூகங்களுக்கும் எமக்குமிடையில் நடைமுறை வாழ்வில் எவ்வித வித்தியாசமும் காண்பதற்கில்லை.

மனோஇச்சையை தடுத்து அழகியதொரு பாதையைக் காட்டி வாழ்வின் இன்பத்தை நுகரவைக்கும் இஸ்லாத்தைப் பற்றிய கருத்து அவர்களின் உள்ளத்தில் சுமையாகவும், பெரும்பாரமாகவும் இருக்கிறது. எனவேதான் சம்பிரதாயபூர்வமாக இஸ்லாம் அனுஷ்டிக்கப்படுகின்ற இடத்தில், அறிவுபூர்வமாக, வாழ்வின் ஒரு தேவையாக இஸ்லாம் பேசப்படுவதில்லை.

இத்தகைய நிலைக்கு பின்வரும் இரு காரணங்களை நாம் குறிப்பிட்டுக் கூறலாம்.

1. இஸ்லாம் இலவசமாகக் கிடைத்தமை
2. சடவாத சிந்தனைப் போக்கும் இஸ்லாம் பற்றிய தெளிவின்மையும்

**1. இஸ்லாம் இலவசமாகக் கிடைத்தமை**

நாம் பின்பற்றும் மார்க்கம் அல்லாஹ்வின் உயர்ந்த வழிகாட்டுதல்கள் நிரம்பப் பெற்றதாகும். அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெற்றது இம்மார்க்கம் மட்டுமே.

**"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் மட்டுமே" (3:19)**

இவ்வுயர் வழிகாட்டுதலை அவனின் அன்பின் காரணமாக எவ்வித விலையும் செலுத்தாது வாரிசுக் சொத்தாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில் அவனது மார்க்கத்தை நாம் சரிவரப் புரிந்து கொள்ளாதிருப்பது துரதிஷ்டமே. 'இலவசப் பண்டம் பெறுமதி குறைந்தது' என்ற கருத்து எங்கும் ஏற்புடையதல்ல. இஸ்லாத்தைப் பொறுத்தவரை அதன் பெறுமதியை நாம் உணரத் தவறுவோமாயின் சுவனத்தின் வாயிலை எம்மால் நுகரவும் முடியாது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

இஸ்லாம் எமக்கு இலவசமாக வாரிசுச் சொத்தாக கிடைத்திட்ட போதும், உலகமெல்லாம் இந்த மார்க்கம் வியாபிப்பதற்கு ஏராளமான உயிர்களும், உடமைகளும், கால நேரங்களும் விலையாக செலுத்தப்பட்டிருக்கிறன என்பதை நாம் மறந்துவிடலாகாது.

இம்மையிலும் மறுமையிலும் விமோசனத்தைத் தரவல்ல இந்த மார்க்கத்தின் பெறுமதியை, வாழ்வின் பல்வேறு சூழலிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கி இஸ்லாத்தின் மூலம் நிவாரணத்தைப் பெறும் மனிதனால் புரிந்து கொள்ள முடிகிறது. அவன் முஸ்லிமாக இருப்பினும், முஸ்லிமல்லாதவனாக இருப்பினும் சரியே. எனவே இந்த மார்க்கத்தின் பெறுமதியை நாம் குறைத்து மதிப்பிடலாகாது.

இஸ்லாம் மனித சமுதாயத்தின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வினை வழங்கி மனித சமுதாயத்தை நேரிய வழியில் அழைத்துச் செல்ல வந்த மார்க்கமாகும். பிரச்சினைகளைக் கண்டு அது ஒதுங்கி விடுவதில்லை. இஸ்லாத்தின் போதனைகள், சட்டதிட்டங்கள் யாவும் மனித உள்ளத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவை. அல்குர்ஆன் உள்ளத்தோடு தான் உறவாடுகிறது. அது புறவாழ்வை விட அகத்தின் தூய்மைக்கு முக்கியத்துவமளிக்கிறது. ஆகவேதான் இஸ்லாத்தின் உயர்ந்த தன்மை அதன் நம்பிக்கைக் கோட்பாடுகளிலும், ஷரீஆவை நடைமுறைப்படுத்த அது கையாளும் வழிமுறைகளிலும் தங்கியுள்ளது.

இஸ்லாம் ஒரு கொள்கையாக, வாழ்க்கை நெறியாக உள்ள போதும் இஸ்லாத்தின் பெறுமதியை உணராததால் சிந்தனையில் இஸ்லாம் இல்லாதிருக்கிறது. ஒரு முஸ்லிம் காலையில் எழுந்தது முதல் இரவு தூக்கத்துக்குச் செல்லும் வரை அவனது பேச்சு, சிந்தனை, உரையாடல்கள் யாவும் இஸ்லாத்தின் வட்டத்திலிருந்து வெளியே இருப்பதைக் காண்கிறோம். பிரச்சினைகள் வருகின்றபோது அதற்கான தீர்வை இஸ்லாத்தின் மூலம் அணுகுவதற்குப் பதிலாக வேறொன்றிலிருந்து அணுகுவதைக் காண்கிறோம். நாள்தோறும் பத்திரிகை படிப்பதில் காட்டப்படுகின்ற அக்கறை, குர்ஆனை ஓதுவதில், விளங்குவதில் காட்டப்படுவதில்லை. இவ்வாறாக வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் எடுத்து நோக்கின் சிந்தனையிலோ, செயற்பாட்டிலோ இஸ்லாம் இல்லாதிருக்கிறது என்பது உண்மை.

இஸ்லாம் ஓர் உயிர்த்துடிப்புமிக்க ஆற்றலும், ஆளுமையும் பொதிந்ததொரு கொள்கையாகும். அது எப்போதும் சோர்வடையத் தூண்டுவதில்லை. உற்சாகமாக பணிபுரியுமாறே பணிக்கிறது. ஆகவே மனித உள்ளங்களில், சிந்தனையில் இஸ்லாம் ஆழப்பதிந்து விடுமாயின் ஆலவிருட்சமாய் அது வாழ்வு முழுவதும்

பிரகாசிக்கத் தொடங்கிவிடும். ஆகவே, சிந்தனையில் திருப்பம் வேண்டும். இஸ்லாம் ஏற்படுத்த விரும்பும் சமூக மாற்றம் அப்போதுதான் சாத்தியமாகும். இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைப் போக்கினால் மனித வாழ்வு சுபீட்சமடைவது மில்லை; மனித உள்ளம் திருப்தி காண்பது மில்லை. இம்மை வாழ்வின் சுபீட்சத்திற்கும், மறுமையின் வெற்றிக்கும் இந்த தீனின் பெறுமதி உணரப்பட்டு, சிந்தனை இஸ்லாமாக மாற வேண்டும். அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"(அந்நாளில் நல்லடியார்களிடம்) சாந்தியடைந்த ஆத்மாவே! நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும் (அவன் உன்மீது திருப்தியடைந்த நிலையிலும்) மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக" (90:27-29)**

உலக வரலாற்றிலே இஸ்லாம் வேறு எந்தவொரு கொள்கையும் எதிர்நோக்கியிராத அளவு சிந்தனா, இராணுவ ரீதியிலான சவால்களை எதிர்கொண்டு தனது தனித்துவத்தை இழந்துவிடாது வாழ்ந்து வருகிறது. இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சமாகவே அறிஞர் பெருமக்கள் இதனைக் கருதுவர். தமது உள்ளத்தாலும், உணர்வாலும், சிந்தனையாலும் இஸ்லாத்தை தமதாக்கிக் கொண்டவர்களே இப்பேராபயத்திலிருந்து இஸ்லாத்தையும், முஸ்லிம் உம்மத்தையும் பாதுகாப்பதற்கு முன்னின்றார்கள் என்றால், எங்களது சிந்தனையில் இஸ்லாம் இல்லாதிருப்பது கவலைதரும் விடயமே. குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"(நபியே!) அவர்களில் அநேகர் கேட்கிறார்களென்றோ, சிந்தித்துணருகிறார்களென்றோ நீர் எண்ணிக் கொண்டீரா? இல்லை, அவர்கள் கால் நடைகளைப் போல் இருக்கின்றனர்; இன்னும் சொல்லப் போனால் அவற்றை விடவும் மிகவும் வழிகெட்டவர்கள்" (25:44)**

**02. சடவாத சிந்தனைப் போக்கும் இஸ்லாம் பற்றிய தெளிவின்மையும்**

உலகம்தான் பெரிது, உலக இன்பங்கள் புறக்கணிக்கப்பட முடியாதது என்ற சிந்தனை மனித உள்ளத்தை ஆக்கிரமித்து விடுகின்றபோது மறுமை வாழ்வு பற்றிய எண்ணங்களை அது இருளடையச் செய்து விடுகிறது. மனிதன், இப்பிரபஞ்சம், அவனது வாழ்வு இவைபற்றி இஸ்லாம் தெளிவானதொரு கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. இந்த அடிப்படைகளை ஒரு முஸ்லிம் மறந்துவிடுகின்றபோது ஷைத்தானிய வழியில் அள்ளுண்டு சென்று வாழ்க்கையை வீணும் விளையாட்டும், வேடிக்கையும் நிறைந்த ஒன்றாக மாற்றிக் கொள்கிறான். ஆல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"வானங்களையும், பூமியையும் இவற்றிற்கு மத்தியிலுள்ளவற்றையும் விளையாட்டுக்காக நாம் படைக்கவில்லை. (நிச்சயமாகத்) தக்க காரணத்துக்காகவேயன்றி இவைகளை நாம் படைக்கவில்லை. எனினும், அவர்களில் பெரும்பாலானோர் (இதனை) அறிந்து கொள்வதில்லை" (44:38-39)**

உலகம் பற்றிய சரியான புரிந்துணர்வின்மையால் உலகை அனுபவிக்க முற்படுகின்றபோது சடவாத சிந்தனை உள்ளத்தை ஆக்கிரமித்து விடுகிறது. சடவாத சிந்தனையின் காரணமாகவே இன்று உலகில் ஆதிக்க வெறியும், தேசியவாதமும், பதவி மோகமும், இன உணர்வும் வளர்ந்திருக்கின்றன.

நபியவர்களது ஸுன்னாவின் வெளிச்சத்தில் உலக வாழ்வை நோக்குகிறபோது இபாதத், இமாரத், கிலாபத் ஆகிய பணிகளை ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டியுள்ளான். இத்தகைய இலட்சிய நோக்கோடு ஒரு முஸ்லிமின் வாழ்வு அமைந்துவிடுகின்றபோது அவனுக்கு இவ்வுலகில் கிடைக்கின்ற சொத்து, செல்வம், பட்டம், பதவி யாவும் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப் பெற்ற அமானிதங்கள் எனக்கருதி அவற்றை மறுமையின் வெற்றிக்காக பயன்படுத்துவான்.

உலகில் ஒரு முஸ்லிமின் பங்கானது எத்தகையது என்பதை பின்வரும் நபி மொழிகள் உணர்த்துகின்றன:

**"இவ்வுலகம் மறுமையின் விளைநிலம்"**

**"உலகில் ஒரு வழிப்போக்கனைப் போன்று வாழ்"**

நபியவர்களது வாழ்வும் அவர்கள் உருவாக்கிய சமுதாயத்தின் பண்பும் மேற்குறித்த வகையிலேயே அமைந்தது.

உலகவாழ்வுதான் நிலையானது என்ற கற்பனையில் மறுமையை மறந்து இவ்வுலகின் ஆசாபாசங்களில் மூழ்கிவிடுகின்ற நிலையை 'மதமாற்றம்' எனக் குறிப்பிடும் மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் *'ஒரு ரித்தத் தோன்றி விட்டது; ஆனால், அதனைத் தீர்க்க அபூபகர் இல்லையே'* என தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

உண்மையில் மனிதனை முதன்மையாகக் கொள்ளாத கொள்கையும் கோட்பாடுகளும் மனிதனின் புறவாழ்வை அலங்கரிப்பதற்குரிய பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதால் சடவாதம் அல்லது லௌகீகவாதம் அல்லது பொருள்முதல்வாதம் மேலோங்கியுள்ளது. இதன் காரணமாக முஸ்லிம் சமூகமும் அதிலிருந்து விடுபட முடியாதளவு இஸ்லாத்திற்கு முரணான சிந்தனையைக் கொண்டிருக்கின்றன எனலாம்.

சடவாத சிந்தனை உள்ளத்தை ஆக்கிரமித்து விடுவதற்கு இஸ்லாம் பற்றிய தெளிவின்மையும் ஒரு காரணமாகும். இல்லறத்தை விரும்பும் இஸ்லாம் துறவறத்தை ஆதரிக்கவில்லை. இம்மையை மறுமைக்காக பயன்படுத்தும்படி உற்சாகமூட்டும் இஸ்லாம் உலகவாழ்வை புறக்கணிக்குமாறு தூண்டவில்லை. இக்கண்ணோட்டத்தில் இஸ்லாம் விளங்கப்பட வேண்டிய தேவையுள்ளது. உலகில்தான் மனிதன் வாழவேண்டும்; மனிதனை உலகம் விழுங்கிவிடக்கூடாது என்பதே இதன் தத்துவம்.

நபி (ﷺ) அவர்கள் உலகில் சிறந்த குடும்பத்தலைவராக, தளபதியாக, நீதிபதியாக, சிறந்த வியாபாரியாக, முன்மாதிரிமிக்க ஆட்சியாளராக, சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் காணும்போது அல்குர்ஆனின் எதிர்பார்ப்பை உலகில் நபியவர்கள் நிறைவேற்றினார்கள் என்பதை உணர முடிகிறது.

இஸ்லாம் பற்றிய தெளிவின்றி வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளும் ஒரு முஸ்லிம், ஒன்றில் இம்மையை புறக்கணித்துவிடுகிறான்; அல்லது மறுமையை இழந்து விடுகிறான். இந்த நிலை முஸ்லிம் சமுதாயத்தின் ஆரோக்கியமான நிலை அல்ல. முஸ்லிம்கள் ஒரு கொள்கையைச் சுமந்தவர்கள்; அக்கொள்கையை இவ்வுலகில் வாழவைக்க வந்தவர்கள். இந்த உணர்வு இஸ்லாத்தின் மூலமாக அன்றி வேறு எதன் மூலமும் பெறமுடியாது.

இஸ்லாம் பற்றிய தெளிவின்மையால் இஸ்லாத்திற்கு முரணான சிந்தனை வளர்ந்து வருவதையே காண்கிறோம். நாம் கற்கும் கல்விமுறையும், எமது தொடர்பூடகங்களும், எமது சூழலும் இஸ்லாமிய உணர்வை எமக்குத் தருவதில்லை. இத்தகைய நிலையை மாற்றி இஸ்லாத்தின் ஆதிக்கத்தை உலகில் ஏற்படுத்துவது ஆலிம்களின் பணி மட்டுமன்றி ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

முஸ்லிமல்லாத ஒரு மனிதனைப் பொறுத்தவரை அவனது வாழ்வுக்கும்,

(50ம் பக்கம் பார்க்க)



# ரமழானும் நாமும்

ரமழான் எங்களிடம் வந்து விட்டது. ஏனைய மாதங்களை விட இம்மாதத்தினை அல்லாஹ் தஆலா எமக்கு சிறப்பாக ஆக்கியுள்ளான். ஏனென்றால் இந்த மாதத்தில்தான் அல்லாஹ்வின் அடியார்களாகிய நாம் நிறைவேற்ற வேண்டிய நோன்பு எனும் மகத்தான கடமை எம்மீது விதியாக்கப்பட்டுள்ளது. இந்த நோன்பின் காரணமாகவே இந்த ரமழான் மாதம் எங்களில் மிகப் பெரிய மகத்துவத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மகத்துவமிக்க இந்த மாதத்தில் முஸ்லிம்களாகிய நாம் எமது செயற்பாடுகளையும் எண்ணங்களையும் தூய்மையாக்கிக் கொள்வதால் ஏனைய மாதங்களை விட இரட்டிப்பு மடங்கு நன்மைகளை ஈட்டித்தரும். எனவே நாம் எமது நன்மையான செயல்களை சிறப்புறச் செய்வதன் மூலமும் தீமைகளை அடியோடு களைந்தெறிவதினூடாகவும் அல்லாஹ்விடம் அளவிலா நற்கூலியைப் பெற முயற்சிக்க வேண்டும். ஆகவே இம்முறை எம்மிடையே வந்துள்ள இந்த ரமழானை திட்டமிட்டு கழிப்போமாக!

**01. அல்குர்ஆனோடு எம்முடைய தொடர்பினை வலுவாக்கிக் கொள்ளுதல்:**

**“ரமழான் மாதம் எத்தகையதென்றால் அம்மாதத்தில்தான் மக்களுக்கு நேர்வழி காட்டியாகவும் நேரான வழியை தெளிவாக்கக் கூடியதாகவும் நன்மை தீமையை பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள குர்ஆன் இறக்கியருளப்பட்டது. ஆகவே உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அதில் நோன்பு நோற்கட்டும்.” (2:183)**

இந்த வசனத்திலிருந்து ரமழான் மாதம் புனிதமாக்கப்பட்டு அதில் நோன்பை முஸ்லிம்களுக்கு கடமையாக்கப்பட்டிருப்பதன் உன்னத நோக்கம் எமக்கு தெளிவாகப் புரிகிறது. அதாவது புனிதமிக்க அல்குர்ஆன் இறக்கப்பட்ட மகத்தானதொரு மாதமென்பதாலே அல்லாஹ் நோன்பை அடியார்களுக்கு இம்மாதத்தில் விதித்து அதனைப் புனிதமாக்கினான்.

மனித வாழ்க்கைக்கு நேர்வழிகாட்ட வந்த அல்குர்ஆனை பலவாறாக பயன்படுத்தி பலவித நன்மைகளை அடைந்து கொள்ளலாம். அல்குர்ஆன் தொடர்பாக பின்வரும் நான்கு அம்சங்கள் முஸ்லிம்களிடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. அல்குர்ஆனை ஓதுதல்
2. அல்குர்ஆனை விளங்குதல்
3. அல்குர்ஆனின்படி வாழ்தல்
4. அல்குர்ஆனின் தூதை எத்தி வைத்தல்

(இந்நான்கு தலைப்புகளிலுமான தனித்தனி ஆக்கங்கள் தனியாக இடம்பெறுவதால் இவை பற்றிய விளக்கம் இக்கட்டுரையில் தவிர்க்கப்படுகிறது.)

**2. தவ்பா, திக்ர், இஹ்திஸாப், செய்தல்**

இவ்வுலகில் மனிதன் பாவங்கள் செய்வது இயற்கையே. அப்படி பாவங்கள் செய்துவிட்ட போதிலும் அவற்றிற்குரிய பரிகாரங்களை செய்து கொள்வதற்குப் பற்பல வாய்ப்புகளை இறைவன் வழங்கியிருக்கிறான். உலகிலுள்ள மக்கள் அனைவரும் பாவம் செய்பவர்களே! அறவே பாவம் செய்யாதவர்கள் நபிமார்கள் அல்லது மலக்குகளாகத்தான் இருக்க முடியும். அடிக்கடி அல்லாஹ்வை மறக்கும் இயல்புள்ளவர்கள் மனிதர்கள். இரகசியமாகவோ அல்லது பகிரங்கமாகவோ மக்கள் பாவச் செயல்களில் ஈடுபடத்தான் செய்கிறார்கள். அக்கிரமங்கள், அனாச்சாரங்கள், ஆபாசங்கள் நிறைந்த இவ்வுலகிலே போட்டியும், பூசலும், பொறாமையும் மலிந்த இந்த தேசத்திலே ஆடம்பரமும், அகங்காரமும், அட்டூழியங்களும் மலிந்த இந்தப் பூமியிலே குற்றம் புரியாத மக்களை கண்டு கொள்வது அரிது. மனிதன் செய்யும் குற்றச் செயல்களை நீக்கிக் கொள்வதற்கு பற்பல பரிகாரங்களை இறைவன் வழங்கியிருக்கிறான். அவற்றிலொன்றுதான் தவ்பா என்ற பாவமன்னிப்பு ஆகும். இப்பரிகார முறையை இவ்வுலகிலேயே செய்து முடித்து, பரிசுத்தத் தன்மையுடன் இவ்வுலகை விட்டுப்பிரியும் மனிதர்களாக நாம் இருக்க வேண்டும். எனவே, சிறிய பாவமோ பெரிய பாவமோ எதுவாயினும் பிற்படுத்தாமல் உடனுக்குடன் தவ்பா செய்து மீட்சி பெற்றுவிடுவது அத்தியாவசியக் கடமையாகும். ஏனெனில், மனிதனுக்கு நித்திய வாழ்வும் மரணிக்கும் நேரம் பற்றிய ஞானமும் கிடையாது. அவன் மரணிக்கும் நேரம் பாவத்தைவிட்டும் பரிசுத்தம் பெற்று மரணமெய்த வேண்டும் என்பதற்காகவே இக்கட்டாய கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே துஆ பிரார்த்தனைகளும் தவ்பாவும் உடனே அங்கீகரிக்கப்படும் ரமழான் காலங்களிலே அதிகமாக தவ்பா செய்வோமாக.! தவ்பா செய்வதற்கு குறிப்பிட்ட சில நாட்களோ, சில நேரங்களோ கிடையாது. மனிதன் தொடர்ந்தும் பாவங்கள் செய்வதால் தொடர்ந்தும் தவ்பாவும் செய்ய வேண்டும்.

மௌலவியா
ஸீனத் குறைஸா தாஸிம் இஸ்லாஹி

அடுத்ததாக, திக்ர் என்னும் இறைதியானம் அல்லாஹ்வை நினைவு கூர்தல். உண்மையிலேயே அல்லாஹ்வின் நினைவு உள்ளத்துக்கு குளிர்மையான உணர்வை ஊட்டுகிறது. அதனைக் குறித்து அலட்சியமாய் இருப்பது மனிதனின் உள்ளத்தை மரணிக்கச் செய்கிறது. இந்த மனித உடலின் வாழ்க்கை உணவைக் கொண்டே அமைந்துள்ளது. உணவு கிடைக்காவிட்டால் இந்த உடல் இறந்து விடுகிறது. இந்த உடலுக்குள் இருக்கும் ஆன்மாவுக்குரிய உணவான இறைதியானம் கிடைக்காமல் போய் விட்டால் அதற்கும் மரணம் ஏற்பட்டு விடுகிறது. நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**“அல்லாஹ் கூறுகிறான்: என்னை என் அடியான் நினைவுகூரும் போதும் என் நினைவில் அவனது உதடுகள் இரண்டும் அசையும் போதும் நான் அவனுடன் இருக்கிறேன்.” (புகாரி)**

ஒவ்வொரு நாளும் நாம் எம்மை சுய மதிப்பீடு (இஹ்திஸாப்) செய்து கொள்ள தவறக் கூடாது. இன்றைய நாளில் நாம் எத்தகைய நன்மைகள் செய்தோம் எத்தனை தீமைகளை செய்தோம், எதனை தவற விட்டுவிட்டோம் என்றும், எத்தனை சந்தர்ப்பங்களில் உலகம் எங்களை தன்பால் ஈர்ப்பதில் வெற்றி கொண்டிருக்கிறது. அதேபோல் எத்தனை சந்தர்ப்பங்களில் மறுமையின் பக்கம் செல்வதில் நாம் வெற்றி கண்டிருக்கிறோம் என்று ஆய்வு செய்ய வேண்டும். எம்மிடம் மறுமை சிந்தனை எந்தளவு



இருக்கிறது? அது வளர்கிறதா? தேய்கிறதா? போன்ற விபரங்களை அந்த சுயமதிப்பீடு மிகத துல்லியமாக எமக்கு காண்பித்து விடும்.

**3. தொழுகை**

நபி (ﷺ) அவர்கள் நவின்றுள்ளார்கள்:

**"ஐவேளைத் தொழுகையின் உதாரண மாகிறது, நிரம்ப வழிந்தோடும் ஒரு ஆறு உங்களில் ஒருவரின் வீட்டு வாசலில் ஓடி அவர் அதில் ஐந்து முறை குளிப்பது போன்றதாகும்." (முஸ்லிம்)**

முதலில் ஐந்து நேரத் தொழுகையை சரியாக அதன் ஆரம்ப வேளையிலேயே நிலைநாட்ட கரிசனை செலுத்த வேண்டும். அடுத்ததாக இந்த ரமழானில் ஓய்வாக இருக்கக் கூடிய நேரங்களை அதிகமான சுன்னத்தான தொழுகைகளை உயிர்ப்பிப் பவர்களாக இருக்க வேண்டும். நபிலான தொழுகைகளை பேணியும், இரவு நேரங் களில் எழுந்து நின்று தொழக்கூடியவர் களாகவும் இருக்க வேண்டும். நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்:

**"யார் ரமழான் மாதத்தில் ஈமானுடன் நற்கூலியை ஆதரவு வைத்தவராக நின்று வணங்குகிறாரோ அவரின் முன்பாவங்கள் மன்னிக்கப்படும்."**

**(புகாரி, முஸ்லிம்)**

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள்:

**"ரமழானின் கடைசி பத்து நுழைந்து விடுமானால் அண்ணல் நபி (ﷺ) அவர்கள் அதன் ஒவ்வொரு இரவையும் (நல் வணக்கங்களைக் கொண்டு) உயிர்ப்பிப்பார்கள். தங்கள் குடும்பத் தாரை உறக்கத்திலிருந்து விழிக்கச் செய்வார்கள். நல் வணக்கங்களுக்காக பாடுபடுவார்கள். தங்கள் வேட்டியை இறுக்கமாக கட்டிக் கொள்வார்கள். (நல்வணக்கங்கள் செய்ய உறுதியாக தயாராகி விடுவார்கள்)"**

**(புகாரி, முஸ்லிம்)**

**3. வீண் பேச்சுக்களை தவிர்த்தல்**

நோன்பாளி தன் நாவு மற்றும் உறுப்பு களை தீயவைகளை விட்டும், பிறரை திட்டுவதை விட்டும் பாதுகாத்தல் வேண்டும்.

**"நோன்பு ஒரு கேடயம். பகைவனின் தாக்குதலை விட்டுத் தப்பிக்க கேடயம் பயன்படுவது போல் ஷைத்தானின் தாக்குதலை விட்டுத் தப்பிக்க நோன்பு உதவுகிறது. எனவே, உங்களில் எவர் நோன்பு வைத்திருக்கும் நாளில் (அவர் அந்த கேடயத்தை உபயோகித்து) கெட்ட வார்த்தைகள் பேசாதிருக்க வேண்டும். சண்டை சச்சரவுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவரை யாரேனும் திட்டினால் அல்லது அவரிடம் சண்டையிட்டால் (சகோதரரே!) நான் நோன்பாளி என்று செல்லிவிட வேண்டும்." (புகாரி, முஸ்லிம்)**

இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"யார் பொய் கூறுவதையும், பொய்யைக் கொண்டு செயல்படுவதையும், விட்டு விடவில்லையோ, அவர் உணவையும் பானத்தையும் விட்டுவிடுவதில் அல்லாஹ் வுக்கு எந்தத் தேவையும் இல்லை."**

**(புகாரி)**

பர்ழான நோன்பானாலும் சரி, நபிலான நோன்பானாலும் சரி, பொதுவாக நோன்புக்கு கண்ணியம் செய்ய வேண்டும். அதாவது, நோன்பு வைத்துக் கொண்டு புறம் பேசுதல், கோள் சொல்லுதல், திட்டுதல், அந்நிய ஆண்களைப் பார்த்தல் ஆகிய எல்லாப் பாவங்களை விட்டும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாவம் செய்வது எப்போதும் தீயதுதான். எனினும் நோன்பு வைத்திருக்கும் நிலையிலே பாவம் செய்வது நோன்பின் பரகத்தையும் பயன் களையும் போக்கி பெருமளவு நன்மை யைக் குறைத்து விடுகிறது.

**4. தர்மங்களை அள்ளி வழங்குதல்**

நபி (ﷺ) அவர்கள் அதிகமாக கொடை கொடுப்பவர்களாக இருந்தார்கள். ஜிப்ரீல் (عليه السلام) அவர்களை சந்திக்கும் புனித ரமழானில் அவர்கள் மிக அதிகமாக கொடை வழங்குபவர்களாக இருந்தார்கள். ஜிப்ரீல் (عليه السلام) ரமழானில் ஒவ்வொரு இரவிலும் நபி (ﷺ) அவர்களை சந்திப் பார்கள். குர்ஆனை அவர்களுக்கு ஓதிக் காண்பிப்பார்கள்.

**"ஜிப்ரீல் (عليه السلام) அவர்களைச் சந்திக்கும் புனித ரமழானில் நபி (ﷺ) அவர்கள் வேகமாக வீசும் காற்றை விட அதிகமாக கொடை கொடுப்பவர்களாக இருந்தார்கள்" (புகாரி, முஸ்லிம்)**

இந்த பரகத்தான மாதத்திலே தர்மம் அதிகமாக செய்தல், பசியாளிக்கு உணவ ளித்தல், வேலையாட்களின் வேலைப் பளுவை குறைத்தல் போன்ற செயல்கள ஊக்குவிக்கப்படல் வேண்டும். குறிப்பாக அவன் உள்ளத்தில் தம் சகோதரர்கள் மீது அனுதாப உணர்வு உருவாக வேண்டும். ஏனெனில் அவன் பசியாலும் தாகத்தாலும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கி றான். எனவே மற்றவர்களின் வறுமையும் துன்பமும் எவ்வாறிருக்கும் என்பதை அவன் உணர வேண்டும்.

இப்னு அப்பாஸ் (ﷺ) அவர்கள் கூறுகிறார்கள்:

**"ரமழானில் பெருமானார் மற்ற நாட்களில் இருப்பதை விட அதிக அன்பும் பாசமும் கொண்டவர்களாய் இருப்பார்கள். இந்தக் காலத்தில் கையேந்துகிறவர் எவரும் பெருமானா ரின் வீட்டு வாசல் வந்து வெறுங்கை யோடு செல்வதில்லை. கைது செய்யப் பட்டவர்கள் கூட இந்தக் காலத்தில் கைதிகளாக இருப்பதில்லை."**

**5. இஃதிகாப்**

பொதுவாக ரமழானின் எல்லா நாட்க ளிலும் அல்லாஹ்வின் இல்லங்களில் இஃதிகாப் இருப்பது சிறப்பானதாகும். இருப்பினும் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். ரமழானின் இருபதாம் நோன் பன்று சூரியன் மறைந்தவுடன் இஃதிகாபை ஆரம்பித்துவிட வேண்டும். பெருநாள் பிறை தென்பட்டவுடன் இஃதிகாபை முடித் துக் கொள்ள வேண்டும். பெருமானார் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"இஃதிகாப் இருப்பவர் பாவம் செய்வதிலிருந்து பாதுகாப்பு பெறுவார். மேலும் இஃதிகாபில் இல்லாதவர்கள் ஓடியாடி செய்கின்ற அனைத்து நன்மைகளையும் இஃதிகாப் உள்ளவர் கள் உட்கார்ந்துக் கொண்டே அடைகிறார்கள்" (புகாரி)**

ஆண்கள் பள்ளிவாயலில் இஃதிகாப் இருப்பது போன்று பெண்கள் வீட்டின் ஏதாவது ஓர் இடத்தை தொழுமிடமாக ஏற்படுத்தி அங்கு இஃதிகாப் இருக்கலாம். இது பெரும் நன்மையான காரியமாகும். தான் இஃதிகாப் இருக்கும் இடத்தில் இருந்த வண்ணம் தன் குழந்தைகளையோ வேலையாட்களையோ வேலை செய்யும் படி ஏவலாம். இது எவ்வளவு எளிதான ஒரு காரியமாக இருந்தும் பெண்கள் இத்தகைய பெரிய நன்மையை அடையாமலிருந்து விடுகிறார்கள்.

இயற்கைத் தேவைகளுக்காக இஃதிகாப் இருக்கும் இடத்தை விட்டு வெளியில் செல்லலாம். ஆனால்

(30ம் பக்கம் பார்க்க)



# வந்தது வசந்தம்

செல்வி நஸீலா உவைஸ் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி

மௌனராகம் பாடிக் கொண்டிருந்தது அந்த கண்ணியமிக்க ரமழான் மாத பஜ்ரின் ஆரம்ப நேரம். மாடமாளிகையான அனஸ் வீடு மட்டும் அவரின் சத்தத்தால் அதிர்ந்து கொண்டிருந்தது.

``ஓங்களுக்கு வேணும்னா எழும்பி தொழுங்க நஸ்லி. என்ன கரைச்சல் பண்ணாம. என்னமோ பர்ழான தொழுகை `கழாவா' போகப் போர மாதிரி. பண்ணிரண்டு மணிக்கும் பொறகுதான் படுக்கவே வந்தேன் அதுல நீங்க வேற... கோவிச்சிகாம என்ன ஒரு அஞ்சி மணிக்கு எழுப்பாட்டுங்க பாப்போம்'' கூறியவாறு அனஸ் பெட்சீட்டை இன்னும் நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டார்.

நஸ்லியாவுக்கு இது பழகிப்போன பல்லவி. அவள் வுழு செய்து கொண்டு வந்து தஹஜ்ஜுத் தொழுதுவிட்டு கடிகாரத்தைப் பார்க்க அது மணி நாலைக் காட்டியது. பின்பு அல்குர்ஆனை ஓத ஆரம்பித்தாள் சற்று நேரத்தில்.

`தொண்டையைக் கிழிக்காம கொஞ்சம் மெதுவாக ஓதுங்க நஸ்லி. இந்த ஜாமத்தில எழும்பிட்டு மொனங்காம''

`யாஅல்லாஹ்! ஒண்ட இந்த கலாம ஓதக்கூட சுதந்திரம் இல்லயா அதற்கும் ஜாமம், பகல், ராவுண்டு வேற டைம்...'' மனதுக்குள்ளே அழுது கொண்டாள் நஸ்லியா. சற்று நேரம் மௌனமாக ஓதிவிட்டு ஐந்து மணிக்கு பதினைந்து நிமிடம் இருக்கும் வேளையில் சஹர் உணவுகளை மேசையில் பரப்பி வைத்து விட்டு அனஸைப் போய் எழுப்பினாள். அவன் எழும்பி வந்து முகத்தை கழுவி விட்டு கதிரையில் அமர்ந்து.

`எனக்கு ரெண்டு சிகரட் எடுத்து தந்து விட்டு சாப்பிடுங்க நஸ்லி.''

``இன்டைக்காவது ரெண்டுபிடி சோத்த திண்டிட்டு நோன்பு புடிங்களே... இப்படி சிகரட் குடிச்சா ஒடம்புக்கு என்னவாகும்? நபிகள் நாயகம் அவங்க சொல்லி இருக்காங்க சஹர் உணவு உண்பதும் அதான் கேட்டதும் நோன்பு திறக்கிறதும் நோன்ப அழகு படுத்தும் எண்டு. சஹர் உணவு பரகத்த ஏற்படுத்தும் எண்டும் சொல்லி இருக்காங்க''

``ஸஹர் உணவு சாப்பிட்டுத்தான் எங்களுக்கு பரகத்து வரவேணுமாக்கும்''

`நஸ்லி கொஞ்சம் கேளுங்க. நீங்க இப்பிடி ராவெல்லாம் தொழுதும் ஓதிக் கொண்டு ஈந்தா பரவாயில்ல. ஓங்கட வயித்துல வளர்ர புள்ளய பத்தியும் நெனவு வச்சிக் கோங்க சட்டப்படி பார்த்தா நீங்க நோன்பே புடிக்கத் தேவயில்லை''

`கர்ப்பிணிகளுக்கோ, குழந்தைகளுக்கோ ஏதாவது ஆபத்து என்டு ஈந்தாத்தா நோம்ப உட்டுட்டு கழா செய்ய ஏலும்.'

`சரி சரி நீங்க பிக்ஹ் சட்ட மேதையில்லையா? ஓங்களோட பேசி தப்பேலா.' எனக்கூறி எழும்பிச் சென்றது இவள் கூறியதை ஒப்புக்கொள்வதைப் போலிருந்தது. நஸ்லியா சாப்பிட்டு மேசையை ஒழுங்குபடுத்தி விட்டு சுபஹு தொழுது முடிந்து சற்று கண்ணயரச் சென்றாள்.

``நாளைக்கு நோம்பு இருவதுமாகுது. இன்னும் ஒத்தருக்கும் ஸகாத் கொடுக்கோமில்ல. அத இன்னும் ரெடியாக்கல்லயா?''

``அது நஸ்லியா மொதய மாதிரி இப்ப ஸக்காத்து கொடுக்கிர ஐடியா இல்ல நஸ்லி. எல்லாம் காரணத்தோடதான். இப்ப பாருங்க நாளக்கி எங்கட புள்ள குட்டி எண்டு வாரதற்கு இப்ப ஈந்தே சேக்கனும் தானே. இப்ப எல்லாம் சீரழிச்சிட்டு கெழவனாகின பொறகா தேடுரது. நான் நெனச்சிக்கிறேன் அதுகல பேங்ல போட்டு வைச்சாதான் ஆத்திர அவசரத்துக்கு ஒதவும். எங்களுக்கு சொத்து சொகமண்டு ஈந்தாலும்.. இப்ப பாருங்கலே. ஓங்கட உம்மாக்கு பத்தாயிரம், வாப்பாக்கு பத்தாயிரம். தாத்தாக்கு. தங்கச்சிமார்க்கு எல்லாம் ஒரு அம்பதாயிரமாகும். இத எல்லாம் ஸக்காத்தாத்தான் சேரும். அதபத்தி இப்ப யோசிச்சி டைம் வேஸ்டாக்க தேவல.'

அவனது தத்துவங்கள் முடியும் வரை பொறுத்திருந்தாள் நஸ்லி.

``அப்படி சொல்லாதிங்க ஸகாத் வந்து ஏழைகண்ட சொத்து. அது அவங்களுக்குத் தான் சொந்தம். குர்ஆன்ல அல்லாவே சொல்றான் `சக்காத் கொடுக்காதவர்களுக்கும் மறுமையை நிராகரிக்கின்றவர்களுக்கும் கேடுதான்'' எண்டும் வட்டியை விழுங்குகிறவர்கள் சைத்தான் பிடித்து பித்தம் கொண்டவர்கள் எழும்புவது போலன்றி வேறுவிதமாக மறுமையில் எழுப்பப்பட மாட்டார்கள்.' எண்டு.

``அதும் பரவாயில்ல. நீங்க சொல்ற மாதிரி வட்டியும் ஆகுமானதில்ல. இன்னொரெடத்தில `மத்த மனிதர்களின் பொருளுடன் சேர்த்து (உங்கள் பொருளும்) அதிகப்படுவதற்காக வட்டிக்கு நீங்கள் கொடுக்கும் பொருள் அல்லாஹ்விடத்தில் அதிகப்படுவதில்லை. எனினும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி, ஸகாத்தாக ஏதும் நீங்கள் கொடுத்தாலோ (அது அல்லாஹ்விடத்தில் அதிகப்படும்) இத்தகையோர் தாம் (கூலியை) இரட்டிப்பாக பெறக்கூடியவர்கள்'' என்றுமீக்கி

``அப்ப எப்படி பேங்க்ல பணத்த போடுறது?''

``அதுக்கும் ஐடியா ஈக்கி நஸ்லியா. இந்தப் பணத்த எடுத்து ரெண்டு மாசத்துக்கு பொறவு ஹஜ்ஜுக்குப் போனா இந்த எல்லாப் பாவமும் மன்னிக்கப்படுறதோட முப்பது வயசுலே நாலுமுற ஹஜ்ஜுக்கு போன பேரும் வரும். இன்ஷா அல்லாஹ் ரெண்டு பேருக்கும் பிள்ளயோட போக ஏலும்'' எப்படி ஏண்ட ஐடியா?'' என்றான் பல்லைக் காட்டிக் கொண்டு.

``செய்ர பாவமெல்லாம் செஞ்சிட்டு ஹஜ்ஜுக்கு போய் அதயெல்லாம் அழிச்சிட்டு வாங்கண்டு அல்லா எங்க செல்லீக்கான்? நாம ஏன் பேருக்கும் புகழுக்கும் நன்ம தேடனும் அந்த பணத்த வெச்சி ஊர்ல குடும்பத்துல சமூகத்துல இருக்கிற கொமரு புள்ளகளுக்கு கல்யானம் செஞ்சி வைக்க ஏலுமே? நாம் சேக்கிறது இன்டைக்கு இருக்கும் நாளக்கி செலவழிஞ்சிடும் ஆனா அல்லாஹ்வுக்காக கொடுக்கிற தான தருமங்கள் அதிகமா பெருகிறதோட எங்கட கஷ்ட நஷ்டத்துக்கும் ஏதாவதொரு வழிய யார் மூலமாவது அல்லா அனுப்புவான்'' பொறுமையாக கூறி முடித்தாள் நஸ்லியா.

அனஸின் முகம் கோபத்தால சிவந்தது.

``வந்துட்டாவாம் பெரிய கொதுபா நடத்த. இப்ப நா என்ன செய்யனும்? நா வேர்வ சிந்தி ஹலாலா ஒழச்ச எல்லாம் தண்ணிவாக்க வேனும். ஹஜ் செய்யாம ஓங்கட குடும்பத்துல உள்ள ஏழைகளுக்கு கலியாணம் செஞ்சி வைக்கனும். ஓங்கட ஐடியாவ பத்தி எனக்கா தெறியாது? வேற ஒண்டுமில்ல நான் பேரோடும் புகழோடும் இருக்கிறது ஓங்களுக்கும் ஓங்கட குடும்பத்துக்கும் புடிக்கல. மத்தவங்க தாழ்வா நெனப்பாங்கண்டு பயம். இப்பதான் ஓங்கட வேசம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் வெளிய வருது. ஓங்கள கட்டிட்டு இப்படி அடிம போல இருக்க எனக்கு ஒண்டும்



தலவிதி இல்ல. ஏதோ ஒங்கட அழகுக்கும் ஒழுக்கத்துக்கும் விருப்பப்பட்டு கட்டிக்கிட்டதற்கு எத்தனயோ லச்சம் சீதனத்தோட வீடு தேடி வந்தவங்கள கையுட்டது எண்ட முட்டாள்தனம் எண்டு இப்பதான் புரியிது. இவ்வளவு கசட மனசுல வெச்சிக்கிட்டு நாடகம் நடிச்சே எண்ட அறிவெல்லாம் காலம் கடந்து போச்சி. சே இவ்ளோ நாளும் எல்லாத் திக்கும் தலய ஆட்டிட்டு இருந்திட்டேன். ஆனா இந்த நாடகம் இண்ணயோட முடிய வேணும். இல்லாட்டி என்ன இந்த ரூபத்துல பார்க்க கெடக்காது.'' என கடுமையாக ஏசி விட்டு வேனை எடுத்துக் கொண்டு சென்றான்.

நஸ்லியின் கண்கள் நீரருவிகளாயின. எத்தகய கஷ்டத்திலும் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் இறைவனிடத்தில் உதவி தேடுங்கள். (ஆனால்) நிச்சயமாக இது உள்ளச்ச முடையோருக்கன்றி மற்றோருக்கு மிகக் கடுமையாகவே இருக்கும்.'' எனும் குர்ஆன் வசனம் ஞாபகத்துகு வர கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

அழகுக்கும், அறிவுக்கும், பண்புக்கும் பேர்போன நஸ்லியா ஊர்ப் பாடசாலையிலேயே உயர்தரம் படித்து விட்டு மூன்று வருடங்கள் இஸ்லாம் பாட ஆசிரியையாகவே கடமையாற்றினாள். நஸ்லியாவைப் பற்றி கேள்விப்பட்ட அனஸ், தந்தை சுபைர் ஹாஜியாரையும் கூட்டிச்சென்று பெண் வீட்டாரின் விருப்பத்தைப் பெற்று உடை, நகை எல்லாவற்றையும் மழையாகப் பொழிந்து அவளை அடைந்தான். மருமகளை மகளாகவே பார்த்த சுபைர் ஹாஜியார் திருமணம் முடிந்து நான்கு மாதங்களில் இறையடி சேர்ந்தார். அனஸ் தனது மனைவியை நல்ல முறையில் நடத்துவதில் எந்தக் குறையும் வைக்கவில்லை. அவளது குடும்பத்தாரையும் கவனித்துக் கொண்டான். ஆனால், பணம் சேர்ப்பதிலே கண்ணும் கருத்துமாய் இருந்தான்; சிலவேளைகளில் இஸ்லாமிய வரம்புகளையும் மீறி செயற்பட நேர்ந்த போது நஸ்லியாவின் உபதேசங்கள் நடைமுறைச் சாத்தியமில்லாதது போல அவனுக்குத் தோன்றின; அவனுடைய வியாபார நண்பர்களின் உபதேசங்களுக்கும், அவர்களின் சகவாசத்தால் ஏற்பட்ட கெட்ட பண்புகளுக்கும் மத்தியில் மனைவியின் உபதேசங்கள் தொந்தரவாகவே அமைந்தன.

தற்போது அவள் நிறைமாத கர்ப்பிணி. வேலைக்கு நிறைய பேர் இருந்தாலும் அனஸிற்கு சிரமம் என்பதால் அவளது வீடு செல்லவில்லை. அஸர் தொழுது அவனுக்காக துஆச் செய்துவிட்டு சமையலுக்கு ஆயத்தமானாள். நோன்பு துறப்பதற்காக வந்த அனஸ் அதிக பேச்சின்றி சாதாரணமாக இருந்தான். பின்பும் பலமுறை நஸ்லியா எடுத்துக் கூறியும் பயனேதும் இருக்கவில்லை. அவள் தினமும் தொழுதுவிட்டு பிரார்த்தனை மட்டும் செய்யலானாள். ஏழெட்டு நாட்கள் உருண்டோடின. வைத்தியர் குறிப்பிட்ட திகதியான கடைசி நோன்பன்று அனஸ், நஸ்லியாவை சந்தோஷமாக அழைத்துச் சென்று தனியார் வைத்திய சாலையில் காலையிலே அனுமதித்து விட்டு வந்தான். மதிய நேரம் நஸ்லியாவின் வீட்டில் சமைத்த சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு அவளது உம்மாவையும் அழைத்துச் சென்று நஸ்லியாவுக்கு துணையாய் விட்டுவிட்டு கடைக்குச் சென்றான். மாலை நேரம் கடையிலிருந்து வந்து சிறிது ஓய்வுக்காக சற்றுக் கண்ணயர்ந்தான்.

திடீரென பலத்த காற்று... மூடியிருந்த கதவுகளும், ஜன்னல்களும் திறந்து கொண்டு படீர் படீரென அடித்துக் கொள்ள பேரிடியும், மின்னலும் கண்களையும் காதையும் பறித்துக் கொள்ளப் பார்க்க... ஒருவித அச்சத்துடன் கட்டிலை விட்டு கீழிறங்கியவன் அச்சத்தாலும், பீதியாலும் உறைந்து போனான். இரத்த வெள்ளம், ஏதோ சத்தம்... பாம்பு சீறுமாற்போல... பாம்பேதான்! ஆ! என்ன பெரிய பாம்பு!! வருகிறது... வருகிறது... என்னை நோக்கித்தான் வருகிறது... அருகே வருகிறது... பாய்கிறது... ஆ...! யா அல்லாஹ் என்ன காப்பாத்து நாயனே நா என்ன செஞ்சேன்? ஏ.. எனக்கு இந்த தண்டன? யாருக்கு என்ன அநியாயம் செஞ்சன்? வராத கிட்ட வராதே போ... போ...''

''உஷ்... உஷ்... பேசாதே! நில்; ஓடாதே! பாம்பு பேசியது.. ஏழைகள்ட சொத்த திண்ட ஒடம்ப நா வயிறு நெரய திண்ண வேணும். ரெத்தத்த ருசிக்க வேணும் வட்டி எடுத்த கைய கடிக்க வேணும் தா.. எனக்கு தா... ஒன்னால தப்பவே முடியாது தா... தா''

''யா அல்லா என்ன மன்னிச்சுக்க நாயனே! நா திரும்பவும் செய்ய மாட்டேன் எண்ட உசுர ஒன்டும் செய்யாத''

''அனஸ் தொர என்னாச்சு? என்ன செய்யிது? பேசுங்க''

ரவுப் அப்பாவின் குரல் கேட்டு கண் விழித்த அனஸ் அவரது இருகரங்களையும் வியர்வை சிந்த இறுக்கப் பிடிக்கிறான். கைகள் நடுங்குகிறது..

''என்னாச்சு தொர? என்ன வேணும்?''

அனஸ் தன்னை சுதாகரித்துக் கொண்டு எழும்பி கடிகாரத்தை பார்க்க அது ஆறு பற்களைக் காட்டி சிரித்தது. ஆறு முப்பதுக்கு 'அதான்'. உடனே முகம் கழுவி விட்டு தெளிந்த மனதோடு வர, 'அதான்' ஒலித்தது. நோன்பைத் துறந்து விட்டு தனக்கும் நஸ்லியாவுக்கும் 'துஆ' செய்து விட்டு ம.்ரிப் தொழ பள்ளிக்கு விரைந்தான். தனியார் வங்கியின் முகாமையாளராக இருக்கும். நண்பன் சமீரை சந்தித்து, தான் வங்கியிலிட்டிருக்கும் நான்கு லட்சத்தையும் ஊரில் ஸகாத் சேகரிக்கும் குழுவின் கணக்கில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறி விட்டு, பள்ளி மோதினாரிடம் நாளை காலை ஸகாத் பணம் தருவதாக கூறி விட்டு இஷாவையும் தொழுது முடித்து வீடு சென்றான். எட்டு மணியாகி விட்டது. வீட்டிலுள்ள தொழும் அறையில் அமர்ந்தான்.

''நஸ்லி எனக்காக எவ்வளவு ஏச்சுப் பட்டிருப்பா, மனவேதனை அடைஞ்சிருப்பா அல்லாஹ் அவள பொறுமையின் சின்னமாவே படைச்சிருக்கிறான். அவ, நா சுவர்க்கம் போகவேணும்டு எப்படி மனசுல ஆச வச்சிருப்பா.. ஆனா நான்தா அவள தப்பாப் புரிஞ்சிகிட்டேன். பரவாயில்ல யா அல்லாஹ் நீ என்னை காப்பாதிட்டாய் என் அறியாமைய வெளிச்சமிட்டு காட்டிட்டாய். நஸ்லியா போல ஒரு தங்க மனைவிய அடைய நான் பாக்கியம் செஞ்சிருக்கனும். இப்ப அவள பார்க்க ஒரு புது அனஸா, தீன உணர்ந்த அனஸா போகணும்; நாளைய இஸ்லாமிய சமூகத்துக்கு புத்துயிர் கொடுக்கின்ற ஒரு அனஸாக போகனும் ''யா அல்லாஹ்! நீயே என்றப்பு. உன்னை தவிர வேறு இலாஹ் இல்லை. நீ என்னைப் படைத்தாய். நான் உனது அடிமை. நான் உனக்களித்த வாக்குறுதியின் மீது நிலைத்திருக்கிறேன். என்னால் இயன்றவரை நான் உனக்கு வழிப்படுகிறேன். நான் செய்த தீயசெயல்கள், தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டு உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். மேலும் நான் செய்த பாவங்களை ஒப்புக் கொள்கிறேன். எனவே எனது பாவங்களை மன்னித்தருள் ஏனெனில் உன்னைத் தவிர மன்னிக்கக் கூடியவன் யாருமில்லை''

உளமாற தௌபா செய்து விட்டு வைத்தியசாலைக்குப் புறப்பட்டான். ஊர் பெருநாளை வரவேற்ற வண்ணமிருந்தது.



## ஸஹாபிப் பெண்மணிகள்

~பாதிமா~

# பாதிமா பின்தி அஸத் (ரழியல்லாஹு அன்ஹா)

இஸ்லாமிய வரலாற்றில் 'அஸ்ஸாபிகூன்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் படுகின்ற முதற்தர ஸஹாபியாப் பெண்களில் பாதிமா பின்தி அஸத் ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் ஒருவராவார்கள். 'இரண்டு ஷஹீதுகளின் தாய்' என்று அழைக்கப்படும் இவர்கள் நபி (ﷺ) அவர்களது பாட்டன் மரணித்த தும் நபிகளாரைத் தத்தெடுத்த அபூ தாலிபின் மனைவியுமாவார்கள்.

இவர் நேர்வழி நடந்த கலீபாக்களில் வீரராகவும், அறிஞராகவும் விளங்கிய கலீபா அலீ பின் அபீதாலிப் (رضي الله عنه) அவர்களினதும், வீரத்திலும் பேச்சாற்றலி லும் நட்சத்திரமாக விளங்கிய ஜ.'.பர் பின் அபீதாலிப் (رضي الله عنه) அவர்களினதும் அருமைத் தாயுமாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று குறைஷிக் கோத்திரத்தில் முடிக்குரிய குடும்பமாக கருதப்பட்ட ஹாஷிம் குலத்தில் பிறந்த இவர்கள், குறைஷிகளின் தலைவரான அபூதாலிபைத் திருமணம் செய்து கொண்டு பிரபுத்துவ வாழ்க்கை வாழ்ந்தார்கள். இஸ்லாம் அவர்களுக்குக் கிடைத்ததும் இந்த வானம், பூமி இவற்றைவிட விசாலமான சுவர்க் கத்தை பெற்றுக் கொள்வதற்காக தான் அனுபவித்துக் கொண்டிருந்த அத்தனை சுகத்தையும், கௌரவத்தையும் விட்டுக் கொடுக்கத் தயாரானார்கள்.

இளமைக் காலத்திலேயே நபி (ﷺ) அவர்கள் அநாதையாக ஆகிவிட்ட போது பாட்டனாரான அப்துல் முத்தலிபிடம் வளர்ந்தார்கள். அவர்களும் மரணித்து விட்டபோது அபூதாலிபும் அவரது மனைவியான பாத்திமா பின்தி அஸத் ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் நபி (ﷺ) அவர்களை வளர்க்கும் பொறுப்பை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

அன்னை பாத்திமா பின்த் அஸத் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தனது பிள்ளைகள் அனைவரையும் விட நபி (ﷺ) அவர்கள் மீது அளவுகடந்த பாசம் கொண்டிருந்தார்கள். நபியவர்கள் அன்னை யவர்களை வளர்ப்புத் தாயாகவன்றி தனது தாயாகவே காணுகின்ற அளவு அன்பு கொண்டு அரவணைத்தார்கள்.

நபியவர்களுக்கு கொடுக்கப்பட்ட ரிஸா லத்தை பகிரங்கப்படுத்துமாறு அல்லாஹ்,

**"நபியே உங்களது நெருங்கிய உறவினர்களை எச்சரிக்கை செய்யுங்கள்." (26:214)**

என்ற வசனத்தைக் கொண்டு கட்டளையிட்ட போது நபி (ﷺ) அவர்கள் நெருங்கிய உறவினர்களை அழைத்து தமக்குக் கொடுக்கப்பட்ட ரிஸாலத்தைச் முன்வைத்தார்கள். நபியவர்கள் தங்களது பிரசாரத்தை முடித்துக் கொண்டு, 'இந்தப் புதிய பாதையில் எனக்கு உதவியாக இருப்பது யார்?' என்று வினவியபோது அங்கு மயான அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு 'உங்களோடு நான் இருக்கிறேன்' என்று துணிச்சலோடு கூறிய ஓரிருவருள் இப் பெண்மணியும் ஒருவராவார்.

இதனைத் தொடர்ந்து மக்காவில் ஈமான் கொண்டோருக்கு எதிராக குறைஷியரது அடாவடித்தனமும், அநியாயமும் அதிகரித்து விடவே நபி (ﷺ) அவர்கள் சிலரை ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு ஏவினார்கள். அப்படி ஹிஜ்ரத் சென்றவர் களுக்குத் தலைவராக பாதிமா பின்த் அஸத் ரழியல்லாஹு அவர்களின் மகன் ஜ.'.பர் (رضي الله عنه) அவர்கள் நியமிக்கப்பட அவர்கள் பயணத்திற்குத் தயாராகி தாயின் முன்வந்து நின்றபோது, இஸ்லாத்திற்காக வீட்டையும், உறவினர்களையும், வியாபாரத் தையும் நண்பர்களையும் துறந்து செல்லத் துணிந்துவிட்ட தனது மகனை வாரிய ணைத்து, உற்சாகப்படுத்தி புன்முறுவலோடு அனுப்பி வைத்தார்கள். மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஸஹாபாக்கள் ஹிஜ்ரத் செய்தபோது அன்னையவர்கள் அதனைப் பெரும்பேறாகக் கருதி அனைத்தையும் துறந்து மதீனாவுக்குச் சென்றார்கள்.

நபி (ﷺ) அவர்கள் இப்பெண்மணியை அவர்களது நற்பண்புகளுக்காகவும் தீனுக்கும் அவர்களுக்கும் செய்த தியாகங் களுக்குமாகவும் அதிகம் விரும்புகின்றவர் களாகவும் இருந்தார்கள். நபியவர்கள் தனக்கு வரும் பரிசுப் பொருட்களிலிருந்து ஒரு பகுதியை எப்போதும் இவர்களுக்கு அனுப்பி தனது அன்பைத் தெரிவிப்பவர் களாக இருந்தார்கள். இதற்கு எடுத்துக் காட்டாக ஒரு சம்பவம் பின்வருமாறு:

அலி (ﷺ) அவர்கள் சொல்கிறார்கள்: "ஒருமுறை நபி (ﷺ) அவர்கள் என்னிடம் ஓர் உயர்ந்த பட்டாடையைத் தந்து, 'இதனை பாத்திமாக்களுக் கிடையில் பங்கிட்டுக் கொடுங்கள்' என்று சொன்னார்கள். நான் அதனை நான்காகக கிழித்து பாதிமா பின்தி முஹம்மது, பாதிமா பின்தி அஸத், பாதிமா பின்தி ஹம்ஸா, இன்னொரு பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோ ருக்குக் கொடுத்தேன்." என்றார்கள்.

அலி (رضي الله عنه) அவர்களின் தாயாரான அவர்களுக்கு ஸஹாபிகளிடமும் உயர்ந்த மரியாதை காணப்பட்டது. உஹத் யுத்தத் தின் போது எதிரிகளின் கொடியைத் தாங்கியிருந்த தல்ஹா பின் அபீதல்ஹா என்பவன் அலி (رضي الله عنه) யின் வாள் மூலம் வெட்டுண்ட போது ஹஜ்ஜாஜ் பின் அலாதி அஸ்ஸலமி என்பவர் அன்னையவர் களையே சிலாகித்துப் பாராட்டினார்கள். இச்சம்பவம் சஹாபிகள் இவர்களை எப்படி மதித்தார்கள் என்பதை காட்டுகிறது.

அன்னையவர்கள் மரணித்த போது நபி (ﷺ) அவர்கள், தான் அணியும் மேலங்கியை அவர்களுக்கு அணிவித்து விட்டது மட்டுமன்றி அவர்களை அடக்கம் செய்வதற்காக கப்ரிலே வைக்கப்பட்ட போது சிறிது நேரம் மைய்யித்தோடு கப்ரிலே இருந்துவிட்டு வந்தார்கள். இதனை ஸஹாபிகள் ஆச்சரியமாகப் பார்த்து, 'அல்லாஹ்வின் தூதரே! இதற்கு முன்பு நீங்கள் இப்படி எவருடனும் நடந்து கொள்ளவில்லையே?' என்று வினவ 'அபூ தாலிபுக்குப் பிறகு இவரைவிட எனக்கு உபகாரம் செய்தவர் எவரும் இல்லை. எனவே, சுவர்க்கத்துப் பட்டாடை அணிவிக் கப்பட வேண்டும் என்பதற்காக அவர்க ளுக்கு எனது மேலங்கியை அணிவித்தேன். கப்ரு அவர்களுக்கு மிருதுவானதாக இருக்க வேண்டும் என்பதற்காக சிறிது நேரம் அவர்களது கப்ரிலே இருந்தேன்." என்று பதிலளித்தார்கள்.

**படிப்பினைகள்**

1. சுவர்க்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அந்தஸ்து, கௌரவம், பிரபுத்துவ வாழ்க்கை என்பவற்றைத் தியாகம் செய்தல்.
2. நபி (ﷺ) அவர்கள் மீது பேரன்பு கொள்ளல்.
3. தியாகமும் துணிவும் கொண்ட பிள்ளைகளை வளர்த்து இஸ்லாத்தின் பாதையில் செல்ல உற்சாகமூட்டல்.

# கவிதா பவனம்

பாலஸ்தீனப் போராட்டத்தில் தன் உயர்கவிதா இலக்கியத்தின் மூலம் போராட்ட வீரர்களுக்கு உறுதுணையாக நின்றவர் அபூ ஸல்மா. இந்த நூற்றாண்டின் பாலஸ்தீனத்தின் மிகச் சிறந்த தேசாபிமானி எனப் போற்றப்படும் இவர், 1979ம் ஆண்டு அந்நாட்டின் பெறுமதிமிக்க விருதாகிய Lotus Award ஐ வென்றவர். 1980ம் ஆண்டு தன் 75வது வயதில் இறந்தபோது கூட பலஸ்தீன எழுத்தாளர் மற்றும் பத்திரிகை யூனியனின் தலைவராக இருந்தவர். அவரது 'பிரிவின் பின்னே' என்ற கவிதையை தமிழில் தருகிறார் கெகிராவை ஸஹானா.

## பிரிவின் பின்னே...

என்னை ஏதும் கேட்காதே!
உனக்கு பதில்சொல்லும் சக்தி எனக்கில்லை!
என் அன்னை பூமிக்காய்,
என் அன்பானவர்களுக்காய்,
எந்தளவு நான் அழுது புலம்புகிறேன்
என்பதை சொல்ல என்வசம் சக்தியில்லை
ஆதலினால்
என்னை ஏதும் கேட்காதே

ஒவ்வொரு தடவையும்
தொலைவில் நினைத்தபடி
பலஸ்தீனமே உன் ஒளியை
என்னால் உணர முடிகிறது
இதயம் நொறுங்கி,
ஆத்மா உருகுகிறது
தரையைத் தொட்டுப்போகும்
கடல்களைப் போல
நாம் விட்டு வந்தோம்
முகில் கூட்டங்களாய்
சிதறிச் சிதைந்து போனோம்
உன்னை நேசித்தமையால்
உனக்காய் தாகித்துக் கிடந்தமையால்
ஓ... பலஸ்தீனமே
அழுகைக்கென்றும் உயிர்வதைக்கென்றும்
நாம் பிறப்பெடுத்தவர்களானோம்!
நாம் யாருக்குச் சொந்தமென்று
நீ கேட்டால்
உனக்கு மட்டுமே என்பதை விட
பதிலொன்றுமில்லை
உன் மண்ணிலிருந்து நம் பிரிவே
உன் மண்ணோடு நம்மை நெருக்கமாக்குகிறது

நாம் பூமியில் ஒவ்வொரு பகுதியிலும்
உனக்கான நம் விருப்பத்தை
விதைத்து வைத்திருக்கிறோம்
வில்லாய், அம்பாய் அது முளைக்கும்
நம் கர்வத்தின் மீது கறைபூசி
நம்மை சிதறடித்தாலும், உனைவிட்டு
பிரிந்து போனாலும்
நீ நம் நெஞ்சங்களில் வாழ்கிறாய்
ஆண்டாண்டுகளாய்!
தசாப்தங்களாய்!!

வயதில் சிலர் இளமையாய்
சிலர் நரை மூப்பாய் போனாலும்,
உன் மைதானங்களில்
மீண்டும் நாம் சந்திப்போம்
முழந்தாழிட்டு நாம் முத்தமிடுகிறோம்
உன் மலைகளை!
உன் மண்ணை!!
உன் கூழாங்கற்களை!!!

## எரியும் மனங்கள்

எங்கள் வாழ்வில் வைக்கப்பட்ட தீ
எரியத் தொடங்கி விட்டது
மண்ணாய்ப்போன மனமெல்லாம்
பதவி வேண்டி பாகுபட்டதால்
பார்வையோடிருந்த முஸ்லிம்களின்
அனைத்து கண்களிலும் மண்

கிள்ளி எறியப்பட்டு விட்டது
தேசம் எழுந்த பயணம்

தேகமே எரிந்து விட்டது.
இஸ்லாமிய இதயங்கள்
இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன
இதயமெல்லாம் தீ
எதிர்பார்ப்புகள் அனைத்தும்
எறியப்பட்டு விட்டன,
மகுடத்தின் பெயரான மாமனிதர்
மண்ணறைக்குள்.

சதியரே! நீங்கள் கைகோர்த்ததால் - இன்று
எங்கள் சனம் கைதிக் கூண்டில்
விதைக்கப்பட்டது விதைகள் மட்டுமல்ல;
உயிர்களும் உணர்வுகளும் தான்,
ஈரலிப்பற்ற உங்கள் இதயங்களில்
இனியொரு கொடிமரம் பூக்காது,
உயிர்களை மலிவில் பெற நினைத்தீர்களா?
உங்கள் உயிர்களும் ஒருநாள்
மலிவிலே விற்கப்படும்

கொண்ட மனித மகுடம் இனி
என்று பிரசவமாகும்
ஏக்கத்தால் தேய்ந்து கொண்டிருக்கிறது
எங்கள் பிறை மனங்கள்.

-முஸம்மில், இக்கிரிகொல்லாவ-

**கவிதை நெய்தல் 08 முடிவுகள்**



## முதலிடம் பெற்ற கவிதை

### எனக்கது போதும்

அபீ... நீ எனை சுமக்க
நான் மறை சுமக்க
மறை என் நிலம் சுமக்கத்தான்
என் தலையுருண்டாலும்
என் இடக்கை சுமக்கிறதே
அது மீட்டித்தரட்டுமெனக்கு
தூதர்களை சுமந்த
என் தாய்மடியை, என் மண்ணை
எனக்கது போதும்
உனக்கும் தானே..!

ரஹ்மான் - வரகாபொளை

## இடம்பிடித்த ஏனையவை

### துப்பாக்கி

தேவைதான்; அதுவுனது
தோள்களில் தொங்கட்டும்
வலதாம் கரம்
வேதம் தாங்கினால்
அடுத்த கரம்
அன்பை ஏந்தட்டும்
சொல்லில் மனிதருக்கு
சோபனம் எட்டட்டும்
வம்பரோடு மட்டும்
வேட்டுகள் பேசட்டும்

-அபூ ஒமர் மஹ்மூத்-

### மனித உரிமை மீறல்

'சிறுவர் துஷ்பிரயோகம்'
இனிமேலும் வேண்டாம்
உங்கள் குரல்கள்
இப்பொழுது நாமே எமக்காய்
மறை ஒளியில் ...
அதன் வழியில்...

எம்.ஐ.ஏ. மாலிக் - கேகாலை

### நீ....!

ஒரு
சிட்டுக் குருவிகூட
அந்த யூதனுக்கெதிராய்
குர்ஆனிய எத்தனத்துடன்
ஆயுதமேந்தி
சுட்டெரிக்க தயாராகிறது
நீ....?

மரிக்கார் சேனை -றிஸ்பிகான்

### அபாபீல்

இறகுகள்கூட இன்னும்
இறுகிப் பிணையாத
அபாபீல் சிட்டு....!
இறைமறையும் சிஜ்ஜீலும்
இறகு இடுக்குகளில்
இடுக்கி இயல்கிறது
இஸ்ரேலிய நரிகளின்
இருதயங்களை
கொறித்தெறிவதற்காய்.....!

றிஸ்வி ஸுபைர் - குருணாகல்

### நான் சந்திக்க வேண்டும்

தந்தையே
சுவனம் வேண்டித்தானே
போகிறீர்கள் ...?
கொஞ்சம் இருங்கள்;
நானும் வருகிறேன் கூட
கொஞ்ச நாட்களுக்கு முன்
கயவர்கள் சுவனத்துக்கனுப்பிய
என் பலஸ்தீனச் சோதரனை
நான் சந்திக்க வேண்டும்

பௌஸான்-பலகத்துறை

**கவிதை நெய்தல் 08**



### பிஞ்சின் நெஞ்சுறுதி

புறப்படுங்கள் தந்தையே
உறுதியான ஈமானுடன்
போர்க்களம் நோக்கி
அக்ஸாவை மீட்க
இறையளித்த மறையுண்டு
கரந்தனில்
மறையளித்த போதனையுண்டு
உளமதில்
எதிரிகள் தாக்குமுன்
தூக்கிடுங்கள் என்னை
தாக்கிடத் தயாராகியுள்ளேன்
துப்பாக்கியுடன்

காவத்தமுனை
எஸ். ஐ.எம் முஸ்தின்

### வெற்றி பெறு

இஸ்லாத்தின் இளங்கதிரே!
இடக்கரத்தில் ஆயுதமேந்தி
இறைமறை வலக்கரமேந்தி
இன்னலுடன் செல்லும் நீ
இறைவனுக்காய் போராடு!
ஈருலகில் வெற்றி பெறு!!

றிஸ்வானா மஹ்மூத்
புதிய காத்தான்குடி-3

கவிதை நெய்தலுக்கு
கவிதைகளை தபாலட்டையில்
மட்டும் அனுப்புங்கள் (ஆ-ர்)



## ஆரோக்கிய சந்திப்பு : டொக்டர் எம்.எல்.எம். றயீஸ் (M.B.B.S.)

# ரமழானும் மருத்துவமும்

புனித ரமழான் மீண்டும் எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. ரமழானில் நோன்பாளிகளாக நாம் எடுக்கிற பயிற்சியில் எமது உடலும் உள்ளமும் உயிர்ப்பிக்கப்படுவதை நாங்கள் அறிந்திருக்கிறோம். புனித ரமழானிலே எமது உள்ளத்தில், விஷேடமாக ஆத்மிக உணர்வில் ஏற்படுகின்ற உயர்வை நாம் அனுபவிக்க முடியும்; ஆனால் அளந்து பார்க்க முடியாது. அவ்வாறுதான் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் அளந்து பார்த்து முடித்துவிட முடியாத போதும், எமது உடலில் ஏற்படும் மாற்றங்கள் அண்மைக் காலங்களில் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்த ஒரு விடயமாக இருந்து வருகிறது.

ஓரு நோன்பாளியின் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களை மருத்துவ நோக்கில் ஆராய வேண்டிய ஒரு பெரும் தேவை இருந்து வருகிறது. முன்னேறி வருகின்ற மருத்துவத் துறையில் இந்த விடயம் சம்பந்தமாக செய்யப்பட்ட மருத்துவ ஆராய்ச்சிகள் மற்றைய துறைகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் இஸ்லாமிய உலகில் இருக்கும் மருத்துவர்களின் பங்களிப்பு ஆராய்ச்சித்துறையில் மிகக்குறைவாக இருப்பதேயாகும். கடந்த 10 வருடங்களாக வெளிவந்த மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குள் கொம்பியூட்டர் மூலம் தேடியும் கூட ஒரு சில கட்டுரைகளையே காண முடிந்தது. ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய பல விடயங்கள் இன்னும் அப்படியே இருக்கிறது. அதே நேரம நோன்பு உடலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் சம்பந்தமான சில கேள்விகள் கூட இன்னும் விடையளிக்கப்படாமலே இருக்கின்றன. எனவே, இன்றைய நவீன மருத்துவ உலகுக்கு நோன்பும் அது ஏற்படுத்தும் நன்மைகளும் பற்றி சொல்ல வேண்டிய பெரும் பொறுப்பு இஸ்லாமிய உலகில் வாழும் ஒவ்வொரு மருத்துவருக்கும் உண்டு என்பதை நாங்கள் உணர வேண்டியிருக்கிறது.

எமக்குக் கிடைத்திருக்கும் ஒரு சில மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளை வைத்து நோக்கும்போது நோன்பு நோற்பதால் எந்த விதமான தீங்குகளும் உடலுக்கு இல்லை என்பதையே அவ்வாய்வுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக உடலுக்கு தீங்கான ஓர் அம்சத்தை அல்லாஹ் கடமையாக்கி இருக்க மாட்டான் என்பது எமது நம்பிக்கை. எனவே மருத்துவ ஆராய்ச்சியின் இந்த முடிவு நமக்கு அந்நியமான ஒரு முடிவல்ல.

நோன்பு நோற்பதால் பல நன்மைகள் உடலுக்கு ஏற்படுகின்றன. என்பதை நாம் முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்வோம். ஆனால் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு சடவாத சிந்தனைப் போக்குள்ளவர்களுக்கு எப்படி நன்மை கிடைக்கிறது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டியிருக்கிறது. இதற்காகத்தான் மருத்துவ ஆராய்ச்சிகள் அவசியமாகின்றன.

அண்மையில் நோன்பாளிகளில் செய்யப்பட்ட பல இரத்தப் பரிசோதனைகளின் முடிவுகள் மருத்துவ உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. அதிலும் விசேடமாக கொலஸ்ரோலின் அளவில் ஏற்படும் மாற்றம் முக்கியமானதாகும். கொலஸ்ரோல் உடலில் அதிகரிக்கும்போது அது பல நோய்களை ஏற்படுத்தும் என்பதும் கொலஸ்ரோலின் அளவைக் குறைத்து கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் என்பதும் அனைவரும் அறிந்த ஒரு விடயம். உடலில் கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கும் போது கொலஸ்ரோல் HDL என்ற ஒருவகை கிளைபோ புரோட்டின் மூலம் அகற்றப்படுகிறது. இது உடலில் சாதாரணமாக நடைபெறும் அவசியமான ஒரு மாற்றமாகும். கொலஸ்ரோல் அளவு அதிகம் உள்ளவர்களுக்கு இந்த HDL இன் அளவு குறைவாக இருக்கும். எந்தளவு HDL இரத்தத்தில் அதிகமாக இருக்கிறதோ அந்தளவு அது உடலுக்கு நன்மையைத் தரும் என்பது எல்லா வைத்தியர்களும் அறிந்த ஓர் அடிப்படையான உண்மை. இந்த HDL இன் அளவு நோன்பாளிகளில் நோன்பு நோற்காதவர்களை விட குறிப்பிடத் தக்களவு அதிகமாக இருப்பதாக அந்த மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரை மூலம் அறியக் கிடைக்கிறது. எனவே, கொலஸ்ரோல் இரத்தத்தில் அதிகமாக உள்ளவர்கள் நோன்பு நோற்பதன் மூலம் கொலஸ்ரோலின் அளவை குறைத்துக் கொள்ளலாம் என்பது பலருக்கும் ஒரு நற்செய்தியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. நோன்பு வருவதற்கு முதல் இரத்தத்தில் HDL இன் அளவை பரிசோதித்து மீண்டும் நோன்பு முடிந்த பின் HDL இன் அளவை மீண்டும் ஒருமுறை பார்ப்பதன் மூலம் நீங்களே இதனை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள முடியும். இந்த HDL -கொலஸ்ரோல் பரிசோதனை சாதாரணமாக எல்லா Lab களிலும் செய்து கொள்ள முடியும்.

**நோயாளிகள்**
**நோன்பு நோற்க முடியுமா?**

கடுமையான நோயாளிகளுக்கு நோன்பு நோற்க முடியாமல் இருக்கக் கூடும். இப்படியான நோயாளிகளுக்கு நோன்பு கடமை இல்லை என்பதால் நோய் குணமடைந்ததும் நோன்பை கழா செய்ய முடியும். குணமாக்க முடியாத, சாதாரண நோயாளிகளுக்கு நோன்பு பாரமானதாக இருக்க முடியாது. உதாரணமாக டயபற்றீஸ் போன்ற நோய் உள்ளவர்கள் எந்தப் பாதிப்பும் இல்லாமல் நோன்பு நோற்க முடியும். டயபற்றீஸ் நோயாளிகளுள் மூன்று வகையானவர்கள் இருக்கிறார்கள்:

01. நோயுள்ளவர்கள்; ஆனால் உணவின் மூலம் இரத்தத்தில் சீனியின் (குளுகோஸ்) அளவை கட்டுப்படுத்தி கொள்பவர்கள்: (எந்த விதமான மாத்திரைகளோ, இன்சுலின் ஊசியோ பாவிக்காதவர்கள்)

இப்படியான தரத்தில் உள்ளவர்கள் வழமைபோல் கட்டுப்பாடோடு உணவை உட்கொள்ள முடியும். மாத்திரைகள் பாவிக்க வேண்டிய அவசியமில்லை.

02. நோயுள்ளவர்கள்: மாத்திரைகள் பாவித்து சீனியை கட்டுப்படுத்தி வைப்பவர்கள்:

இவ்வாறானவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு முறை மாத்திரைகள் பாவிப்பவர்களாக இருந்தால் சஹர் நேரத்திலும் நோன்பு துறந்த உடனும் மாத்திரைகள் பாவிப்பதன் மூலம் தொடர்ந்தும் சீனியின் அளவை வழமைபோல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

மூன்று முறை (பகலிலும் சேர்த்து) மாத்திரைகள் பாவிப்பவர்கள் பகலில் குடிக்கின்ற மாத்திரைகளின் அரைவாசியை சஹர் நேரத்தில் குடிக்கும் மாத்திரையோடு சேர்த்தும் மற்றைய அரைவாசியை



நோன்பு துறந்ததன் பின் இரவில் குடிக்கும் மாத்திரையுடன் சேர்த்தும் குடிக்க முடியும். சஹர் மற்றும் நோன்பு துறந்த பின் சாப்பாட்டின் அளவை வழமை போல் எடுத்துக் கொள்ள முடியும்.

3. நோயுற்றவர்கள்; இன்ஸுலின் ஊசி போடுபவர்கள்:

அநேகமாக இன்சுலின் ஊசியை இருமுறை ஏற்றுபவர்களே அதிகமாக இருக்கின்றனர். இவர்கள் ஸஹர் மற்றும் நோன்பு துறக்கும் நேரங்களில் ஊசியேற்றுவதன் மூலம் நோன்புக்கு எந்த பாதிப்பும் இல்லா விட்டாலும் இன்சுலினைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

மூன்று முறை ஊசியேற்றிக் கொள்பவர்கள் பகலில் எடுக்கும் ஊசியின் அளவில் அரைவாசியை சஹருடன் சேர்த்தும் மற்றைய அரைவாசியை நோன்பு திறக்கும் நேரத்துடன் சேர்த்தும் எடுத்துக் கொள்ள முடியும்.

மேலும் குடல்புண் (Peptic Ulcer) போன்ற நோயுள்ளவர்கள் சாப்பிடாமல் விட்டால் வயிறு எரியும் வலியுண்டாகும் என்ற பயத்தில் அடிக்கடி சாப்பிடுவது வழக்கம். இப்படியானவர்கள் நோன்பு பிடிப்பது எப்படி? வலி வராமல் கட்டுப்படுத்துவது எப்படி?

குடல்புண் உள்ளவர்கள் உரிய நேரத்துக்கு சாப்பிடாமல் விட்டால் சாப்பாட்டு நேரத்தில் சுரக்கின்ற HCl (ஐதரோ குளோரிக்) அமிலத் தினால்தான் அநேகமாக எரிவு ஏற்படுகிறது. இந்த அமிலத்தை சுரப்பதில் மூளையின் பங்களிப்பு மிக அதிகமாக இருக்கிறது. ஒரு நோன்பாளியைப் பொறுத்தவரை ஸஹர் செய்தபின் மீண்டும் நோன்பு துறக்கும் வரை எந்த விதமான உணவும் இரைப்பைக்கு வரமாட்டாது என்பதை ஏற்கெனவே அறிவித்தி ருப்பதால் மூளையின் கட்டுப்பாட்டில் இருக்கும் இரைப்பையின் அமிலச் சுரப்பிகள் அமிலத்தை சுரக்காது. எனவே வயிற்று எரிவு ஏற்படாது. குடல் புண் குணமடைவதிலும் பாதிப்பு ஏற்படாது. எனவே, gastritis மற்றும் குடல்புண் உள்ளவர்கள் எந்தவிதமான பயமும் இன்றி நோன்பு நோற்க முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதனுக்கு நோயைக் கொடுப்பதும் அதனை குணமாக்குவதும் முற்றுமுழுதாக அலலாஹ்வின் நாட்டத்தில் இருக்கின்ற ஓர் அம்சமாக இருப்பதால் நோன்புக்குப் பயந்து நோன்பு நோற்காது இருப்பதை தவிர்த்து நோன்பு நோற்று நோய் குணமடைய அல்லாஹ்விடம் இப்புனித மாதத்தில் 'துஆ' கேட்பதுதான் நோயற்ற சுகமான வாழ்வு வாழ எமக்கிருக்கும் ஒரேயொரு வழியாகும்.

## மீடியா வொட்ச்

# இஸ்லாத்தில் கௌரவக் கொலை?

தினக்குரல் (29-10-2000). ''வார வசந்தம்'' இணைப்பிதழ் பக்கம் 26 இல் வெளியான, ''கௌரவக் கொலைகள்'' எனும் தலைப்பிலான செய்தித் துணுக்கு வாசகர்களின் இரத்தத்தை உறைய வைத்திருக்கும் அச்செய்தியின் சுருக்கம் பின்வருமாறு:

1. ஜோர்டானைச் சேர்ந்த 12 வயது சிறுமியொருத்தி, தன் சக தோழிகளுடன் ஊர்சுற்றச் சென்றதற்காக, அவளது தந்தை பொல்லாலும் சங்கிலியாலும் அடித்து, அவளைக் கொன்றான்.

2. ஜோர்டானைச் சேர்ந்த ஹானா எனும் 34 வயது பெண், கிறிஸ்தவ வாலிபரொருவரை திருமணஞ் செய்து கொண்டதற்காக, அவளது தமையன், அவளைக் கொன்றான்.

3. இவ்வாறாக, ஓர் ஆண்டுக்கு 20-30 வரையிலான கௌரவக் கொலைகள் இடம்பெறுகின்றன.

எழுந்தமானமாக நோக்கும்போது இச்செய்தி முஸ்லிம் வாசகர் மனங்களில் கனத்த சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அருவருப்பான இவ் உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மத்திய கிழக்கு உள்ளிட்ட பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இக்கௌரவக் கொலைகள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. எனவே நமது வாசகர்கள் இது விடயத்தில் உணர வேண்டியதும், பிறருக்கு உணர்த்த வேண்டிய உண்மையும் யாதெனில், இக்கொடுமை இஸ்லாமிய மார்க்க அனுஷ்டானமோ சமய சடங்கோ அல்ல என்பதும், கௌரவத்துக்காக கொலை செய்வதை தடுத்த பெருமை இஸ்லாத்தையே சாரும் என்பதுமாகும்.

இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அரேபியர் பெண் சிசுவை உயிருடன் புதைத்தனர், அக்கால (ப் பிரிவிலும் இன்றும் கூட) ''இந்து சமய'' கைம்பெண்களை ''உடன் கட்டை'' ஏற்றினர். இவை வெளிப்படையான கௌரவக் கொலையின் வகைகளாகும். மறுபுறத்தில், உலகின் முதலாவது 'தொழில்' (Profession) விபச்சாரம் என ஆரம்பித்து நவீன தொடர்பூடகங்களில் பெண்ணை வெறும் சந்தைப் பொருளாக சித்தரிப்பது வரை தொடருவது, மறைமுகமான கௌரவக் கொலைகளே. இவ்வகை கொலைகளில் ஆணின் பால்நிலை (Gender) கௌரவத்தைக் காப்பதற்காக பெண்ணின் தன்மானம் கொலை செய்யப்படுகிறது. அங்கே உடல் எரிகிறது; அனுதாபமாவது எஞ்சுகிறது. இங்கே உடல் கருகுவதில்லை; ஆனால் ஆத்மாவின் சாம்பல் கூட மிஞ்சுவதில்லை.

புனித இஸ்லாம் பெண் சிசுக் கொலையை தடுத்து, விதவா விவாகத்தை ஊக்குவித்து வளர்த்தது. குடும்ப - குல கொளரவ(த்தை பெருமையாகவும், அடுத்தவரை இழிவுபடுத்தியும்) பேசுவதை இறைவனுக்கு இணைவைக்கும் (பாவ மீட்சியே இல்லாத) பெரும் பாவமென்றது. பெண்ணுக்குரிய கௌரவத்தை இறைத்தூதரின் நிதர்சன வாழ்க்கையின் மூலம் உண்மைப்படுத்தியும் வைத்தது.

இன்று நாகரிகத்தின் உச்சத்தில் வாழும் நாடுகளில் பணக்கார, மேட்டுக்குடி பெண்ணொருத்தியும் ஏழை, கீழ்ஜாதி வாலிபனொருவனும் உயிருக்குயிராய் நேசிப்பதாக பெரியவர்கள் கேள்விப்பட்டவுடன் அடியாட்களை அனுப்பி அடித்து கொலை செய்வது தனது மகளையோ சகோதரியையோ அல்ல; ஏழை வாலிபனைத்தான். அந்த வகையில் தனது குடும்ப கௌரவத்துக்காக தன் இனத்தவளை கொன்று விடுவது கொஞ்சம் உசத்தி. எனினும் கௌரவக் கொலைகளை நியாயப்படுத்துகிறோம் என்பது இதன் கருத்தல்ல.

ஏனெனில் இஸ்லாம் தடுத்த ஒரு விடயம் எதுவாயினும் தடுக்கப்பட வேண்டியதே; அதை யார் செய்தாலும் மறுக்கப்பட வேண்டியதே.

A. M. ஹிஷாம் ஹுஸைன், புத்தளம்

## ரமழானும் நாமும (தொடர்ச்சி)



உணவுப் பொருட்களை இஃதிகாப் இருக்கும் இடத்துக்கு வருவித்துக் கொள்ள வேண்டும். அந்த இடத்திலேயே உறங்க வேண்டும். அதிகமான நேரத்தை நபிலான வணக்கம் மற்றும் திக்ருகளில் கழிக்க வேண்டும். இஃதிகாப் இருக்கும் போது பேசக் கூடாது என்று சொல்வது தவறாகும். தேவையான நல்ல பேச்சுக்களை பேசலாம். இஃதிகாப் இருந்து கொண்டே வீட்டின் வேலைகளை செய்யும்படி ஏவலாம்.

அன்னை ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**"நபி (ﷺ) அவர்கள் ரமழானின் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருப்பவர்களாக இருந்தார்கள். இது அல்லாஹ் அவர்களை மரணிக்க செய்யும் வரை தொடர்ந்தது. அவர்களுக்குப் பின் அவர்களின் மனைவிமார்களும் இஃதிகாப் இருந்தார்கள்"** (புகாரி, முஸ்லிம்)

**7. ஸஹர், இப்தார் நேரங்களை சிறப்பாக்கிக் கொள்ளுதல்:**

**"நீங்கள் சஹர் செய்யுங்கள், நிச்சயமாக சஹர் உணவில் அதிகமான பரகத் உள்ளன"** (புகாரி, முஸ்லிம்)

**"நமது நோன்பிற்கும் வேதக்காரர்களின் நோன்பிற்கும் இடையிலான வேறுபாடாகிறது, சஹர் உணவு உட்கொள்வதாகும்."** (முஸ்லிம்)

நபி (ﷺ) அவர்கள் இரவின் கடைசி நேரத்தில் சஹர் செய்வார்கள். பஜ்ர் உதயமாவதை அஞ்சவில்லை என்றால் சஹரைப் பிற்படுத்துவது சிறந்தது. நோன்பு துறப்பதை முற்படுத்திக் கொள்ள வேண்டும். மஃரிபுக்கான அதான் கேட்டதும் அசட்டையோடு இருக்காமல் நோன்பு துறக்க முற்பட வேண்டும். அல்லாஹ் தஆலா கூறுவதாக நபி (ﷺ) அவர்கள் கூறுகிறார்கள்:

**"நோன்பை விரைந்து திறப்பவரே என் அடியார்களில் எனக்கு பிரியமானவர்."** (திர்மிதி)

நாம் இப்தாருக்குரிய நேரங்களில் நண்பர்கள், அயலவர்கள், வழிப்போக்கர்கள், எளியவர்களை கூட்டி வந்து அவர்கள் நோன்பு துறப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதன் மூலம் சிறப்பித்துக் கொள்ளலாம்.

**"ரமழானில் ஒருவன் ஒரு நோன்பாளிக்கு நோன்பு துறக்க வசதி செய்து கொடுத்தால் அவனது குற்றங்களுக்கு மன்னிப்பும், நரகத்திலிருந்து அவனுக்கு விடுதலையும் கொடுக்கப்படும். அந்த நோன்பாளிக்கு கிடைப்பது போன்ற நற்கூலி அதிலிருந்து கொஞ்சமும் குறையாமல் அவனுக்கு கிடைக்கும"** (முஸ்லிம்)

நோன்பு துறக்கும் இப்தார் வேளையில் எமது பிரார்த்தனைகளை தனித் தனியாக அவரவர் கேட்டுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த நேரத்தில் நோன்பாளியின் துஆக்கள் எவ்விதத் திரையுமின்றி ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. துஆவில் சுவர்க்கத்தை தரும் படியும் நரகை விட்டும் பாதுகாப்பையும் கேட்டு இறைஞ்சலாம். அத்தோடு எமது வேறு தேவைகளையும் அல்லாஹ்விடம் முறையிடலாம்.

ஆகவே நன்மைகளை அதிகமதிகம் அறுவடை செய்து கொள்ளும் இந்த ரமழான் மாதத்தை சமையல், தையல் என்ற ஏனைய வேலைகளின் பேரில் வீணாக்கி விடாதீர்கள். சமையலில் அதிக நேரத்தை செலவிடாதீர்கள். பெருநாளுக்கான ஆயத்தங்களை முன்கூட்டியே தயார் படுத்தி வையுங்கள். ஆனால் நரகின் கொடூரங்களிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளக் கூடிய ரமழானின் இறுதி பத்துக்களை பெருநாளின் பெயரால் நாசப்படுத்தி விடாதீர்கள்.

பெருநாள் கொண்டாடுவதும் சுன்னத்தான அமல்தான். எனினும் இப்பெருநாளை கொண்டாடுவதற்காக உங்களுக்கு கிடைத்திருக்கும் பொன்னான பொழுதுகளை வீணாக்கி விடாதீர்கள். ஏனென்றால் இந்நாட்களில் நீங்கள் செலவிடும் ஒவ்வொரு வினாடியுமே அல்லாஹ்விடத்தில் பெறுமதியானதாக இருக்கிறது.

இந்த ரமழான் எம்மை விட்டு விடை பெற்றால் இனி அடுத்த ரமழானை சந்திப்போமா என்ற நம்பிக்கை எமக்குமில்லை. எனவே கிடைக்கப்பெற்ற ரமழானை பயன் மிக்கதாக ஆக்குவோம். நோன்பு நோற்பதால் எம்மில் சில உடல் உறுப்புகள் ஓய்வு பெறுகின்றன. இதனால் மிக இலகுவாக உள்ளத்துக்கு தேவையான ஆன்மிகப் பயிற்சியினை சிறப்புற வழங்கலாம். எனவே இந்த ரமழானுக்கு பொருத்தமான முறையில் விடைகொடுத்து அல்லாஹ்வின் சுவனபதிகளில் ரய்யான் எனும் சுவன வாசலினூடாக நுழையும் பாக்கியத்தை பெறுவோமாக!

## வருக ரமழானே வருக!

பசித்திருக்க
தனித்திருக்க
விழித்திருக்க
நோன்பாளி எனும் பதவி ஏற்க
ரமழானே
உனை அழைக்கிறேன்

தீயதைக் காணாது
கண்களுக்கு விரதம்
தீயதைக் கேட்காது
செவிகளுக்கு விரதம்
தீயதை நாடாது
உள்ளத்துக்கு விரதம்
தீயதற்காய் நடக்காது
கால்களுக்கு விரதம்

மொத்தத்தில் தீமை விட்டு
முஸ்லிமுக்கு விரதம்
முழுவதற்கும் விரதம் காண
விரைந்து வந்திடு ரமழானே!

மூடியிருந்த மஸ்ஜிதுகள்
முழுநாளும் திறக்கட்டும்
தூசு படிந்த திருமறைகள்
துப்பரவு பெறட்டும்
மூடிய இல்லக் கதவுகள்
ஸகாத் எனும் கரத்தால்
திறக்கட்டும்
இன்னுமின்னும்
நன்மைகள் பெருக
ஊரெல்லாம் உத்தமம் மணக்க
தக்வாவினால்
உள்ளங்கள் சிறக்க
நின்று வணங்கி
இரவுகள் ஒளிர

வருக ரமழானே வருக
வாழ்த்துக் கூறி
உனை வரவேற்கிறேன்
வருக ரமழானே வருக!

**எம்.எம்.எஸ். அஸ்மியா**
**பலந்தொட்ட**

பூமியில் கண்ணியத்தோடு வாழ வேண்டிய இஸ்லாமிய சமூகம் பொருளாதார ரீதியில் வீழ்ச்சி அடைவதை இஸ்லாம் விரும்பவில்லை. எனவேதான் வறுமையைப் போக்குவதற்கான பல ஏற்பாடுகளையும், நிறுவனங்களையும் அது முன்வைக்கிறது. தங்கம், வெள்ளி, புதையல், கனிப்பொருட்கள், விளைச்சல், கால்நடைகள், தேன், வருமானம் ஈட்டித் தருகின்ற பெறுமதி அதிகரித்து செல்லும் கட்டிடங்கள் போன்றவற்றில் கட்டாய வரி (ஸகாத்) மற்றும் பொருளால் அல்லது ரமழான் தர்மம் (ஸகாதுல் பித்ர்), குற்றப் பரிகாரமாக ஏழைகளுக்கு உணவளித்தல் (கப்பாரா), நஷ்டஈடு வழங்கல் (பித்யா) போன்றவற்றை விதியாக்கி மேலதிக தர்மங்கள் (சதகா), சன்மானங்கள் (ஹதியா) போன்றவற்றை வழங்குவதில் ஆசையூட்டி வறுமையை போக்க அது முனைகிறது.

4. தகுதியுள்ள அனைவரும் இவற்றை கடமையுணர்வோடும், சமூக உணர்வோடும் நிறைவேற்றாமை.

5. இவற்றை நிறைவேற்றும் ஒரு சிலரும் கூட தம்மை நாடி வருவோருடன் தமது தர்ம சிந்தையை சுருக்கிக் கொள்ளல். ஏழைகளைத் தேடிச் சென்று வழங்காமை.

6. பொதுவாக முஸ்லிம்களுக்கு ஆடம்பரத் தேவைகள் அதிகரித்திருப்பதாலும், உலோபித்தனம் ஆதிக்கம் செலுத்துவதாலும் தர்மம் செய்யும் மனோநிலையில் கோளாறு ஏற்பட்டுள்ளமை.

எனவே வறியவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் விடயத்தில் ஸகாத் பெரும் பங்களிப்பு செலுத்தும் அதேவேளை ஸகாத்துல் பித்ர் அதைவிட சற்றுக் குறைந்தளவில் பங்களிப்பு செலுத்தினாலும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் முழுப் பயன்பாட்டைப் பெறுவதற்கு அதை

அதற்குப் பின்னர் நிறைவேற்றினால் சதகாவாக கணிக்கப்படும்."

(அபூதாவூத், இப்னுமாஜா)

ஸகாத்துல் பித்ர் விதியாக்கப் பட்டதற்கான இரண்டு நோக்கங்கள் இந்த ஹதீஸில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன:

1. ஏழைகளுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல். இது பித்ராவை பெறுபவருடன் தொடர்புள்ள நோக்கமாகும். உண்மையில் எமது நாட்டில் முஸ்லிம் ஏழைகள், கூலி வேலை செய்து குடும்பம் நடாத்தும் வறியவர்கள், தொழிலாளர் வர்க்கத்தினர் போன்றோர் நிம்மதியாக நோன்பு நோற்க வேண்டுமானால் ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு போதிய உணவு கிடைக்க வேண்டும். ஸகாத்துல் பித்ர் அவர்களின் இத்தேவையை நிறைவு செய்ய முடியும். அவர்கள் சந்தோஷமாக திருநாளைக் கொண்டாட வேண்டுமானால் திருப்தியாக நோன்பு நோற்றிருக்க வேண்டும். அத்தோடு உணவு, உடை, பலகாரம் தயார்படுத்தல், தூரத்தில் வாழும் உறவினர்கள் ஒன்றிணைந்து ஐக்கியத்தோடு இத்திருநாளை கொண்டாடுதல் போன்ற தேவைகளை நிறைவு செய்வதற்கும் பெருநாள் தினத்துக்கு முன்னர் ஸகாத்துல் பித்ர் தானியமாகவோ, பணமாகவோ கிடைத்து விட வேண்டும்.

# ஸகாதுல் பித்ரா:

அபூ நஹ்ஜான்

# ரமழானின் ஆரம்பம் முதல்!

இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாமிய அரசுகள் குர்ஆனும் சுன்னாவும் முன்வைக்கும் வறுமை ஒழிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக ஏழைகள் அரிதான இஸ்லாமிய சமூகம் உருவானது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஸகாத், ஸகாதுல் பித்ர் என்பன பூரணமாக நடைமுறையில் இல்லாததனால் முஸ்லிம் ஏழைகள் வீடுவீடாக சென்று பித்ரா தருமாறு கையேந்தித் திரியும் நிலை வருடா வருடம் அதிகரிப்பதையே அவதானிக்க முடிகிறது. இதற்கு பின்வருவன காரணங்களாக இருக்கலாம்:

1. முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள ஏழைகளின் துயர்துடைக்க அல்லாஹ்விடமிருந்து செல்வத்தை பெற்ற செல்வந்தர்கள் முன்வராமை.

2. நிருவாக சபைகள் ஸகாத், ஸகாத்துல் பித்ர் என்பவற்றை வசூலித்து விநியோகிக்க முயற்சி எடுக்காமை.

3. வடக்கிலிருந்தும், கிழக்கின் சில பிரதேசங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் விதமாக செல்வந்தர்களும், அரசியல் வாதிகளும் 10 வருடகாலமாக உரிய நடவடிக்கை எடுக்காமை.

ரமழானின் ஆரம்பம் முதல் வழங்குவதே பொருத்தமாகும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஒன்றில்,

**"நபி (ﷺ) அவர்கள் திராட்சை, கோதுமை என்பவற்றில் இருந்து ஒரு ஸாஃ (2751g) அளவை முஸ்லிம்களிலுள்ள ஒவ்வொரு சுதந்திரமுள்ளவன், அடிமை, ஆண், பெண், கிழவர், பெரியவர் மீதும் ரமழான் தர்மமாக (ஸகாத்துல் பித்ரை) விதியாக்கினார்கள்."**

(புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸில் ரமழான் மாதத்தின் ஒரு குறிப்பிட்ட காலம் வரையறைத்து கூறப்படவில்லை.

அதேபோல் இப்னு அப்பாஸ் (ﷺ) அறிவிக்கும் கூற்றும் மேற்படி கருத்தை உறுதி செய்கிறது:

''நோன்பாளியின் நோன்பு இரு தவறுகளிலிருந்து தூய்மையடையவும் ஏழைகள் நோன்பு நோற்கவும், பெருநாள் கொண்டாடவும் வசதியை ஏற்படுத்தவுமே நபி (ﷺ) அவர்கள் இதனை விதியாக்கினார்கள். தொழுகைக்கு முன் இதனை நிறைவேற்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஸகாதுல் பித்ராவாக கருதப்படும்.

2. ஸகாதுல் பித்ர் வழங்குபவரின் நோன்புகள் அதன் மூலம் தூய்மை பெறுகின்றன. இது பித்ரா வழங்குவதுடன் தெடர்புள்ள நோக்கமாகும். நோன்புகள் முடிவடைந்ததன் பிறகே அவற்றிலுள்ள குறைகளை அகற்றி தூய்மையாக்க முடியும் என்ற சிந்தனை இருக்குமானால் பெருநாள் தினம் தொழுகைக்கு முன் இதனை கொடுப்பது முறையானது எனத் தோன்றலாம். ஆனால் நோன்புகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு முன்னர் இதனை வழங்கினால் பின்னர் நோற்கப்படும் நோன்புகளின் குறைகளை நீக்கமாட்டாது எனவும் கூற முடியாது. எனவே ரமழானின் ஆரம்பத்திலோ, இடையிலோ, இறுதியிலோ அதனை நிறைவேற்றினாலும் நோக்கம் நிறைவேறலாம்.

இந்த ஹதீஸ் குறிப்பிடும் அடுத்த விடயமும் இக்கருத்துக்கு வலுவூட்டுவதாகவே அமைந்துள்ளது. அதாவது பெருநாள் தொழுகைக்கு முன் இதனை நிறைவேற்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஸகாத் பித்ராவாக கருதப்படும். அவ்வாறாயின் பெருநாள் தொழுகைக்கு முன் ரமழானின் எத்தினத்திலும் அதனைக் கொடுப்பது தவறல்ல என்பதையே இது உணர்த்துகிறது.

அப்துல்லாஹ் பின் ஸ.'.லப் (ﷺ) அறிவிக்கும் ஹதீஸும் இக்கருத்துக்கு துணைநிற்கிறது.

**“பெருநாள் தினத்திற்கு முன்னைய தினம் அல்லது அதற்கு முன்னைய தினம் நபியவர்கள் பிரசங்கம் நிகழ்த்தும்போது, சோளம், கோதுமை, திராட்சை, வாற் கோதுமை என்பவற்றிலிருந்து ஒரு ஸா.'. (2751g) அளவு ஸகாதுல் பித்ர் நிறைவேற்றுவது ஒவ்வொரு சுதந்திர முள்ளவர், அடிமை, சிறியவர், பெரியவர் (என அனைவர்) மீதும் கடமையாகும் எனக் கூறினார்கள்”**

**(அப்துர் ரஸ்ஸாக், அபூதாவூத்)**

இந்த ஹதீஸில் பெருநாளைக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னா ஸகாதுல் பித்ரை நிறைவேற்றுமாறு நபி (ﷺ) அவர்கள் ஏவியுள்ளமை ரமழானின் எல்லா நாட்க ளிலும் நிறைவேற்றலாம் என்பதையே உணர்த்துகிறது. இந்த ஹதீஸை ஆதார மாகக் கொள்ளும் ஹன்பலி, மாலிக் மத்ஹப் இமாம்கள்,

*‘பெருநாள் தினத்திற்கு முன்னைய இரண்டு தினங்களுக்குள் அதனை நிறை வேற்றிவிட வேண்டும். இதனை விட காலத்தால் முற்படுத்துவது கூடாது’* எனவும் கருதுகின்றனர்.

அவர்களின் இத்தீர்ப்பு அவர்கள் வாழ்ந்த சமூக சூழலைக் கருத்திற் கொண்டமைந் திருந்ததால் அன்றைய முஸ்லிம்கள் அதனை ஏற்று நடந்தார்கள்.

‘பித்ர்’ எனும் அறபுச் சொல் நோன்பு முடிவடைவதைக் குறிக்கும். நோன்பு திறப்பதை ‘இப்தார்’ என அழைக்கிறோம். ஒவ்வொரு நாளும் சூரியனின் மறைவோடு நோன்பும் முடிவடைகிறது. அதேபோல் அனைத்து நோன்புகளும் முடிவுறும் தினத்தை ‘ஈதுல் பித்ர்’ பெருநாள் தினம் என அழைக்கிறோம். எனவே இவ்வார்த்தை குறிக்கும் இரு கருத்துகளிலும் ஸகாதுல் பித்ரை அணுகுவதே பொருத்தமாகும். இதனால்தான் ஷாபிஈ மத்ஹப் இமாம்கள் ரமழான் ஆரம்பத்தில் இருந்து ஸகாதுல் பித்ரை நிறைவேற்றலாம் எனும் கருத்தை முன்வைத்தனர்.

உண்மையில் ஸகாதுல் பித்ர் கடமை யாகும் நேரம் பெருநாள் தினம் பஜ்ர் உதயத்திலிருந்து பெருநாள் தொழுகை நிறைவேறும் வரையுள்ள குறுகிய காலப் பகுதியாகும். ஹனபி மத்ஹப் இமாம்கள் ஸகாதுல் பித்ர் கொடுப்பதை வாஜிப் என குறிப்பிடுகின்றனர். அவர்களிடம் வாஜிப் என்பது பர்ழ், சுன்னத் என்பவற்றுக்கு இடைப்பட்ட ஒரு தீர்ப்பாகும். வாஜிப் அதற்குரிய நேரத்திற்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்றப்படலாம் என்ற கருத்தின் அடிப்படையில் ஸகாதுல் பித்ரையும் ரமழான் பூராவும் நிறைவேற்று வதோடு ரமழானுக்கு முன்னரும், பெருநாள் கழிந்தும் நிறைவேற்றலாம் எனும் மிக இலகுவான தீர்ப்பை முன் வைக்கின்றனர். ஒருவரின் பணம் நிஸாபை அடைந்த பின் அவர் பல வருடங்கள் ஸகாத்தை கொடுக்காமல் இருந்தால் அவர் மீதுள்ள கடமை அதை கொடுக்கும் வரை நீங்காது எனும் கருத்துடன் ஒப்பிட்டு ஸகாதுல் பித்ருக்கும் அதே தீர்ப்பை குறிப்பிடுகின்றனர். இந்தளவு முற்படுத்து வதிலும் பிற்படுத்துவதிலும் ஒருவித தாராளத் தன்மை இன்று அவசியப்படா விட்டாலும் ரமழானின் ஆரம்பத்திலிருந்து இந்தக் கடமையை நிறைவேற்றி விடுவது போதுமானதாகும்.

நபி (ﷺ) அவர்கள் ஒரு பெருநாளில் பின்வருமாறு கூறினார்கள்:

**“இது போன்ற தினங்களில் முஸ்லிம்கள் கையேந்தாதளவு வசதியை ஏற்படுத்தி விடுங்கள்.”**

உண்மையில் பெருநாளில் முஸ்லிம்கள் கையேந்தாமல் இருக்க வேண்டுமென்றால் அதற்கு முன்னைய தினங்களில் ஸகாதுல் பித்ரா, ஸதகா போன்ற தர்மங்களை வழங்கிவிட வேண்டும். பூலோகக் கிராம மாகியுள்ள இன்றைய உலகில் செல்வந்த இஸ்லாமிய நாடுகளில் அறவிடப்படும் ஸகாத்துல் பித்ர் எளிய மக்கள் வாழும் நாடுகளுக்கு அனுப்பப்படும் நிலையும் உருவாகியுள்ளது. நீண்டகால யுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள காஷ்மீர், செச்னியா, பலஸ்தீன், பொஸ்னியா, பிலிபைன்ஸ், ஆப்கானிஸ்தான் மற்றும் ஆபிரிக்க நாடுக ளுக்கும் பித்ராக்களை அனுப்ப வேண்டிய சூழ்நிலை இன்று உருவாகியுள்ளது. அதனை பெருநாளில் இக்குறுகிய நேரத்தில் அறவிட்டு விநியோகிப்பதும், அதை பெறுப வர்கள் அந்நாளில் பயனடைவதும் அசாத்திய மாகும். ரமழான் ஆரம்பத்தில் இருந்து அதனை அறவிட்டாலேயே உரிய முறையில் விநியோகிக்க இலகுவாக இருக்கும்.

ஸல்மான் பாரிஸீ (ﷺ) அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸின் தொடரில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது:

**“ஷ.'.பான் மாதத்தின் கடைசித் திகதியில் நபி (ﷺ) அவர்கள் ஆற்றிய உரையில், ‘அது (ரமழான் மாதம்) பொறுமையின் மாதமாகும்; பொறுமையின் கூலி சுவனமாகும்; மேலும் அது சமுதா யத்தில் உள்ள ஏழைகள் மீதும் (பொரு ளாதார ரீதியிலும், வேறு வகையிலும்) அனுதாபமும், பரிவும் செலுத்த வேண்டிய மாதமாகும்.’ என்று கூறினார்கள்”**

**(மிஷ்காத்)**

ஸகாதுல் பித்ர், ஸதகாக்கள், சன்மானங்கள் என்பவற்றின் மூலம் ரமழான் மாதம் பூராவும் பரிவுகாட்டுமாறு நபியவர்கள் பொதுவாக இந்த ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்கள்.

நபி (ﷺ) அவர்கள் பஜ்ர் உதயத்திற் கும் பெருநாள் தொழுகைக்கும் இடையில் ஸகாத்துல் பித்ரை நிறைவேற்றுவதோடு சஹாபிகளுக்கும் கட்டளையிடுவார்கள் என ஹதீஸ்கள் குறிப்பிடுவது முற்றிலும் உண்மையாகும்.

நபி (ﷺ) அவர்களின் காலத்தில் இக்குறுகிய நேரத்தில் ஸகாத்துல் பித்ர் அதைப் பெறத்தகுதியுள்ள அனைவருக் கும் மிக இலகுவாக சென்றடைவதற்கு பின்வருவன காரணங்களாக அமைந்தன:

1. சிறியதொரு சமூகம் காணப்பட்டமை
2. அவர்கள் அனைவரும் தம்மிடையே அறிமுகமாயிருந்தமை.
3. தேவையுள்ளவர்களை அனைவரும் நன்கு அறிந்திருந்தமை.
4. அவர்களின் வீடுகள் மிக நெருக்கமாக அமைந்திருந்தமை.
5. ஒரே தலைமைக்கு கட்டுப்பட்டு துரிதமாக இயங்கும் மனிதர்களாக சஹாபிகள் காணப்பட்டமை. இது போன்ற கட்டளைகள் சஹாபிகளின் கட்டுப்படும் மனோநிலைக்கு சோதனை யாகவும் அமைந்தன.

உண்மையில் ஹிஜ்ரி 2ம் ஆண்டுதான் ஸகாதுல் பித்ர் கடமையானது. இது கடமையாகிய ஆரம்ப கட்டத்தில் இந்நிலை இருந்தாலும் பின்னைய காலத்தில் இஸ்லாமிய சமூகம் விரிவடைய ஆரம்பித்த போது பெருநாளிற்கு முன்னைய இரு தினங்களுள் அதை நிறைவேற்றி விடுமாறு நபியவர்கள் பகிரங்கமாக அறிவித்தார்கள். அதற்கும் சஹாபிகள் கட்டுப்பட்டார்கள். ஸஹாபிகளின் காலத் திலும் இதே தீர்ப்பே நடைமுறையில் இருந்தது. இதற்கு பின்வருவன காரணங்களாகும்:

1. இஸ்லாமிய சமூகம் சற்று விரிவடைந்தமை
2. வீடுகள் தூரமானமை
3. குடிமக்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்தமை
4. சில புதிய இனங்கள் இஸ்லாத்தில் நுழைந்தமை
4. ஏழைகளைக் கண்டறிய போதியளவு நேரம் தேவைப்பட்டமை
5. போக்குவரத்திற்குக் காலம் தேவைப் பட்டமை
6. கட்டுப்படும் மனப்பான்மையைப் பேண வேண்டிய தேவை இருந்தமை

(50ம் பக்கம் பார்க்க)

# சட்டத்துறை வளர்ச்சியில் இஜ்திஹாதின் பங்கு (கடந்த இதழ் தொடர்)

இஸ்லாம் A/L

### ஸஹாபிகள் காலம் தொடர்கிறது...

இக்காலப் பிரிவின் ஆரம்பப் பகுதியில் பெரும்பான்மை சஹாபிகள் மதீனாவில் வாழ்ந்தனர். இதனால் அபூபக்ர் (رضي الله عنه), உமர் (رضي الله عنه) ஆகியோரின் காலப்பகுதியில் சட்டத்துறை ஒன்றியம் அமைக்கப் பட்டிருந்தது. இவ்வாறான கூட்டு இஜ்திஹாத் மூலம் ஏகோபித்த (இஜ்மா) தீர்வுகள் வெளிவந்திருந்தன.

குறித்த பிரச்சினைக்கான தீர்வு அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றில் தெளிவாக காணப்படாவிட்டால், இவர்கள் அவ்வொன்றியத்தைக் கூட்டி அவர்களுடன் சேர்ந்து தீர்வுகாண முயற்சிப்பார்கள். உமர் (رضي الله عنه) அவர்கள் எப்போதும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றில் தீர்வு கிடைக்காவிட்டால் அபூபக்ர் (رضي الله عنه) அவர்களால் எடுக்கப்பட்ட தீர்வுகள் ஏதாவது இருக்கின்றனவா என தேடுவார்கள். அதிலும் காணப்படா விட்டால் இஜ்திஹாதின் பணியை மேற்கொள்வார்கள். இம்முறையை இவர்கள் பின்பற்றியமையால், நாட்டில் சட்டப் பிரச்சினைகள் பூதாகரமாகி, கருத்து வேறுபாடுகள் உருவாகி பிளவுகள் ஏற்படவில்லை.

ஆனால் முஸ்லிம்கள் தூர நாடுகளைக் கைப்பற்றிய பின்னர், மதீனாவில் இருந்த சஹாபிகள் பல நாடுகளுக்கும் பிரிந்து சென்று தமது பணியைத் தொடர்ந்தனர். என்றாலும் இவர்கள் தனித்தனியாக தீர்வுகளை முன்வைக்கும் நிலை உருவாகி ஒரே விடயத்தில் பல தீர்ப்புகள் வெளிவர ஆரம்பித்தன. இது தனிநபர் இஜ்திஹாத் என அழைக்கப்படுகிறது. வித்தியாசமான இஜ்திஹாத் முடிவுகள் வெளிவர பின்வருவன காரணங்களாக அமைந்தன:

1. அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகளைக் கொண்டுள்ள 'ழன்னி' யான (ظني) சொற்களும், வசனங்களும் இருந்தமை.
2. சுன்னா பூரணமாக நூலுருப் பெறாததால் ஒரு பிரதேசத்தில் வசித்த சஹாபிக்குத் தெரிந்திருந்த ஹதீஸ்கள் சிலவேளை ஏனையோருக்கு தெரியாமல் இருந்தமை.
3. அவர்கள் வாழ்ந்த பிரதேச, சூழல், அப்பிரதேச மக்களின் பிரச்சினைகள், அபிலாஷைகள் போன்றவை வித்தியாசமாக அமைந்தமை. தீர்ப்பு வழங்கும்போது மக்களும் கவனத்திற் கொள்ளப்படுவது பிரதானமாக இருந்தது.

இக்காரணங்களினால் அவர்களது இஜ்திஹாத் முடிவுகள் வித்தியாசமாக அமைந்தாலும் அவர்களது அறிவுக்கேற்ற வகையில் பொருத்தமான ஆதாரங்களை தமது தீர்வுகளுக்கு முன்வைத்துள்ளனர். தமது இச்சையின் அடிப்படையில் யாரும் தீர்ப்புக் கூறவில்லை.

இவ்வாறு இஸ்லாமிய ஆட்சிப் பிரதேசங்களில் இஜ்திஹாத் பணி மும்முரமாக நடைபெற்றதன் காரணமாக பிற்காலத்தில் தோன்றிய இமாம்கள், அப்பிரதேசங்களில் தமக்கென ஒரு பாதையையும், அடிப்படைகளையும் தெரிவுசெய்து கொள்ள இலகுவாக இருந்தது. இந்த வகையில் இஜ்திஹாத் அடிப்படையில் மத்ஹபுகள் தோற்றம் பெற இஜ்திஹாதின் அடிப்படையிலான கருவை சஹாபாக்களே விதைத்தார்கள் எனலாம்.

அஷ்ஷெய்க்
T.M. நிலாம் இஸ்லாஹி B.A. (Cey)

**மதீனாவில்:** 4 கலீபாக்கள், சைத் பின் தாபித், உபை பின் க.்.ப், அப்துல்லாஹ் பின் உமர், ஆயிஷா (رضي الله عنها) ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டனர்.
**மக்காவில்:** அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (رضي الله عنه) அவர்களின் சட்டக்கல்லூரி இயங்கி வந்தது.
**கூபாவில்:** அலீ, இப்னு மஸ்ஊத் (رضي الله عنه) இத்துறையில் பணியாற்றினர்.
**பஸராவில்:** அனஸ் பின் மாலிக், அபூ முஸா அல்அஷ்அரீ (رضي الله عنه)
**சிரியாவில்:** முஆத் பின் ஜபல், உப்பாதா இப்னு ஸாமித் (رضي الله عنه)
**எகிப்தில்** அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (رضي الله عنه) ஆகியோரும் இத்துறையில் ஈடுபட்டனர்.

இவர்களைத்தவிர மேலும் 130 க்கும் அதிகமான சஹாபிகள் இப்பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

### சஹாபிகள் கால சட்டமூலாதாரங்கள்

1. அல் குர் ஆன் 2. அஸ் ஸுன் னா
3. சஹாபிகளின் இஜ்திஹாத்

அல்குர்ஆன் சுன்னா என்பன தீர்வுகளை முன்வைக்காத விடயங்களில் இஜ்திஹாத் மேற்கொள்வதற்கு 2 பிரதான ஆதாரங்களை கொண்டிருந்தனர்:

அ) வஹி இறங்காதபோது இறைதூதர் (ﷺ) அவர்கள், சுய இஜ்திஹாத் கலந்தாலோசனை (கூட்டு இஜ்திஹாத்) மூலம் தீர்வு கண்டமை.

அ) சட்டத் தீர்ப்புகளுக்கு அல்குர்ஆன் முன்வைக்கும் காரணங்கள் மனித நலனைக் கருத்தில் கொண்டுள்ளன. எனவே மனிதநலன் எனும் நோக்கின் அடிப்படையில், இஜ்திஹாத் மூலம் தீர்வு காணுவது தவறல்ல எனும் சிந்தனைப் போக்கு.

இக்காலத்தில் அல்குர்ஆன் முழுவதும் எழுத்துருவில் காணப்பட்டது. அபூபக்ர் (رضي الله عنه) காலத்தில் முழுக் குர்ஆனும் தொகுக்கப்பட்டது. இக்காலத்திலும் சுன்னா தொகுக்கப்படாததன் காரணமாக ஷரீஅத் துறையில் ஈடுபட்ட சஹாபிகள், ஹதீஸ்களை ஏற்பதில் மிக எச்சரிக்கையாகவும் பேணுதலாகவும் நடந்து கொண்டார்கள்.

- ஒருவர் அறிவித்த ஹதீஸை மற்றொருவர் உறுதி செய்யும் வரை அபூபக்கர் (رضي الله عنه) ஏற்கத் தயங்கினார்கள்.
- ராவி தனது அறிவுப்புக்கான சாட்சிகளையோ, ஆதாரங்களையோ கொண்டு வரும் வரை உமர் (رضي الله عنه) அதனை ஏற்கவில்லை.
- ராவி, தான் கூறும் ஹதீஸ் உண்மையானது என சத்தியமிட்டுக் கூறினால் மாத்திரமே ஏற்பார்கள்.

ஏனைய சஹாபிகளும், இவர்களைப் போலவே இவ்விடயத்தில் மிகப் பேணுதலுடன் நடந்து கொண்டுள்ளனர். எனவே ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வதற்கே இவ்வாறான கடினமான நடைமுறைகளைக் கையாண்ட ஸஹாபிகள், தாம் இஜ்திஹாத் மேற்கொண்டபோது எவ்வளவு அதிகமான பேணுதலுடன் செயற்பட்டிருப்பார்கள் என ஊகிக்க முடியும்.

### இக்காலம் விட்டுச் சென்ற சட்டவாக்க சுவடுகள்

1. அல்குர்ஆன் அஸ்ஸுன்னா என்பவற்றின் சட்ட வசனங்களுக்கான விளக்கங்கள்.

2 சஹாபாக்களின் இஜ்திஹாத் தீர்ப்புகள்

**கிலாபத்திற்கான கட்சி மோதலின் விளைவாக சட்டவாக்கத் துறையில் பின்வரும் மூன்று வித்தியாசமான அணுகுமுறைகள் தோன்றின:**

அலி (رضي الله عنه) அவர்களின் ஆதரவாளர்களுக்கும், முஆவியா (رضي الله عنه) அவர்களின் ஆதரவாளர்களுக்குமிடையில் நடைபெற்ற யுத்தம் காரணமாக பின்வரும் மூன்று பிரிவுகள் தோன்றின. அல்குர்ஆன் அஸ்ஸுன்னா இஜ்திஹாத் என்பனவற்றில் இப்பிரிவுகளின் வித்தியாசமான அணுகுமுறை காரணமாக மூன்றுவித மத்ஹபுகள் தோன்றின.

**1. கவாரிஜ்கள்:**

இவர்கள் அலி (رضي الله عنه) உஸ்மான் (رضي الله عنه) முஆவியா (رضي الله عنه) ஆகியோரையும், இவர்களது ஆதரவாளர்களையும் காபிர்கள் எனக் கூறி மூவரையும் கொலைசெய்வது கடமை என வாதிட்டனர். கிலாபத்திற்கு தகுதியானவரை தேர்தல் மூலம் தெரிவு செய்ய வேண்டும் என்பது இவர்களது அடிப்படைகளுள் ஒன்றாகும். சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியது; மனிதர்கள், சட்டவாக்கத் துறையில் ஈடுபட அனுமதியில்லை எனக் கூறி இஜ்திஹாதை முற்றாக நிராகரித்தனர்.

**2. ஷியாக்கள்:**

அலி (رضي الله عنه) அவர்களையும், அவரது குடும்பத்தவர்களையும் ஆதரித்த இவர்கள பெரும்பான்மை சஹாபிகள் அறிவித்த ஹதீஸ்களையும், அவர்களது கருத்துக்களையும் ஏற்க மறுத்தனர். ஆகவே ஏராளமான ஹதீஸ்களைப் புனைந்துரைத்ததுடன், சஹீஹான ஹதீஸ்களுக்கு தமது கொள்கைக்கு சார்பான விளக்கங்களை அளித்தனர். இவர்கள் இஜ்திஹாத் துறையில் எல்லை மீறிச் சென்றனர்.

**3. சுன்னத் வல் ஜமாஅத்:**

நடுநிலையான சரியான பாதையைப் பின்பற்றியவர்கள்; இஸ்லாமிய அகீதாவில் உடன்பட்டவர்கள்; ஏனைய முஸ்லிம்களை காபிர்கள் என கூறாதவர்கள். கலிமாவுடன் மரணித்த மனிதன் எப்போதாவது சுவனம் நுழைவான் எனக் கூறுபவர்கள்; கலிமா சொன்னவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் என மதிப்பளிப்பவர்கள். நம்பத் தகுந்தவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வார்கள்; எந்தவொரு நபித்தோழரையும் இவர்கள் தரக்குறைவாகக் கருதுவதில்லை. மாறாக உயர்ந்த மதிப்புக் கொடுத்து நோக்கினார்கள். முஸ்லிம்கள் மத்தியில் பிரச்சினைகள் தோன்றினால் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றின் அடிப்படையில் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வார்கள். இந்நிலைப்பாடு காரணமாக இவர்களது தீர்ப்புகள் ஷியாக்கள், கவாரிஜ்கள் ஆகியோரின் பல பிழையான தீர்ப்புகளுக்கு முரணாக அமைந்தன.

**இமாம்கள் (முஜ்தஹித்கள்) காலம்**

இக்காலம் ஹி 2ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஹி 4ம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை தொடர்கிறது. கிட்டத்தட்ட 250 வருட கால நீண்ட காலப்பிரிவை இது உள்ளடக்கியது. இஸ்லாமிய சட்டக் கலையின் பொற்காலம் என இக்காலம் வர்ணிக்கப்படுகிறது. இக்காலத்தில் சட்டக் கலையின் இரண்டாவது மூலாதாரமான சுன்னா ஒன்றுதிரட்டப்பட்டு நூலுருப்பெற்றது. சஹாபிகள், தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள் ஆகியோரின் மார்க்கத் தீர்ப்புகளும், அல்குர்ஆன் விளக்கங்களும் எழுத்துருப் பெற்றன. அதே நேரம் உஸூலுல் பிக்ஹ் சம்பந்தமான நூல்களும் தோன்றின. இப்பெரும் வளர்ச்சிக்கு பின்வருவன காரணங்களாக அமைந்தன:

அ) இஸ்லாமிய அரசு கிழக்கே சீனா முதல் மேற்கே ஸ்பெய்ன் வரை விரிவடைந்தது. அந்த நாடுகளையும், மக்களையும், ஆள்வதற்கு அப்பிரதேச கவர்னர்களுக்கும், நீதிபதிகளுக்கும் சட்டங்கள் தேவைப்பட்டன. எனவே நாட்டின் பொது நலன்கள், மக்களின் தேவைகள், என்பவற்றிற்கேற்ப இஸ்லாமிய ஷரீஆவின மூலாதாரங்களுக்கும், அதன் உயிரோட்டத்திற்கும் முரணில்லாமல் முஜ்தஹித்கள் சட்டங்களை உருவாக்க முயற்சித்தனர். இஸ்லாமிய அரசின் விரிவாக்கம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் இஜ்திஹாதின் அவசியத்தைத் தூண்டியது எனலாம்.

ஆ) சட்டத்துறையில் ஈடுபடுவதற்கு ஓரளவு இலகுவான சூழலை அவர்கள் கண்டார்கள். அல்குர்ஆன், அஸ்ஸுன்னா சஹாபிகளின் கருத்துக்கள் போன்றவை ஒழுங்காக நூலுருவில் காணப்பட்டன. அனைவரும் பெற்றுக் கொள்ளும் விதமாக இவை பரவலாக காணப்பட்டன. இஜ்திஹாத் துறையில் ஈடுபட்ட இமாம்களான மாலிக், அஹ்மத் போன்றவர்கள் ஹதீஸ்களை எழுதும் துறையிலும் கூடிய கவனம் செலுத்தினர். இதன் விளைவாக இமாம் மாலிகின் முவத்தா, இமாம் அஹ்மதின் முஸ்னத் அஹ்மத் போன்ற ஹதீஸ் நூல்கள் வெளிவந்தன.

இ) அக்கால முஸ்லிம்கள் தமது நம்பிக்கைகள், வணக்க வழிபாடுகள், வியாபார நடவடிக்கைகள், உடன்படிக்கைகள், போராட்டங்கள் உட்பட எல்லா நடவடிக்கைகளும் இஸ்லாமிய ஷரீஆவிற்கேற்ப அமைய வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தனர். கொள்கைப் பிடிப்பும், இஸ்லாமிய உணர்வுள்ளவர்களாகவும் இருந்தமையால் வேறு எந்தவொரு கொள்கையும் தம்மை ஆளவிடாமல் மிகவும் எச்சரிக்கையோடு வாழ்ந்தார்கள். எனவே, தம்வாழ்வில பிரச்சினைகளை சந்திக்கும்போது நீதியான, தீர்க்கமான முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இஸ்லாமிய அறிஞர்களையும், சட்ட மேதைகளையும் அணுகி தெளிவு பெறும் நடைமுறையைப் பின்பற்றினார்கள். நாட்டின் ஆட்சியாளர்கள், நீதிபதிகள் பொதுமக்கள் என எப்போதும் மக்கள் அந்த இமாம்களை சூழ்ந்து நிற்பர். எனவே பல தரப்பினரதும் பிரச்சினைகள் இனங்கண்டு தீர்ப்பு வழங்க வேண்டிய நிர்ப்பந்த சூழல் உருவானது.

ஈ) இக்காலப் பிரிவில் இஜ்திஹாத் மேற்கொள்ளும் திறனுள்ளவர்களை அல்லாஹ் உருவாக்கினான். இமாம்களான அபூ ஹனீபா, மாலிக், ஷாபிஈ, அஹ்மத் மற்றும் இவர்களது மாணவர்கள் போன்றோரிடம் இத்துறை சார்ந்த திறன் இருந்தது. அத்தோடு தமது திறன்களை வளர்ப்பதற்கான சிறந்த சூழலும் அமைந்திருந்தது.

**சட்டத்துறையில் இக்காலம் பதித்த சுவடுகள்**

அ) அல்குர்ஆன், அஸ்ஸுன்னா இஜ்மாஉ உட்பட கியாஸ், இஸ்திஹ்ஸான் போன்ற இஜ்திஹாத் அடிப்படையிலான பல சட்ட மூலாதாரங்கள் உருவாயின.

ஆ) ஸஹீஹான ஹதீஸ்கள் உள்ளடங்கிய அல்முவத்தா, புகாரி, முஸ்லிம் போன்ற ஹதீஸ் நூல்கள் வெளிவந்தமை.

இ) சட்டத்துறையும், சட்டங்களும், பதியப்பட்டன. மத்ஹபுகள் தோன்றின. சமகாலப் பிரச்சினைகளுக்கு மாத்திரமன்றி எதிர்காலப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் எழுதப்பட்டன. மத்ஹபுகளின் அடிப்படையில் பல சட்டத்துறை நூல்கள் எழுதப்பட்டன. இமாம் அபூ ஹனீபாவின் (ரஹ்) தீர்ப்புகள் உள்ளடக்கிய 'ழாஹிருல் ரிவாயா அஸ் ஸித்தா' எனும் நூலை இமாம் முஹம்மத் பின் ஹஸன் (ரஹ்) அவர்கள் எழுதினார்கள். இதே தீர்ப்புகள் இமாம் ஹாகிம் ஷஹீத் (ரஹ்) எழுதிய கிதாபுல் காபியிலும் உள்ளடங்கியுள்ளன. இமாம் மாலிக் (ரஹ்) வின் தீர்ப்புக்களை இமாம் ஸஹ்னூன் (ரஹ்) தொகுத்து அல்முவத்தா எனும் பெயரில் வெளியிட்டார்கள். இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் எகிப்தில் கற்பித்த பாடங்கள் 'அல்உம்மு' எனும் பெயரில் வெளிவந்தது. மத்ஹபுகள் சார்ந்த இத்தகைய பல நூல்கள் இக்காலப் பகுதியில் வெளிவந்தன.

ஈ) உஸூலுல் பிக்ஹ் நூல்கள் எழுதப்படல். இஜ்திஹாத் மேற்கொள்வதற்கான அடிப்படைகள் இவற்றில் இடம்பெற்றன. எல்லா இமாம்களும் தமக்கென தனியான அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டனர். இமாம் மாலிக் (ரஹ்) தனது அல்முவத்தா எனும் நூலின் பல பாடங்களில் இடைக்கிடையே தனது அடிப்படைகள் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். இமாமவர்கள் இத்துறையில்

(50ம் பக்கம் பார்க்க)

# பதினைந்து வருடத் திட்டத்தின் வெற்றியே பத்ர்!

-அபூ அம்மார்-

**பத்ர்** என்றவுடனே 313 நிராயுதபாணிகள் பலம்கொண்ட 1000 இராணுவத் துருப்புக்களை வெற்றிவாகை சூடிய வீர வரலாறுதான் நினைவுக்கு வருகிறது முஸ்லிம்கள் பத்ரை பார்க்கும் ஒரு மகத்துவமான பார்வை இது. இது தவறல்ல; எனினும் பத்ரோடு பார்வையை நிறுத்தி விடாமல் அதற்கு முற்பட்ட பதினைந்து வருடங்களையும் சேர்த்துப் பார்த்தால் வெற்றியின் இரகசியங்கள் எங்கே இருக்கின்றன என்பதனை நன்கு புரிந்து கொள்ளலாம். பத்ரை புரிந்து கொள்வதற்கு இன்றியமையாத பார்வை அது.

பத்ரை ஏன் இவ்வாறு நோக்க வேண்டுமெனின் பலருக்கு பத்ரின் வெற்றியிலிருக்கும் கவர்ச்சி, அதுவரை நபிகளாரும் நபித்தோழர்களும் வெற்றிக்காக சமைத்து வந்த பாதையில் இல்லை. எனவே பாதை சமைக்காமலே வெற்றி பெறலாம் என்று பலர் கனவு காண்கிறார்கள். கனவு இல்லாதவர்களைவிட இவர்கள் எவ்வளவோ மேல்... என்றாலும், வெற்றிகள் வானத்திலிருந்து வருவதில்லை என்ற பாடத்தை நாம் படிக்க வேண்டும். வெற்றிகள் வானத்திலிருந்து தானாக வருவதில்லை; ஆனால் வரவழைக்கப்படலாம். நபிகளாரும் நபித்தோழர்களும் எடுத்துக் கொண்ட பதினைந்து வருட முயற்சியின் பயனாகவே பத்ர் வெற்றி வரவழைக்கப்பட்டது. அது தானாக வந்து விடவில்லை

பத்ர் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் உதவி செய்தான். மலக்குகளும் முஸ்லிம்களுடன் சேர்ந்து போரிட்டார்கள்; எதிரிகளை துவம்சம் செய்தார்கள். பத்ரில் முஸ்லிம்களுக்கு உதவி செய்த அல்லாஹ்வும், முஸ்லிம்களோடிணைந்து போரிட்ட மலக்குகளும் அதற்கு முந்திய பதினைந்து வருடங்களில் இல்லாதிருக்கவில்லை. அவ்வாறாயின், அதுவரை அல்லாஹ்வின் உதவி ஏன் முஸ்லிம்களுக்கு வராமலிருந்தது? பதினைந்து வருடங்களுக்குப் பிறகு பத்ரில் அல்லாஹ் மலக்குகளை அனுப்பி முஸ்லிம்களுக்கு உதவக் காரணமென்ன?

**“ஒவ்வொன்றும் அவனிடம் ஒரு திட்டத்தின்படியே இயங்குகிறது”**

அல்லாஹ்வின் படைப்பு, பராமரிப்பு பாதுகாப்பு, வழிகாட்டல், வழிதவறச் செய்தல், தீர்ப்பு வழங்குதல், தண்டித்தல் யாவும் சீரிய திட்டத்துக்குட்பட்டவைகளாகவே இருக்கின்றன. திட்டங்களைத் தீட்டி செயற்பட வேண்டிய அவசியம் இல்லாதிருந்த போதும் அல்லாஹ் ஒரு திட்டத்தினூடாகவே செயலாற்றுகிறான். தன்னை மனிதர்களுக்கு அறிமுகம் செய்து வைத்திருப்பதும் அத்திட்டத்தினூடாகவே.

அவன் வானங்களையும் பூமியையும் ஓர் அழகான திட்டமிடலின் கீழ் படைத்து தனது வல்லமையை பறைசாற்றினான். அதன்மூலம் அவன் தன்னை மனிதர்களுக்கு அறிமுகம் செய்து கொண்டான். அதுபோல மற்றுமோர் அழகான திட்டத்தின் கீழ் அந்த மனித சமுதாயத்தை வழி நடத்துகிறான். அதன்மூலம் இந்த மனிதர்களுக்கு தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான்.

அந்த திட்டத்தின் ஒரு கட்டமே பத்ர்!

‘பத்ர்’ ஒரு தற்செயலான நிகழ்வல்ல; எதிர்பாராமல் நடந்த வெற்றியுமல்ல; இன்று வரை உலகம் அதிசயிக்கும் ஒரு மகத்தான திட்டத்தின் வெற்றியே ‘பத்ர்’!

பத்ர், அல்லாஹ்வின் தூதர் மதீனாவில் காலடி எடுத்து வைத்த இரண்டாவது வருடத்தின் மிகப் பாரிய நிகழ்வாகும். அதற்கு சற்றேறக் குறைய பத்து வருடங்களுக்கு முன் அண்ணலார் மக்காவில் இருக்கின்ற வேளையில், உரோமர்களுக்கும் பாரசீகர்களுக்குமிடையே ஒரு யுத்தம் ஏற்படுகிறது. உரோமர்கள் அந்த யுத்தத்தில் தோற்கடிக்கப்படுகிறார்கள். வேதத்தை உடையவர்களான உரோமர்களின் தோல்வி அண்ணலாரின் எதிரிகளுக்கு மகிழ்ச்சியை தருகிறது. அவர்கள் அண்ணலாரைப் பார்த்துக் கூறுகிறார்கள்: ‘முஹம்மதே எமக்கும் உமக்குமிடையில் ஒரு போர் ஏற்படுமாயின் நிச்சயமாக நாங்கள் உம்மைத் தோற்கடிப்போம். பாரசீகர்கள் வேதத்தையுடைய உரோமர்களை தோற்கடித்ததைப்போல...’

எதிரிகளின் இந்த இறுமாப்புக்கு அல்லாஹ் பதில் கூறுகிறான்:

**“அலிஃப்லாம்மீம். (மக்காவுக்கு) சமீபமான பூமியில் உரோமர்கள் தோல்வியை தழுவியிருக்கிறார்கள். இன்னும் ஒரு சில வருடங்களில் இந்தத் தோல்விக்கு பின்னர் நிச்சயம் அவர்கள் வெற்றி பெறுவார்கள். அவ்வாறே அல்லாஹ்வின் உதவி, (யால் கிடைக்கும் வெற்றி) காரணமாக மகிழ்ச்சியடைவார்கள். இனியும் இதற்கு முன்பும் (கருமங்களை திட்டமிடும்) வல்லமை அவனைச் சார்ந்ததே. அவன் நாடியவர்களுக்கு உதவி செய்வான். அவன் கருணையும், நினைத்ததை சாதிக்கும் வல்லமையும் கொண்டவன்”**

**(ஸூரது ரூம் 1:5)**

இந்த முன்னறிவிப்பின் பத்தாவது வருடம்... ஆம்! பத்ரில் முஸ்லிம்கள் எதிரிகளை வெற்றிகொள்கிறார்கள்; முஸ்லிம்கள் மகிழ்வுறுகிறார்கள் முஷ்ரிக்குகள் இரு தரப்பிலும் மீளாத்துயருக்கு ஆளாகிறார்கள்; திட்டம் நிறைவேறுகிறது; சத்தியம் வெற்றியீட்டுகிறது; பத்து வருடங்களுக்கு முன்னால் ஒரு வெற்றிக்கு கட்டியங்கூற, அதன் திட்டக் கருத்தாவினால் தான் முடியும். உலகில் இரு வெவ்வேறு நிகழ்வுகளை இணைத்து, முன்னறிவிப்புச் செய்யும் ஆற்றல், இந்த உலகை முழுமையாக தனது திட்டத்தில் நிருவகிப்பவனுக்கு மட்டுமே இருக்க முடியும்.

இந்த உலகம், மனித வாழ்வு அனைத்தும் ஒரு நுட்பமான திட்டத்தின்கீழ் நகர்ந்து கொண்டிருக்கிறது. அது இந்த உலகத்தையும் மனித வாழ்வையும் படைத்தவனின் திட்டமாகும். இந்த திட்டத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியாது. வாழ்க்கையின் வெறும் நிகழ்வுகளை மட்டுமே கண்டுகொள்ள முடியும். அதன் விளைவாக அல்லாஹ்வையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பத்ர் இந்த உண்மையை உணர்த்தும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். 313

முஸ்லிம்களையும் 1000 முஷ்ரிக்கு களையும் அல்லாஹ் உதவிக்கு அனுப்பி வைத்த மலக்குகளையும் மட்டும் வைத்து பத்ரைப் பார்ப்போருக்கு அது ஓர் அதிசய நிகழ்வேயன்றி வேறில்லை. இவர்களது பார்வையில் பத்ர் மூஸா (ﷺ) அவர்களது 'தடியை' அல்லது சாலிஹ் (ﷺ) அவர் களது 'ஒட்டகத்தை' ஒத்ததாகும். இவற் றைப் பார்த்து அல்லாஹ் 'ஆகட்டும்' என்று கூறுவான்; இவை ஆகிவிடும். எப்படி ஆகியது என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே தெரியும்; எங்களுக்கு தெரியாது.

ஏனெனில் இத்தகைய நிகழ்வுகள் ஒரு திட்டத்துக்கு உட்பட்டவைகள் அல்ல. ஒரு சூலிலிருந்து பத்து மாதங்களாக வளர்ச்சியடையும் கரு ஒட்டகையாக உரு வெடுப்பது அழகியதொரு திட்டம். கற பாறைக்குள்ளிருந்து சாலிஹ் (ﷺ) அவர் களது ஒட்டகம் வெளிப்படுவது அதிசயம்.

பத்ர் ஓர் அதிசயம் அல்ல; அது நிர்தர்சனம். அது 'ஆகட்டும்' என்ற வார்த்தை யால் ஆக்கப்பட்டது அல்ல. அந்த வார்த் தையின் சொந்தக்காரனால் வழிநடாத்தப் பட்ட அழகியதொரு திட்டம். 'அற்புதம்' மீண்டும் நிகழ்வதில்லை; ஆனால் திட்டம் மீண்டும் அமுல்செய்யப்படலாம். பத்ரை அற்புதமாகப் பார்ப்பவர்கள் அதிசயித்து விட்டுப் போவார்கள்; அழகியதொரு திட்ட மாகக் காண்பவர்கள் அதனை மீண்டும் செயற்படுத்த முயல்வார்கள். பத்ர் முகட் டைப் பிளந்து கொண்டு வந்து கண்ணெ திரே நின்ற அவதாரமல்ல; பதினைந்து வருடங்களாக அல்லாஹ்வின் தூதரும் அன்னாரின் தோழர்களும் ஓயாது ஓடி ஒருங்கே அடைந்து கொண்ட வெற்றிக் கம்பமாகும். நாமும் ஓடினால் அந்த வெற்றிக் கம்பத்தை அடைவதொன்றும் சிரமமான தல்ல. முதலில் ஓடுவதற்கு பாதை வேண்டும்; ஓடவேண்டிய இலக்கைத் தீர்மானிக்க வேண்டும்; நாம் தற்போது ஓடுகின்ற பாதையையும் மாற்றியமைக்க வேண்டும்.

**''நீங்கள் எங்கே ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்?'' (18:26)**

பத்ர் 15 வருட வரலாற்றின் ஒரு மைல்கல் என்பதை பார்த்தோம். அந்த வரலாறு இதோ!

கொலை, கொள்ளை பெண் அடிமைத் துவம், மது, சூது, விபசாரம், வறுமை, கோத்திர பூசல்கள், அடிமை வியாபாரம், சிசுக் கொலை, பிரபுத்துவம், பொருளாதார சீர்கேடுகள், வழிப்பறிக் கொள்ளையும் மரண அச்சுறுத்தலும் நிறைந்த சூழல், என்று அழுகிப் போயிருந்த ஒரு சமூகத்தில் நபி (ﷺ) அவர்களின் வருகை அமைகிறது. அல்லாஹ்வின் திட்டமும் ஆரம்பமாகிறது.

அந்தத் திட்டத்தின முதல் கட்டம், முதல் நாற்பது வருடங்களாகும். இந்த காலத்தில் 'முஹம்மத்' என்னும் மனிதர் உருவாக்கப்படுகிறார்.

நபிமார்களைத் தவிர உலகில் தோன்றிய சீர்திருத்தவாதிகள், சமுதாய தலைவர்களை நோக்கினால் அவர்களது ஆரம்பகால வாழ்க்கை சமுதாயச் சாக்கடைகளின் அசுத்தங்களால் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதற்கு முற்றிலும் மாற்றமாக முழுவதுமே அசுத்தமான ஒரு சூழலில் நபி (ﷺ) அவர்கள் வளர்கிறார்கள்; ஆனால், அந்த அசுத்தங்களின் தாக்கங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். ஒரு நோக்கமும் மாற்றமான திட்டமும் இருந் திருந்தால் ஒரு அனாதையின் வாழ்வு இவ்வளவு தூரம் நுட்பமாக பாதுகாக்கப் பட்டிருக்க முடியாது.

எடுத்துக் காட்டாக ஒரு சம்பவம்: ஒரு திருமண வீட்டில் நடனமும் ஆடல் பாடல்களும் இடம்பெறுகின்றன. சிறுவர் சிறுமியர் விநோதம் காண அங்கே குழுமி யிருந்தார்கள். நபிகளாரும் அப்போது ஒரு சிறுவர். அவரது கால்களும் அந்த இடத்தை நோக்கி நகருகின்றன. என்ன ஆச்சரியம்! அந்த வீடு நெருங்குவதற்கு முன்பாக அவர்களை ஒரு மயக்கம் தழுவுகிறது. விழுந்து விடுகிறார்கள். மயக்கம் தெளிந்து எழுந்தபோது அடுத்தநாள் பொழுது விடிந் திருக்கிறது. களைகட்டியிருந்த திருமண வீடு உறங்கிப் போயிருக்கிறது.

அண்ணலார் சிறு பராயத்திலிருந்தே தீய செயல்களை வெறுத்தொதுக்கி வந்தார்கள். அவற்றின்பால் கவரப்பட்ட ஒரு சில வேளை களில் அல்லாஹ் அவர்களைத் தடுத்து மிருக்கிறான். இது இத்திட்டத்தின் முதல் கட்டம்.

அடுத்த கட்டமாக அண்ணலாருக்கு அன்னாரின் நாற்பதாவது வயதில் நபிப் பட்டம் வழங்கப்படுகிறது. ஒரு பாரிய பொறுப்பு அவர்கள்மீது சுமத்தப்படுகிறது. அல்லாஹ் தனது திட்டத்தின்பால் அவர்களை வழிநடாத்துகிறான்.

**''(நபியே) உம்மை இலகுவான (இம்மார்க்கத்) தின்பால் நாம் இலகுவாக வழிநடாத்துவோம்.''**

நபி (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் திட்டத்தை அமுல்செய்யும் பணியில் இறங்கினார்கள். அதன் முதற்கட்டமாக வாழ்க்கை பற்றி ஒரு தெளிவான சிந்த னையை முன்வைத்தார்கள். அந்த சிந்தனையின் சுருக்கம் இதுதான்:

மனித வாழ்க்கைக்கு ஒரு துவக்கம் இருக்கிறது; ஆனால் முடிவு இல்லை. மனித வாழ்க்கை பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு கட்டமே உலக வாழ்க்கை. இது ஒரு தகுதிகாண் கட்டமாகும். வாழ்வின் அடுத்த கட்டத்திற் காக இங்கு மனிதர்கள் தெரிவு செய்யப் படுகிறார்கள். அந்த தெரிவு அவ்வளவு சுலபமானதல்ல.

**''நாம் அவர்களுக்கான அவகா சத்தை விட்டு வைத்திருப்பது அவர் களது நன்மைக்கே என நிராகரிப் பவர்கள் எண்ணிவிட வேண்டாம். தங்களது பாவங்களை மேலும் அதிகரித்துக் கொண்டு (தெரிவில் தோல்வி காண்பதற்காகவே) அவர்க ளுக்கான அவகாசத்தை நாம் விட்டு வைத்திருக்கிறோம். (முடிவில்) அவர் களுக்கு இழிவுதரும் வேதனையு மிருக்கிறது.''**

**''(ஈமான் கொண்டவர்களின் நிலை யும் இவ்வாறே. உலகில்) நல்லோரிலி ருந்து தீயவர்களைப் பிரித்தறியாது நீங்கள் இருக்கும் நிலையில், இருக்கின்ற வாறே அல்லாஹ் முஃமின்களை விட்டு வைக்க மாட்டான் (இந்தத் தெரிவுக் காக) மறைவானவற்றை அவன் உங்களுக்கு காட்டிவிடப் போவது மில்லை. எனினும் (மறைவான செய்தி களை உங்களுக்கு அறிவிப்பதற்காக) அவன் தனக்கு விருப்பமான தூதர்களை தெரிவுசெய்கிறான். நீங்கள் அல்லாஹ் வையும் அவனது தூதர்களையும் நம்புங்கள். நீங்கள் இறையச்சத்தோடும் நம்பிக்கையோடும் செயற்பட்டால் உங்களுக்கு மகத்தான கூலி இருக்கிறது.'' (3:178-179)**

வாழ்க்கை பற்றிய இந்த சிந்தனையை அறிமுகம் செய்து, அதை மனித உள்ளங்களில் ஆழப்பதித்து, அந்த சிந்தனையை வாழ்வின் எல்லா துறை களிலும் செயற்படுத்திக் காட்டுவதற்காக மதீனாவில் ஒரு களத்தையும் அமைத்த போது இந்தக் களத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. அந்த அச்சுறுத்தலை எதிர் கொள்ள எத்தனித்த வேளையிலே பத்ர் இடம்பெறுகிறது.

பத்ரை நோக்கிய பாதை இதுவே! முஸ்லிம்களும் இந்த சிந்தனைக்கு வாழ் வளிக்க புறப்படுவார்களா? களமமைக்க ஒன்றுபடுவார்களா? பத்ரை ஒரு வெறும் நிகழ்வாகப் பார்க்காமல் அதன் பின்னால் உள்ள திட்டத்தைப் புரிந்து கொண்ட வர்களே அதற்கு செயல்வடிவம் கொடுக்கப் புறப்படலாம்.

# கோமாளிக்குக் கிடைக்கவிருக்கும்

# பலஸ்தீனக் குடியரசு

-ஆஸிம் அலவி-

ஐ.நா.சபையின் தீர்க்கப்படாத பிரச்சினைகளின் பட்டியலில் முதலிடம் வகிப்பது பலஸ்தீனப் பிரச்சினைதான். 1917 நவம்பர் 2ம் திகதியன்று பாலஸ்தீனப் பூமியில் யூத இனத்துக்கு ஒரு தனிநாட்டை ஸ்தாபிப்பதற்கான ''பெல்பர் பிரகடனம்'' மேற்கொள்ளப்பட்டது. அப்போது பலஸ்தீனப் பூமியில் மேலாதிக்கம் கொண்டிருந்த பிரித்தானிய ராஜ்யத்தின் பூரண அனுசரணையுடன் நடந்தேறிய பெல்பர் பிரகடனத்தில் ''யூதர்கள் அல்லாதோரினது உரிமைகளுக்கு பங்கம் ஏற்படாத வண்ணம்'' என்ற வசனம் மிகப் பலமற்ற தொனியில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் பலஸ்தீன முஸ்லிம்களின் உரிமைகள் குறித்து எந்தவித அக்கறையும் காட்டப்படவில்லை. அதன்பின் 1948ம் ஆண்டு, பலஸ்தீனை யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் துண்டாடும் ஐ.நா. சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இஸ்ரேலுக்குப் பசி தீரவில்லை. 1967ல் இஸ்ரேலிய இராணுவம் ஒரே வீச்சில் ஜெருசெலம், மேற்குக்கரை, காஸாப் பள்ளத்தாக்கு, ஸைனாய், கோலான் குன்றுகள் போன்ற அரபுப் பிரதேசங்களை கைப்பற்றிக் கொண்ட போது, ஐ.நா.சபை அப்பிரதேசங்களை விட்டுவிட்டு வாபஸ் பெற்றுக் கொள்ளும் படி தீர்மானம் நிறைவேற்றியது. 242, 338 ஆகிய இலக்கங்களைக் கொண்ட இத் தீர்மானங்களின் கோவைகள் ஐ.நா. தலைமையக அலுமாரியில் இன்னும் தேங்கிக் கிடக்கின்றன. சியோனிஸ்டுகள் தமது பாதத்தின் அடியில் மிதிபடும் தூசின் அளவுகூட அத்தீர்மானத்துக்கு மதிப்பளிக்காது தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து வந்துள்ளனர். அவர்களது அடிப்படையான வாதாட்டமும், அவர்கள் தமது உள்ளங்களில் விதைத்துக் கொண்ட எண்ணமும் யாதெனில், பலஸ்தீன் சுமார் 4000 வருடங்களுக்கு முன்பு ''இஸ்ரேலின் சந்ததிகளுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி'' என்பதுதான்.

ஆகா! அருமையான வாதாட்டம்!

பிரசித்திபெற்ற கிறிஸ்தவ மத அறிஞரான பேராசிரியர் அல்பிரட் கைலோமி (Prof. Alfred Guilaume 1888-1965) அவர்கள் யூதர்களின் இவ்வாதாட்டத்தைப் பற்றி ஒரு ஆழமான ஆய்வை நடத்தியுள்ளார். இவ் ஆய்வின் பின் அவர் வெளியிட்ட முடிவு இதுதான்: ''அந்தப்பூமி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கோத்திரத்தைச் சார்ந்த அனைத்துக் கிளையாருக்கும் சரிசமமாகவே வாக்களிக்கப்பட்டுள்ளது. அதில் அறபுகள் மற்றும் இஸ்ரேலியர் அனைவரும் அடங்குவர். அத்தோடு இஸ்ரேலின் சந்ததிகள் அப்பூமிக்கு ''மீண்டும் திரும்பி வருவார்கள்'' என்ற தீர்க்க தரிசனம் அவர்கள், பபிலோனியாவில் அலைந்து திரிந்துவிட்டு மீண்டும் வந்து குடியேறிய நிகழ்வுடன் நிறைவுபெற்றுவிட்டது. அதன்பிறகு மீண்டும் திரும்புவதற்கான பேச்சுக்கே இடம் கிடையாது...''

அதாவது 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அங்கே யூதர்கள் பலவந்தமாக குடியேறிய நிகழ்வுக்கு எவ்வித சட்டரீதியான அடிப்படைகளும் கிடையாது என்பது பேராசிரியர் அல்பிரட் கைலோமின் ஆய்விலிருந்து புலனாகிறது. முழு வரலாற்றையுமே திரிபுபடுத்தி தமது இளைய சந்ததியினருக்குக் கற்பிக்கும் யூதர்களுக்கு ஒரு வஞ்சகமான இலக்கை அடைந்து கொள்ள முயற்சிப்பது அவ்வளவு பாரதூரமான விடயம் அல்ல. பலவான்தான் சத்தியவான் என்ற தற்காலக் கோட்பாட்டை நன்கு உணர்ந்துள்ள அவர்கள் தம்மைத் தேவையானளவு பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடனே காரியமாற்றுகின்றனர். இவ்வகையில் யூதர்கள் பிரமிக்கத்தக்கவர்கள் என்பதை மறுக்க முடியாது. அவர்களுடன் ஒட்டிப் பிறந்துள்ள குறுக்குப் புத்தியின் துணையுடன் ''சர்வதேச சமூகம்'' எனப் பறைசாற்றப்படும் சமூகத்தை தன்பக்கம் இலகுவாக ஈர்த்துக் கொண்டுள்ளதை அவதானிக்க முடியும். அமெரிக்காவினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் அதியுயர் பீடங்களில் ஊடுருவியதுடன் கோபி அனானின் சபையின் கழுத்தை நெரித்துப் பிடித்துள்ளதானது அவர்களது துல்லியமான ஆற்றலையே வெளிப்படுத்துகிறது.

இப்போது அனைத்தும் அவர்களது கைக்குள்ளாகிவிட்டன. சட்டங்களை உருவாக்குவதா? அநியாயத்திற்கு நியாய பூர்வமான வரைவிலக்கணம் வழங்குவதா? சட்டத்தையும் நீதியையும் கைக்குள் எடுத்து உருட்டி விளையாடுவதா? நியாயமான போராட்டங்களைப் பயங்கரவாதம் எனச் சித்தரித்துக் காட்டுவதா? அனைத்தும்தான்.

இந்தப் பின்னணியில் இருந்துதான் நாம் பலஸ்தீனப் பிரச்சினையை நோக்க வேண்டும். 'அரியல் ஷரோன்' ஹரம் அல்ஷரீபில் நுழைந்து நல்லடியார்களை கிளர்ந்தெழச் செய்த திட்டமிட்ட நடவடிக்கையுடன் 'இன்திபாதா' வின் பிறிதொரு அங்கம் வெடித்தது உண்மைதான். எனினும் ஜெருஸலத்தின் இறுதியான நிலைப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்களின் போது கொந்தளிப்பு தணியாமலே இருந்து வந்தது.

மேற்படி விடயத்தில் கிளின்டன் ஐயாவுக்கு இருக்கும் கரிசனையும், அவசரமும் ஒரு புறத்தில் விநோதமானது. யூத சமூகத்தின் அனுசரணையுடன் இருதடவை அவர் ஜனாதிபதியாக்கப்பட்ட போதும் தனது சேவைக் காலத்துள் ஜெருஸலத்தை இஸ்ரேலின் தலைநகராக மாற்றிக் கொடுக்க முடியாமல் போய்விடுமோ என்ற அச்சம், அதன் விளைவாக தனது சட்டரீதியான மனைவி ஹிலரி எதிர்காலத்தில் செனட் சபை அங்கத்துவத்தையும், ஜனாதிபதியாகும் வாய்ப்பையும் இழக்கலாம், மகள் செல்ஸியை அரசியல் பிரமுகராக முன்னேற்றுவதற்கான முயற்சிகள் தோல்வியடையலாம் போன்ற சிந்தனைகளே கிளின்டனை ஆக்கிரமித்துள்ளன. ஜனவரி 2001க்கு வெள்ளை மாளிகையை விட்டும் வெளியேறுவதற்குள், யூதர்கள் சார்பாக தான் ஏற்றுக் கொண்ட கடமைகளை நிறைவுசெய்யத் தவறிவிட்டால் மேற்படி எதிர்பார்ப்புகள் தவிடு பொடியாகிவிடும்.

நேர்மையாக சிந்திக்கும் மக்கள் உள்ளங்களில் தீவிரமாக அலுப்படைந்து வரும் மனிதரான அபூ அம்மார் (யாஸீர் அரபாத்) பாக்குவெட்டியின் நடுவில் சிக்குண்டு தவிக்கிறார். ஒருபுறம் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் நெருக்குதல், மறுபுறம் அவரது நாட்டு மக்கள் மற்றும் முஸ்லிம் உலகில் கிளம்பியுள்ள எதிர்ப்பலை. கடந்த செப்டம்பரில் நடைபெற்று, தோல்வியுற்ற கேம்ப் டேவிட்-II பேரம் பேச்சின் போது அவர் ஜனாதிபதி கிளின்டனைப் பார்த்து உருக்கமாக, அதேவேளை பணிவான தொனியில் தனது உளக்கிடக்கை வெளிப்படுத்தினார். ''ஜனாதிபதி அவர்களே! நீங்கள் ஜெருசெலம் தொடர்பான எமது நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்க என்னை வற்புறுத்துவதன் மூலம் எனது மரண ஊர்வலத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யும் படியே கூறுகிறீர்கள். முதலாவது கேம் டேவிட் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அன்வர் சதாத்தைப் போன்று இரண்டாவது கேம் டேவிட்டின் பின் நான் மரணிக்க விரும்பவில்லை...''

இப்போது அவர் சர்வதேச சட்டங்களுக்கு முரணான இரு பணிகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தில் உள்ளார்:

1. ஜெரூஸலத்தை இஸ்ரேலின் தலைநகராக்குதல்.

2. தெல் அவீவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தை ஜெரூஸலத்துக்கு மாற்றுதல்.

முஸ்லிம்களின் மூன்றாவது புனிதத் தலமான மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள ஜெரூஸலமும், அல்அக்ஸாவின் வளவும் ஒரு வக்பு சொத்தாகும். அவ்வளவுக்குள் யூதர்கள் பிடித்து வைத்துள்ள ''ஒப்பாரி மதில்'' (Wailing Wall) எனும் பகுதி உண்மையில் ஆரம்பத்தில் ''புராக் மதில்'' என்றே அழைக்கப்பட்டது. ஐ.நா.வுக்கு முன்பிருந்த 'நாடுகளின் சம்மேளனம்' எனும் சபை 1937ல் அதனை முஸ்லிம்களுக்கு சொந்தமானது என பிரகடனப்படுத்தியிருந்தது. அவ்வாறே 1947ல ஐ.நா தீர்மானம் ஒன்றின்படி ஜெரூஸலம் ஒரு சர்வதேச பிரதேசமாக ஆக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும் ஆரம்பம் தொட்டே யூதர்கள் ஜெரூஸலத்தின் மீது ஒரு கண்ணை வைத்தே இருந்தனர். அவர்கள் அன்வர் சதாத்துடன் கேம்ப் டேவிட் உடன்படிக்கையை சம்பாஷிக்கும்போது இவ்விடயத்தை முன்வைத்த போதும், அதனை பின்னொரு சந்தர்ப்பத்தில் கையாள்வதென முடிவுசெய்து மடித்து வைத்து விட்டனர். பின்னர் வந்தது அபூ அம்மாரின் ஒஸ்லோ உடன்படிக்கை. அங்கும் ஜெரூஸலத்தின் இறுதி நிலைப்பாடு குறித்து பேச்சு எழுந்தது; எனினும் பிற்போடப்பட்டது. தோல்வியடைந்த கேம்ப் டேவிட்- ii பேச்சுத் தொடரில் இவ் விடயமதான் மையக்கருவாக இருந்தது. பலஸ்தீனியரை, தாமும் ஏதாவது பெற்றுள்ளோம் என ஆனந்தமடையச் செய்யும் நோக்குடன் ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டது. அதாவது அல்குத்ஸின் மீதான அதிகாரம் ஒரு தரப்பினருக்கும், முழு ஜெரூஸலத்தினதும் அதிகாரம் அடுத்த தரப்பினருக்கும் -அதாவது இஸ்ரேலுக்கும்- வழங்கப்பட வேண்டும். அரபாததையும் அவரது பட்டாளத்தையும் இதனைக் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது. கிளின்டன் அனைத்து அலுவல்களையும் ஒதுக்கிவிட்டு இதற்காக அங்குமிங்கும் அலைந்து திரிந்தார்; ஒரு சட்டவிரோதமான உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக !!

ஆனால் பாக்குவெட்டியில் மாட்டிக் கொண்ட அரபாத் எப்படி திடசங்கற்பத்துடன் செயற்படுவது? அவர் இணங்காத வேளையில் இம்முயற்சி தோல்வியை தழுவியது. இதன் கருத்து அரபாத்தின் குழுவுக்கு வெற்றி கிடைத்து விட்டது என்பதல்ல; மாறாக அவ்விடயம் கொந்தளிப்பு தணியும் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

அமெரிக்க தூதுவராலயம் அடுத்த விடயமாக உள்ளது. தூதுவராலய கட்டிட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. 31,000 சதுர அடிகளை கொண்ட இந்நிலத்தை அமெரிக்க அரசு இஸ்ரேலிடமிருந்து குத்தகைக்கு எடுத்துள்ளது. ஆனால் இந்நிலம் முஸ்லிம்களுக்கு சொந்தமான ஒரு வக்பு சொத்தாகும். என்பதைக் கேட்டு அதிர்ச்சி அடைவீர்கள். இதன் ஒரு பகுதி 19 முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ குடும்பங்களுக்கு சொந்தமான தாகவும் எஞ்சிய பகுதி வக்பு சொத்தாகவும் உள்ளது. 1724ல் முஹம்மத் பின் முஹம்மத் அல் ஹலீலி என்பவரால் அது வக்பு செய்யப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. பிறகு 1948ல் நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு பிரித்தானிய அரசு வாடகையும் செலுத்தி வந்தது. ஆகவே திருடப்பட்ட ஒரு நிலத்தில் தனது தூதுவராலயத்தை அமைப்பதன் மூலம் அமெரிக்கா இன்னுமொரு சட்டவிரோத செயலைப் புரிந்துவிட்டது.

இம் முழு நாடகத்தின் பின்னாலும் நின்று செயல்படுபவர்களுள் பிரதானமாக இருக்கும் அமெரிக்காவின் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ஹென்றி கிஸின்ஜரை ஞாபகப்படுத்தாமல் இருக்க முடியாது. இஸ்லாம் பற்றி தனது உள்ளத்தில் கசப்புணர்வை அடர்த்தியாக வளர்த்து வைத்துள்ள இவர் ஒரு யூதர். கிஸின்ஜரை பற்றி ஒரு நூலை எழுதியுள்ள வோல்டர் ஜஸக்ஸன் இப்படிக் கூறுகிறார்:

'அமெரிக்காவின் மத்திய கிழக்கு கொள்கையில் அவர் ஒரு ''படிப்படியாக சாதிக்கும் அணுகுமுறையை'' த்தான் கையாண்டார். எகிப்து, சிரியா, சஊதி அரேபியா போன்ற நாடுகளின் தலைவர்களது அபிமானத்தை முதலில் வென்று சாதனை படைத்தார். அவர்களது முகத்தின் முன் துதிபாடி, அவர்களுடன் இணைந்து அவர்களது எதிரியை வீழ்த்த சதிசெய்வது போல் நடித்து, அவர்களது எதிரிகளை தாறுமாறாக கண்டித்து அவர்களின் நம்பிக்கையை பெற்றுக் கொண்டார்.''

ஹிட்லரின் சித்திரவதை முகாம்களில் 13 உறவினர்களை இழந்த கிஸின்ஜர் இஸ்ரேல்மீது ஆழ்ந்த அன்பு வைத்துள்ளார். முதலாவது இன்திபாதா வெடித்தபோது நிலைமையை எவ்வாறு சமாளிப்பதென அவரிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. அவர் கூறிய ஆலோசனை ஒன்றுதான். அது மிக இலகுவானது! அரபாத்தையும் PLO வையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பதுதான் அரபாத்துக்குரிய பணி. ஜனரஞ்சக மக்கள் எழுச்சியை நசுக்குவதும இஸ்ரேலின் ஹராமான இருப்பைப் பலப்படுத்துவதும். அதற்கான பரிசு சுயாட்சி அதிகாரமும் ''ஜனாதிபதி'' பதவியும். அரபாத் நேர்மையுடன் தனது பணியை நிறைவேற்றி வந்தார்.

ஆனால், இப்போது நிலைமை முற்றாக மாறியுள்ளது. ஒஸ்லோ ஒப்பந்தத்தில வாக்களிக்கப்பட்ட எந்த உரிமைகளையும்-குறைந்தபட்சம் தம் விருப்பப்படி தனது வீடுகளை நிர்மாணிக்கும் உரிமை கூட கிடைக்கவில்லை என்ற ஆத்திரத்தில் தனது இரத்தத்தை உறிஞ்சக் காத்திருக்கும் பொதுமக்கள் ஒருபுறம், இன்திபாதாவை அடக்கவில்லையே என கிள்ளிக் கொண்டிருக்கும் அமெரிக்காவும் இஸ்ரேலும் மறுபுறம். அவர் மிகவும் தளர்ந்த, திடசங்கற்பமே அற்ற மனிதனாக மாறி, சுதந்திர பலஸ்தீனை தன்னால் கனவில் மாத்திரம் தான் உருவாக்க முடியும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார். தனிநாட்டுப் பிரகடனம் செய்யப் போவதாக எத்தனையோ காலக்கெடுக்கள் கொடுத்தும் ஒன்றையுமே நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. எனினும் தொடர்ந்து முழங்கிக் கொண்டே வருகிறார்.

அவரைப் போன்றுதான் அமெரிக்க எஜமானின் முன் கைகட்டி நிற்கும் அரபு ஆட்சியாளர்கள். இவர்களில் ஒருவர்கூட மக்களாணையால் ஆட்சிக்கு வந்தவர்களோ, அல்லது தமது சொந்த மக்களின அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்களோ அல்ல. ஏதோ நாங்களும் களத்தில் இறங்கி விட்டோம் என பீற்றுவது போன்று ஒக்டோபர் 21, 22ம் திகதிகளிள் அரபுலீக் உச்சி மாநாட்டைக் கூட்டி பலஸ்தீனில் எழுந்துள்ள அவசர நிலைமையை ஆராய்ந்தனர். இவர்கள் துணிவுள்ள எந்தத் தீர்மானத்தையும் எடுக்க மாட்டார்கள் என்பதும், வெறும் ''தீர்மான மன்னர்கள்'' என்பதும் இஸ்ரேலுக்கு நன்கு தெரியும். எனவே இவர்களது ''வார்த்தை ஏவுகணைகளுக்கு'' தான் அஞ்சப் போவதில்லை என இஸ்ரேலியப் பிரதமர் யஹூத் பராக் குறிப்பிட்டார். இந்தக் கோமாளிக் கூட்டம் எடுத்த தீர்மானம் இவைதான்:

1. பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் புரியும் கொடுமைகளை கண்டிப்பது.

2. 100 கோடி அமெரிக்க டொலர்களை பலஸ்தீன மக்களுக்கு வழங்குவது.

முன்னைய தீர்மானத்தால் நிச்சயம் இஸ்ரேலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. பின்னைய தீர்மானத்துக்கு அமைய அனைத்து பணமும் அரபாத்தின் கையாட்களது பொகட்களில் பதுங்கி விடும். ஆகா! தனது இன மக்களின் இரத்தத்தை ஓட்டி விடுவதால் எவ்வளவு லாபம் கிட்டுகிறது!?

ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்: அரபு நாடுகளுக்கு ஒருதுளி தற்காலத்துணிவு ஏற்பட்டது. (50⇨)

# ரமழானின்

# அருளையும், மன்னிப்பையும் பெறுவோம்

மௌலவி
M.L.M. தாஹிர் ஹாமி

புனித ரமழானை ஒரு முஸ்லிம் திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்த வேண்டும். முழுமையான பயன்களை ரமழானில் இருந்து பெறவேண்டும் என்பதற்காக பகுதிகளாக ரமழான் மாதம் பிரிக்கப்பட்டுள்ளதை நோக்க முடிகிறது. முதல் பத்து நாட்களும் 'ரஹ்மத்துடைய' பகுதியாகவும், நடுப்பத்து நாட்கள் 'ம·.பிரத்' பாவமன்னிப்புக்குரிய பகுதியாகவும், இறுதிப் பத்து நாட்களும் நரக விடுதலைக்குரிய பகுதியாகவும் பிரிக்கப் பட்டுள்ளது.

முதல் பத்து நாட்களிலும் அல்லாஹ்வின் அருளை அடியார்கள் தாராளமாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதில் ஏனைய காலங்களை விட ரஹ்மத்துடைய வாயில் மிக விசாலமாக திறக்கப்படுகிறது. இதனை ஹதீஸ்ஃல் முஸ்லிமில் இடம்பெறும் பின்வரும் நபி மொழி குறிப்பிடுகிறது.

கிறோம். சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டி மனித சமூகத்திற்கு வழிகாட்ட வந்த வான்மறை அல்-குர்ஆன் இம்மாதத்தில் அருளப் பெற்றது அல்லாஹ் எமக்களித்த மாபெரும் அருளாகும்.

**''ரமழான் மாதம் எத்தகையது என்றால், அதில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை தீமைகளை) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது.'' (2:185)**

ஆயிரம் மாதங்கள் நற்செயல் புரிவதற்குச் சமமான ஓர் இரவு இம்மாதத்தில் அமைந்திருப்பது அல்லாஹ்வின் மற்றுமொரு பாரிய அருளாகும். மனிதர்களை பாவமான மானக்கேடான காரியங்களுக்குத் தூண்டும் ஷைத்தான்களை விலங்கிட்டமை அல்லாஹ் நமக்களித்த மற்றுமொரு அருளாகும். இவ்வருள்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு ரமழானின் ஆரம்பத்திலேயே ரமழானின் வருகை பற்றி நபி (ஸல்) அவர்கள் நபித்தோழர்களுக்கு நன்மாராயம் கூறுவார்கள்:

**''(மனிதர்களே!) உங்களை நோக்கி ரமழான் வருகிறது. அது (பரக்கத்துடைய) அருள்பொருந்திய மாதம். அதில் அல்லாஹ்வின் அருள் உங்களைச் சூழ்ந்து கொள்கிறது. அல்லாஹ் (உங்களது) பாவங்களை மன்னிக்கிறான்; (உங்களது) பிரார்த்தனைகளுக்கு விடையளிக்கிறான். இம்மாதத்தில் நீங்கள் (நற்செயல்களில்) போட்டி போடுகிறீர்களா? எனப் பார்த்துக் கொண்டிருக்கிறான். உங்களைப் பற்றி வானவர்களிடம் பெருமையாகப் பேசுகிறான். எனவே, உங்களிலிருந்து நல்ல செயல்களை அல்லாஹ்வுக்கு வெளிப்படுத்திக் காட்டுங்கள். நிச்சயமாக இம்மாதத்தில் அல்லாஹ்வின் அருளை இழந்தவனே மிகத் துர்ப்பாக்கியசாலி ஆவான்.''**

**''இம்மாதத்திலுள்ள சிறப்புகளை எனது சமூகத்தினர் அறிவார்களாயின் வருடம் முழுவதும் ரமழானாக இருக்க வேண்டும் என ஆசைப்படுவார்கள். ரமழானுக்காக, ஒரு ரமழானிலிருந்து அடுத்த ரமழான் வரை சுவர்க்கம் அலங்கரிக்கப்படுகிறது.''**

அல்லாஹ் அடியார்களோடு கொண்டிருக்கும் அளவில்லா கருணையையும், நிகரில்லா அன்பையும் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

**''என் அடியார்களே! உங்களில் எவரும் வரம்பு மீறி தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் நம்பிக்கை இழக்க வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான். அவன் மிக்க மன்னிப்பவன் மிக்க கருணையுடையவன். (என்று நான் கூறியதை) நபியே நீர் கூறிவீராக!''**

இவ்வசனம் ஒரு முஸ்லிம் எத்தகைய பாவங்களை புரிந்தபோதிலும் அவன் அல்லாஹ்வின் அருளுக்கு அருகதையுடையவன் என்பதை விளக்குகிறது.

''ரஹ்மத்துடைய வாயில்கள் ரமழான் மாதத்தில் திறக்கப்படுகின்றன.''

இப்புனித ரமழானில் எமது ஈமானை உறுதிப்படுத்தி இறையச்சத்தை அதிகரித்து அருள்மறையோடு அதிக உறவு கொண்டு தான தர்மங்களை அதிகம் வழங்கி ரஹ்மத்துடைய பகுதியை நாம் கழிப்பதன் மூலம் அல்லாஹ்வின் விசாலமான அருளை அடைந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

**''(ஆனால்) என்னுடைய அருளானது எல்லாப் பொருட்களிலும் (விரிந்து, பரந்து) சூழ்ந்து நிற்கிறது. எனினும் அதனை பயபக்தியுடன் (பேணி) நடப்போருக்கும் ஸகாத் கொடுத்து வருவோருக்கும், நம்முடைய வசனங்களை நம்புகிறவர்களுக்கும் நான் விதித்தருள்வேன் என்று கூறினான்.''**

எனும் அல்குர்ஆனிய வசனம் இதனையே வலியுறுத்துகிறது. இவ்வசனத்தில் நோன்பு மனித உள்ளங்களில் பிரதானமாக விதைக்க விரும்பும் இறையச்சமே அல்லாஹ்வின் அருளை அடைந்து கொள்வதற்கு காரணமாக கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

புனித ரமழானில் அல்லாஹ்வின் அதிகமான அருள்களை நாம் பெற்றிருக்

ரமழானின் நடுப்பத்து நாட்களும் பாவமன்னிப்புக்குரிய காலப்பகுதியாகும். குறிப்பாக இப்பத்து நாட்களும் ரமழான் முழுவதும் மனிதர்கள் தம் பாவங்களில் இருந்து தூய்மையடைந்து கொள்ள வாய்ப்பாக அமைந்திருக்கிறது. பின்வரும் நபிமொழி இதனை தெளிவுபடுத்துகிறது.

**''ரமழானின் ஆரம்ப பகுதி (ரஹ்மத்தாக) அருளாகவும், நடுப்பகுதி (ம·.பிரத்) பாவமன்னிப்பாகவும், இறுதிப் பகுதி நரக விடுதலையாகவும் உள்ளது.''**

புனித ரமழான் மாதம் பாவக்கறைகளை அகற்றி மனிதனை புனிதனாக மாற்றுவதில் இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இம்மாதத்தில் புரியப்படும் வணக்க வழிபாடுகளின் மூலம் பல பாவங்கள் மன்னிக்கப்படுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**''யார் ஈமானோடும், மனத்தூய்மையுடனும், ரமழான் மாதம் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முன் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்.''**

**(புகாரி, முஸ்லிம்)**

(44ம் பக்கம் பார்க்க)

# நஸீஹா

1935ம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கு நாடொன்றுக்கு கல்வி தேடி தனது மனைவியுடன் சென்ற ஓர் இஸ்லாமிய மாணவனுக்கு இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்கள் பயனுள்ள உபதேசங்களைக் கொண்ட ஒரு கடிதமொன்றை பின்வருமாறு எழுதினார்கள்:

## ஒரு மாணவனுக்கு இமாம் ஹஸனுல் பன்னாவின் கடிதம்

நல்ல எண்ணத்துடனும், உயர்ந்த நோக்கத்துடனும் பிரயாணத்தை மேற்கொள்கின்ற உங்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

கண்ணியத்துக்குரிய மாணவனே! இன்னும் சற்று நேரத்தில் நீங்கள், உங்களுக்கு அறிமுகமில்லாத ஒரு சமூகத்துக்கு மத்தியிலும், உங்களுக்குப் பழக்கமில்லாத மனிதர்களுக்கு மத்தியிலும் இருப்பீர்கள். அவர்கள் உங்களிடத்தில் ஒரு முஸ்லிமுக்குரிய உதாரணத்தைப் பார்ப்பார்கள். எனவே நீங்கள் மிகச் சிறந்ததொரு உதாரண புருஷராக திகழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

உங்களிடத்தில் பெறுமதிமிக்க அடைக்கலப் பொருளொன்று இருக்கிறது. அது தான் உங்கள் மனைவி. அவளை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுங்கள். அவளுக்கு பாதுகாப்பான தோழனாக இருங்கள். அப்போது அவள் உங்களுக்கு மன அமைதியையும், சந்தோஷத்தையும் பெற்றுத் தருவாள்.

நான் உங்கள்மீது கொண்ட அன்பின் காரணமாகவும், உங்களுக்கு சந்தோஷமானதொரு வாழ்க்கை அமைய வேண்டுமென எதிர்பார்க்கும் ஒரு தூய்மையான நண்பன் என்ற வகையிலும் இன்னும் சில உபதேசங்களை எழுதுகிறேன் அவற்றையும் வாசியுங்கள்.

01. உங்களது எல்லா விவகாரங்களையும், செயற்பாடுகளையும் அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற நல்லுணர்வோடு செயற்படுங்கள். அல்லாஹ் உங்களது எல்லா செயற்பாடுகளையும் அறிந்தவனாகவும், கண்களுக்கு புலப்படாத, உள்ளங்கள் மறைத்து வைத்துக்கொண்டிருக்கின்ற அனைத்தையும் தெரிந்தவனாகவுமிருக்கிறான். எனவே அவன் உங்களை எந்தவொரு நிலையிலும் பொருந்திக் கொள்ளக்கூடிய வகையில் காண்பதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வால் நிரம்பிய உள்ளத்தை ஷைத்தான் நெருங்கவும் மாட்டான். எனவே இவ்விடயத்தில் பொடுபோக்காக இருக்க வேண்டாம்.

02. உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ள கடமைகளை நேரத்துக்கு நிறைவேற்றி விடுங்கள். அவற்றை பிறகு செய்யலாம் என்றோ, அல்லது காரணங்களை முன்வைத்தோ அதிக வேலைகளினாலோ பிற்போடாதீர்கள்; விட்டுவிடாதீர்கள். ஏனென்றால், அது இச்சையின் உணர்வுகள். அல்லாஹ் கூறுகிறான்: "**மனோ இச்சையைப் பின்பற்ற வேண்டாம்; அவ்வாறாயின் அது உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழிதவறச் செய்துவிடும்.**" **(ஸாத் :26)** அல்லாஹ்வை நெருங்கிச் செல்வதற்குரிய மிகச்சிறந்த சாதனமாக அவன் விதியாக்கிய கடமைகளே காணப்படுகின்றன. அதில்குறைவு செய்திட வேண்டாம். நீங்கள் மேற்கத்திய நாட்டில் இருந்து கொண்டு கஷ்டத்துடன் ஒரு நன்மையைச் செய்வது பன்மடங்கு கூலியைப் பெற்றுத் தரும். நான் இதனைவிட அதிகமாக கடமையான விடயங்கள் பற்றி கூற விரும்பவில்லை. ஏனென்றால் அதுதான் மூலதனமாகும். மூலதனத்தினை வீணடித்தவனின் சைசேதமான நிலை, நாளை எப்படி இருக்கும் என்பதனை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

3. உங்களுக்கு முடியுமானளவுநேரத்தை சுன்னத்தான காரியங்களை நிறைவேற்றுவதில் கழியுங்கள். பர்ழான தொழுகைகளுக்குரிய சுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்றுங்கள். இஸ்திஃபார் செய்வதை அதிகப்படுத்தி, மகத்தான உங்கள் இறைவனையும் துதி செய்யுங்கள். ஒருவன் பிரயாணத்தில் இருக்கும்போது கேட்கும் துஆ பதிலளிக்கப்படக்கூடியது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதனை நீட்டிக் கொள்ளுங்கள். ஏனென்றால் நபி (ﷺ) அவர்கள், '**உமது நாவு அல்லாஹ்வின் ஞாபகத்தால் ஈரலித்துக் கொண்டே இருக்கட்டும்**' என அலி (رضي الله عنه) அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள்.

04. அல்குர்ஆனை விளங்கி, ஆராய்ச்சி சிந்தனையுடன் அதிகமாக ஓதி வாருங்கள். அதுதான் உள்ளங்களுக்கான நோய் நிவாரணியாகும். உங்களுடைய ஒவ்வொரு நாளையும் அல்குர்ஆனைக் கொண்டே ஆரம்பித்து, அந்நாளுக்குரிய பணிகளை குர்ஆனைக் கொண்டே முடியுங்கள். ஏனெனில் அது சிறந்த ஆரம்பமாவும் நல்ல முடிவாகவும் உள்ளது.

05. நீங்கள் அங்கே பலவீனமான உள்ளங்களை மிகைத்து, கண்களை மயக்கி, சிந்தனையை மழுங்கடித்து, உள்ளத்தை திசை திருப்பக் கூடிய உலகத்தின் கவர்ச்சிகளையும் மாயைகளையும் காண்பீர்கள். இவைகளெல்லாம் உங்களையும் மயக்கி மறுமையை மறக்கடிக்காமல் இருக்கட்டும். அல்லாஹ் கூறுகிறான்: '**(நபியே!) அவர்களிலிருந்து சில பிரிவாருக்கு, உலக வாழ்க்கையின் அலங்காரமாக எதைக் கொண்டு நாம் சுகமனுபவிக்கச் செய்திருக்கிறோமோ அதன் பக்கம் உம்முடைய இரு கண்களையும் நீ திண்ணமாக செலுத்த வேண்டாம். (ஏனெனில், மறுமையில் வழங்கப் பெறும்) உம் ரப்புடைய உணவு (இவ்வுலக வாழ்வில் அவர்கள் வழங்கப் பெறுவதை) விட மிகச் சிறந்ததும், நிலையானதுமாகும்" (தாஹா : 131)**

06. எனது மதிப்பிற்குரியவரே! அங்கு இருக்கிறவர்கள் அல்லாஹ் எங்களுக்கு ஹராமாக்கியுள்ளவற்றை ஹலாலாக கருதுவார்கள். அந்த ஹராம்களை செய்வதில்சற்றேனும் தயக்கம் காட்டமாட்டார்கள். எனவே, நீங்கள் இச்சைகளுக்கு உடன்பட்டுச் செல்ல வேண்டாம். அவர்கள் செய்யும் பாவங்களில் பங்குகொள்ளவும் வேண்டாம். நிச்சயமாக அவை உங்களை அல்லாஹ்வின் பிடியிலிருந்து பாதுகாக்க மாட்டாது. மறுமையில் உங்களுக்கு ஆதாரமாகவும் இருக்கமாட்டாது.

07. அடுத்து நீங்கள் அங்கு இருக்கும் இளமைப் பெண்களுடன தோழமை கொள்ள வேண்டாம். உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் தனிப்பட்ட நட்பையோ, அல்லது உளரீதியான உறவையோ ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டாம். இது ஏனையவர்களுக்கு, ஒரு தற்றமாக காணப்பட்டால் உங்கள் மீது இரண்டு குற்றங்களாகும். ஏனென்றால் அதற்கான விளக்கத்தை அறிந்து வைத்துள்ளீர்கள்.


08. மதுபானத்தை நெருங்கவும் வேண்டாம். அவ்வாறு நெருங்குவதற்கு சூழலை காரணம் காட்டவும் முனைய வேண்டாம். ஏனெனில் அல்லாஹ் அனைத்து சூழல் காரணிகளையும் அறிந்தே அதனை ஹராமாக்கினான். இவ்வாறே ஹராமான எந்த உணவையும் சுவைக்கவும் வேண்டாம். ஹராத்தினால் வளரும் உடம்பு நரகத்துக்கே மிகவும் பொருத்தமாகும். அல்லாஹ் ஹராமாக்கிய ஒன்றில் கெடுதியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. "**இன்னும் தூய்மையானவற்றை அவர்களுக்கு அவர் (நபியவர்கள்) ஹலாலாக்கி, கெட்டவற்றை அவர்களின் மீது ஹராமாக்கி வைப்பார்" (அஃராப் 157)**

இவ்வாறு இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன. தொடர்ந்து உங்களுடன் உரையாடிக் கொண்டிருக்க வேண்டுமென விரும்புகிறேன். என்றாலும் அதிகமான பேச்சு சிலவற்றை மறக்கடித்து விடும் எனப் பயப்படுகிறேன். எனவே உங்களுக்கு அல்லாஹ் நலவை நாட வேண்டும் எனப் பிரார்த்தித்து முடிக்கிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி அபரகாதுஹு.

# களச் செய்திகள்

## கிழக்குப் பிராந்திய முஅஸ்கர்



அக்டோபர் 28, 29ம் திகதிகளில் ஜம்இய்யாவின் கிழக்குப் பிராந்திய முஅஸ்கர் நடைபெற்றது. அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இம்முஅஸ்கர் 'சடத்துவ உலகில் சன்மார்க்க வாழ்வு' எனும் தலைப்பில் நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட இளைஞர்கள் பலஸ்தீன் ஆதரவு ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். பலஸ்தீனர்களுக்கு தங்கள் ஆதரவையும், இஸ்ரேலைக் கண்டிக்கும் பதாதைகளையும் தாங்கிச் சென்ற இளைஞர்கள் இஸ்ரேலின் தேசியக் கொடிகளை எரித்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஊர்மக்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். ஜமாஅத் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், 'பிரபோதய' சிங்கள மாத இதழ் ஆசிரியர் S.M. மன்சூர், அஷ்ஷெய்க் A.M. ரஹ்மதுல்லாஹ் நழீமி MIM. ஷபீக் ஆசிரியர். மௌலவி ஹனீபா ஆகியோர் இம்மாநாட்டில் உரையாற்றினர். இம்மாநாட்டின் நிகழ்வுகள் FM அலைவரிசையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி

அல்லாஹ்வின் அருளால் மாவனல்லை ஜம்இய்யா கிளையினால் க.பொ.த. உ/த மாணவர்களுக்கான 'கல்வி வழிகாட்டல்' நிகழ்ச்சித் தொடரின் முதல் நிகழ்ச்சி, கடந்த 26.10.2000 அன்று மாவனல்லை SAFIYYA கல்வி ஆராய்ச்சி நிலையத்தில் நடாத்தி வைக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

'கற்பது எவ்வாறு?' (HOW TO STUDY) என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி மௌஜூத் அவர்களினால கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதனை கிளையின் SCHOOL UNIT ஏற்பாடு செய்திருந்தது.

மு.ப. 9.30 முதல் பகல் 12.30 வரை SCHOOL UNIT பொறுப்பாளராகிய சகோதரர் சஹீமுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 'கற்கும் முறை', 'குறிப்பெடுத்தல்', 'பரீட்சைக்கு தயாராகல்', 'விடையளித்தல்'.... முதலிய பல அம்சங்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவனல்லை ஸாஹிரா தேசிய படசாலை, பத்ரியா மத்திய கல்லூரி, ஹெம்மாதகமை அல்அஸ்கர் மத்திய கல்லூரி, உயன்வத்தை நூராணியா மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து, சுமார் 140க்கும் அதிகமான உயர்தர மாணவர்கள் கலந்து கொண்டனர். முழு நிகழ்ச்சியினதும் PHOTO புகைப்படங்கள், ஒளிப்பதிவு நாடாக்கள் போன்றவற்றை கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தொடரின் அடுத்த நிகழ்ச்சி கல்வியின்-நோக்கம் "AIM OF EDUCATION" எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது.

# ஜம்இய்யா

## ஜம்இய்யா விளையாட்டுக் கழகத்தின் பரிசளிப்பு விழா

மாவனல்லை ஜம்இய்யாக் கிளையின் விளையாட்டுக் கழகமான Jammmiyah Sports Club தனது முதலாவது நிகழ்ச்சியாக அஸாபீருல் இஸ்லாம் மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை கடந்த 30.09.2000 ஆகிய தினங்களில் நடாத்தியது.

சிறப்பாக நடைபெற்று முடிந்த இந்தச் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு விழா 20.10.2000 இல் மாவனல்லை வீனஸ் மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக ஜம்இய்யாவின் முன்னாள் நாஸிம் அஷ்ஷெய்க் அப்துல் வாஜித் (இஸ்லாஹி) அவர்களும் கௌரவ அதிதிகளாக ஜம்இய்யாவின் பொதுச் செயலாளர் R.M. நிஸ்மி, ஜமாஅத்தின் மாவனல்லை கிளை நாஸிம் அஷ்ஷெய்க் இப்ராஹிம், ஸாஹிரா தேசிய பாடசாலை அதிபர் ஜனாப் நிஸார்தீன், பதுரியா மத்திய கல்லூரி அதிபர் ஜனாப் ஹலீம், முன்னாள் தேசிய விளையாட்டு வீரர் ஜனாப் முஹம்மது நசூர்தீன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

அஸாபீர் மாணவர்கள், பெற்றோர்கள், ஜமாஅத், ஜம்இய்யா ஊழியர்கள் உட்பட சுமார் 350 க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்த இவ்விழா பெற்றோர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

### பேராதனை ஜம்இய்யாவின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்

பேராதனைப் பல்கலைக்கழக ஜம்இய்யா கிளையானது, பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலிருந்தும் கற்றுப் பட்டம் பெற்று வெளியேறிய ஜம்இய்யாவின் சகோதரர்களுக்கான சுவாரஷ்யமான மாலை ஒன்றுகூடலை திட்டமிட்டுள்ளது. எனவே, பேராதனை வளாகத்திலிருந்து வெளியேறிய அனைத்து ஜம்இய்யா சகோதரர்களும் தமது பெயர் முகவரிகளை பின்வரும் முகவரிக்குத் தந்துதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்:

The Co-ordinator, Alumni Of Jam'iyyah,
Room No. 128, H.O.H., Galaha Rd, Peradeniya
(TP: 077-374387, 077-640460)

# சிறுவர் பூங்கா

## நபி இப்றாஹீம் (عليه السلام) அவர்களது சரிதை - 06

### மக்காவை நோக்கி

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உபதேசங்களால் மக்கள் கோபமடைந்தனர்; அரசனும் கோபமடைந்தான்; தந்தை ஆஸரும் கோபமடைந்தார்.

எனவே, ஒருநாள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது ஊரை விட்டும் வெளியேறி, மக்கா நகரை நோக்கிச் செல்லலானார்கள். அவரோடு மனைவி ஹாஜரும் மகன் இஸ்மாயிலும் இருந்தனர்.

அக்காலத்தில் மக்கா நகரம் மரம், செடி, கொடிகளற்ற பாலைவனமாக காட்சியளித்தது. அங்கு கிணறுகளோ, ஆறுகளோ இருக்கவில்லை. அங்கு மனிதர்களோ, மிருகங்களோ வாழவில்லை. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மக்காவை வந்தடைந்தார்கள். அங்கே தனது குடும்பத்தோடு தங்கினார்கள். சிறிது காலத்தின் பின்னர் மக்காவை விட்டும் வெளியேறும்படி அல்லாஹ் நபி இப்றாஹீமுக்கு கட்டளையிட்டான். எனவே அல்லாஹ்வின் நண்பரான நபி இப்றாஹீம் அவர்கள் தனது மனைவியையும், மகனையும் பாலைவன மக்காவில் விட்டுவிட்டு வெளியேறினார்கள். அப்போது அவரது மனைவி 'எனது கணவரே! என்னைத் தனியாக இங்கே விட்டுவிட்டு எங்கு செல்லப் போகிறீர்கள்? உண்ண உணவோ, குடிக்க நீரோ இல்லாத இந்த இடத்திலே என்னை விட்டுச் செல்கிறீர்கள்? இது அல்லாஹ்வின் கட்டளையா?" என்று பல கேள்விகளை கேட்டார். ''ஆம் இது அல்லாஹ்வின் கட்டளைதான்; என்று இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் பதிலளித்தார்கள். அதற்கு அன்னை ஹாஜர் அவர்கள், ''அப்படியானால் அல்லாஹ் எம்மைக் கைவிடமாட்டான்'' என்று கூறி ஆறுதலடைந்தார்.

### ஸம் ஸம் கிணறு

ஒருநாள் மகன் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தாகம் ஏற்பட்டது. அவரது தாயார் அன்னை ஹாஜர் அவர்கள் அவருக்கு நீர்புகட்ட விரும்பினார். அப்பாலைவனத்தில் தண்ணீர் எப்படிக் கிடைக்கும்? அக்காலத்தில் மக்காவில் கிணறுகளோ, ஆறுகளோ இருக்கவில்லை. அன்னை ஹாஜர் அவர்கள் நீரைத்தேடி அங்குமிங்குமாக ஓடினார்கள். மக்காவில் இருந்த சபா மலையில் ஏறினார். அங்கும் நீர் இருக்கவில்லை. பின்னர் மர்வா மலையிலும் ஏறினார். அங்கும் நீர் இருக்கவில்லை. தாகம் அதிகரித்ததால் குழந்தை இஸ்மாயில் அழுது கொண்டிருந்தது. கால்களிரண்டையும் நிலத்தில் அடித்து அடித்து அழுதது. தாயார் தண்ணீர் தேடி களைத்துப் போய் குழந்தை இருந்த இடம் நோக்கி ஓடோடி வந்தார். அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

அல்லாஹ் தனது நபியின் மனைவிக்கும், குழந்தைக்கும் உதவிசெய்ய விரும்பினான். குழந்தை இஸ்மாயிலின் பாதங்கள் பட்ட நிலத்திலிருந்து நீர் பொங்கி வர ஆரம்பித்தது. அன்னை ஹாஜர் சந்தோஷ மிகுதியால் பொங்கிவரும் நீரை ''நில், நில்'' ஸம் - ஸம் என்று கூறி அணைகட்ட ஆரம்பித்தார். அதிலிருந்து தாயும் மகனும் தாகம் தீர நீர் பருகினர். இதுவே மக்காவில் இருக்கும் ஸம்- ஸம் கிணறாகும்.

உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கா நோக்கி ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற வரும் அனைத்து ஹாஜிகளும் இந்நீரை தாகம் தீர அருந்துகின்றனர். தமது நாடுகளுக்கும் அதை எடுத்துச் செல்கின்றனர். ஸம்-ஸம் நீரில் அல்லாஹ் எண்ணற்ற அருள்களை வைத்துள்ளான்.

நீங்கள் ஸம்-ஸம் நீர் குடித்திருக்கிறீர்களா?

### ரமழான் மாத பயிற்சி

புத்தக் குலங்கும் புனிதமான
'ரமழான்' மாதம் பிறந்தது
நெஞ்சினிலே புத்துணர்வு
பூவைப் போல மலர்ந்தது

வானத்திலே வண்ணமான
தலைப் பிறை கண்டேன்
வாயினாலே வல்லோனுக்கு
வாழ்த்தக் கூறி துதி செய்தேன்

திருக் குர்ஆனைத் தந்த
திவ்விய மாதம்
தினந்தோறும் தேனாக
ஓதிடும் மாதம்

தந்தையோடு 'தராவீஹ்'
தொழுகைக்குச் சென்றேன்
தாராளமாய் முழுவதையும்
தொழுது முடித்தேன்

வீட்டுக்கு வந்த என்னை
அன்னை அணைத்தார்.
கனிவுடனே திருக்குர்ஆன்
ஓதிடச் சொன்னார்

அடுத்த வீட்டு 'அன்ஸாரை'
அன்போடழைத்தேன்
அனந்தமாய் 'ஸஹர்' செய்து
'ஸுபஹை' யும் முடித்தேன்

அல்லாஹ்வின் அருள் வேண்டி
முதல் பத்து நோன்பையும்
மன்னிக்க வேண்டி நின்று
நடுப் பத்து நோன்பையும்
கண்ணியமாய் கடைசிப் பத்து
நோன்பையும் நோற்று
'லைலத்துல் கத்ர்; இரவு
நரகை காவல் தேடினேன்

ஈகைத் திருநாளான
'ஈதுல் பித்ர்' பிறந்தது
அல்லாஹ்வுக்கு ஷுக்ர் செய்து
வரவேற்று மனம் மகிழ்ந்தது

ரமளானில் நான் பெற்ற
'இபாதத்' முயற்சி
இஸ்லாமிய வாழ்வுக்காக
நான் பெற்ற பயிற்சி

புனித ரமழான் சாதனையை
நானும் எண்ணிப் பார்க்கிறேன்
அல்லாஹ்வுக்கே சர்வ புகழும்
அல்ஹம்து லில்லாஹ்

எச்.எம். முஹம்மத் ஹனீபா ஓட்டமாவடி ~01

தம்பி தங்கைகளே! போட்டி நிகழ்ச்சிக்கு சரியான விடைகள் வந்து குவிகின்றன. அனை வருக்கும் பரிசுகள் அளிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். உங்கள் முயற்சிக்குப் பாராட்டு கள். இம்முறையும் வினாக்களுக்கு விடை எழுதி அனுப்பி கிறாஅத் ஒலிப்பதிவு நாடா மற்றும் அடுத்த மாத அல்ஹஸனாத் பிரதி என்பவற்றை வெல்லுங்கள்!!

# சிறுவர் பூங்கா

நவம்பர் மாத அல்ஹஸனாத் இதழை பரிசாகப் பெறும் 10 தம்பி தங்கைகளின் விபரம் 51ம் பக்கத்தில்.

## பொது அறிவுப் போட்டி-02

(1) ரஸூல் (ﷺ) அவர்களது காலத்தில் தொழுகைக்காக அழைக்கும் முஅத்தின்களாக இருவர் இருந்தனர். ஒருவர் பிலால் இப்னு ரபாஹா (ரழி). இரண்டாமவர் யார்?

(2) ஒரு நபியின் தாயார் தனது மகனை (நபியை) பிறந்தவுடன் பெட்டியில் வைத்து ஆற்றிலே விட்டார். பின்னர் அவரே தனது மகனுக்கு பாலூட்டவும் செய்தார். ஆற்றில் விடப்பட்ட அந்த நபி யார்?

(3). மஸ்ஜிதுந் நபவி அமைந்திருக்கும் நிலத்தை ஒரு ஸஹாபி விலைக்கு வாங்கி ரஸூல் (ﷺ) அவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார்கள். அந்த சஹாபி யார்?

(4). ரஸூல் (ﷺ) அவர்களுடைய பாதணி மற்றும் மிஸ்வாக் என்பவற்றை பாதுகாப்பாக வைத்திருக்கும் ஸஹாபி ஒருவர் இருந்தார். அவர் யார்?

(5). சுவனத்தில் நோன்பாளிகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வாயிலின் பெயர் என்ன?

(6). மறுமை நாளில் அல்லாஹ்வின் அர்ஷை மலக்குமார்கள் சுமந்து கொண்டிருப்பதாக அல்குர்ஆன் கூறுகிறது. எத்தனை மலக்குமார்கள் அல்லாஹ்வின் அர்ஷைச் சுமப்பர்? ஆதாரமான அல்குர்ஆனின் வசனம் எது?

(7). ரஸூல் (ﷺ) அவர்கள் உஹத் மலையில் நின்ற ஒரு சந்தர்ப்பத்தில் மலை நடுங்கத் தொடங்கியது. அப்போது அவர்கள், 'உஹதே அமைதியாய் இரு; உன்மீது ஒரு உண்மையாளரும், இரண்டு ஷஹீதுகளும் நிற்கின்றனர்' என்றார்கள். ரஸூல் (ﷺ) அவர்கள் குறிப்பிட்டுக் கூறிய அந்த மூன்று சஹாபிகளும் யார்?

(8). இவர் ரஸூலுல்லாஹ்வின் மிக விருப்பத்திற்குரிய ஒரு சஹாபிப் பெண்மணி. நபியவர்கள் அவரை 'எனது தாயே!' என்று அழைப்பார்கள். ஹிஜ்ரத் சென்ற போது அவர் நோன்பு நோற்றிருந்தார். அவரது நோன்பைத் துறப்பதற்கு ஒரு சொட்டு நீர்தானும் கிடைக்கவில்லை. திடீரென அவர் முன் வானத்திலிருந்து தொங்கவிடப்பட்டது போன்று நீர் நிரம்பிய வாளி ஒன்று தென்பட்டது. அவர் அதிலிருந்து தாகம் தீரக் குடித்தார். அந்த சஹாபிப் பெண்மணி யார்?

09). கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் பாரியளவில் விரிவு கண்டது. இப்பகுதிகளுக்கு அனுப்புவதற்காக அல்குர்ஆனின் மூலப் பிரதியிலிருந்து பிரதிகள் எடுக்கப்பட்டன. அவ்வாறு முதலில் எடுக்கப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

10. அல்குர்ஆனில் பெயர் குறிப்பிட்டு இடம்பெறும் ஒரேயொரு பெண்மணி யார்?

**தயவுசெய்து விடைகளை தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்புங்கள்**

## பொது அறிவுப் போட்டி-01 முடிவுகள்

1. ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிப்
2. ஜஃபர் இப்னு அபூ தாலிப்
3. உஸாமா இப்னு ஸைத்
4. இக்ரிமா இப்னு அபூ ஜஹ்ல்
5. அல்பர்ரா இப்னு மாலிக்
6. உம்மு ஹபீபா பின்து அபூ ஸுஃப்யான்
7. ஸைனப் பின்து ஜஹ்ஷ்
8. ஸபிய்யா பின்து அப்துல் முத்தலிப்
9. ஹின்த் பின்த் சுஹைல்
10. ஹவ்லா பின்த் ஸஃலபா

## பாராட்டுக்கள்!

பொது அறிவுப் போட்டி - 1 இன் முதற் பரிசான கிறாஅத் ஒலிப்பதிவு நாடாவை பரிசாகப் பெறுபவர்:

J. பஸ்லி மொஹமட்
ஆண்டு : 07
அறபா தேசிய பாடசாலை
வெலிகம

**பொது அறிவுப் போட்டி 2**
**வந்துசேர வேண்டிய இறுதித் திகதி**
**05. 12. 2000**

## நல்லுபதேசங்கள்

யார் அல்லாஹ்வை அடிபணிகிறாரோ அல்லாஹ் அவரை உயர்த்துகிறான்; யார் பெருமிதம் கொள்கிறாரோ அவரைத் தாழ்த்துகிறான்.

சுவையான வார்த்தைகளை யார் பேசுகிறாரோ அவருக்கு நண்பர்கள் அதிகம்

நீ உனக்கு ஏற்படும் சோதனைகளில் பொறுமையாக இரு; அருட்கொடை கள் கிடைக்கும் நேரத்தில் நன்றி செலுத்து.

நீ முஸ்லிம்களில் ஒருவரைக் கண்டால் உன்னை அறிமுகம் செய்துவை. அன்பின் அடிப்படையாக இருப்பது அறிமுகமாகும்.

"யார் ஈமானுடனும் மனத் தூய்மையுடனும், ரமழான் மாதம் நின்று வணங்குகிறாரோ அவரது முன் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்." (புகாரி, முஸ்லிம்)

"யாரொருவர் ஒரு நோன்பாளியை நோன்பு துறக்க (உதவி) செய்கிறாரோ அது அவருடைய பாவங்களுக்கு மன்னிப்பாக அமைந்து விடுகிறது."

ரமழான் மாதத்தில் கடமையான நோன்பை நோற்பது, இரவு வேளைகளில் நின்று வணங்குவது, நோன்பாளிக்கு நோன்பு துறக்க உதவுவது, போன்ற நற்செயல்கள் பாவ மன்னிப்புக்குரிய காரணங்களாக அமைகின்றன. ரஸூல் (ﷺ) அவர்கள் ரமழானில் பாவமன்னிப்பு கோருவதற்காக பின்வரும் துஆவை கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

"இறைவா நிச்சயமாக நீ மன்னிப்பவன், மன்னிப்பை விரும்புகிறாய். உனது பாவங்களை மன்னித்தருள்வாயாக."

அல்குர்ஆன் இறைமன்னிப்பை அவசரமாக அடைந்து கொள்ளும்படி அழைக்கிறது:

"இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பை பெறுவதற்கும், சுவனபதியின் பக்கமும் விரைந்து செல்லுங்கள். அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள், பூமியைப் போல் உள்ளது. அது பயபக்தியுடையோருக்காக தயார்செய்து வைக்கப்பட்டுள்ளது." (3:133)

இறைமன்னிப்பை அடைந்து கொள்ளும் விடயத்தில் தாமதமும், அலட்சியமும் கொள்ளலாகாது. அதிவேகமாக அதனை அடைந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். நோன்பின் பிரதான நோக்கமாகிய இறையச்சமே இறைமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்குக் காரணமாக இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இறைமன்னிப்பை அடைந்து கொள்வதற்கு நோன்பு ஒரு பொன்னான காலமாகும். ரமழானில் அடியார்களின் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அபூ ஸயீதுல் குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

"ரமழான் மாதத்தில் ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நரகவாதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர். மேலும் ஒவ்வொரு இரவிலும், பகலிலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது." (ஆதாரம்: தர்கீப்)

"நோன்பு துறக்கும்போது நோன்பாளி கேட்கும் துஆ மறுக்கப்பட மாட்டாது." என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நபியவர்களே ஒரு நாளைக்கு நூறு தடவைகள் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரியிருக்கிறார்கள்.

"மனிதர்களே அல்லாஹ்விடம் மன்னிப்புக்கோரி பாவமீட்சி பெறுங்கள். நான் ஒரு நாளைக்கு 100 தடவைகள் பாவமன்னிப்புக் கோருகிறேன்."

புனித ரமழானை முழுமையாகப் பயன்படுத்தி இறை அருளையும், இறைமன்னிப்பையும் பெறத்தவறுபவர்கள் மிகவும் துர்ப்பாக்கியசாலிகள் ரமழான் அல்லாத ஏனைய காலங்கள் முழுவதும் அமல்கள் செய்தாலும் அதற்கு ஈடாக முடியாது. ஏனவே ரமழானின் ஆரம்ப, நடுப்பகுதிகளை வணக்க வழிபாடுகளில் கழித்து இறையன்பையும், மன்னிப்பையும் பெறுவோமாக!

**இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்**
**நரக விடுதலையும் வழிமுறையும்**

## கோமாளிக்குக் கிடைக்கவிருக்கும் (தொடர்)

இவற்றில் கட்டார், யெமன், மொரொக்கோ ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை யூத அரசுடனான உறவை சொற்ப காலத்துக்கு ''உறைய'' வைத்துள்ளனவாம்.

எந்த ஒரு அரபு நாடும் இப்போது இருக்கும் மனோநிலையில் இஸ்ரேலுடனான உறவை நிரந்தரமாக அறுத்துக் கொள்ளவோ அல்லது அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக எண்ணெய் ஏற்றுமதி தடையை கொண்டு வரவோ நிச்சயம் துணிய மாட்டார்கள். ஒரு கணப் பொழுதில எதிரியை அடிபணிய வைக்கும் துரும்பு அவர்களிடம் உள்ளது; ஆனால் பாவிக்க மாட்டார்களே!

மக்கள் எழுச்சி ஒரு புதிய திசையில் செல்வதையும், பேச்சுவார்த்தைகள் சோபையிழந்து வருவதையும் இஸ்ரேலியர் கூர்மையாக அவதானித்து வருகின்றனர். எனவே பலஸ்தீன் சுயாட்சி அதிகார சபை என்ற வசனத்தை வெட்டிவிட்டு அவ்விடத்தில் ''பலஸ்தீன குடியரசு" எனவும், அரபாத்துக்கு பலஸ்தீன அதிகார சபையின் தலைவர் என்பதற்கு பதிலாக ''பலஸ்தீன குடியரசின் ஜனாதிபதி" என்ற பெயர்களைக் கொண்டு நிரப்புவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இது க்ளின்டன் வீடு மாறுவதற்குள் நடந்தேற வேண்டும். ஆனால் எப்படியோ தெரியாது!

எந்த முறையை கையாண்டாவது அரபாத்தின் புலம்பலை கட்டுப்படுத்தாவிட்டால் இப்போதுள்ள எழுச்சிக்கு மத்தியில் அவரது செல்வாக்கு உயர்ந்து நிலைமையை இன்னும் சிக்கலாக்கும் என இஸ்ரேலியர் அஞ்சுகின்றனர்.

இவ்விடயத்தை இந்திபாதா வெற்றியை நோக்கி நகர்கிறது என்பதற்கு ஆதாரமாகவும் எடுக்கலாம். ஏனெனில், முன்னைய இந்திபாதாவை நசுக்க பலஸ்தீன அதிகார சபை வழங்கப்பட்டது. இப்போதைய எழுச்சியை நசுக்க ஒரு ''பேப்பர் குடியரசு!"

கஞ்சத்தனத்திலும் சுயநலத்திலும் ஊறிப்போன இஸ்ரேலியர் புரிந்துள்ள இவ்விரு விட்டுக் கொடுப்புக்கள் மற்றும் லெபனானில் ஏற்பட்ட படுதோல்வி ஆகியவற்றை ஒட்டு மொத்தமாக நோக்கும் போது காற்று நம் பக்கம் வீச ஆரம்பித்துள்ளது என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

இந்திபாதா நிச்சயம் தொடரும்; அதன் வெற்றி அடுத்த விடியலுக்குள் வருமென கூற முடியாது. அல்லாஹ் நாடிய போது அது வந்து சேரத்தான் போகிறது. எனினும் குறைந்தபட்சம் முதுகெலும்பு முறிந்துள்ள அரபு ஆட்சியாளர்கள் அருகி, நேர்மையான விசுவாசிகள் ஆட்சிபீடம் ஏறும்வரை காத்திருக்க வேண்டிவரும். ஹமாஸின் சிந்தனையும் இதுதான். அதாவது வக்கற்ற இந்த ஆட்சியாளப் பரம்பரை மாண்டு போனதோடு இஸ்ரேலின் நீதியிலும் அரபாத்தின் சமாதான முயற்சிகளிலும் முழுமையான நம்பிக்கை இழந்த ஒரு இளம் பரம்பரையினரே எதிர்கால பலஸ்தீனை மீட்டெடுப்பார்கள் என்பதுதான் அந்த சிந்தனையாகும். வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது அபாரப் பொறுமையுடன் கடுமையாக உழைப்பதன் மூலமே இதனை சாதித்துக் கொள்ள முடியும். ●


**விற்பனை முகவர்கள் தேவை**

அல்ஹஸனாத்தின் விற்பனை முகவராகி இஸ்லாமிய சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் அல்லாஹ்வின் நற்கூலியையும் பெற்றுக் கொள்ளுங்கள். தொடர்புகளுக்கு:

ALHASANATH, 77, DEMATAGODA RD, COLOMBO 09

# இஸ்லாமிய ஷரீஆவில் விரிவும் நெகிழ்வும்

அரபு மூலம் : கலாநிதி யூஸுஃப் அல்கர்ழாவி தமிழில் : அஷ்ஷெய்க் A. அப்துல் மலிக் நளீமி

## அறிமுகம் :

இஸ்லாமிய உலகு தூர எல்லைகளைக் கொண்டது; பல்வேறு இனங்களைச் சேர்ந்தோரை உள்ளடக்கியது; அங்குள்ள நாகரிகச் சூழல்களும் பலவகையானது; காலமாற்றங்களுக்கு ஏற்ப புதிதாக பிரச்சினைகளும் அங்கு உருவாகிக் கொண்டே இருந்தன. இவற்றையெல்லாம் மிகைத்து தன் விரிவினுள் இஸ்லாமிய ஷரீஆ அவற்றை உள்வாங்கிக் கொண்டது என்பது பொதுவாகவே ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

தன்னுடைய மூலாதாரங்கள், போதனைகள், அடிப்படை விதிகள் என்பவற்றைக் கொண்டு மாறிமாறி வரும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முன்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில், கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் ஒருபோதும் இஸ்லாமிய ஷரீஆ இருக்கவில்லை. நபித்தோழர்களது காலத்தில் மட்டுமல்ல, அடுத்து வந்த ஒவ்வொரு தலைமுறைகளிலும் தைரியமாகவே செயற்பட்டு வந்துள்ளது. அது சுமார் பதின்மூன்று நூற்றாண்டுகள் முழு இஸ்லாமிய உலகிலும் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு வந்த புனித சட்டமுறையாகும்.

மேற்கத்தைய ஆக்கிரமிப்பாளர்கள் இங்கு ஆதிக்கம் பெறும்வரை நடைமுறையில் செல்வாக்குப் பெற்றே விளங்கியது. அவர்கள்தான் இஸ்லாத்திற்குப் பகரமாக மனிதத் தயாரிப்பான சட்டவாக்க முறைகளைப் புகுத்தினார்கள். அல்லாஹ் ஆகுமாக்கிவற்றை தடைசெய்தார்கள்; செய்ய வேண்டாம் என கட்டாயப்படுத்தியவற்றை கட்டுபாடுகளின்றி திறந்து விட்டார்கள்.

எமது இஸ்லாமிய ஷரீஆ ஆளுகைக்கு உட்பட்டிருந்த சமூகங்களின் ஒவ்வொரு தேவைகளையும் பூரணமாக நிறைவேற்ற சக்தி பெற்றிருந்தது. தான் எதிர்கொண்ட அனைத்து சூழல்களில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும் மிகவும் நீதியான, சீரான தீர்வுகளை முன்வைத்தது. காரணம், அதில் அல்லாஹ் உள்ளடக்கி வைத்துள்ள பலமிக்க வழியாகும். மனிதனின் சிந்தனையை விளித்தே இவை பேசும்; மனித இயல்பை உயரே கொண்டு செல்லும், நடைமுறையை கவனத்தில் கொள்ளாது முடிவெடுக்க மாட்டாது; உரிமைகளை முன்வைக்கும் அதேவேளை கடமைகளைப் பற்றியும் ஞபாகமூட்டும்; ஆன்மிகத்துக்கு கொடுக்கும் சம அந்தஸ்தை இவ்வுலக வாழ்க்கைக்கும் வழங்கும்; மறுமையை மாத்திரம் முன்னுரிமை கொடுத்து பேச மாட்டாது; மாறாக, இவ்வுலகையும் அதே அந்தஸ்த்தில் அதற்கான விளைநிலமாக வலியுறுத்தும். அனைத்து மக்களுக்கும் சமநீதி கிடைக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக செயற்படும். மனிதர்களின் நலன்களிலும் பயன்மிக்க அடைவுகளிலும் மும்முரமாக பனியாற்றும் அதேவேளை முடியுமானவரை தீங்கு, சீர்கேடுகள் என்பவை வராமல் விழிப்பாக செயலாற்றும்.

இதனுடன் சேர்த்து அதன் பதிமூன்று நூற்றாண்டுகால ஆதிக்கத்துக்கு அடிப்படைக் காரணமாக இன்னுமொரு அம்சம் விளங்கியது. அது, அல்லாஹ் இஸ்லாமிய ஷரீஆவில் பொதிந்து வைத்துள்ள ஆச்சரியமிக்க நெகிழ்ச்சித் தன்மையாகும். இதன் காரணமாக தனக்கு பரிச்சயமே அற்ற ஒவ்வொரு நிகழ்வையும் உள்வாங்கி முடிவுகளை முன்வைத்தது. இவ்விடயங்களில் கஷ்டம், இயலாமை என எதுவும் இஸ்லாமிய ஷரீஆவுக்கு குறுக்கே வர முடியவில்லை. புதிது புதிதாகத் தோன்றும் ஒவ்வொன்றுக்கும் தனக்குரிய அணுகு முறையில் அனைவரையும் உள்ளடக்கிய தீர்வுகளையே அது வழங்கியது.

ஆகவே, முடியுமானவரை அடுத்த பக்கங்களில் இஸ்லாமிய ஷரீஆவின் விரிவு, நெகிழ்ச்சி தன்மைகளுக்கான காரணிகள் ஆதாரங்கள் என்பவற்றை ஆராய்வோம்.

## வெறுமையாக விடப்பட்ட பிரதேசம்

ஓர் ஆய்வாளன் இஸ்லாமிய ஷரீஆவையும் அதன் விளக்கங்களையும் ஆழமாக கற்கின்றபோது அல்லாஹ் மனிதர்களுக்கு மன்னித்து விட்ட விரிந்த ஒரு பகுதியை அங்கு கண்டுகொள்வான். இப்பகுதியே இஸ்லாமிய ஷரீஆவின் விசாலத் தன்மையில் பெரும்பங்கு வகிக்கும் முதற்காரணியாகும். இன்னும் தெளிவாகக் கூறுவோமாயின் அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் வேண்டுமென்றே மௌனம் சாதித்த வெறுமையாக விடப்பட்ட பிரதேசம் என இதைக் கொள்ள முடியும்.

இஜ்திஹாத் எனும் ஆய்வுத்துறையில் இஸ்லாமிய சட்டவாக்கங்களில் ஈடுபடும் நிபுணத்துவமிக்க அறிஞர்கள் இப்பகுதியை நிரப்ப வேண்டும் எனும் நோக்கத்துடனேயே ஷரீஆவில் இப்பிரதேசம் வெறுமையாக விடப்பட்டுள்ளது. அவர்கள் மக்களுக்கு அதிகூடிய பயனைத் தரும் தீர்வுகளையே பெற்றுக் கொள்ள முயற்சிப்பார்கள். காலம், சந்தர்ப்ப சூழ்நிலை என்பற்றுடன் மிகவும் பொருந்திச் செல்லக் கூடியதாகவே அம்முடிவுகள் அமைய அனைத்துப் பிரயத்தனங்களையும் மேற்கொள்வர். இங்கு ஷரீஆவின் பொதுவான அடிப்படை இலக்குகளை விட்டும் வெளியில் சென்று விடாதிருப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். தீர்வுகளை ஷரீஆவின் உயிரோட்டம், நிலையான போதனைகள் என்பவற்றின் வழிகாட்டலின் நிழலிலேயே பெற்றுக் கொள்வார்கள்.

நபிகளார் (ﷺ) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படும் பொன்மொழியை ஆதாரமாக வைத்தே இப்பகுதியை கீழ்வருமாறு அழைத்தேன். அல்லாஹ்வின் புறத்தே இருந்து வேண்டுமென்றே விடப்பட்ட ''வெறுமையான அல்லது மன்னிப்பு வழங்கப்பட்ட பிரதேசம்'' என்பதே அதுவாகும்.

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**"நிச்சயமாக அல்லாஹ் சிலவற்றை வரையறைகளாகவே இட்டுள்ளான். அவற்றை மீறாதீர்கள்; இன்னும் சில விடயங்களை கடமைகளாக ஆக்கியுள்ளான். அவற்றை பொடுபோக்காக வீணடித்து விடாதீர்கள்; இன்னும் சில அம்சங்களை ஹராமானவை என தடைசெய்துள்ளான். அவற்றிலும் அத்துமீறி விடாதீர்கள்; உங்கள்மீது கொண்ட அன்பின் காரணமாக மற்றைய சில விடயங்களில் மௌனம் சாதித்துள்ளான். மறதியினால் அல்ல; வேண்டுமென்றே அவ்வாறு விட்டுள்ளான். அவற்றை துருவித்துருவி கேட்காதீர்கள்." (தாரகுத்னி)**

'அற்றை துருவித் துருவி கேட்காதீர்கள்' என ஹதீஸில் வந்துள்ள வார்த்தை வஹி இறங்கிக் கொண்டிருந்த காலப் பகுதியில் நபித்தோழர்களுக்கு கூறப்பட்டதாகும். காரணம், அச்செயலின் விளைவாக-அவற்றை அடியிலிருந்து நுனிவரை ஆழமாக தேடிச் செல்வதால் இஸ்லாத்தை பின்பற்றுவதில் சிரமங்கள் ஏற்படலாம். கட்டாயம் செய்தே ஆக வேண்டுமென வாதிக்கப்படும் கடமைகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்; செய்ய வேண்டாம் என ஹராமாக்கப்பட்டவற்றின் பரப்பு விசாலமாகலாம். இவ்வாறு பொறுப்புக்கள் அதிகரித்து தாங்கிக் கொள்ள முடியாதளவு கடினம் மக்களை வந்தடையலாம்.

இதனால்தான் இன்னுமொரு ஹதீஸில் நபியவர்கள் கூறினார்கள்:

**“நான் உங்களுக்கு கூறியவற்றோடு நின்று கொள்ளுங்கள். என்னிடம் மேலதிகமாக எதனையும் கேட்காது என்னை விட்டுவிடுங்கள்.”**

**(புகாரி, முஸ்லிம், அஹ்மத், நஸாஇ)**

இதோ அல்குர்ஆனில் வந்துள்ள வசனத்தைப் பாருங்கள்:

**“ஈமான் கொண்டவர்களே! சில அம்சங்களைப் பற்றி வினவாதீர்கள். அவை பற்றிய விளக்கங்கள் வெளிக் கொணரப்பட்டால் உங்களுக்கே தீங்காக அமையும். அல்குர்ஆன் இறங்குகின்ற வேளையில் நீங்கள் அவற்றைப் பற்றி வினவினால் நிச்சயமாக வெளியிடப்படும். அவற்றை அல்லாஹ் மன்னித்து விட்டான். அவன் மிக மன்னிப்போனும் பொறுமையாளனுமாக இருக்கிறான்” (சூரா அல் மாயிதா:101)**

நாங்கள் ஏன் மன்னித்து விடப்பட்ட பகுதி என பெயரிட்டோம் தெரியுமா? நபிகளார் வரை சென்றடையும் ஒரு ஹதீஸ் ஸல்மான் (ரழி) அவர்களினூடாக அறிவிக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே ஆகும்.

**“தனது வேதத்தில் அல்லாஹ் ஆகுமானவை எனக் கூறியவை அனைத்துமே அங்கீகரிக்கப்பட்டவையாகும்; ஹராம் என தடுத்தவைகள் எல்லாமே செய்யக் கூடாதவையாகும்; அவன் கருத்துத் தெரிவிக்காது மௌனமாக இருந்தவை மன்னித்து விடப்பட்ட விடயங்களாகும். எனவே, அவன் சலுகையாக வழங்கிய மன்னிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ் நிச்சயமாகவே ஏதொன்றையும் மறப்பதற்கு இல்லை எனக் கூறி கீழ்வரும் அல்குர்ஆன் போதனையை ஓதினார்கள்: ‘உமது இரட்சகன் மறதியுடையவனல்ல.” (சூரா மர்யம்: 64:3)**

இவையனைத்துமே எமக்கு தெளிவாக முன்வைக்கும் விடயம் யாதெனில், சுமைகளைக் குறைந்து, ‘மன்னித்து விடப்பட்ட பிரதேசம்’ விரிவாக்கப்பட்டிருப்பது திடீர் நிகழ்வல்ல; எதிர்பாராத விதமாக தோற்றம் பெற்றதுமல்ல. மாறாக, அல்லாஹ் வேண்டுமென்றே திட்டமிட்டு வைத்துள்ள விடயமாகும். இந்த ஷரீஆவில் எவையெவை உள்ளடங்கியிருந்தால அனைத்தையும் உள்ளடக்கும்; என்றைக்கும் நிலைத்திருக்கும்; எக்காலத்திற்கும், இடத்திற்கும், சூழலுக்கும் பொருத்தமாக அமையும் என்பது அவனுக்குத் தெரியும். அவற்றைக் கருத்திற் கொண்டே இவ்வாறான பகுதியையும் தோற்றுவித்துள்ளான்.

**அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பன தலையிடாது விட்ட பகுதியில் சட்ட வாக்கத்தை மேற்கொள்வதற்கான முறைமைகள் :**

வஹி எம்மை விட்டு நின்றுவிட்டதற்குப் பின்னால், இந்த பிரதேசத்தை (மன்னித்து விடப்பட்ட வெறுமையான பகுதியை) சட்டங்களை வகுப்பதன் மூலமும்; தீர்வுகளை ஒழுங்கமைப்பதினூடாக எவ்வாறு நிரப்ப முடியும்? அதனை அல்லாஹ் தஆலா இஜ்திஹாத் எனும் ஆய்வுப் பணியில் முழுக்கவனத்தையும் செலுத்தக் கூடிய நிபுணத்துவ அறிவுமிக்க இஸ்லாமிய அறிஞர்களுக்கு விட்டுவிட்டான். இஜ்திஹாத் பணிக்கு தகுதி கொண்டவர்கள் என்ற நிபந்தனை நிறைவு பெறும்போது இப்பகுதியை நிரப்புவதில் எவ்வித நெருக்கடியும் அவர்களுக்கு எழமாட்டாது.

இடைவெளியாக அல்லாஹ் விட்டு விட்ட இப்பகுதியை அடைக்க முற்படுகையில்தான், அறிஞர்களது வழிமுறைகளும் முறைமைகளும் பல்வேறு கோணங்களைப் பெறுகின்றன. அவை ஒவ்வொன்றும் அதற்கேயுரிய இடத்தில் வைக்கப்படுமானால், தேவையான நிபந்தனைகளைக் கொண்டிருக்குமானால் ஷரீஆ விரிந்து கொடுக்க முகம்சுளிக்காது; அதற்குத் தயாராகவே இருக்கும்.

**01. அல்கியாஸ்**

இங்குதான் இஸ்லாமிய இஜ்திஹாத் பணியில் கியாஸினது பங்களிப்பு இடம் பெறுகிறது. ஒரு விடயத்தில் அல்குர்ஆன் அல்லது அல்ஹதீஸ் தெளிவாக தீர்வைக் கூறியிருக்கும். இன்னுமொரு அம்சத்தினது தீர்வு இதுதான் என இரண்டிலும் ஒன்றுமே கூறாமல் விட்டிருக்கும். இவ்விரு விடயங்களையும் ஒன்றிணைக்கும் காரணம் தெளிவாக காணப்படுமாயின் அவற்றை ஒன்றோடு ஒன்றை சமஅந்தஸ்தில் தொடர்புபடுத்துவதே கியாஸ் ஆகும். இரு அம்சங்களுக்கும் மத்தியில் கருத்திற் கொள்ளத்தக்க இடைவெளியோ வேறுபாடோ காணப்படக் கூடாது.

உதாரணமாக உமர் (ரழி) அவர்கள் செய்த நடவடிக்கையை உற்று நோக்கலாம். அவரது சில மாகாண கவர்னர்கள் இவ்வாறு அறிவித்தார்கள்:

‘சில மனிதர்கள் பாரிய குதிரைப் பண்ணைகளை சொந்தமாகக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் ஒரு குதிரை பத்து ஒட்டகங்களின் பெறுமதிக்கு ஈடாகும். இன்னும் நூற்றுக்கணக்கான ஆடுகளுக்கு சமனான விலையை வந்தடையும். நாங்கள் இவர்களிடம நாற்பது ஆட்டை ‘ஸகாத்’ ஆகப் பெறுவதா? அல்லது குதிரைகளிலிருந்தே எதையாவது எடுப்பதா? எனக் கேட்டனுப்பினர். ‘‘சாதாரண ஆடுகளுக்கும் ஒட்டகங்களுக்கும ‘ஸகாத்’ அறவிடப்படும் போது அவற்றை விட பலமடங்கு பெறுமதி வாய்ந்த குதிரைகளுக்கு ஸகாத் பெறுவது மிக முக்கியமானது” என்ற கருத்தினடிப்படையில் அவற்றிற்கும் ஸகாத் அறவிடுமாறு உமர் (ரழி) அவர்கள் கட்டளையிட்டார். இமாம் அபூஹனீபா (ரஹ்) வும் இந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளார். (ஒரு ஒட்டகம் போன்றே குதிரை வளர்ப்பும் ஒரு வருமான மூலம் என ஒப்பிட்டு நோக்கியுள்ளார்கள்)

இவ்வாறே ‘ஸதகத்துல் பித்ர்’ விவகாரத்திலும் பல அறிஞர்கள் கியாஸ் எடுத்துள்ளார்கள். பேரீத்தம் பழம், பார்லி போன்றனவே ஸகாத் பொருட்களாக ஹதீஸில் இடம்பெற்றுள்ளன. நபிகளாரது காலத்தில் பரவலாக உட்கொள்ளப்பட்ட உணவு வகைகளே அவை. ஆகவே எந்தவொரு நாட்டிலும் பெரும்பான்மை மக்கள் பரவலாகப் பயன்படுத்தும் உணவுப் பண்டத்தை ‘ஸதகதுல் பித்ர்’ ஆக ரமழானில் கெடுக்க முடியும். இது போன்று இன்னுமொரு அம்சத்தையும் குறிப்பிட முடியும்.

கற்புள்ள பெண்களைப் பற்றி அவதூறு கூறியவர்களுக்கு வழங்கப்படும் அதே தண்டனைதான் கியாஸ் அடிப்படையில் கற்புள்ள ஆண்கள் விவகாரத்தில் அவதூறு கூறியவர்களுக்கும் வழங்கப்படும்:

**“கற்புள்ள பெண்களை அவதூறு கூறும் அவர்கள் தமக்கு ஆதாரமாக நான்கு சாட்சிகளைக் கொண்டு வராது போனால் எண்பது கசையடிகளை அவர்களுக்கு வழங்குங்கள்.” (24:4)**

அல்குர்ஆன் மு'மினான பெண்களுக்கு கூறும் சட்டமே வேதம் கொடுக்கப்பட்ட பெண்களைத் திருமணம் செய்வோருக்கும் வழங்கப்படும்.

**“ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ஈமான் கொண்ட பெண்களைத் திருமணம் செய்து உடலுறவு கொள்ளாத நிலையில் விவாகரத்து செய்தால் நீங்கள் கருத்திற் கொண்டுள்ள இத்தா (காலப்பகுதி) அவர்கள் மீது கடமையாகமாட்டாது” (சூரா அல்அஹ்ஸாப் :49)**

ஜும்ஆ வேளையில் வியாபார நடவடிக்கைக்கு உள்ள சட்டம் கூலிக்கு விடுதல் போன்ற அனைத்து வர்த்தகத் தொடர்பாடலுக்கும் கியாஸ் அடிப்படையில் அமுலாகும். அல்லாஹ் கூறுகிறான்:

**“ஜும்ஆவுக்காக அதான் கூறப்பட்டதுமே அல்லாஹ்வை நினைவுபடுத்தும் இந்நிகழ்வை நோக்கி விரைந்து வாருங்கள். வியாபாரத்தை விட்டு விட்டு வாருங்கள்” (சூரா அல்ஜுமுஆ :9)**

நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள:

(50ம் பக்கம் பார்க்க)

## கேள்வி - பதில் :

**கேள்வி :**
**முஸ்லிம் சமூகத்தின் தற்போதைய நிலை பற்றி ஜமாஅதே இஸ்லாமி குறிப்பிட விரும்புவது என்ன?**

**ரிஸ்வான், அகுரணை**

**பதில் :**

பழுதுபார்க்கப்பட வேண்டிய ஒரு மாபெரும் கோட்டை அத்திவாரத்திலிருந்து சிதைவடைந்திருக்கிறது. எனினும் அதனுள் மனித சமூகத்திற்குப் பயன்தரத்தக்க எண்ணற்ற நன்மைகள் புதைந்து கிடக்கின்றன. பயனளித்துக் கொண்டிருக்கும் நன்மைகளும் இருக்கவே செய்கின்றன.

சிலர் அந்தக் கோட்டையை இடித்து விட்டு புதிதாக நிர்மாண வேலையை மேற்கொள்ளலாம் என நினைக்கிறார்கள்; இன்னும் சிலர் தாம் இருக்குமிடத்திலிருந்து கொண்டு ஆங்காங்கே சில பழுதுவேலைகளைக் கவனிக்கிறார்கள்; பலருக்கு இது பற்றிய வேலை இருப்பதாகக் கூடத் தெரியவில்லை. வருந்தத்தக்க விடயம் யாதெனில் பழுதுபார்ப்பவர்கள் தன்னுடன் வேறு துறை நிபுணர்களை இணைத்துக் கொள்ளத் தயாராகவும் இல்லை.

ஆன்மிகம், அறிவு, பண்பாடு, சமூகவியல், பொருளாதாரம், அரசியல், நிதி மற்றும் இன்னோரன்ன துறைகளில் இஸ்லாமிய வழிகாட்டல்களோடு திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையில் இன்றைய முஸ்லிம் சமூகம் இருக்கிறது. இவற்றுள் ஒன்று கிடைத்துவிடுகின்ற போது ஏனையவற்றை மறந்து விடுவதுதான் இந்த சமூகத்தில் புணர்நிர்மானம் எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய சவாலாகும்.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்கள் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்.

**2. முஸ்லிம் சமூகம் உலகில் பல்வேறு சோதனைகளுக்கு உள்ளாகி வருகிறது. தினமும் இந்த அவலத்தைப் பார்க்கும்போது நம்பிக்கையற்ற ஒரு தன்மை உருவாகிறது. சிலர் இந்த அவலத்துக்குக் காரணம், அல்லாஹ்வின் கோபப் பார்வை என்கிறார்கள் உண்மைதானா?**

உலகம் ஓர் உடலைப் போன்றது. அதன் ஒருபகுதி அழுகினால் அதன் மறுபகுதி அந்த அழுகலின் பாதிப்புக்குட்படாமல் எவ்வாறு இருக்க முடியும்?

மனித சமூகத்தில் ஒரு பகுதியில் ஏற்படுகின்ற எந்த ஓர் அழுகலும் மறுபகுதியைத் தாக்காமல் இருக்க மாட்டாது. வரலாற்றில் எப்போதுமில்லாத அளவு இன்று மனித சமுதாயம் சீரழிந்திருக்கிறது. அதன் பாதிப்பை முஸ்லிம் சமூகம் அனுபவித்தேயாக வேண்டும். இது அல்லாஹ்வின் கோபப் பார்வையல்ல; இந்த உலகின் நியதியாகும்.

இந்த இடத்தில்தான் முஸ்லிம் சமூகம் தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டிய அவசியமிருக்கிறது. நன்மையை ஏவி, தீமையைத் தடுத்து மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்துகின்ற மகத்தான பொறுப்பை முஸ்லிம் சமூகம் ஏற்று செயல்பட வேண்டும்.

அதுவரை அல்லாஹ்வின் எச்சரிக்கை இருந்து கொண்டே இருக்கும்.

**"அநீதியிழைத்தவர்களை மட்டுமேயன்றி நல்லோர்களையும் அழிவுக்குள்ளாக்கும் சோதனையைப் பயந்து கொள்ளுங்கள்."**

குர்ஆன் மறுமைநாளின் அடையாளமாக 'க..பதுல்லாஹ்' அழிக்கப்படுவது பற்றி நபி (ﷺ) அவர்கள் குறிப்பிட்ட போது,

**"அங்கு அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருக்கும் நல்லவர்களும் அழிக்கப்படுவார்களா?' என வினவப்பட்டது. அதற்கு நபி (ﷺ) அவர்கள், 'அழிக்கப்படுவார்கள்; ஆனால், மறுமையில் அவரவரது எண்ணங்களுக்கேற்ப எழுப்பப்படுவார்கள்' என்று பதிலளித்தார்கள்."**

எனவே அழிவு நல்லோருக்கு விதிவிலக்கானதல்ல; அல்லாஹ்வின் கோபப் பார்வையுமல்ல. மாறாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

**"மனிதனின் கரங்கள் செய்த தீவினைகள் காரணமாக கடலிலும், தரையிலும் குழப்பங்கள் மலிந்து விட்டன."**

ஆம்! ஒரு தீயசெயல் இன்னுமொரு தீயசெயலை தோற்றுவிக்கிறது. ஓராயிரம் தீமைகள் நடக்கும்போது ஓராயிரம் பாதிப்புகளும் இடம்பெறத்தான் செய்யும்.

**3. பலஸ்தீன் பிரச்சினையை சில தேசிய பத்திரிகைகள் ஒரு மதவெறிப் போராட்டமாக சித்தரிக்க முயல்கின்றன. இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?**

**அமீன், ஹெம்மாதகம**


வரலாறை இவர்கள் இருட்டடிப்பு செய்கிறார்கள். 1900களில் 6 சதவீதமாக இருந்த யூதர்களை 1950 ஆகும் போது 62 சதவீதமாக குடியேற்றி பலஸ்தீன மண்ணை இரத்தக் கறையாக்கிய பயங்கரவாதிகளின் வரலாற்றை இவர்கள் மூடி மறைக்க முயலுகின்றனர். தமது பயங்கரவாதத்தை யூதத்தின் பெயரால் கட்டவிழ்த்து விட்ட இவர்கள் பலம் வாய்ந்த தமது மீடியாக்களால் பலஸ்தீனர்களை மதவெறியர்களாகச் சித்தரிக்க முயற்சி செய்கின்றனர். இந்த அண்டப் புளுகை இங்குள்ள சில பத்திரிகைகளும் கண்ணை மூடிக் கொண்டு காப்பியடிக்கின்றன.

உண்மை யாதெனில் பத்திரிகை சுதந்திரம் என்பதெல்லாம் வெறும் வாய்வீச்சுகளே! பத்திரிகைகளிலும் வெகுசன தொடர்ப்பு சாதனங்களிலும் வாய்களை தாம் விரும்பும் விதமாக அசைக்க அவைகளால் முடியாது. சர்வதேச மீடியாக்களின் அடிமைகளாகவே இவை தொழிற்படுகின்றன.

பலஸ்தீனில் இடம்பெறும் போராட்டம் மதத்திற்கு எதிராக இன்னுமொரு மதம் நடத்துகின்ற போராட்டமல்ல. அநீதிக்கெதிராக, ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் நடத்தும் மக்களெழுச்சிப் போராட்டமாகும். ■

## கத்தார்

### இஸ்லாமிய அறிஞர் யூஸுப் அல்கர்ளாவிக்கு கொலை அச்சுறுத்தல்




புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞரான யூஸுப் அல்கர்ளாவி அவர்களுக்கு யூத தீவிரவாத குழுக்களிடமிருந்து கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. பலஸ்தீன மக்களின் இன்திபாதா எழுச்சியை நசுக்குவதற்காக இஸ்ரேல் கடைபிடிக்கும் பயங்கரவாதத்தை கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் மிக வன்மையாக கண்டித்து வருவதுடன், இஸ்ரேலுக்கெதிராக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றமையே இக்கொலை அச்சுறுத்தல் களுக்கு காரணமாகும். பலஸ்தீன நகரின் மேயரான ராஇத் ஸலாஹ், கர்ளாவி அவர்களை படுகொலை செய்வதற்காக அங்குள்ள தீவிரவாத குழுக்கள் ஆலோசனைகள் நடத்தியுள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது கட்டாரில் வசித்துவரும் கர்ளாவி அவர்கள் பலஸ்தீனர்களின் இன்திபாதாவை ஆதரித்து பல இடங்களில் பேசிவருவதுடன், இஸ்ரேலிய பயங்கரவாதத்திற்கு எதிராக வீதியில் இறங்கி எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடத்தி வருகிறார். ''இஸ்ரவேலர்களுடன் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை; வன்முறை பாஷையை மாத்திரமே அறிந்த அவர்களுக்கு அல்ஜிஹாத் போராட்டம் மூலமே பதிலளிக்க வேண்டும்'' என்ற கருத்தை மிகப் பலமாக பேசி வருகிறார். முஸ்லிம்கள் மத்தியில், குறிப்பாக அரேபியர்களுக்கு மத்தியில் மிகுந்த செல்வாக்கும், மதிப்பையும் பெற்றுள்ள கர்ளாவி அவர்களின் பேச்சினால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இஸ்ரேலுக்கெதிரான போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இந்நிலை இஸ்ரேலின் ஸ்திரத்தன்மைக்கு பலத்த அச்சுறுத்தலாக கருதப்படுகிறது எனவே யூத மதகுருக்கள் கர்ளாவி அவர்களின் தொலைக்காட்சி பேச்சுக்கள் மக்கள் மத்தியில் சென்றுவிடாதபடி தடைசெய்யப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளனர். கர்ளாவி அவர்களின் உயிருக்கு ஆபத்து என்ற செய்தி கிடைத்ததும், அவருக்கு மெய்க்காப் பாளர்களை வழங்க கத்தார் அரசு முன்வந்தபோது, ''நான் இஸ்ரேலுக்கு பயப்படவில்லை; அல்லாஹ்வுக்கு மாத்திரமே பயப்படுகிறேன்'' எனக் கூறி அப்பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்க மறுத்துவிட்டார்.

## எகிப்து

### முபாரக்கின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் இக்வான்கள் வெற்றி



பிர்அவ்னின் வழிவந்த, எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் பலத்த இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் நடைபெற்ற அந்நாட்டு சட்டமன்றத் தேர்தல்களில் அல்இக்வானுல் முஸ்லிமூன் அங்கத்தவர்கள் 16 பேர் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர். அங்கிருந்து கிடைக்கும் செய்திகளின் அடிப்படையில், மூன்று கட்டங்களாக நடைபெற்ற தேர்தல்களில் ஏராளமான மோசடிகளும், இராணுவததினரின் அத்துமீறல்களும் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வராமல் தடுப்பதற்காக பல இடங்களில் மக்கள்மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பயன்படுத்தியுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்குள்ளும் இவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. 'சுபுஹான் அல்கீமா' என்ற ஊரில் காலை எட்டு மணிக்கு திறக்கப்பட வேண்டிய வாக்களிப்பு நிலையங்களை பகல் ஒரு மணிவரை திறக்க விடாமல் இராணுவத்தினர் அட்டகாசம் புரிந்துள்ளனர். எகிப்தின் மொத்த பாராளுமன்ற ஆசனங்கள் 444ல், அல்இக்வானுல் முஸ்லிமூன் அங்கத்தவர்கள் 16 ஆசனங்களையும், ஏனைய பதிவு செய்யப்பட்ட கட்சிகள் 12 ஆசனங்களையும் பெற்றுள்ளன. 1995ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பலதரப்பட்ட மோசடிகளுக்கு மத்தியில் ஆளும் கட்சியினர் 97% வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இம்முறை நடைபெற்ற தேர்தலில் இக்வான்கள் சுயேச்சையாகவே தேர்தலில் போட்டியிட்டனர். எகிப்தில் அல்இக்வானுல் முஸ்லிமூன் இயக்கம் தடைசெய்யப்பட்டிருப்பதுவே இதற்கான காரணமாகும்.

## கசாகிஸ்தான்

### வெளிநாடுகளில் உள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகங்களில் கற்கத் தடை?

மத்திய ஆசியாவுக்கு வெளியே உள்ள இஸ்லாமிய கல்வி நிறுவனங்களுக்கு சென்று படிக்கும் அனுமதி இனிமேல் கசாகிஸ்தான் மாணவர்களுக்கு கிடைக்க மாட்டாது. அந்நாட்டு உயர்கல்வி அதற்கான திட்டங்களை அதிகாரிகள் தீட்டுவதாகத் தெரிகிறது. தற்போது வெளிநாடுகளில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களையும் மீளஅழைப்பதற்கு அதிகாரிகள் தயாராகி வருகின்றனர்.

வெளிநாட்டில் இஸ்லாமிய கல்வி பயிலும் வரையறையின்றிய மாணவர்களால் கசாகிஸ்தானின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக அரசாங்கம் கருதுவதாலேயே இத்தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கஸாகிஸ்தானின் உயர்கல்வி திணைக்களத்தின் தலைவர் அப்துல் முத்தலிப் அப்ராப்ஹோவ் அந்நாட்டு தொலைக்காட்சியில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை தெரிவித்தார். அவர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், ''பலர் கல்வி அமைச்சின் தொடர்புகள் எதுவுமின்றி வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். அவர்கள் என்ன செய்கிறார்கள், யார் எங்கே படிக்கிறார்கள் போன்றவை தெரியாமல் இருக்கிறது.'' என்றார்.

தற்போது கசாகிஸ்தானைச் சேர்ந்த 30 மாணவர்கள் சஊதியிலும், 29 பேர் ஈரானிலும், 29 பேர் பாகிஸ்தானிலும், மற்றும் 29 பேர் எகிப்திலும் உயர்கல்விக்காக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சியோனிஸ்ட்களுக்கு எதிராக போராடுங்கள்! ஆக்கிரமிப்பாளர்களின் பொருட்களை பகிஷ்கரியுங்கள்!!

### கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி முஸ்லிம்களுக்கு பகிரங்க அழைப்பு!

''அமெரிக்க, சியோனிச பொருட்களை வாங்க வேண்டாம்; குறிப்பாக கொகா கோலா, பெப்ஸி, பிஸ்ஸா மற்றும் மெக் டொனால்ட்ஸ் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களை வாங்குவது ஹராம் என்பதாக கர்ளாவி கருத்து வெளியிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

''இவர்களுடைய பொருட்களை வாங்குவதற்காக செலவிடும் அணுவளவு தொகையும், பலஸ்தீனில் ஒரு சகோதரனை கொன்றுவிடும்'' என்றார். ''இவ்வாறான பகிஷ்கரிப்பு மிக உயர்ந்த வாஜிபாகும்; அது சியோனிஸ எதிரிகளுக்கெதிரான முஸ்லிம் உம்மத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பின் அடையாளமுமாகும்'' என்பதாக கலாநிதி கர்ளாவி குறிப்பிட்டார்.

அரபு நாடுகளின் பெரும்பாலான செல்வங்கள் அமெரிக்க வங்கிகளிலேயே முடக்கப்பட்டுள்ளன. இவை அங்கிருந்து எடுக்கப்படுமானால் அமெரிக்க அரசாங்கம் பலத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம் என பொருளியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். டாக்டர் சுலைமான் அல்முன்திரி என்ற பொருளாதாரத்துறை அறிஞர் குறிப்பிடும்போது,

''அமெரிக்காவில் வைப்புச் செய்யப்பட்டுள்ள செல்வங்களினாலேயே 4 மில்லியன் அமெரிக்கர்களின் வயிறு நிறைகிறது. அதாவது தற்போதைய கணக்கின்படி சுமார் 800 பில்லியன் டாலர் அரேபிய பணம் வெளிநாடுகளில் உலாவிக் கொண்டிருக்கிறது. இதில், 66% பணம் அமெரிக்க வங்கிகளில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன மக்களின் மூன்றாவது இன்திபாதா எழுச்சியின் காரணமாக பல்லாயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1987-93 காலப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது இன்திபாதாவின் போது சுமார் 18,00 பேர் பலத்த காயங்களுக்குள்ளாயினர். தற்போது நடைபெற்று வரும் இப்போராட்டத்தில் இதுவரை 7,000 பேர் காயப்பட்டுள்ளனர். இவர்களுள் அதிகமானோர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரேபிய நாடுகளில் உள்ள கடைகளில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் பொருட்களை தவிர்க்கக் கூறும் பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. எகிப்தில்,

''எதிரிகளுடனான தொடர்புகளை துண்டிப்பது நாட்டுக்கு செய்யும் கடமை மட்டுமல்ல; மார்க்கத்தின் உயர்ந்த பர்ளுமாகும்'', ''பலஸ்தீனில் எமது சிறார்களின் உயிர்களை பறிப்பவர்களுடனான தொடர்புகளை துண்டிப்போம்'', ''எமது பணத்தால் எமது பிள்ளைகள் கொல்லப்பட மாட்டார்கள்'' போன்ற வாசகங்கள் தொங்கவிடப்பட்டிருந்தமையை காணக்கூடியதாக இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## இஸ்ரேல், எகிப்து, ஜோர்தான் ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா உதவி

அமெரிக்க ஜனாதிபதி பில் க்ளின்டன் 450 அமெரிக்க டாலர்களை இஸ்ரேலுக்கு உதவித் தொகையாக கொடுக்க அனுமதிக்குமாறு அந்நாட்டு காங்கிரஸிடம் கேட்டுள்ளார். பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேலின் இராணுவ அத்துமீறல் குறித்த முஸ்லிம் உலகத்தின் பலத்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இத்தொகை ஏற்கனவே உதவித் தொகையாக கொடுத்த 2.78 பில்லியன் டாலர்களுக்கு கூடுதல் தொகையாக இருக்கும். அத்துடன் லெபனானிலிருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ்பெற்ற பின்னர், ஹிஸ்புல்லாக்களிடமிருந்து அச்சுறுத்தல்கள் வரலாம் என்ற யூகத்தின் அடிப்படையில் ஏவுகணைகளை கொள்வனவு செய்வதற்காக சுமார் 400 மில்லியன் டாலர்களை இஸ்ரேல் ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறது.

அதேவேளை, எகிப்துக்கும், ஜோர்தானுக்கும் உதவித் தொகையாக 225 மில்லியன் டாலர்களையும் அதிபர் கிளின்டன் கேட்டுள்ளார். இத்தொகையில் 225 டாலர் எகிப்துக்கும் 75 மில்லியன் ஜோர்தானுக்கும் வழங்கப்படவுள்ளது. முஸ்லிம்களின் முதல் கிப்லாவான பைதுல் மக்திஸை சியோனிஸ ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள போராட்டத்தை அரேபிய நாடுகள் அனைத்தும் ஆதரித்து வருகையில் எகிப்தும், ஜோர்தானும் அதற்கு முரணான கொள்கையை கடைபிடித்து வருகின்றன. ஜோர்தானில் அமெரிக்காவுக்கு எதிராக ஊர்வலங்கள் நடத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தடைவிதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கென்யா

### கென்ய முஸ்லிம்கள் இஸ்ரேல், அமெரிக்காவுக்கு எதிராக ஜிஹாத் செய்ய வருமாறு அழைப்பு

இஸ்ரேலுக்கும், அதன் பயங்கரவாதத்தை ஆதரித்து வரும் அமெரிக்காவுக்கும் எதிராக புனிதப்போர் செய்ய, அரபுநாடுகள் அழைப்பு விடுக்க வேண்டுமென கென்யா உலமாக்கள் மஜ்லிஸின் தலைவர் அஷ்ஷெய்க் முஹம்மத் தூதா அரபு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

22.10.2000 அன்று கென்ய நகரான மம்பாஸாவில், இஸ்ரேலுக்கு எதிராக நடத்தப்பட்ட பாரிய எதிர்ப்பு ஊர்வலமொன்றிலேயே அவர் இவ்வழைப்பை விடுத்தார். அவர் அங்கு பேசும்போது, எமது சகோதரர்களான பலஸ்தீனர்கள் மீது நடாத்தும் படுகொலைகள் நிறுத்தப்படாவிட்டால் அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். மேலும் கென்ய அரசாங்கம் பலஸ்தீனர்களின் உணர்வுகளை புரிந்து முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் இறங்கும் வரை இவ்வூர்வலம் தொடர்ந்து நடைபெறும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கென்யாவில் உள்ள முஸ்லிம் பெண்களும், பலஸ்தீனில் பெண்கள், சிறுமிகளின் மீது இஸ்ரேலின் அடாவடித் தனங்களுக்கு எதிராக தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். இக்கூட்டத்தில் அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலுக்கெதிரான பலஸ்தீனர்களின் இன்திபாதா போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலப்பகுதியிலேயே அமெரிக்கா பல ஆபிரிக்க நாடுகளில் இருக்கும் தனது தூதுவராலயங்களை மூடியமை குறிப்பிடத்தக்கது.

## பிரச்சினைகளும் சவால்களும்.... (தொடர்)

நம்பிக்கைக்குமிடையே தொடர்பில்லாதிருக்கலாம். ஆனால், ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை அவ்வாறன்று. எனவே இஸ்லாமும் அதன் இலட்சியமும் புரிந்து கொள்ளப்படுவது போன்று அதன் சட்ட திட்டங்கள், நம்பிக்கைக் கோட்பாடுகள், வரையறைகள் என்பவற்றை ஒரு முஸ்லிம் மிகச்சிறப்பாகவும், தெளிவாகவும் விளங்கிக் கொள்ளுதல் இன்றியமையாத கடமையாகும்.

இறுதியாக, இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைகளைக் களைந்துவிட்டு இஸ்லாமிய உணர்வை தன்னுள் ஏற்படுத்தி மிக விசாலமான சுவனத்தின்பால் பயணிப்பது ஒரு முஸ்லிமின் இலக்காக அமைந்துவிட வேண்டும். அல்குர்ஆன் இவ்வாறு அழைக்கிறது:

**“வானம் பூமியை விட விசாலமான சுவனத்தின்பாலும், அல்லாஹ்வுடைய மஃபிரத்தின்பாலும் விரைந்து வாருங்கள்.” (3:133)**

(இன்ஷாஅல்லாஹ் தொடரும்)

**துணை நின்றவை:**

1. அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு: முஹம்மது ஜான் ட்ரஸ்ட் வெளியீடு
2. நாளும் பழக நபிமொழி நாற்பது மௌலானா செய்யித் ஹாமித் அலி
3. த்.வாவும் நவயுகத்தின் சவாலும் - செய்யத் அபுல் ஹஸன் அலி நத்வி

## சட்டத்துறையில் இஜ்திஹாதின் (தொடர்)

கூடிய கவனம் செலுத்தினார்கள் எனவும் ஒரு குறிப்பு உண்டு. இமாம் அபூ யூஸுப் (ரஹ்) அவர்கள் இத்துறையில் ஒரு தனிப் புத்தகம் எழுதினார்கள். என்றாலும் சட்டத்துறை வரலாற்றில் இத்துறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு நூலை அர்ரிஸாலா எனும் பெயரில் முதன் முதல் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தான் எழுதியுள்ளார்கள்.

உண்மையில் சட்டத்துறை வளர்ச்சியில இஜ்திஹாதின் பங்களிப்பை மேலும் விளங்குவதற்கு மத்ஹபுகள் பற்றிய தெளிவு அவசியமாகும். எனவே, இக்காலத்தில் தோன்றிய இமாம்கள் இஜ்திஹாதைப் பயன்படுத்தி சட்டத் துறையை வளர்த்த முறையை பின்னர் விளக்கமாக நோக்குவோம்.

**(குறிப்பு: உஸ்தாத் அப்துல் வஹ்ஹாப் ஹல்லாப் அவர்களின் இஸ்லாமிய சட்டவாக்கத் துறையின் வரலாற்று சுருக்கம் எனும் நூலின் தழுவல்)**

## ஸகாதுல் பித்ர்.... (தொடர்)

இமாம்களின் காலத்தில் சமூக நிலை மாற்றமடையவே சற்று விரிவான கருத்துகளை அன்றைய முஜ்தஹித்கள் முன்வைத்தனர். அவர்களின் இஜ்திஹாத் தீர்மானங்கள் நியாயமானவையாகும். ஏனெனில் அத்தீர்ப்புகள் இஸ்லாமிய ஷரீஆவின் உயிரோட்டம், ஸகாதுல் பித்ரின் நோக்கங்கள் என்பவற்றையும் காலத்தின் தேவையையும் கருத்திற் கொண்டமைந்தன.

ரமழானின் ஆரம்பத்திலிருந்து கொடுக்க முடியும் என ஷாபிஈ மத்ஹப் இமாம்களும் ரமழான் பிறை 16 முதல் கொடுக்கலாம் என ஹன்பலி மத்ஹப் இமாம்களில் இருவரும் குறிப்பிட்டுள்ளனர். ஹனபி மத்ஹபில் இதனைவிட தாராளமாக இவ்விடயம் அனுகப்பட்டுள்ளதையும் மேலே கண்டோம். நவீன இஸ்லாமிய அறிஞர் யூஸுப் அல்கர்ழாவீ அவர்களும் ரமழானின் ஆரம்பத்திலிருந்து கொடுப்பது தான் சிறந்தது எனும் கருத்தையே அங்கீகரித்துள்ளார்கள்.

எனவே எதிர்வரும் ரமழானின் ஆரம்பத்திலிருந்தே, ஸகாதுல் பித்ரை பெறுபவரின் ஏழ்மை நிலையோடு அவரது நடத்தைகளையும் கருத்திற் கொண்டு பொருளாகவோ, பணமாகவோ கொடுக்க முஸ்லிம்கள் அனைவரும் முன்வருவதற்கான நல்லெண்ணத்தை அவர்களின் உள்ளங்களில் மலரச் செய்யுமாறு அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.

**உசாத்துணைகள் :**

முஷ்கிலதுல் பக்ர் - கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி

அல்பிக்ஹுல் இஸ்லாமி - Dr. வஹ்பதுல் ஸுஹைலி

பிக்ஹுஸ் ஸுன்னா கலாநிதி ஸையத் ஸாபிக்

## இணையாது செல்லும்.. (தொடர்)

இது தாஇகள் பக்கம். இனி சமூகத் தொண்டர்கள் பக்கம் நோக்கினால் அவர்களுக்கு இஸ்லாத்தை விட ‘இருப்பு’ முக்கியமானதாக இருக்கும். அவர்கள் தங்களை நோக்கி மக்களை அழைப்பதற்காக இஸ்லாத்தையும் பார்வைக்கு வைத்துக் கொள்வார்கள். JVP க்கு ‘பர்தாவும்’, ‘பலஸ்தீன் பிரச்சினை’யும் போல.

எல்லோரும் எல்லாவற்றையும் பயன்படுத்தி தங்களைக் கவனித்துக் கொள்கிறார்கள். இஸ்லாத்தைக் கவனிப்போர் இருக்கிறார்களா? இருப்பையும் இலக்கையும் ஒன்றிணைப்பதற்காக..!

## இஸ்லாமிய ஷரீஆவில்...

**“தனது சகோதரன் உடன்படிக்கை செய்து முடித்துள்ள வியாபாரத்திற்கு எதிராக உங்களில் ஒருவர் வியாபாரம் செய்ய வேண்டாம்” (புகாரி, முஸ்லிம்)**

கியாஸை வைத்துப் பார்க்கும்போது, வியாபாரம் மற்றும் வேறு எந்த வர்த்தக உடன்படிக்கைகளாயினும் இன்னுமொரு சகோதரனுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படக் கூடாது.

நபிகளாரது பொன்மொழியில் தங்க வெள்ளிப் பாத்திரங்களில் குடிப்பதும் சாப்பிடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. கியாஸின் நிழலின்கீழ் அவையிரண்டு மாத்திரமல்ல, அவற்றிலிருந்து பயனடையும் அனைத்து நடவடிக்கைகளும் தடைச் சட்டத்திற்கு உட்படுகின்றன. அவற்றில் குளித்தல், அவற்றிலிருந்து எண்ணெய் பூசுதல், அவற்றிலிருந்து சுறுமா கண்களுக்கு இடுதல் போன்ற எதுவாயினும் சரியே.

**“தங்கம், வெள்ளி பாத்திரங்களில் உணவு உட்கொள்ளாதீர்கள். அவற்றிலிருந்து குடிவகைகளை அருந்தாதீர்கள்.” (புகாரி, முஸ்லிம், அபூதாவத், நஸாயி)**

இமாம் ஷாபிஈ அவர்களது சீடரான இமாம் அல்முஸ்னி (ரஹ்) கூறுகையில், ‘‘நபிகளாரது காலந்தொட்டு இன்று வரையுள்ள சட்டக்கலை அறிஞர்கள் -இனிமேலும்- அவர்களது மார்க்க விவகாரங்களுடன் தொடர்புடைய அனைத்து சட்டங்களைப் பெறுவதிலும் பிக்ஹ் சட்டக்கலையில் கியாஸைப் பயன்படுத்தியுள்ளனர்” என்கிறார்.

இன்னும் விளக்குகிறார்: ‘‘அவர்கள் ஏகோபித்து உடன்பாடு கண்ட விடயம், சத்தியத்திற்கு ஒப்பானது சத்தியமே; அசத்தியத்தைப் போன்று நிகராகக் காணப்படுவது அசத்தியமே. யாரும் கியாஸை மறுத்துரைப்பது கூடாது. ஏனெனில் அது விடயங்களை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு நோக்குவதாகும்; ஒத்தவைகளை இனங்கண்டு கொள்வதாகும்”

நான்கு மத்ஹபின் இமாம்களும், பெரும்பான்மை முஸ்லிம் சமூகமும் கியாஸை பயன்பாட்டுக்கு எடுத்துள்ளன. அதன் யதார்த்தம், அடிப்படைகள், நிபந்தனைகள், பயன்படுத்தக் கூடிய எல்லைகள் என்பவை தொடர்பாக மேலதிக ஆய்வுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். தமது மத்ஹபுகளுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவிய போதிலும்; மேற் குறிப்பிட்ட விடயங்களை கையாள்வதில் வேறுபட்ட வழிமுறைகளைக் கொண்டிருந்த போதிலும் விரிவாக தகவல்களை வழங்கிச் சென்றுள்ளனர். பிக்ஹ் சட்டக் கலையின் அடிப்படைகள் சம்பந்தமாக எழுதப்பட்ட நூல்களில் அவற்றைக் கண்டு கொள்ள முடியும். (தொடரும்)

# புதிய மாணவர்களைச் சேர்த்தல் 2001

## அமீனிய்யா அரபுக்கல்லூரி

### நிகவெரடிய

குருநாகல்- புத்தளம் வீதியில் அமைந்துள்ள மேற்படி கல்லூரிக்கு இவ்வருடம் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இக்கல்லூரியில் அரபு பாடங்களுடன் ஆங்கிலம், சிங்களம் போன்ற பாடங்கள் போதிக்கப்படுவதோடு க.பொ.த (சாதாரணதர), (உயர்தர) பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயார்படுத்தப்படுகின்றனர். அத்துடன் மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

எனவே பின்வரும் தகைமையுடையோர் கீழ்காணும் முகவரிக்கு, முத்திரை ஒட்டப்பட்டு சுயவிலாசமிடப்பட்ட நீண்ட கடித உறை அனுப்பி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

**தகைமைகள் :**

- 01.01.1986க்கு பின் பிறந்திருத்தல்
- 08ம் ஆண்டு சித்தியடைந்திருத்தல்
- அல்குர்ஆனை நன்கு ஓதத் தெரிந்திருத்தல்
- தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல்

**விண்ணப்ப முடிவுத் திகதி : 25.11.2000**

அதிபர்
அமீனிய்யா அரபுக் கல்லூரி, குருநாகல் வீதி, நிகவெரட்டிய
(தொலைபேசி : 037-60382)

# புதிய மாணவர்கள் அனுமதி 2001

## காஸிமிய்யா அரபுக்கல்லூரி

### புத்தளம்

**தகைமைகள்**

- பாடசாலையில் தரம் 9 அல்லது 10 அல்லது 11 சித்தியடைந்திருத்தல்
- விண்ணப்பதாரி 15 வயதுக்கு குறைந்தவராக இருத்தல்
- அல்குர்ஆனை சிறந்த முறையில் ஓதத்தெரிந்திருத்தல்
- தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல்

மாணவர்கள் G.C.E (O/L), (A/L) பரீட்சைகளுக்கும் அல்ஆலிம் பரீட்சைகளுக்கும் தயார்செய்யப்படுகிறார்கள். முழுப் பாடத்திட்டத்தையும் பூர்த்தி செய்வோருக்கு Computer, Motor Mechanism என்பன கற்பிக்கப்படும்

சுயமாக தயாரிக்கப்பட்ட படிவத்தில் பெயர், முகவரி, பிறந்த திகதி கல்வித் தகைமைகள் போன்ற விபரங்களை குறிப்பிட்டு 30.12.2000 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

The Principal
Casimiyya Arabic College, Mannar Road, Puttalam
T.P: 032-65738/65059 E-Mail: casimiya@eureka.lk

**பொது அறிவுப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்**

நவம்பர் மாத அல்ஹஸனாத் இதழைப் பரிசாகப் பெறும் தம்பி தங்கைகள் பத்துப் பேர்:

01. நுஸ்ரத் பேகம்
ஆண்டு : 08
ஹுசைனியா புரம், பாலாவி
புத்தளம்

02. M.J பாதிமா பஹீமா
தரம் : 08
564 தல்துவ
அவிஸ்ஸாவெல்ல

03. B. பாஹிம்
ஆண்டு : 05
கிண்ணியா அல்அக்ஸா ம.வி.
கிண்ணியா

04. றிஸாபா ஸரூக் பைஸல்
ஆண்டு : 07
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கல்எலிய

05. பா. செமீனா ஹலீம்தீன்
ஆண்டு : 05
பாத்திமா முஸ்லிம் மஹாவித்தியாலயம்.
கொழும்பு

06. A.Z.M. றிப்னாஸ்
ஆண்டு : 06
அறபா முஸ்லிம் ம.க.,
உடுகொட

07. பாதிமா றிஸ்கா
ஆண்டு : 08
48/19E, பீர் ஸாஹிப் வீதி
கொழும்பு

08. Z.A. பாத்திமா பஹ்மிதா
ஆண்டு : 05
நெல்லியகம மு.வி
நெல்லியகம.

09. நுஸ்ரத் பராஹ்
ஆண்டு : 08
145/1, அம்பகமுவ ரோட்
கம்பளை

10. முஹம்மத் ஹஸான்
ஆண்டு : 07
வனிகசேகர இடம்,
தலவாக்கலை

**அனுப்ப வேண்டிய முகவரி :**
'SIRUVAR POONGA'
ALHASANATH
77, DEMATAGODA ROAD,
COLOMBO - 00900

## அல்ஹஸனாத்தின் ஆசிரியர் யார்?

ஒக்டோபர் 2000 அல்ஹஸனாத்தின் அனைத்து ஆக்கங்களும் மிக ரம்யம். அதிலும் குறிப்பாக உலகச் செய்திகள் என் மனதை கலக்கத்துக்குள்ளாக்கியதுடன் சந்தோஷத்தையும் தரக்கூடியதாக இருந்தது. அதாவது சஊதி அரேபிய முஸ்லிம்களின் சகோதரத்துவமும் பனிரெண்டு வயது பாலகனின் தாராளத்தன்மையும் மெய்சிலிர்க்க வைத்தன. சஊதி அரேபிய முஸ்லிம்கள் பலஸ்தீன முஸ்லிம்களுக்கு கைக்கடிகாரத்தைக் கூட வழங்கியது போல் எம் நாட்டு சகோதரர்களும் அவர்களுக்கான உதவிகளை வழங்க முன்வருவார்களா? அல்ஹஸனாத் ஆசிரியரின் பெயர் இவ்விதழில் வெளியாகுவதில்லை. ஆசிரியரின் பெயரையும் இதழின் முன் பக்கத்தில் பிரசுரித்தால் சிறப்பாக இருக்கும்

M.F.M. அம்ஜத்,
சிறாஜ் நகர்

## தாஇகளுக்கு வழிகாட்டும் அல்ஹஸனாத்!

அல்ஹஸனாத் இதழ் 10 தாங்கிவந்த ரஸூலுல்லாஹ்வின் த்ஃவா என்ற பகுதியில் "அவன் பார்வையாளனல்லன்: பங்காளனே!" என்ற தலைப்பிலான ஜமாஅத் அமீர் அவர்களின் கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. (அல்ஹம்துலில்லாஹ்) த்ஃவா களத்தில் சிறந்த அனுபவங்களைப் பெற்றுள்ள அமீர் அவர்கள் இக்கட்டுரையில் தாஇகளின் பலவீனங்களை இனங்கண்டு அவற்றை திருத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கான இஸ்லாமிய வழிமுறைகளை ஆக்கபூர்வமாக முன்வைத்திருப்பது இன்றய த்ஃவா களத்திலுள்ள தாஇகளுக்கு மிகவும் வரவேற்புடையதாய் அமைந்திருந்தது. இவ்வாறான உயிரோட்டமுள்ள ஆக்கங்களை தன்னகத்தில் தாங்கிவரும் அல்ஹஸனாத் அதன் இலட்சியப் பாதையில் நிலைத்து நிற்க அல்லாஹ் அருள்புரிவானாக!

S.M.F. ஹுஸ்னா சலாம், சிலாபம்

## பயன்பெறுவேன் இனியும்

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்..
உங்கள் நிறுவனம் ஆற்றிவரும் சேவையை நிச்சயமாக இறைவன் மேலும் ஸ்திரப்படுத்தி வைப்பான். இன்ஷா அல்லாஹ்.
தங்களுடைய வெளியீடுகளில் அல்ஹஸனாத் மாத இதழின் பார்வையாளர்களில், சுவாசிப்பவர்களில் அதை வாசித்து பயன்பெறுவர்களில், பெற்றவர்களில் இன்ஷா அல்லாஹ் பெறப்போகிறவர்கள் பட்டியலில் சகல வல்லமையும் பொருந்திய இறைவன் என்னையும் ஒருவனாக ஆக்கிக் கொண்டதையிட்டு உளம் மகிழ்கிறேன். மறுமையின் சுவர்ண இல்லமாகிய சுவர்க்கத்தில் இடம்பெறும் நல்லடியார்களின் கூட்டத்தின் பட்டியலிலும் எம்மனைவரையும் அல்லாஹ் சேர்த்து வைப்பானாக. ஆமீன்!
மேலும், மென்மேலும் உங்கள் பணிவளர என்றும், என்றென்றும் பிரார்த்தித்தவனாக இறைவனின் அருளைப் பெற்ற அடியானாக..

பெரோஸ் அஹமட், அக்கரைப்பற்று

## இறைசிந்தனை தூண்டினீர்

அற்புத அம்சங்களை அணைத்து வரும் அல்ஹஸனாத்தே வருக! "வானங்கள் பூமி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும் இரவு-பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் இருக்கின்றன" என்ற வல்ல இறைவனின் வசனங்களை எண்ணி பூட்டிக் கிடந்த எங்களது இதயங்களையும் தட்டிவிட்ட ஆக்கில் அஹமத் அவர்களின் தொடர்ச்சியன ஆக்கங்கள் மிகவும் பிரயோசனமானவை. அவருக்குரிய கூலியையும் எங்களுக்குரிய கூலியையும் இறைவன் தந்தருள வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

ஆபிதா முஸ்லிமா
புத்தளம்

## தூரத்திலிருப்பவர்களுக்கு நல்ல துணை

இன்று தொழுகையை, அதுவும் மூன்று அல்லது நான்கு நேரம் தொழுது விட்டு கடமை முடிந்துவிட்டது என்று எண்ணும் நமக்கு, இஸ்லாம் தொழுகை மட்டும் அல்ல; நாம் உண்ணுவது முதல் ஆட்சி புரியும் வரை இஸ்லாமிய தீன் என்பதை நபி (ﷺ) அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். இன்று உலக முஸ்லிம்களின் நிலை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, அவற்றை எவ்வாறு எதிர்நோக்குவது போன்ற விடயங்களை இஸ்லாமிய நோக்கில் அல்ஹஸனாத் தருகிறது. அது மட்டுமல்லாமல் எம்மைப் போன்ற வெளிநாடுகளில் பணிபுரியும் சகோதரர்களுக்கு இஸ்லாத்தை நல்லமுறையில் கற்றறிய நல்லதோர் சந்தர்ப்பத்தை அல்ஹஸனாத் மாத இதழ் தருகிறது. இதுபோன்று இன்னும் பல பிரயோசனமுள்ள, மக்களிடம் நல்ல விளைவை ஏற்படுத்தக்கூடிய ஆக்கங்களை சுமந்து வர எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

எம்.ஏ.எம். பயிஸல் - குவைட்

## மெய்சிலிர்க்கச் செய்யும் ஆக்கம்

அல்ஹஸனாத் இதழ் 10 இல் வெளியான டாக்டர் ரயீஸ் அவர்களின் 'டயரியிலிருந்து' என்ற ஆக்கம் எம்மை மெய் சிலிர்க்கச் செய்தது. உண்மையில் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி மறந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொள்ள இந்த ஆக்கம் துணைபுரிந்தது. இவ்வாறான ஆக்கங்கள் இஸ்லாத்தை தூரத்தே நின்று கைகட்டி பார்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் பெயர் தாங்கியவர்களின் இறுகிய இதயங்களை உருக வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இவ்வாறான ஆக்கங்களை அடிக்கடி பிரசுரிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சஹீமா, ஜமன் - புத்தளம்

2001 AUGUST தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக

# THE LANKA TEACHER நிறுவனம் நடத்தும்

## முன்னோடித் தொடர் பரீட்சைத் திட்டம் - 2000/2001

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் இப்பரீட்சைத் திட்டத்திலே 2001 August இல் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் அனைத்து மாணவர்களையும் இணைத்து கொள்ளுமாறு (பகுதி I, II, அடங்கிய) 24 வினாத்தாள்களை மாணவர்களுக்காக வழங்குகிறோம்.

2001 January முதல் July வரை 12 முன்னோடி வினாப் பத்திரங்களை (பகுதி I, II அடங்கிய 24 வினாத்தாள்களை) மாணவர்களுக்காக வழங்குகிறோம்.

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களைக் கொண்ட இவ்வினாத்தாள்களை தென்கிழக்கில் பிரபல்யமிக்க The Lanka Teacher ஆசிரியர் குழாம் தயாரிக்கிறது.

எமது வினாத்தாள்களை தங்கள் மாணவர்களையும் செய்யத் தூண்டுவதன் மூலம் 2001ல் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை சித்தியை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

**வினாத்தாள்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்**

பாடசாலை ரீதியாக அல்லது ஐந்து பேருக்கு மேற்பட்ட குழுவாக எமது திட்டத்திலே இணையும்போது மாணவர் ஒருவருக்கான முழுப் பரீட்சைக் கட்டணம் ரூபா 150/- தனியாக இணையும் மாணவர் ஒருவருக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 170/-

தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர் களுக்கு முழுக் கட்டணத்தில் 50% கழிவு வழங்கப்படும்.

**விண்னப்ப முடிவு திகதி 28.12.2000**

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுமதிக் கட்டணங்களுடன் நேரடியாக அல்லது, பெறுபவர் The Lanka Teacher – Maruthamunai Post Office எனும் பெயருக்கு எடுக்கப்பட்ட காசுக் கட்டளைகளுடன் அனுப்ப வேண்டிய முகவரி:

## THE LANKA TEACHER

Primary Education Language Research Centre,
328, Makbooliya Road, Maruthamunai (TP: 067-21663 FAX: 067-29796)

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**The Lanka Teacher** தரம் - 05 மாணவர்களுக்கான முன்னோடித் தொடர் பரீட்சைத் திட்டம் 2000/2001

1. பரீட்சார்த்தியின் / பாடசாலையின் பெயர் : ........................................
2. முகவரி : ........................................
3. தொலைபேசி இலக்கம்: பெக்ஸ் இல : ........................................
4. தேவையான வினாத்தாள்களின் எண்ணிக்கை : ........................................
5. இணைக்கப்பட்டுள்ள பணத்தின் பெறுமதி : ........................................
6. பெற்றோர் / பாதுகாவலர் / அதிபர் ஒப்பம் : ........................................

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# இஸ்லாமிய அங்கவீனர் நிலையம்

**தூல்மலை, திஹாரிய தொலைபேசி : 033-87840, 033-87988**
**(அரச அங்கீகாரம் பெற்ற தர்மஸ்தாபனம்)**

| | |
|---|---|
| A.B.N. வங்கி | ஹற்றன் நெஷனல்வங்கி |
| கொழும்பு | நிட்டம்புவ |
| AC/NO: 1312545 | AC/NO: 1683014 |

**"மற்றவர்களுக்கு உதவுபவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்" (அல்குர்ஆன்)**

**அந்த வகையில் உதவும் உங்கள் நேசக் கரங்களை நாடி விடுக்கும் புனித றமழான் வேண்டுகோள் இது.**

இறைநியதியாலும், விபத்துக்களினாலும், கோர யுத்தங்களினாலும்
அங்கவீனர் ஆகிவிட்டோரை அல்லாஹ்வின் அருளால் அரவணைத்து
அவர்களைக் கல்வியாலும், தொழிற்பயிற்சியாலும் மெருகூட்டி, ஒளியூட்டி
அவனியிலே அவர்களும் சரிநிகர் சமமாக வாழ வழிசெய்யும்
திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் -
அதன் பதினாறு வருட வளர்ச்சியின் பெறுபேறுகளை
உங்கள் முன் வைப்பதன் மூலம்,
அதன் எதிர்கால வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும்
தொடர்ந்தும் உங்கள் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நாடி நிற்கிறது.

சகல துறைகளிலும் இதுவரை பயின்று வெளியேறியோர் தொகை 300 இற்கு மேல் ஆண்களும் பெண்களும்

தற்போது பயில்வோர் 200 இற்கு மேல்

போதனா ஆசிரியர்கள் 35 இற்கு மேல்

எமது சேவைகள்: கல்வி, தொழிற்பயிற்சி, உணவு, விடுதி, மருத்துவம், தொழிற்பயிற்சி உபகரணங்கள் அனைத்தும் இலவசம்

வருவாய்: உங்கள் நன்கொடைகளே

ஒருநாள் உணவுக்கான செலவு ஏறக்குறைய 10,000 ரூபா

வேதனம், மின்சாரம், தொலைபேசி கட்டணங்கள், வைத்தியம் மற்றும் பராமரிப்புச் செலவீனங்கள் மாதாந்தம் 3 லட்சத்திற்கு மேல்

இப்பாரிய செலவீடு வருடாந்தம் நாம் விடுக்கும் புனித றமழான் வேண்டுகோள் மூலமும் மற்றும் உள்ளூர், வெளியூர் நன்கொடைகள் மூலமுமே ஈடுசெய்யப்படுகிறது. எனவே இப்பாரிய பணியில் நீங்களும் பங்குதாரர்களாகி உங்களது பங்களிப்பை அல்லாஹ்வுக்காக செய்வதன் மூலம் அங்கவீனர் வாழ்வை வளம்படுத்துவதில் நீங்களும் பங்குதாரர்களாகி விடுகிறீர்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் மற்றவர்களுக்கு உதவும் எங்களுக்கும் உங்களுக்கும் இப்பணியினைச் செய்ய நல்ல ஆரோக்கியத்தையும் நீடித்த ஆயுளையும் வாழ்வு பரக்கத்தையும் தந்தருள்வானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

பணிப்பாளரும் நிர்வாகத்தினரும்

AJ PRINTS, 44, Station Road, Dehiwala. Telephone : 739769, 723265, 723209